TNLA Debates

No. 2

1980

DIGITIZED

D
1211,31 N80
181.8.2;1
123098

135/1

வெளியீடு 28-1-1981] [Issued 28-1-1981

1513

COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH
10 மார் 1981

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை 1980 ஆகஸ்ட் 12—தொகுதி VIII—எண் 2**
Tuesday 12th August 1980—Volume VIII—No. 2

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

V211,31 N80
N81.8-25
23078

உள்ளடக்கம்.

12—8—1980 பக்கங்கள்.

1. இரங்கற் குறிப்பு—

2. வினாக்கள்-விடைகள்— 211

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 212—252

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 252—286

3. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள். .. .. .. .. 286—290

(ஆ) உறுப்பினர் கைது, ஜாமீனில் வந்தது பற்றி தவறான அறிக்கை .. .. .. 423—425

4. உரிமைப் பிரச்சினை—

ஒரு உறுப்பினர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கத்தக்க வகையில் ஒரு ஜெயிலர் பேச்சு 290—293

5. ஒத்திவைப்புத் தீர்மானம்—

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் ஆட்சேபகரமான பேச்சு .. .. 294—296

6. கவன ஈர்ப்புகள்—

(அ) தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் ஐ.டி.ஐ.யில் தேறியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல்—தொழிலாளரிடம் அமைதியின்மை .. .. .. .. .. 296—300

(ஆ) திருச்சி, திண்டுக்கல் மற்றும் வடஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடல் .. .. 300—306

(இ) கோவை, சோமசுந்தரா மில் தொழிலாளர்களில் சிலர் வேலை நீக்கம்-உள்ளிருப்புப் போராட்டம் .. .. .. 306—309

(ஈ) மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டி. பார்மசிஸ்ட், பி. பார்மசிஸ்ட்டுகள் உண்ணாவிரதம் .. .. .. .. 309—317

பக்கங்க

7. அறிவிப்புகள்—

(அ) ஆளுநர் இசைவு-சிவில் நீதிமன்றங்கள்-சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் சட்ட முன்வடிவு 1980 .. .. .. 317

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது .. .. .. 356

(இ) ஆளுநர் இசைவு-பொதுப்பணிகள் பொறியியல் கழகம் சட்ட முன்வடிவு 1980 .. 359

(ஈ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி .. .. .. .. .. 415—416

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் அவையில் எடுத்துக்கொள்ளாதது 416—422

(ஊ) பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் .. 425—429

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சிவில் நீதிமன்றங்கள்-சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் சட்ட முன்வடிவு எண். 43/1980) 318—336

(ஆ) சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சிலகுறிப்புகள் (தனிவகை முறைகள்) சட்டமுன் வடிவுச் 1980 (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 44/1980.) 336—355

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 45/1980) .. .. .. 358—359

(ஈ) பொதுப் பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகைவிதித்துறைகள் சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1980) 359—369

(உ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1980) .. .. .. .. .. 369—390

(ஊ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1980) .. .. 390—398

(எ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1980) 398—414



பக்கங்கள்

9. அரசினர் தீர்மானம்—

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை .. 356—357

(ஆ) விதி 30(3)இன் கீழ் அலுவல் வரிசையான மாற்றம் .. .. .. .. .. 390

(இ) நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் .. .. .. 429

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 430—432

1513.

## தமிழ் நாடு சட்ட மன்றப்பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1980 ஆகஸ்ட் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' இடிக்குத் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.''

கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணைக் கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றலுள்ளவர் யார் இருக்கின்றனர் ?

### 1. இரங்கற் குறிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். குப்பு சாமி நாயுடு அவர்கள் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். குப்புசாமி நாயுடு அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை மலபார் கோயம்புத்தூர் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் சங்கச் சார்பற்ற தொழிலாளர்கள் தொகுதியிலிருந்தும் மேலும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை மதுக்கரை தொகுதியிலிருந்தும் அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

[1980 ஆகஸ்டு 12

## 2. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மாதவரம் பண்ணையிலிருந்து சென்னை நகருக்குப் பால் வழங்கல்

* வினா எண். 163—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கு மாதவரம் பால்பண்ணை மூலம் வழங்கப்படும் பாலின் அளவு நாள் தோறும் எவ்வளவு?

(ஆ) தேவையான அளவுக்குப் பால் கிடைக்கவில்லை என்று பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மாதவரம் பால் பண்ணை மூலம் சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 1.40 இலட்சம் லிட்டர் பால் வழங்கப்படுகிறது.

(ஆ) பொதுமக்களுக்குத் தேவையான கூடுதல் பால் தேவையைப் பூர்த்தி செய்யாதது குறித்து எப்பொழுதேனும் புகார்கள் வருவதுண்டு. ஆனால், உண்மையில் வாடிக்கையாளர்கள் சொந்த உபயோகத்திற்காகத் தேவையான பாலட்டைகளை பால் பகிர்வு அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1.40 இலட்சம் லிட்டர் பால் சென்னையில் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். சில நேரங்களில் சென்னையில் பால் பற்றாக்குறை ஏற்படுகிறது. பால் சப்ளை செய்யப்படுவதிலே பல சிக்கல்கள், குறைபாடுகள், கோளாறுகள் ஆகியவற்றைக் களைய அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால், இன்றையதினம் அங்கிருக்கிற கூலர் மெஷின் கொள்ளளவு வருங்காலத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இல்லாமையால் அதிக கொள்ளளவு கொள்ளக்கூடிய கூலர் மெஷின் அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதில் கொண்டு அதனை சீர்திருத்த தக்க ஏற்பாடுகள் செய்ய அரசு முனைந்து வருகிறது.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப்பால் விநியோகத்தில் முறைகேடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை அறிந்ததினுடைய விளைவாக அமைச்சர் அவர்கள் நள்ளிரவு என்றும் பாராமால் விடியற்காலை என்றும் பாராமல் சோதனைகள் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் நடந்திருக்கிற முறைகேடுகள் என்ன என்பதையும் அந்த முறைகேடுகளை நடத்தியிருக்கிறவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் சில முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன, அவைகளைக் களைவதற்கு உறுதியான நடவடிக்ககைகளை அரசு எடுத்து வருகிறது. ஆனால், இது மாதவரம் பால்பண்ணையில் நாளொன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் வழங்கப்படுகிறது என்ற கேள்வியாக இருப்பதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை. அருள்கூர்ந்து அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் அதனுடைய விவரங்களை முழு அளவில் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் கேட்ட உபகேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது சில தகவல்களை இல்லை என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், மாதவரம் பால் பண்ணையிலிருந்து டெப்போக்களுக்கு வருகிறபோது இடையிலேயே கலப்படம் செய்யப்படுவதாக மக்களிடம் கருத்து பரவியிருக்கிறது. ஆகவே, சென்னை நகர மக்களுக்கு உறுதியளிக்கக்கூடிய வகையில் கலப்படம் தடுக்கப்படும் என்ற உறுதி மொழியை அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது, என்பது பற்றி தெளிவான தகவல்களை இப்போது இல்லை என்றுதான் சொன்னேன். விவரங்கள் இல்லை என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலே தருகிற அளவுக்கு அந்த விவரங்கள் என்னுடைய கையிலே இப்போது இல்லை என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாதவரம் பால்பண்ணைக்கு வரக்கூடிய பால் எந்த எந்த மாவட்டங்களிலிருந்து வருகிறது, எத்தனை லிட்டர்கள் வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு ; துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள மாதவரம் பால் பண்ணையிலிருந்து நாளொன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் கிடைக்கிறது? மக்களுடைய தேவைக்குப் போதுமானது போக மீதியுள்ள பாலை என்ன செய்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

[1980 ஆகஸ்டு 12

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் லிட்டர் பால் பக்குவப்படுத்தப்பட்டு புட்டிகள், பாலிதீன் பைகள் இவைகளில் அடைத்து இன்றைக்கு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையின் மூலமாக சென்னை நகருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் லிட்டர் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை நகர மக்களுடைய தேவை எவ்வளவு? சென்னை நகரத்திலே எவ்வளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது? வெளிமாவட்டங் களிலிருந்து உற்பத்தியாகி தரப்படுகிற பால் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதைப் போல மாதவரம் பால் பண்ணையிலிருந்து சென்னைக்கு எவ்வளவு அளிக்கப்படுகிறது என்பதைத் தான் நான் பதிலாக அளித்திருக்கிறேன். வேறு விவரங்கள் வேண்டுமென்றால் அருள்கூர்ந்து அவர்கள் தனிக்கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு மாதவரம் பால் பண்ணையிலிருந்து வழங்குப்படுகிற பால் பாலிதின் பைகளில் வழங்கப்பட்டாலும் பாலை மண் புட்டிகளில் வழங்குவதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

திரு. அ. செல்வராசன் : துணைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து வருகின்ற பாலை டெப்போக் களில் சிலர் 40, 50 அட்டைகளை வாங்கிவைத்துக் கொண்டு 20 அல்லது 30 காசுக்கு அதிகமாக விற்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக என்ன நட வடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவா் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு செல்வராசன் சொன்ன குறைபாடுகள் சில இடங்களில் நிலவி வருவது கண்டு பிடிக்கப் பட்டது. அந்த முறைகேடுகளை நடத்தியவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஆகஸ்டு 12]

பால் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியங்கள்.

*வினா எண். 164—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

ஒவ்வொரு மாவட்டத்திலும் பால் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்படுத்திய பின்பு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தை எடுத்துவிடும் தேசிய பால்பண்ணை வளர்ச்சி கழகத்தின் National Dairy Development Board யோசனையை ஏற்று இந்த அரசு நிறைவேற்றும் திட்டம்உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாட்டில் இனி மேல் அமைக்கப்பட இருக்கும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஆனந்த் பாணியில், அதாவது கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங் களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியமும், மாநில அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங் களின் இணையமும், அமைக்கப்பட வேண்டுமென அரசு தீர் மானித்துள்ளது. எனவே, தொடக்க சங்கங்கள் அனைத்தையும் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றியும் மாவட்டங்களில் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியங்கள் அமைக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால்வள நிறுவனத் திற்கு பதிலாக பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியங்களின் இணையத்தினை (federation) ஏற்படுத்தவும் அரசு ஆணை பிறப்பித்து அதற்கான உரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

[முற்பகல் 9-10]

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே; நேஷனல் டயரி டெவலப்மென்ட் போர்டு அமைத்து மிகச் சீரான முறையில் கிராமங்களிலும், வட்டங்களிலும், மாவட்டங்களிலும் ஒன்றியங்களிலும் ஆங்காங்கு 'ஆனந்த் பேட்டர்ன் முறையிலே ஏற்பாடு செய்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித் தார்கள். என்.டி.டி.பி. போர்டிடம் உலக வங்கி ரூ. 40 கோடி கொடுத்து அமல் நடத்தச் சொல்லும் பால் வள அபிவிருத்தி திட்டத்திற்கு நம்முடைய அரசின் ஆலோசனையை என்ன, அதில் நம்முடையபங்கு என்ன? அதாவதுநேஷனல் டயரிடெவலப்மென்ட் போர்டு பால் அபிவிருத்தி சம்பந்தமாக உலக வங்கியின் மூலம் சற்றேறக்குறைய 40 கோடி கொடுத்து இதை அமல்படுத்தச் சொல்கிறார்கள். அந்த பேட்டர்ன் குஜராத் கண்ட்ரோலில் இருக்கிறதா? நம்முடைய மாநில அரசின் கண்ட்ரோலில் இருக் கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த நிர்வாகப் பொறுப்பு நமது பொறுப் பிலும், அவர்கள் பொறுப்பிலும் கூட்டாக இணைந்து செயல் படும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே அமைச்சரவர்கள் இங்கே விடையளிக்கின்றபொழுது கிராமங்கள் தோறும் பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஆரம்பிக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி ஆரம்பிக்கின்ற விதத்திலே, கிராமங்களிலே அப்படி ஆரம்பிக்க இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனை எதிர்நோக்குகின்ற பிர
அதை மாற்றி அரசே கடன் வழங்கும் வகையில் ஆலோசனை ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாவட்ட அளவிலே கூட்டுறவு ஒன்றியமும், மாநில அளவிலே கூட்டுறவு இணையமும் அமைக்கப்படுவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட போதிலும் அதற்கான பணிகள் விரைவாக முடுக்கப்படவில்லை என்று கருதுகிறேன். பால் வளத்தைப் பெருக்க இந்த அமைப்புதான் சீராக இருக்கும் என்ற கருத்து இருப்பதால், எவ்வளவு விரைவாக இந்தப் பணிகளை அமைக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசும் இந்திய பால் பண்ணை நிறுவனமும் 2-வது பால் பெருக்குத் குத் திட்டம் ரூபாய் 40 கோடி அளவிற்குத் துவக்கப்பட இருக்கின்ற திட்டத்திற்கு ஒப்பந்தம் ஏற்பட்டு அரசு அதனைச் செயல்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாநிலம் பூராவிலும் எல்லா மாவட்டங்களிலேயும் இந்த பால் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு விட்டது. ஆனால் நெல்லை மாவட்டத்திலே மட்டும் அமைக்கப்படவில்லை, அதற்கான காரணம் என்ன? இப்பொழுது ஆங்காங்கு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இருக்கின்றன. இனிமேல் அவைகள் எப்படிச் செயல்படும்? மாவட்ட ஒன்றியங்கள் வந்த பிறகு இந்த ஒன்றியங்களுக்கு என்ன பணி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கேட்ட பிரச்னைகளைப்பற்றியெல்லாம் அரசு மிகத் தெளிவாக ஆய்ந்து விரைவிலே நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தப் பால் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியங்களை ஏற்படுத்திய பின்பு பால் உற்பத்தியாளர் சங்கங்களை அல்லது கூட்டுறவு நிறுவனங்களை பலப்படுத்தக்கூடிய உத்தேசம் அமைச்சருக்கு ஏதாவது உண்டா? கோவை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் ஒன்றிய அமைப்பைப் பலப்படுத்தக்கூடிய திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்று கேட்கிறேன்.

ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் பெருக்கு இரண்டாவது திட்டத்தின் பொழுது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் பலப்படுத்த ஆவன செய்யப்படும்.

## சாப்டூரில் நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதி விலக்களிக்கப்பட்ட நிலங்கள்.

* வினா எண். 165---திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுரை மாவட்ட சாப்டூரில் நில உச்சவரம்பு விதி விலக்கில் தோப்பாகக் கொடுக்கப்பட்ட நிலம் விதி முறைகளுக்கு மீறி விற்கப்படுவதும், தோப்புகள் அழிக்கப்படுவதும் அரசுக்குத் தெரியுமா? அது பற்றிய புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மதுரை மாவட்டம், சாப்டூரில் ஜமீனைச்சார்ந்த காலஞ்சென்ற திரு. எஸ்.கே.என்.கே.ஆர். காமயநாயக்கருக்குச் சொந்தமான தோப்பாக கொடுக்கப்பட்ட நிலங்கள் விதிமுறைகளை மீறி விற்கப்படுவதைப் பற்றியும், தோப்புகளில் ஒரு சில பகுதி சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்றப் பட்டது பற்றியும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) உபரி நிலங்கள் எடுத்துக் கொள்வது பற்றி 18-3-80 அன்று உயர்நீதிமன்றத்தில் உரிமை இயல்சீராய்வு மனு (Civil Revi ion Pet t cn 1746/80) ஒன்று அரசினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு முடிவடைந்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சாப்டூர் ஜமீனுக்கு எவ்வளவு நிலங்கள் இருந்தன? அதில் தோப்பு புறம்போக்கு எவ்வளவு? சர்க்கார் புறம்போக்கில்

[1980 ஆகஸ்டு 1

உள்ள ஒரு மரத்தை வெட்டினால், அதை ஒப்புக்கொண்டால் உடனே அபராதம் விதிக்கிறோம். ஆனால் ஒப்புக்கொள்ளாவிட்டால் காவல் துறையிடம் சொல்லி, தண்டனை வழங்கப்படுகிறது, ஆனால், ஒரு தோப்பையே அழித்திருக்கிறார்களே, அதைக் கேட்கவும் ஆள் இல்லையா? பதில் சொல்லவும் ஆள் இல்லையா? ஆகவே, சம்பந்தப்பட்ட கிராம அதிகாரி மீதும், தோப்பை அழித்தவர் மீதும் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6–4–1960-ல் கொண்டு வரப்பட்ட நில உச்ச வரம்பு கட்டுவது சட்டத்தின்படி அவர்களிடத்திலே அதிகமாக இருந்த நிலம் 871·49 ஸ்டாண்டர்ட் ஏக்கராகும். அது சாதாரண நிலம் என்றால் 2,600 ஏக்கராகும். அவற்றிலே அவர்கள் வைத்திருந்த தோப்புக்குள்ளானது 394 ஏக்கராகும் இந்த 394 ஏக்கரும் தோப்புக்கு கொடுக்கப்பட்ட விதிவிலக்கு படி அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்பதும், மீதியுள்ள சாதாரண ஏக்கர் தோப்பு அல்லாதது 1718 ஏக்கர் எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பல இடங்களிலே சிலர் மரங்கள் வெட்டியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மரம் வெட்டப்பட்டது அரசு கவனத்திற்கு வரவில்லை. அதைச் சொன்னால், உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோப்பு என்கிற கணக்கில் விதிவிலக்கு கொடுக்கிறபொழுதே அது தோப்பாக இருக்கிறவரையிலும் அவர்கள் அனுபவித்துக்கொள்ளலாம்—தோப்பு என்கிற தன்மையை அது இழந்து விடுமேயானால், அது உச்ச வரம்பு விதிப்படி அரசாங்கத்தாலே எடுக்கப்படும். ஆனால், இந்த ஜமீன்தார் நீண்ட நெடு நாட்களாகத் தோப்பை அழிக்கிறார்கள். அழித்த பிறகு அதைச் சாகுபடி நிலங்களாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு மேல், அவர்கள் இப்பொழுது செய்கிற சட்ட விரோதமான செயல், அந்தத் தோப்பை இப்பொழுது அப்படி விற்பதுதான். நேற்றைய தினம் கூட நம்முடைய அமைச்சரவர்கள் பினாமி நிலங்களை அரசு எடுத்துக் கொள்ள சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தைப் போல் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். அப்படியே, இன்னொரு பெயருக்கு மாற்றிவிட்டு, மரங்களையும் வெட்டிவிட்டு திரும்பவும் நிலத்தை அவர்களே பயன்படுத்தி வருகிறார்கள் ஏறத்தாழ 2,500 ஏக்கர் தோப்பு இல்லாமல் விளை நிலங்களாக அவர்கள் கையிலே இருக்கின்றன. ஆகவே, கடுமையான சட்டத்தின் மூலம் அதைத் திரும்ப எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, 6-4-1960ல் கொண்டு வந்த நில உச்சவரம்பு கட்டுதல் சட்டத்தின்படி விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், விதிவிலக்கு, அவர்கள் எதற்காக பயன்படுத்துகிற வரைக்கும்தான் அது செல்லும். அதை மீறி அவர்கள் பயன்படுத்தினால், சட்டப்படி செல்லுபடியாகாது. அந்த விலக்கின் படி அது தோப்பாக இருக்கிறவரைக்கும்தான் அது செல்லும். ஆனால், தோப்பாக, இல்லாவிட்டால், அந்தத் தோப்பை நீக்கிவிட்டால் அது செல்லாது. ஆனால், இன்றைக்கு அங்கேயிருக்கிற தோப்புகளை எல்லாம் வெட்டி விடுவதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை எல்லாம் அரசு எடுத்து உரியவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோப்புகள் விதிவிலக்கு என்ற பெயரால் சுமார் 2,600 ஏக்கர் விடப்பட்டுள்ளது. அதில் தோப்பு என்ற பெயரால் 394 ஏக்கர் விடப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். இது தோப்பாகத்தான் இருக்கிறதா, இல்லை தோப்பு என்ற பேரால் இப்படி 2,600 ஏக்கரை கொடுத்திருக்கிறார்களா, இதற்கு முன்னால் இருந்த இரண்டு அரசாங்கங்களும் . எனவே இதை உடனடியாக ரத்து செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மூல நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறபோது 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதியிலே வந்தபோது அதிலே என்ன சொல்லி இருக்கிறது என்றால் 1959 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி அன்று அல்லது அதற்கு முன்னாலே அது தோப்பாக இருந்தால்தான் இந்த விதிவிலக்கு செல்லும், 1959 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி அன்று அது தோப்பாக இருக்கவேண்டும். அப்போதுதான் செல்லும். அதற்குப் பின்னாலே அதை மாற்றினால் செல்லாது. அதற்குப் பின்னாலே அதை தோப்பாக வைத்தாலும் செல்லாது. அதை யாராவது மாற்றினாலும், அல்லது வைத்தாலும் நிச்சயமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். அரசு இதில் மிகுந்த கவனமாக இருக்கும். மேலும் அரசுக்கு உதவி செய்வதற்காகத்தான் நேற்றைய தினம் நீங்கள் குழுக்களை அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். அந்தக் குழுக்கள் வந்த உடன் இப்படி ஏமாற்றுவதற்கு வாய்ப்பு இருக்காது.

திரு என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும் இன்றைக்கும் தமிழகத்தினுடைய நிலக் குவியல் பற்றி நல்ல செய்திகள் இந்த அவையிலே இருந்து

தமிழக மக்களுக்கும் கிடைத்திருக்கிறது. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 33,000 ஏக்கர் என்று அறிந்தோம். இப்போது சாப்டூர் ஜமீன்தாருக்கு 2,600 ஏக்கர் என்று அறிகிறோம். ஆகவே இவ்வாறு நிலக் குவியல் இருப்பதை தடுக்காமல் போனால் சாதாரண விவசாயிக்கு நிலம் கிடைக்குமா ? நான் அரசைக் கேட்க விரும்புவது எல்லாம் ஏற்கனவே 60-லே அல்லது எதிலோ போட்ட சட்டமாக இருந்தாலும், இன்றைக்கு ஒரு ரி-சர்வே செய்து தமிழகத்திலே இந்த தோப்புக்கள் என்று அளிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது தோப்புகள் என்று பேராலே அல்லது தோப்புகளுக்கு விதிவிலக்கு என்ற பேரால் நிலம் சேகரித்து வைத்து இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். நமக்குத் தெரியும். பால் பண்ணை என்ற பேரிலே பால் பண்ணை இருக்காது. நிலத்தை சேகரித்து வைத்துக்கொள்வார்கள். குவியலாக, ஆகவே அரசு உடனடியாக ரி-சர்வே செய்து தோப்புகள் என்ற பெயரிலே நம்முடைய நிலங்களை பெற்றிருப்பதைப் பெறுவதற்கும் அடுத்து நமது மாண்புமிகு உறுப்பினர் முத்தையா அவர்கள் சொன்னதைப் போல் இன்றைய தினம் உடனடியாக தோப்புகள் என்று விதிவிலக்கையே இந்த சட்டத்தில் இருந்து எடுப்பதற்கும் அரசு முயற்சிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருப்பதெல்லாம் கண்டு பிடிப்பதற்காகத்தானே உங்களுடைய உதவியோடு குழுக்களைப் போட விருக்கிறோம். தோப்புகள் என்ற பெயரால் விதிவிலக்கு இருக்கிறதா ? இல்லையா என்பதை எல்லாம் கண்டு பிடிப்பதற்காகத் தான் உங்கள் உதவியை நாடி இருக்கிறேன். நீங்கள் உங்களுடைய உதவியைத் தந்து இருக்கிறீர்கள். அந்த உதவியின் மூலமாக செம்மையாக காரியங்கள் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மூல சட்டம் வந்த போது அதில் 9 அயிட்டங்களுக்கு விதிவிலக்குக் கொடுத்தார்கள். தோப்புக்கும் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இருக்கிற கால கட்டத்தில் முற்போக்கு எண்ணங்கள் வளர்ந்து வருகிறபோது தோப்புகளுக்கு விதிவிலக்கு உண்டா, விதிவிலக்கை நீட்டிக்கலாமா இல்லையா என்பதைப் பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் ; துணைத் தலைவர் அவர்களே, சாப்டூர் ஜமீன்தாருக்கு 2000-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் தோப்பு என்ற பெயரால் விதிவிலக்கு பெறப்பட்டு, அந்தத் தோப்புகள் இப்போது அழிக்கப்பட்டன என்ற தகவல் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அவர்கள் மீது கிரிமினல் வழக்கு உடனடியாக





எடுக்கப்படுமா ? தோப்பின் பெயரால் அரசு கொடுத்த அந்த நிலங்களை மாற்றி விற்பனை செய்ததற்காக அரசை ஏமாற்றிய குற்றத்திற்காக அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதிலே ஒரு திருத்தத்தைக் கொடுக்க விரும்புகிறேன். அவர்களிடத்தில் மொத்தமாக இருந்தது தான் 2,600 ஏக்கர். தோப்புகளுக்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு 394 ஏக்கர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி மாற்றம் செய்தால் அதைத் திருப்பி அரசு எடுத்துக்கொள்வதற்குத் தான் இன்றைக்கு இருக்கும் சட்ட திட்டம் இருக்கிறது. அந்த விதிமுறைகளை மீறினால், அந்த விதியின் கீழ் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு நீக்கப்பட்டு அரசு அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சட்ட திட்டம் உள்ளதே தவிர இப்படி செய்வதர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இல்லை. இன்றுள்ள சமுதாயம் அப்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்பினால், மாண்புமிகு உறுப்பினர் சமுதாயத்தின் எண்ணத்தை இங்கே சொல்கிறார்களா அல்லது தனிப்பட்ட எண்ணத்தை சொல்கிறார்களா என்று தெரியவில்லை. அந்தச் சமுதாயத்தின் எண்ணத்தை நிறைவேற்ற அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் செய்வதற்கு அரசு தயங்காது.

## கிராம வேளாண்மை சேவைக் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்கள்

*வினா எண். 166—திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நெல்லை மாவட்டத்தில் சுமார் 350 கிராம வேளாண்மை சேவைக் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி வருகிற சுமார் 1,000 ஊழியர்கள் தங்களின் மத்திய கூட்டுறவு வங்கியின் கீழ் பணிபுரியும் ஊழியர்களாக ஏற்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

(அ) ஆம்.

(ஆ) கோரிக்கை ஒப்புக்கொள்ளப்படவில்லை.

[1980 ஆகஸ்டு 12

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கை வந்துள்ளது, ஆனால் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். ஆயிரம் ஊழியர்கள் இருக்கிறார்கள் அந்த 350 கிராம கூட்டுறவு சேவா சங்கங்களில். அவர்களுக்கு குறைந்தபட்சம் சட்டப்படியான உத்தர வாதங்கள் கூட செய்யப்படாமல் குறைந்த பட்ச வாழ்க்கைக் குத் தேவைப்படுகிற எந்த விதமான உத்தரவாதமும் கொடுக் காமல் இருப்பதால், அவர்கள் அந்த மாவட்ட வங்கியினுடைய தலைமையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று சொல்லக் கூடிய கோரிக்கையில் என்ன தவறு இருக்கிறது, அதை ஏன் அரசு ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொல்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 350 கூட்டுறவு சேவா சங்கங்களைப் பொறுத்தவரையில், அவை ''செபரேட் அடானமஸ் பாடிஸ்'' அதைப்போலவே மாவட்ட வங்கியும் 'செபரேட் அடானமஸ் பாடி'. அது மட்டுமல்ல அந்த கூட்டுறவு சேவா சங்கங்கள் பிரைமரி கோவாப்பரேடிவ் கிரடிட் சொசைடீஸ் அனைத்தும் தனிப்பட்ட விதிகளின் கீழ் இயங்கு கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பணியாற்றும் பணியாளர்களுக்கு பணி உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாவட்ட வங்கியோடு இணைக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். பிரச்சனை என்ன வென்றால் அந்த கூட்டுறவு சேவா சங்கங்கள்—பிரைமரி கோவாப்பரேடின் கிரெடிட் சொசைடீஸ்—மத்திய வங்கியிடமிருந்து கடன் வாங்குகின்றனர். அவர்களே டிபாசிட் மூலமாகவும் பணம் திரட்டுகிறார்கள். அவர்களுடைய சொந்த நிதிநிலை ஆதாரத்தின் மூலமாக அந்தக் கூட்டுறவு சொசைடி கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் தற்போது தமிழகத்தில் இருக்கும் கூட்டுறவு சொசைடிகளைவிட மாவட்ட வங்கிகள் பொரு ளாதார நிலையில் நலிந்து இருக்கின்றன. கூட்டுறவு சங்கங் களுக்குக் கொடுத்த பணம் திரும்ப வராத நிலையில், மத்திய வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால், திருப்பிக்கொடுத்து விட்டதால், பொருளாதாரத்தில் நலிந்துள்ளன. இப்படி சட்டத்தை மாற்றி நான் அந்த வகையில் கொண்டு வந்தாலும் அது பணியாளர்களுக்குப் பலன் அளிக்குமா என்ற ஐயம் எனக்கு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த 350 கூட்டுறவு சேவா சொசைடிகளில் மொத்தம் ஆயிரம் ஊழியர்கள் இருக்கின்றனர். அவர்கள் சுமார் ஆறு மாதங்களுக் குமேலாகத் தங்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லை. என்று கூறியும், மற்றும் பல



1980 ஆகஸ்டு 12]

கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தி யும், சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதம் இருந்ததாகத் தகவல் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா, அதன் அடிப்படையில் சம்பளம் கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, அந்த 350 கூட்டுறவு சேவா சங்கங்களிலும் அவர் களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற நிலை இல்லை. பல சேவா சங்கங்கள் நல்ல பொருளாதார நிலையில் இருக் கின்றது. ஆனாலும் பல சேவா சங்கங்களில் சம்பளம் கொடுக் கப்படாத நிலையும் இருக்கின்றது. அதிலே உள்ள பிரச்சனை என்னவென்றால் மாவட்ட வங்கி மூலமாக நாம் பணம் தர முடியாது. மாவட்ட வங்கிகளுக்கு, ரிசர்வ் வங்கி பணத்தை தர, அப்படி ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கிய பணத்தை அவர்கள் வற்புறுத்தியதால், ரிசர்வ் வங்கிக்கு பணத்தைத் திருப்பித் தந்து விட்டதால், சில சேவா சங்கங்களுக்கு பணம் தரமுடியாத நிலையில் மாவட்ட வங்கிகள் இருக்கின்றன. அது பற்றிய கோரிக்கை 7—4—1980 அன்று அரசுக்கு வந்து இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த சேவா சங்கங்கள் முடிந்த அளவிற்கு கொடுத்து இருக்கும் கடன்களை வசூல் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, அதன் மூலம் அந்தப் பிரச்சனையைச் சமாலிக்கலாம் என்ற எண்ணத்துடன், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும்போது 'அட்டானமஸ் பாடி' என்று சொன்னார்கள். அப்படியானால் அரசு உத்தரவு களை அமுல்படுத்துகின்றனவா அல்லது அமுல்படுத்தவில்லையா என்று அறிய விரும்புகிறேன். தனித்து இயங்கினாலும் அரசு கட்டுக்கோப்புக்குள் அடங்குமா அடங்காதா என்பதையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர வர்களே, அரசு எடுக்கின்ற முடிவுகள் தனிப்பட்ட விதிகள் ஆணையாக அனுப்பப்படும்; அவை நிறைவேற்றப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பிரச்சனை இது. எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள், 10 மாதம் சூப்பர்வைசர் ட்ரெயினிங் படித்தவர்கள் பல்லாண்டு காலமாக பணி நிரந்தரம் இல்லாமல் சம்பளத்தில் எந்தவித மான உயர்வும் இல்லாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அட்டானமஸ் பாடி என்று சொல்லி நாம் சும்மா

இருக்க முடியாது. தனியார்களிடம் நியாயமான கூலி கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசூல் அடிப்படையில்தான் சம்பளம் கொடுக்க முடியும் என்ற நிலையை மாற்றி குறைந்த பட்ச ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u> : துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு தழுவிய அளவிலே கூட விவசாயச் சங்கம் மிக வலிமையாக ஊடுருவி அதன் அங்கத்தினர்கள் வாங்கிய கடனைத் திருப்பித் தரக்கூடாது என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் பல சங்கங்களில் சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி, அந்த ஊழியர்கள் இந்த பாதிப்பில் இருந்து மீட்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

<u>திரு. கு. ரமணி</u> : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது இந்த 1,000 ஊழியர்களும் கிராம கூட்டுறவு சேவா சங்கத்தில் உள்ளவர்கள். அவர்கள் மாவட்ட மத்திய வங்கியின்கீழ் பணியாளர்களாக ஆகவேண்டுமென்று கோருவதன் நோக்கம், அவர்கள் நியாயமான சில சௌகரியங்களைப் பெறுவதற்காக என்று சொன்னார்கள். உண்மை. ஆனால் கூட்டுறவு விதிமுறைகளின் கூட்டுக்கோப்புக்குள் இருந்துதான் சேவா சங்கங்களும், மத்திய வங்கியும் இயங்க முடியும். அந்த சேவா சங்கங்களில் படித்த ஊழியர்கள் சாதாரண மனித வாழ்க்கை கூட நடத்த முடியாமல் இருக்கிறார்கள். அது மிகப் பெரிய கெடுதல் அல்லவா? கூட்டுறவு இயக்கத்தில் இது அமைதியின்மையை உண்டாக்கும் அல்லவா? இதை தீர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u> : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்தை ஒப்புக்கொள்கிறேன். பிரைமரி கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளைப் பொறுத்தவரைக்கும் தானே தன் காலில் இயங்கக்கூடிய சொசைட்டிகளாக இருப்பதால் சில சொசைட்டிகள் நல்ல நிதி ஆதாரத்தைக்கொண்டு அதன் அடிப்படையில் பணியாளர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கும் நிலையில் இருக்கின்றன. சில சொசைட்டிகள், நல்ல நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அங்குள்ள பணியாளர்களுக்கு நல்ல ஊதியம், மற்றுமுள்ள வசதிகளை செய்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்றன. இந்தப் பிரச்சனை அதிகமாக இருப்பதை உணர்ந்திருக்கிறேன் அதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அடுத்து வினா 167........





<u>திரு. மு. அம்பிகாபதி</u> ; சார், பாயின்ட் அஃப் ஆர்டர். நான் ஒரு துணை வினாவிற்காக வெகுநேரம் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. என் கண்ணில் பட்டவர்களுக்கு அனுமதி அளிக்கிறேன். இப்பொழுது அடுத்த வினாவுக்கு வந்துவிட்டேன்; உட்காருங்கள்.

<u>சண்முகா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்.</u>

<u>* வினா எண் 167—திரு. என். பழனிவேல்</u> : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், மானூர் அருகே உள்ள சண்முகா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இந்த ஆண்டில் இவ்வேலை மேற்கொள்ளப்பட உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: (அ) இப்பணியினை செயல்படுத்துவதற்கான திட்டம் தற்பொழுது ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. என். பழனிவேல்</u> : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பழனி வட்டத்திலே மானூர் அருகே இருக்கின்ற இந்தப் பாலம் மிக முக்கியமான பாலம். இந்த நாடு சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுக் காலம் ஆகியும் எத்தனையோ பாலங்களைக் கட்டிய இந்த அரசு இந்தப் பாலத்தை மட்டும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இது நேஷனல் ஹைவேஸ் சாலையில் இருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான வண்டிகள் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். ஆகவே, இதைக் கட்டித் தர வேண்டும் என்று அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் எம். எல். ஏ'க்களிடமும் அமைச்சர்களிடமும் பல ஆண்டுகாலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் தற்போது இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இது சரியா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கே ஒரு தரைமட்டப் பாலம் இருக்கின்றது. ஆனால், பெரிய பாலமாகக் கட்ட வேண்டுமென்றால் ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்ற முக்கியப் பணிகளை எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஆய்வுகளும் நடத்தப்படும்.

தேவக்கோட்டை நகராட்சியில் மணல் வண்டிகளுக்கான கட்டணம்.

*வினா எண். 168—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விளாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டை நகராட்சியில் குத்தகை எடுத்தவர்கள், மணல், செங்கல் வண்டிகளுக்கு கட்டணம் வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானால் வசூல் தடுத்து நிறுத்தப்படுமா ?

(இ) வசூல் செய்த கட்டணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பொருள் குறித்து குத்தகைதாரருக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்குமிடையே உயர் நீதி மன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேவக்கோட்டை நகராட்சியில் குத்தகை எடுத்தவர்கள் இன்றைய தினம் நகராட்சிக்குள்ளே வரக்கூடிய சாதாரண வண்டிகள், மணல் அள்ளிப்போடும் வண்டிகள் ஆகிய அத்தனைக்கும் கட்டணம் வசூல் செய்கிறார்கள். அவ்வாறு மாநகராட்சிக்குள் எந்த வண்டி வந்தாலும் வசூல் செய்கிறார்கள். இதன் காரணமாக கிட்டத்தட்ட 45 நாட்களாக தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதன் மூலம் 50 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டு கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி சட்டத்திற்கு விரோதமாக அவர்கள் வசூல் செய்யக்கூடாது என்று உத்தரவு போடப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் குத்தகை 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலே இருந்து துவக்கப்பட்ட உடனேயே தேவக்கோட்டைக்கு வருகின்ற மணல், செங்கல் வண்டிக்காரர்கள் கட்டணம் செலுத்த மாட்டேன் என்று கிளர்ச்சி செய்து அதன் மூலமாக இன்று அவர்களுக்கும், குத்தகைக்காரர்களுக்கும் இடையே உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன. ஆகவே, இது குறித்து விவரமாக நான் பதில் சொல்ல இயலாத நிலையிலே இருக்கிறேன். ஆனாலும், வழக்குகள் முடிந்தவுடனே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த குத்தகைதாரருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையில்தான் வழக்குகள் இருக்கின்றன. அதே





போல வேறு நகராட்சிகளிலும் இப்படிக்கட்டணம் வசூல் செய்கிறார்களே, அதை தடுத்து நிறுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 169—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன்மேல்எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : 3.65 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. ஆனால், பேரூராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் தற்பொழுது பேருந்து நிலையம் கட்டுவதற்கு சாத்தியமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சியின் ஒன்றியத்தில் 20 இலட்சம் ரூபாய் பொதுப்பணம் இருக்கிறது. அதை எடுத்து, இந்தப் பேருந்து நிலையம் அமைக்க அரசு முயற்சிக்குமா ? அல்லது அரசு தன்னுடைய சேமிப்பு நிதியிலிருந்து பணம் எடுத்து அந்த பஸ் நிலையத்தை கட்டி முடிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அங்கே பஸ் நிலையம் அவசியம் தேவை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத்தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சியில் நிதி பற்றாக்குறை என்று தான் குறிப்புகள் என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் 20 இலட்சம் ரூபாய் அங்கே பொதுப்பணம் இருப்பதாக தகவல் இல்லை. அப்படி இருக்குமேயானால், வித்-இன்-எ, மன்த்—அதாவது ஒரு மாதத்திற்குள்ளாகவே அந்தப் பேருந்து நிலையத்தை அங்கே கட்டிவிடலாம். ஆனால், அங்கே நிதி பற்றாக்குறைதான் இருப்பதாக தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்டு 12

## கொங்கனாபுரம் பேரூராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 170—திரு. இ. கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடித் தொகுதி கொங்கனாபுரம் பேரூராட்சிப் பகுதிக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 213.26 இலட்சங்கள் (வழி இடை கிராமங்களைச் சேர்த்து).

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி தொகுதி கொங்கனாபுரம் பேரூராட்சிப் பகுதிக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்காக சுமார் ரூ. 213.26 இலட்சங்கள் மதிப்பிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக் கொண்டதற்காக, நான் நம்முடைய அண்ணா அரசைப் பாராட்டுகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களை மனமார பாராட்டுகிறேன். இந்த திட்டத்தை விரைவிலே செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஊராட்சிகளினால் பராமரிக்கப்பட்டுவரும் குடிநீர் தேக்கத் தொட்டிகள்.

*வினா எண் 171—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி மன்றங்கள் பராமரித்து வந்த மேநீர் தேக்க தொட்டிகள் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மாற்றப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்க வேண்டுமென அரசு உத்திரவிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஊராட்சிகளிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : வட ஆற்காடு மாவட்டத்தில் கலசப்பாக்கம் பேரூராட்சி ஒன்றியத்தில் இருக்கிற மேநீர் தேக்க தொட்டிகளும், தரை மட்ட நீர்த் தேக்க தொட்டிகளும் பழுதடைந்து இருக்கின்றன. அவைகள் பழுது பார்க்கப் படவில்லை. எனவே அரசு மறுபரிசீலனை செய்து அதை மறுபடியும் ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தின் கீழே கொண்டு வர அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி ஊராட்சி மன்றங்கள் பராமரித்து வந்த மேநீர் தேக்கத் தொட்டிகள், தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் மாற்றப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்க வேண்டுமென அரசு உத்திரவிடப்பட்டுள்ளதா என்பது அதற்குதான் நான் இல்லை என்று பதில் சொல்லிவிட்டேன். ஆகவே அப்படி இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம், பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டிகளில் நிறுவப்பட்டுள்ள மோட்டார் பம்பு செட்டுகளை ரிப்பேர் செய்யக் கூடிய பொறுப்புகளை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டதன் காரணமாக, குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட பகுதிகளில் உள்ள தொட்டிகளின் பம்பு செட்டுகள் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளை மீண்டும் பஞ்சாயத்து ஒன்றியங்களிலேயே ஒப்படைத்து விட வேண்டும் என்றுதான் திருவேங்கடம் அவர்கள் கேட்டார்கள். 20 நாட்களுக்கு முன்பு நான் கூட அதைக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் எனக்குப் புரியவில்லை. சரியாக இல்லை. மீண்டும் அந்த பம்பு செட்டுகளை மெயின்டெனென்ஸ் செய்ய அல்லது ரிப்பேர் செய்யும் பொறுப்பை மீண்டும், அந்த பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கே கொடுப்பதற்கு குடிநீர் வடிகால் வாரியம் முன் வருமா என்று தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் மீண்டும் அந்தக் கேள்வியைப் படிக்கிறேன். ஊராட்சி மன்றங்கள் பராமரித்து வந்த மேநீர் தேக்கத் தொட்டிகள் தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் மாற்றப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்க வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா ?'' இதிலே எங்கே பம்ப்செட்ஸ் வருகின்றன. கிராம குடிநீர் திட்டத்தில் மின்விசைப் பம்பை பராமரிக்கும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றிருக்கிறது.

[1980 ஆகஸ்டு 12

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; மெயின் டெனென்ஸ் என்று சொல்வதில் இந்தக் குடிநீர் தேக்கங்களில் இயங்கக்கூடிய பம்ப் செட்டுகள் ரிப்பேர் செய்வதும் அடங்கும். தமிழ்நாட்டில் பல இடங்களிலும் குடிநீர்த் தேக்கங்கள் சரிவர செயல்படவில்லை. ஆகவே மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களிடம் அந்தப் பொறுப்பை கொடுக்க அரசு தயாரா அல்லது அமைச்சர் அவர்கள் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கிராம குடிநீர் திட்டத்திலுள்ள மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பொறுப்பை ட்வாட் போர்ட் எடுத்துக் கொண்டுள்ளது. அதை மீண்டும் திருப்பிக் கொடுப்பதாக உத்தேசமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் மீண்டும் என்கேள்வியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நானும் ஒரு ஊராட்சி மன்றத்தின் தலைவனாக இருந்தேன். அங்கே ஒரு மேநீர் தேக்கத் தொட்டி, இரண்டு தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அங்கு அவற்றை பராமரிக்கும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியத்திடம் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதை திரும்பவும் ஒன்றியங்களிடம் ஒப்படைப்பார்களா : நன்கு பராமரித்தால்தான் மக்களுக்கு தண்ணீர் வழங்க முடியும். ஒப்படைத்தால் நாங்கள் செய்யத் தயாராயிருக்கிறோம். ஆகவே அப்படி பராமரிக்கும் பொறுப்பை ஒன்றியங்களிடம் ஒப்படைப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது.

## பூலாம்பாடி பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 172—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதி பூலாம் பாடி பேரூராட்சியிலிருந்து குடிநீர்த் திட்டம் தேவை என்று அரசுக்கு கோரிக்கை வந்ததா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

திரு. ஜே. எஸ். இராசு : ஆய்வில் உள்ள இத்திட்டத்தை விரைவாகநிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆய்வுப் பணிகள் துரிதமாக நடைபெறும்.

## நாகை வட்டாரத்தில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம்.

*வினா எண் 173—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டணம் வட்டாரத்தில் யானைக்கால் நோயை தடுக்க தீவிரத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

(இ) எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ). (ஆ) மற்றும் (இ). தேசீய யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று நாகப்பட்டினத்தில் 1972-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இது தவிர நாகப்பட்டினம் நகராட்சி அரசினிடமிருந்து 1/3 மானியம் பெற்று யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

[முற்பகல் 9—50]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வட்டாரத்திலே யானைக் கால் வியாதி பரவலாக பரவுகின்ற அடிப்படையிலே, தீவிரத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தைச் சேர்த்து இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு செய்யுமா ? இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, இந்த நேஷனல் பைலேரியா கன்ட்ரோல் புரோகிராம் என்று மத்திய அரசாங்கத்தினுடைய உதவியாலே, சென்டரலி ஸ்பான்சாட் ஸ்கீம் நடைபெற்று வருகிறது. இதிலே, அங்கே 20,000க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்க வேண்டும் ; தவிர, 5 சதவிகிதத்திற்கு மேல் மைக்ரோ ஆர்கனிசம் காணப்பட வேண்டும். இந்த இரண்டும் இருந்தால், அந்த அடிப்படையிலே 15 நேஷனல் கன்ட்ரோல் யூனிட்டுகள் இப்போது நடந்துகொண்டு

வருகின்றன. இந்த 15 யூனிட்டுகள் செங்கற்பட்டு, வேலூர், கும்பகோணம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை போன்ற இடங்களில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொசுத் தொல்லை இப்படி பயங்கரமாக பரவி வருகிறதால், இதைத் தடுக்க வேண்டும் என்று சுகாதார ஆய்வாளர்கள், அதிகாரிகளிடத்திலே மனு கொடுக்கின்றபோது, அந்த அதிகாரிகள் உங்களைக் கடிக்கின்ற கொசு மலேரியா கொசுவா, யானைக்கால் கொசுவா என்று விவரம் கேட்கிறார்கள். மலேரியா கொசுவா, யானைக்கால் கொசுவா என்பதை அதிகாரிகள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்ற அலட்சியப்போக்கு காணப்படுகிறது. எனவே, தயவுசெய்து இதைப் பரிசீலித்து, இந்தப் போக்கைத் தடுத்து, எந்தெந்தப் பகுதிகளில் யானைக்கால் கொசுக்கள் இருக்கின்றன, எந்தெந்தப் பகுதிகளில் மலேரியா கொசுக்கள் இருக்கின்றன என்பதைப் பரிசீலித்து, அதைத்தடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குயூலெக்ஸ் கொசு யானைக்கால் வியாதி பரவுவதற்கு காரணமாக இருக்கிறது ; அதைப் போல் அனோபாஸ் கொசு மலேரியா பரவுவதற்கு காரணமாக இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரியாக, அங்கே இருக்கிற ஒரு அதிகாரி எந்தெந்த கொசு உங்களைக் கடிக்கின்றது என்று கேட்பார்களேயானால், அது கட்டாயம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. எனவே, தயவு செய்து அங்கத்தினர் அவர்கள் இதுகுறித்து ஒரு கம்ப்ளைண்ட் கொடுப்பார்களேயானால், நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை உறுதியாக இந்த இடத்தில் கூறுகிறேன்.

## உசிலம்பட்டி அரசு மருத்துவமனை.

*வினா எண். 174—திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) அவசர கேஸ்கள் மதுரைக்கு கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்க திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இல்லை.





திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் படுக்கைகள் விஸ்தரிக்கப்படுமா என்று கேட்டதற்கு, இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். உசிலம்பட்டி தாலுகா தலைநகராக இருக்கிறது. அங்கே கடந்த 25 ஆண்டுகளாக எந்தவிதமான விஸ்தரிப்பும் இல்லை. குறைந்தபட்சம் அங்கே ஒரு ஆபரேஷன் தியேட்டராவது விஸ்தரிக்கப்படுமா ? அங்கே தற்போது ஆம்புலன்ஸ் வசதி இல்லாத காரணத்தால், யாராவது விபத்துக்கு ஆளானால், 24 மைல்களுக்கு தூக்கிச் செல்வதற்கு வாடகைக் காரைக் கேட்டால், இரத்தக்கறை படிந்தவர்களை ஏற்ற அவர்கள் மறுக்கிறார்கள். பேருந்துகளிலும் ஏற்ற முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, மதுரை மருத்துவ மனையிலே இருந்து கேட்டு கொண்டுவரக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதே இடத்திலே ஆம்புலன்ஸ் இருந்தால், இரண்டு தாலுக்காக்களுக்கு உபயோகமாக இருக்கும். எனவே, இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே 950 படுக்கைகள் இருக்கின்றன. தாலுகா ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியாக இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த மருத்துவ மனையில் ஒரு டென்டல் விங், சித்த மருத்துவப் பிரிவு, எக்ஸ்-ரே விங்,. மற்றும் ஆபரேஷன் தியேட்டர் இயங்கிக்கொண்டு வருகிறது. இன்னும் விரிவுபடுத்தலாமா என்ற குறிப்புகளை சேகரித்துப் பார்க்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால், உயிரைக் காக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையிலே, ஒரு ஆம்புலன்ஸ் தேவைதான். கிராமங்களிலே விபத்து ஏற்பட்டால், அந்த கிராமத்திலிருந்து கொண்டுவந்து சிகிச்சை அளிப்பதற்கு அது தேவை. நியாயமான கோரிக்கை என்று எனக்குத் தெரிகிறது. நிச்சயமாக இந்த அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு இதைப் பரிசீலித்து, உடனடியாக அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : அந்தத் தாலுக்காவின் தலைநகராக இருக்கும் உசிலம்பட்டி மருத்துவ மனையில் போதிய அளவு டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பணியில் சேராத அளவுக்கு இருக்கிறார்கள். அந்தக் குறையை அரசு நீக்கி உடனடியாக டாக்டர்களை நியமிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அங்கு இருக்கக் கூடிய சிரமம் எல்லாம் அருகிலே ஒரு பெரிய ஆஸ்பத்திரி மதுரை இராஜாஜி மருத்துவ மனை இருப்பதுதான். காம்ப்ளிகேடெட்

[1980 ஆகஸ்டு 12

கேசஸ் எல்லாம் அங்கே போய்க்கொண்டிருக்கின்றன. பத்து ஆம்புலன்ஸ் வண்டிகள் இராஜாஜி மருத்துவ மனையில் இருக்கின்றன. டாக்டர்கள் எல்லாம் அந்த ஆஸ்பத்திரிக்குப் போக முயற்சி செய்கிறார்கள். இந்த குறிப்பிட்ட ஆஸ்பத்திரியிலும் நல்ல டாக்டர்கள் இருந்து பணியாற்ற தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 175....

திரு. நன்னிலம் ஆ. கலையரசன் : எங்கள் தாலுகாவிலுள்ள மருத்துவ மனைகள் பற்றியெல்லாம் கேட்க விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி உசிலம்பட்டி தாலுகா மருத்துவ மனை பற்றியது. மற்ற தாலுகாக்களில் மருத்துவ மனைகளைப்பற்றியெல்லாம் இந்தக் கேள்வியிலே துணைக் கேள்விகள் கேட்க முடியாது.

## தொழுநோய் நிவாரணப்பணிகளுக்கு உலக சுகாதார அமைப்பின் உதவி.

* வினா எண். 175—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குஷ்டரோக நிவாரணப்பணிகளுக்கென தமிழ்நாடு உலக சுகாதார அமைப்பிலிருந்து உதவி ஏதும் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அத்தொகைச் செலவு செய்ய உள்ளது ?

(இ) திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் குஷ்டரோக, மருந்தகத்தை சீரமைக்க அரசிடம் நடவடிக்கை உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தக் குஷ்டரோக நோய் ஆரம்ப நிலையில் இருக்கக்கூடியவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று வைத்தியம் செய்யத் தயங்குகிறார்கள். ஆகவே, வீடு வீடாகச் சென்று அவர்களுக்கு மருத்துவ உதவி கொடுக்கும் திட்டம் தீவிரப் படுத்தப்படுமா? சிவகிரியில் உள்ள மருந்தகக் கட்டிடம் 1936ல் கட்டப் பட்டது. அது பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. அதைச் சீர்படுத்த வேண்டுமென்று பல முறை கோரியும் பொருளாதாரப் பற்றாக்குறை என்று பதில் சொல்லப்படுகிறது. அந்த மருந்தகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்வார்களா?



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது ஒரு பொதுவான பிரச்சினை. இப்பொழுது அந்த தொழு நோய் மருத்துவ மனையில் இருந்து லெப்ரசி ட்ரெயின்ட் பர்சானல் வீடு வீடாகச் சென்று ஸ்க்ரினிங் என்று அதைச் சொல்வார்கள். ஸ்க்ரினிங் செய்து வருகிறார்கள். லெப்ரசி நோய் டெவலப் ஆவதற்கு முன்னால் ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கப்பட்டால் அதைத் தடுக்கவும் சவுகரியமாக இருக்கும். அப்படிக் கண்டுபிடிக்கப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டால் அது தொத்துவியாதியாக ஆகாமல் அப்படியே நின்றுவிடும். இல்லாவிட்டாலும் பல பேருக்குப் பரவக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, இதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். டபிள்யூ. எச். ஓ. வில் இருந்து பணம் கிடைக்கவில்லை. நம்முடைய அரசாங்கம் 80 லட்சம் ரூபாயும், மத்திய அரசாங்கம் 70 லட்சம் ரூபாயும் ஆக 150 லட்சம் ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் சற்று அதிகமாகச் செலவு செய்ய இருக்கிறோம்.

[முற்பகல் 10-00]

நான் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு உலக சுகாதார நிறுவனத்தின் மூலமாக நமக்கு உதவி கிடைக்குமா என்பதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து வேறு ஏதாவது கிராண்ட் கிடைப்பதற்கான முறைகளையும் நேற்றைய தினம் கூட அந்த அதிகாரிகளிடத்திலே நான் பேசி இருக்கிறேன். ஆகவே நிதிநிலைமைக்கு ஏற்ப எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் என்று நாடெங்கும் இருந்தும் கூட எழும்பூர் ரயில்நிலையத்திலேயும், எழும்பூர் ரயில் மேம்பாலத்திலேயும் வருகின்ற பொதுமக்களை இடைஞ்சல் செய்கிற முறையில் அவர்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இல்லாமல் அவர்களை அந்த இல்லங்களிலே கொண்டுபோய் விடப்படுமா அல்லது எழும்பூர் ரயில் நிலையத்தை தொழு நோய் மருத்துவ மனையாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் எங்கெங்கே தொழுநோய் பிச்சைக்காரர்கள் நம்முடைய அரசாங்கத்தின் பார்வைக்கு வருகிறார்களோ அங்கெல்லாம் இருந்து அவர்களை கொண்டு போய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களிலே அமர்த்திக் கொண்டிருக்கிறோம் அல்லது மருத்துவ மனைகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். சில

[1980 ஆகஸ்டு 12

இடங்களில் நம்மையும் மீறி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள், வேறு கடுமையான நடவடிக்கை அதற்காக தேவைப்பட்டால் அதை எடுப்பதற்கு தயங்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, லெப்ரஸி கன்ட்ரோல் யூனிட்டுடைய வேலை எப்படி இருக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதுதான் உண்மையான வேலை. அதற்கான டிரெய்ன்டு பெர்சனல் தேவை. ஆனால் அங்கே பயிற்சி பெற்ற பர்சனல் இல்லை. சமீபத்திலே அப்படி பயிற்சி பெற்ற பர்சனல் 50 பேர்கள் கும்பகோணம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த வேலைக்கு இப்போது இங்கே அவசியம் என்பதால் அவர்களை அமர்த்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; நம்முடைய அரசாங்கத்தினுடைய அமைப்பின் கீழ் எல்லா இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன. இடங்கள் காலியாகுமானால் நிச்சயமாப் அந்த டிரெய்ன்டு பர்சனலை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிக உயர்ந்த டாக்டர். இந்த லெப்ரசி, தொத்து வியாதியா அல்லவா என்று மிகப் பெரிய சர்ச்சைக்குள்ளாயிருக்கிறது. மிகப் பெரிய டாக்டர்கள் சிலர் அது தொத்து வியாதி அல்ல என்று சொல்கிறார்கள். ஒரு சில டாக்டர்கள் அது தொத்து வியாதிதான் என்று சொல்கிறார்கள். இதிலே எது உண்மை என்பதை டாக்டரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நான் உண்மையைச் சொல்கிறேன். லெப்ரஸியில் சில வியாதிகள் பார்ப்பதற்கு தொத்து வியாதி மாதிரியாக இருக்கும், ஆனால் உண்மையாக இருக்காது. நீயுரல் லெப்ரஸி, அதாவது நர்வ்ஸ் அபக்ட் ஆகக்கூடிய வகையிலே வரக்கூடிய வியாதி இருக்கிறது, அதற்கு வெளியிலே புண் இருக்காது, ஆனால் அது மற்றவர்களுக்கு போகிற தொத்து வியாதியாக இருக்கும். அதை டாக்டர்கள் பார்த்துதான் சொல்ல வேண்டும். எல்லா வியாதியும் தொத்துவியாதி என்று சொல்லிவிடமுடியாது, அதைப் போலவே எல்லா வியாதியும் தொத்து வியாதி அல்ல என்றும் சொல்லிவிடமுடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட குழப்பம் வந்திருக்கிறது. அந்தந்த மருத்துவ மனைகளிலே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் லெப்ரஸி டிரெய்ன்டு பர்சனல் ஆகியவர்கள் அவர்களைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.



1980 ஆகஸ்டு 12]

திரு. செ. இராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, தொழுநோய் கட்டுப்பாட்டுப்பிரிவு எல்லா இடங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் கும்பகோணம், பாபநாசம், நன்னிலம், திருவிடைமருதூர் ஆகிய இடங்களில் அவை இயங்கவில்லை. திரு உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் அங்கே பணியாற்றியவர்கள், அவர்கள் தொழிற் சங்கம் அமைத்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு ஆண்டுக்கு முன்னாலே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அதனால் இன்றைக்கு 20 ஆயிரம் தொழுநோயாளிகள் சிகிச்சை இல்லாமல் அவதிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே தொழுநோய் பரவிவிடுகின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே இந்த தாலுக்காக்களில் மீண்டும் அந்த பயிற்சி நிலையத்தைத் தொடங்கவும், மீண்டும் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களை வேலையில் அமர்த்தவும் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அவர்கள் கேட்ட கேள்வியிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒரு அம்சம் கட்டுப்பாட்டு பிரிவு இயங்குவதில்லை என்பது, இன்னொன்று, தொழிலாளர்கள் பிரச்சினை பற்றியது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தெளிவாக இந்த விஷயத்தைப் பற்றி பதில் கூற விரும்புகிறேன். இந்த லெப்ரஸிகன்ட்ரோல்—கட்டுப்பாடு— இந்தப் பிரிவிலே பணியாற்றக்கூடிய வர்களுக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில்சொல்ல வேண்டுமென்றால், They should indulge themselves in result oryiented work. அவர்கள் இத்தனை நோயாளிகளை பார்த்து, அந்த நோயாளிகளினுடைய குறிப்புகளையெல்லாம் எழுதி வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டும். இந்தக் குறிப்புகள், யார் கும்பகோணம் மருத்துவமனைக்கு தனியார் மருத்துவமனைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குத் திருப்தி அளிக்க வேண்டும். அவர்கள் திருப்தி அடையவில்லை என்றால் இந்த வேலை தோல்வி அடைந்தது என்று அர்த்தம். ஆகவே, இது சரியாக நடைபெறவில்லை, ஸ்பெசிபிகேஷனுக்கு ஏற்றவகையில் நடைபெறவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். கும்பகோணத்தில் உள்ள இந்த மருத்துவமனையில் இருக்கும் நிர்வாகியின் வாதம், ஸ்பெசிபிகேஷனுக்கு ஏற்றவகையில் பணியாற்றவில்லை என்பது, ஆனால் தொழிலாளிகளின் வாதம், தொழிற்சங்கத்தை அமைத்த காரணத்தால் வெளியேற்றப்பட்டோம் என்பது. இப்படி இரண்டு வாதங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தெளிவாக ஒரு கொள்கையை இதில் பின்பற்ற விரும்புகிறது. கும்பகோணம் மருத்துவமனையில் சரியாகக் கண்காணிக்க முடியவில்லை என்றால், நான்கு தாலுகாக்களுக்கு இந்தக் கட்டுப்பாடு பிரிவு செயல்படவில்லை என்றால் ஆபத்தான நிலைமை ஏற்படும். எனவே, இன்னும் கொஞ்ச நாள் பார்ப்போம் சரியாக வரவில்லை என்றால் நாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வோம்.

[1980 ஆகஸ்டு 12

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லெப்ரஸி ஹோமில் சரியாக இடவசதி இல்லாததால் அதிகமான நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். குறிப்பாக தேவியாக்குறிச்சி லெப்ரஸி ஹோமில் அதிகமாக வருகின்ற நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ள இயலாத நிலை இருக்கிறது. எனவே, இடவசதியை அதிகப்படுத்த அரசாங்க நிதி ஒதுக்கீடு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய நிதிநிலைக்கேற்ப நாம் இட வசதிகளை வைத்திருக்கிறோம். சில படுக்கைகளைப் போட்டிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாக நிதி கிடைப்பதாக இருந்தால் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, சிவகிரி பற்றிய கேள்விக்கு, அந்தக் கேள்விக்கே இடமில்லை என்று சொன்னார்கள். அங்கே இரண்டு அறைகள் மட்டும்தான் இருக்கின்றன. அருவருக்கத்தக்க நோயாளிகளைப் பராமரிக்கின்ற அந்த மருத்துவர்களும், பணியாளர்களும் தங்குவதற்கான வசதி இல்லாமலிருக்கிறது. எனவே, இந்த மருந்தகத்தை விரிவுப்படுத்த மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் அது சம்பந்தமாக குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறேன். அப்படியே படித்து விடுகிறேன். The Government Leprosy Control Unit, Pvagiri was started in Octcber *1964* during the Third Five Year Can period with *11* Paramedical Workers covering a population of 2\lakhs. This Uunit was upgraded in the Fifth Five Year Plan wth *20* Paramedical Workers covering a population of *4* lakhs. ilherefore there is no scope for expansion of Government Lcprosy Sɔntrol Unit at Sivagiri.

## ஆலத்துறை ஆற்றுப்பாசனத் திட்டம்.

வினா எண் 176—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள பனகுடியில் ஆலத்துறை ஆற்றுப்பாசனத் திட்டம் செயல் படுத்தப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

(இ) அத்திட்டத்தில் உள்ள கால்வாயில் கற்பாறைகள் உருண்டு விழுந்து அடைப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஈ) ஆம், எனில், அதனை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ) 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் நிலச்சரிவு ஏற்பட்டு பெரிய கற்பாறைகள் ஆலத்துறையாற்றுக் கால்வாயில் விழுந்து அடைப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக கால்வாயில் தற்போது தண்ணீர்விட முடியவில்லை.

(ஈ) அடைப்பை அகற்றுவதற்காக ரூ. 4,935 லட்சங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியும் நிராகரிக்கப்பட்டுவிட்டதால், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவான பின் வேலை துவக்கப்படும்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது மிகவும் காட்டுப் பகுதியாக இருப்பதால் இதுவரை எந்தவொரு ஒப்பந்தக்காரரும் அதை ஏற்று அந்த வேலைகளைச் செய்ய முன் வராத ஒரு நிலைமை இருந்து வருகிறது. எனவே, நமது அரசு இதனை பி.டபிள்யூ.டி. மூலம் மேற்கொண்டு இந்தக் கால்வாயில் உள்ள அடைப்பை அகற்றுவதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இந்தக் கால்வாய் அடைப்புகளால் தண்ணீர் நாலா பக்கமும் சிதறி ஓடுவதால் ஏகப்பட்ட காட்டு நிலங்களும், மரங்களும் பாழாக்கப்படுகின்றன. எனவே, இதைக் கூடிய விரைவில் செயல்படுத்த அந்தஅரசே கற்பாறைகளை அகற்ற முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இறுதியாக யாராவது ஒப்பந்தக்காரர்கள் வருவதிலே பிரச்னை ஏற்படுமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த ஆலோசனையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஒப்பந்தக்காரர்கள் இல்லையென்பதற்காக கிட்டத்தட்ட 3,181 ஏக்கர் பயன்பட வேண்டிய ஒரு சூழ்நிலையை நாம் காலதாமதப் படுத்திக் கொண்டிருக்க முடியாது. எனவே, நிச்சயமாக நீங்கள் சொல்கிற யோசனையை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

## நாக நதியின் குறுக்கே அணை.

* வினா எண் 177—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூர் தாலூக்கா, அரிர்தி என்னும் இடத்தில் நாகநதியின் குறுக்கே அணை கட்ட திட்டமிடப்பட்டு அரசு ஆய்வு செய்ததா?

(ஆ) அதன் விவரம் யாது?

[1980 ஆகஸ்டு 12

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) பாலாறு பிரதான படுகையிலுள்ள செய்யாறு படுகையில் நாகநதியின் குறுக்கே அமிர்தி என்னுமிடத்தில் ஓர் அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ள காரணத்தால், இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கே வேறு நீர்ப் பாசன வசதியில்லாமையால், அது அத்தியாவசியமான அணை என்று கருதி அதனைக் கட்டி முடிக்க அமைச்சரவர்கள் விரைவாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பாலாறு, செய்யாறு பகுதிகளில், பல இடங்களில் 1977 முதல் நீர் அளவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காரணம், பாலாறு பேசினில் ஓரளவுக்கு நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீர் குறைந்து வருகிறது என்கிற கருத்துக்கள் இருக்கிற காரணத்தாலே இந்த நீர் அளவுகளை, 5 ஆண்டுகளுக்கு எடுத்து, அதற்குப் பிறகுதான் அதைப் பற்றி நாம் முடிவு செய்ய வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கருத்து தெரிவித்திருக்கிறார். எனவே 1982 ஆம் ஆண்டு வரை நீர் அளவுகளைத் தொடர்ந்து எடுத் ததற்குப் பிறகுதான் இதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

திரு. கோ. விஸ்வநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலாறு பேசின் ரூல்ஸ் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு சின்ன பம்ப் செட் வைப்பதி லிருந்து, பெரிய அணைகள் கட்டுவது வரை அது தடங்கலாகவே இருந்து வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலேயிருக்கிற நாங்கள் நீண்ட நாட்களாக இதைப் பற்றி, வந்துபோன எல்லா அமைச்சரிகளிடத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், காரியம் நடைபெறவில்லை. சாதாரண 3 ஹார்ஸ் பவர் பம்ப் செட் வாங்கிப் போட வேண்டுமானாலும் கூட, கிளியரன்ஸ் சர்ட்டிஃபிகேட் வாங்க வேண்டுமென்று சொல்லி, பெரிய தடை ஏற்படுகிறது. ஆண்டுக் கணக்கிலே வாங்க முடியாமல் போகிறது. அதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா என்பதை அமைச்சரிடம் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே மற்ற இடர்ப்பாடுகள் குறித்து, அரசாங்கம் கவனத்திலே கொள்ளும். ஆனால், இங்கே முக்கியமாக இந்த அணையில் 546 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி, அதன் மூலம் 7,751 ஏக்கருக்குப் பாசன உறுதி அளிப்பதற்கான ஒரு பெரிய திட்டம், கிட்டத்தட்ட 1977-78 ஆம் ஆண்டு நிலவிய விலை





விவரப்படி ரூ. 529 இலட்சம் செலவு செய்யப்பட்டு அந்த அணையைக் கட்ட வேண்டுமென்ற ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட் டிருக்கிறது. இப்பொழுது உள்ள விலை விகிதப்படி, அதுவே ரூ. 6 கோடி, ரூ. 7 கோடி ஆகும். இவ்வளவு பெரிய அணையைக் கட்டுவதற்காக திட்டத்தட்ட 540 மில்லியன் கன அடி தண்ணீ ரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவிற்கு நீர் அளவு இருக்கிறதா என்று நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். இது தவிர்க்க முடியாத ஒன்று. மற்ற பிரச்சினைகளை அரசு நிச்சயமாகக் கவனிக்கும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இது ஆய்வு செய்யப்பட்டது என்பதை அமைச்சரவர்கள் தன் னுடைய பதிலிலே விளக்கியிருக்கிறார்கள். ஆய்வு செய்யப்பட்டு, தண்ணீர் வருகிறதா என்ற அத்தனை பரிசோதனைகளும் செய்யப்பட்டு, இப்பொழுது பாலாறு விதி என்ற தடையைக் காட்டி நிறுத்தி வைப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பெரிய திட்டமாக இருக்கிற காரணத்தால், மீண்டும் ஒரு ஆய்வு செய்வது நல்லது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. ப. சுந்தரம் ; துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் நிலத்தடி நீரை நம்பியிருக்கிறோம். அப்படியிருக்கிற நேரத்தில், வட ஆற்காடு மாவட்டத்திலே பல இடங்களில் அணை கட்டுவதற்காக ஏற் கனவே ஆய்வு செய்யப்பட்டது. அதே போல, ஆண்டியப்ப னூர் என்னும் இடத்தில் ஒரு அணை கட்ட ஆய்வு செய்யப் பட்டது. அந்தத் திட்டம் என்ன ஆனது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது, நாகநதியின் குறுக்கே அமிர்தி என்னுமிடத்திலே அணை கட்டுவது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி பதில் சொல்ல முடியும்.

## முசுகுந்தா நதியின் குறுக்கே அணை.

* வினா எண் 178—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்பு மிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத் தில் லக்கிநாயக்கன்பட்டி அருகில் முசுகுந்தா நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு போடப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமத மாவதற்குக் காரணம் என்ன ?

[1980 ஆகஸ்டு 12

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் முசுகுந்தா நதியின் குறுக்கே அணை கட்ட சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்பட்டது.

(ஆ) ஆய்வின் முடிவில், சிறுபாசனத் திட்டமான இதைச் செயற்படுத்துவது சிக்கனமானதாக இராது எனத் தெரிந்ததால் மேற்கொள்ளப்படவில்லை. நடுத்தர பாசன திட்டமாக எடுத்துக்கொள்ளும் சாத்தியக் கூறுகள் உள்ளதா என்பது பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

திரு. சோ. கலிதீர்த்தான் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை நடுத்தர பாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படயிருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு எவ்வளவு காலம் ஆகும். அது பற்றி என்ன ஆய்வு நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பொன்னியாறு வடகரையில் நம்பிக்கையாக உபரி நீர் இருக்கிறதா என்று பார்த்த பிறகுதான் அதை நடுத்தரப் பாசனத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும், அந்த ஆய்வுதான் நடந்து கொண்டு இருக்கின்றது. அதை இன்னும் விரைவு படுத்தி ஆய்வு அறிக்கையைப் பெற்று அரசு பரிசீலிக்கும்.

## தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்புத் திட்டம்.

வினா எண் 179—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பொதுப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோபி வட்டத்தில் உள்ள தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்பதற்காகவும் தூர் எடுப்பதற்காகவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மேற்படி வாய்க்காலை சீரமைக்கும் திட்டத்திற்கு ரூ. 112.00 இலட்சத்திற்கு ஓர் மதிப்பீடு சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.



1980 ஆகஸ்டு 12]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பல்லாண்டுகளாக மதிப்பீடுகள் அளிக்கப்பட்டு வருடம் ஒரு முறை மதிப்பீடுகளை அதிகப் படுத்திக் கொண்டே இருக்கிறோம். உடனடியாக அந்த மதிப்பீடுகளை அரசு ஏற்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் குறைகளைக் களைகின்ற வகையில் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு.கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்வதா அல்லது நடுத்தரப் பாசனத் திட்டதின் கீழ் எடுத்துக் கொள்வதா என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. அது முடிந்த பின்னர் இந்தத் திட்டத்தை உடனடியாக விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப் பிறகு அரசு மதிப்பீடுகளை தயார் செய்து ஒப்புதல் வழங்கியதற்கு பிறகு வேலை துவங்கப்படும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விலைவாசி ஏறிக் கொண்டே போகின்றது. இந்த நிலையில் மதிப்பீடு அளிக்கப்பட்டு, வேலை கான்ட்ராக்டர்களால் துவங்கப்பட்ட பின்னர் அவர்கள் கட்டுப்படியாகவில்லை என்று ஓடிவிடுகிறார்கள். அதன் காரணமாக பல மதிப்பீடுகள் செயலற்ற முறையில் போய்விடுகிறது. இது நாடு முழுவதும் உள்ள நிலையாக இருக்கின்றது. அதைத் தவிர்ப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்திலே மதிப்பீடுகள் அளிக்கப்பட்டாலும் அதற்குப் பிறகு விலைப் பட்டியல் ஏற்றத்தைக் கணக்கில் கொண்டு எந்த அளவுக்கு அந்த சதவிகிதத்தை உயர்த்தி அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு கொடுக்க அரசு வழிவகை செய்திருக்கிறது. அதிலே ஏதாவது பிரச்சனை இருந்தால் அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி பகுதியில் பல அணைகள் கட்டப்பட்டிருக்கின்ற போதிலும், அந்த அணைகள் அங்கே கட்டப்படுவதனாலே கீழே இருக்கப்பட்ட பழைய காலத்து அணைகள் பாதிக்கப்படுகின்றன. அப்படி அணைகளைக் கட்டும்போது கீழே பாசனம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கீழே உள்ள அணைகளுக்கு எந்த அளவுக்கு தண்ணீர் விடப்படுகிறது. அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

[1980 ஆகஸ்டு 12

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே இது எந்தக் கேள்விக்கும் தொடர்பில்லை என்றாலும் கூட, எந்தப் பகுதி என்று குறிப்பாக சொன்னால் நல்லது, பொதுவாகவே எற்கனவே ஒரு அணைக் கட்டப்பட்டு அதன் மூலம் பாசன வசதி பெற்றுவருகின்றவர்களுடைய உரிமைகள் பாதிக்காத அளவுக்குத்தான் அரசு பார்த்துக் கொள்ளும். மேலும் அணை கட்டுகின்ற ஒரு சூழ்நிலை வருகிறபோது பாதிப்பு இல்லாத அளவுக்கு உபரி நீர் இருந்தால்தான் அதைக் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கிறோம். எனவே நீங்கள் தயவு செய்து குறிப்பாக இந்தப் பகுதியில் இந்த அணையிலே இப்படி இருக்கிறது என்று கேள்வி மூலமாக கொடுப்பீர்களேயானால் தகுந்த பதில் தரப்படும்.

## சோலூர் ஊராட்சியில் நீர் ஏற்றுத் திட்டங்கள்

*வினா எண் 180—திரு. கே. உச்சி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி சோலூர் ஊராட்சியைச் சேர்ந்த பொக்காபூர் என்ற இடத்திலும், கூக்கல் துறையிலும் நீர் ஏற்று திட்டங்கள் ஏற்படுத்தும் செயற் குறிப்புகள் ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அப்பணிகள் எப்பொழுது தொடங்கப் படும் ?

(இ) அத்திட்டங்களுக்கு ஆகும் மதிப்பீடுகள் எவ்வளவு"

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : (அ), (ஆ) மற்றும் (இ) கூக்கல் துறை நீர் ஏற்று திட்டம்பற்றி விரிவாக ஆய்வு நடத்தப்படுகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, அது சோலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பொக்காபூர் என்ற இடத்தில் ஒரு நீர் ஏற்றத் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும். அந்த நேரத்தில் அதை ஹில் ஏரியா டெவலப்மென்ட் ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி இருந்தால் அதையும் சேர்த்து உடனடியாக ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல சோலூர் ஊராட்சியைச் சேர்ந்த பொக்காபூர் என்ற இடத்தில் நீர் ஏற்றுத் திட்டம் அமைக்கின்ற செயற்குறிப்பு இல்லை. ஆனாலும் கூட, இந்தத் இடத்தில் ஒரு தடுப்பு அணைக் கட்டும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது கூக்கல்துறை திட்டத்தோடு சேர்த்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



1980 ஆகஸ்டு 12]

[முற்பகல் 10-20]

## சாத்தான்குளம் சட்டமன்ற தொகுதியை பிற்பட்ட பகுதியாக அறிவித்தல்.

*வினா எண் 181—திரு. எஸ்.என். இராமசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் சட்டமன்ற தொகுதியை பிற்பட்ட பகுதியாக அறிவிக்க அரசுக்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

## கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சித் திட்டம்.

*வினா எண் 182—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—81 -ல் கால்நடை கிளை நிலையங்களில் உள்ள காலியிடங்களை நிரப்ப கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி ஆரம்பிக்கப்படுமா ?

(ஆ) எத்தனை நபர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :

(அ) தற்போது கால்நடை ஆய்வாளர்கள் தேவைப்படுவதால் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசு கொள்கையளவில் தீர்மானித்துள்ளது.

(ஆ) கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி வழங்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கைப் பற்றிய விவரங்கள் கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சிப் பள்ளி துவக்க வேண்டும் என்று அரசுக்கு உத்தேசம் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பயிற்சிப் பள்ளி இந்த ஆண்டு துவக்கப்படுமா ? இல்லை என்றால் அடுத்த ஆண்டு துவக்கப் படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அதற்கு முன்னால் இப்போது சுமார் 500 சப்-சென்டர்களில் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருப்பதால் கால்நடைகள் வளர்ப்

பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தற்கால நடவடிக்கை யாக அரசு என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள். கால்நடை ஆய் வாளர்கள் இல்லாத இடங்கள் அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய விவ ரங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்நடை ஆய்வாளர்களின் பயிற்சி பள்ளி ஆரம்பிக்க இருப்பதாக அரசின் தரப்பில் இருந்து மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி ஆரம் பிக்கப்பட்டால், எவ்வளவு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படு வார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலை வர் அவர்களே, அதைத்தான் முன்பே கூறினேன். அரசின் பரி சீலனையில் உள்ளது.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்நடை ஆய்வாளர்கள் இன்றைக்கு கிராமப்புறங்களில் கால்நடைகளை வளர்க்க மிகவும் உதவிகரமாக இருந்து வரு கிறார்கள். எல்லா இடங்களிலும் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு அதிகச் சம்பளம் எல்லாம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, இந்த ஆய் வாளர்களை உபயோகித்து பல்வேறு இடங்களில் கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டியிருப்பதால், விரைவாக அந்தக் கால்நடை ஆய்வாளர் பயிற்சிப் பள்ளியைத் துவக்கி, கிளை நிலையங்களில் ஆய்வாளர்களை அமர்த்தி, அதன் மூலம் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே அதைப் பரிசீலித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைப் பணியாளர்கள் தொகுதி விதிகளை ஒருங்கிணைத்தல்.

கு. கா. வி. எண். 67—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையில் உள்ள பல்வேறு பணியாளர் தொகுதி விதிகள் அனைத்தையும் ஒருங்கி ணைத்து ஒரே விதியாக ஆக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) இது குறித்து உடன் ஆணை பிறப்பிக்க அரசு நட வடிக்கை மேற்கொள்ளுமா ?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஒரே பணி விதிகளை ஏற்படுத்துவதில் எழுந்துள்ள சில சிக்கல்களைத் தீர்த்து பணிவிதிகளை அமைக்க அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு துணைத் தலை வர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். என்ன காரணமாகப் பரிசீலனையில் உள் ளது ? பரிசீலனை எப்போது முடியும் ? பரிசீலனையில் உள்ளது என்ன என்பதை அறிய உள்ளாட்சித்துறை அலுவலர்கள் மிகவும் ஆவலாக எதிர்பார்க்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, சில பதவிகளை ஒருங்கிணைப்பதற்காக அந்த முயற்சி மேற்கொண்டு இருக்கிறோம். அந்தப் பரிசீலனைதான் இப்போது அரசிடம் உள்ளது. அந்த ஆய்வு செய்து, சீக்கிரம் முடிவு எடுத்து மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும்.

மருத்துவப்பட்டப்படிப்பில் இட ஒதுக்கீடு.

*கு. கா, வி. எண் 68—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்குகளுக்கு விடையளிப்பாரா ?

(அ) M.B.B.S. இட ஒதுக்கீட்டில் எத்தனை சதவீதம் +2 மாணவ மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) எத்தனை சதவீதம் P.U.C. படித்து முடித்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு மேல்நிலைக்கல்வி (அகடமிக்) பயின்ற மாண வர்களும், புகுமுக வகுப்பு படித்த மாணவர்களும் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்வதற்கு சமமாகக் கருதப்படுவர். எனவே, அவர் களுக்குத் தனித்தனியாக இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட மாட்டா

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவரவர்களே, எம். பி. பி. எஸ். மாணவர்களைத் தேர்ந்தெடுக்க என்னென்ன ''கைட் லைன்ஸ்'' வைக்கப்பட்டிருக்கின்றன ? பி. யூ. சி. மாணவர்களைப்போல பிளஸ்-2 மாணவர்கள் மார்க் எடுப்பது கடினமாக இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? மனு செய்த மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக பிரதிநிதித்துவம் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவ ரவர்களே, மாவட்ட ரீதியாக இடம் ஒதுக்கீடு செய்வது செல் லாது என்று உயர்நீதிமன்றம் சொல்லிவிட்டது. ஸ்டரக் டவுன்

பை தி ஹைகோர்ட். ஆகவே, அது முடியாத காரியம். 60 சதவீதம் மார்க் என்று பார்வேர்டு கம்யூனிட்டிக்கு வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ஷெட்யூல்டு வகுப்புக்கு எந்தவிதமான நிபந்தனையும் கிடையாது ; யார் வேண்டுமானாலும் படிக்கலாம்.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவரவர்களே, '' கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரிலே பழுத்த பலா '' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த விதவைகளுக்கு புரட்சித் தலைவர் அரசு இடம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதைப் போல் '' சாத்திரம் பார்க்காதே, ஒரு கட்டழகன் திருந்தோளிலே சேர்ந்திட சாத்திரம் பார்க்காதே என்று கலப்புத் திருமணத்தை ஊக்குவித்தார் பாவேந்தர். ஆகையால் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் குழந்தைகளுக்கும் தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, இரண்டு '' காட்கரீசு ''க்கும் தனி இடம் உண்டு. ஸ்பெஷல் காட்டகரீசாக இடம் ஒதுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, பிளஸ்-2 வகுப்பில் மேதமெட்டிக்ஸ் எடுத்து படித்தவர்களுக்கு மெடிக்கல் காலேஜில் அனுமதி கொடுக்க இயலாது என்று நம்முடைய மக்கள்-நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பிளஸ்-2 வகுப்பிலே மேதமெட்டிக்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி ஆகிய 4 பாடங்கள் பர்ஸ்ட் குரூப்பில் இருக்கிறது. என்சினீயரிங் படிக்கப் போகிறவர்கள், மெடிக்கல் படிக்கப் போகிறவர்கள்—இந்த இரண்டு பேர்களுக்கும் வசதியாக பிளஸ்-2 வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே திடீரென்று மேதமெட்டிக்ஸ் படித்தவர்களுக்கு மெடிக்கல் காலேஜில் இடமில்லை என்றால் அது ஏராளமான மாணவர்களைப் பாதிக்கும். இதிலே அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் எந்த இடத்திலும் மேதமெட்டிக்ஸ் படித்தவர்களுக்கு, எம். பி. பி. எஸ். உள்ளே நுழைய முடியாது என்று சொல்லவில்லை. நான் சொல்வது நேச்சுரல் சைன்ஸ் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் சூவாலஜி, பாட்டனி இருக்க வேண்டும் அல்லது பயாலஜி இருக்க வேண்டும். அது ஒரு குரூப். அதற்கு 100 மதிப்பெண்கள். பிசிக்ஸுக்கு 50, கெமிஸ்டிரிக்கு 50. இப்படித்தான் நாம் போட்டிருக்கிறோம். மேதமெட்டிக்ஸ் எடுத்திருந்தால் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று எந்தவிதமான நிபந்தனையும் கிடையாது. இந்த கேள்வி எங்கோ ஒரு பத்திரிகையில் வந்த தவறான செய்தியின் அடிப்படையில் வந்திருக்கிறது. மேதமெட்டிக்ஸ் படித்த மாணவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். மேதமெட்டிக்ஸ் எடுத்திருக்கிறவர்கள் பிசிக்ஸ், கெமிஸ்டிரி, நேச்சுரல் சைன்ஸ் அல்லது பிசிக்ஸ், கெமிஸ்டிரி, பயாலஜி எடுத்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இடம் இல்லை.





திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்த ஆண்டு அயல்நாட்டு மாணவர்களுக்கு தனியாக இடம் ஒதுக்கப்படுமா? எத்தனை இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இடம் ஒதுக்கப்படும். அதற்கு இந்தியன் பாஸ்போர்ட் இருக்கவேண்டும்.

| | |
|---|---|
| For physically handicapped .. .. .. .. .. | 3 |
| For widows .. .. .. .. .. .. .. | 10 |
| For the children of Ex/Deceased, Serving Defence personnel of Tamil Nadu Origin at the rate of two seats for each category, provided they satisfy the qualifications prescribe for admission to the course | 6 |
| Children born of inter-caste marriage .. .. .. | 6 |
| Eminent sportsmen .. .. .. .. .. .. | 3 |
| Children of freedom fighters .. .. .. .. | 1 |
| Candidates whose parent has suffered for the cause of development of Tamil .. .. .. .. .. .. | 3 |
| Government of India nominees of certain categories .. | |
| Jammu and Kashmir .. .. .. .. .. .. .. | 4 |
| Nepal .. .. .. .. .. .. .. .. .. | 2 |
| Reservation of seats for Andhra Pradesh on reciprocal basis. | 2 |
| Reservation of seats for Karnataka on reciprocal basis .. | 2 |
| Repatriates of Tamil Nadu origin from Sri Lanka and Burma. | 5 |
| Candidates of Tamil Nadu origin who by themselves and whose parents continue to be Indian citizens and hold Indian pass ports.<br>Candidates of Tamil Nadu origin who by themselves have become foreign citizens and whose parents are also foreign citizens.<br>Candidates of Tamil Nadu origin who have become foreign citizens but whose parents continue to be Indian citizens holding Indian passports | 20 |

அவர்களுக்கு எல்லாம் சேர்த்து, மலேசியா உட்பட, மொத்தம் 20 இடங்கள்.

[1980 ஆகஸ்ட் 12

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, ஒப்பன் காம்பபிடிஷனுக்கு 60 மார்க் எடுத்தால் போதும் என்ற நடைமுறை இருக்கும்போது ஷெட்யூல்டு காஸ்டில் 60 சதவிகிதம் எடுத்த மாணவர்களை ஒப்பன் காம்படிஷனில் எடுத்துக் கொண்டு, குறைந்த பட்சம் மார்க் வாங்கியவர்களை ' கோட்டா ' வில சேர்த்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த வாய்ப்பு நிச்சயமாக உண்டு. அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. கம்ப்யூட்டரைஸ்ட் ஸிஸ்டம் வைத்திருக்கிறோம். அதனுடைய அடிப்படையிலே நிறைய ஷெட்யூல்ட் காஸ்ட் நண்பர்கள் இந்த முறை அதில் இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கின்றது.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புக்கு பி.எஸ்ஸி. பட்டதாரிகளைச் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ? அப்படியானால் எத்தனை சத விகிதம் ஒதுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இதிலே சதவிகிதம் என்ற அளவிலே ஒதுக்கீடு செய்வது கிடையாது. பி.எஸ்ஸி. பட்டதாரியாக இருந்தாலும் அவர்கள் எடுத்த பி.யு.சி. மார்க்கின் அடிப்படையிலேதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விரிவாக்க அலுவலர்களாக உள்ள கால்நடை மருத்துவப் பட்டதாரிகள்.

*கு. கா. வி. எண் 69—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இதுவரை எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் விரிவாக்க அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

திரு. எஸ். சிவராமன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் நியமிக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் அவர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை ஆய்வாளர்களை நியமிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கால்நடை மருத்துவ ஆய்வாளர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் ஒரு முரண்பாடு இருந்து வந்தது. அதை அரசு எவ்வாறு பரிசீலித்து தீர்த்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, 1957-ம் ஆண்டிற்கு முன்பு கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்பு விரிவாக்க அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர். காலப் போக்கில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் பற்றாக்குறை காரணமாக ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு, விரிவாக்க அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் கால்நடைகளுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க 11 மாதம் பயிற்சி பெற்றவர்கள். தற்போது போதுமான கால்நடை பட்டதாரிகள் உள்ளனர். கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை கால்நடை ஆய்வாளர்களுக்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்பு விரிவாக்க அலுவலர்களாக நியமிக்கலாமா அல்லது வேண்டாமா என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நியமிப்பது பற்றி அரசு பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டு எவ்வளவு காலத்திற்குள் அவர்களை நியமிப்பதற்கு அரசு முன் வரும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, கால்நடை பட்டதாரிகளை ஊராட்சி ஒன்றியங்களில் நியமிப்பது பற்றி கால்நடை மருத்துவக் குழு அதாவது வெட்டர்னரி கவுன்சில் என்ற ஒரு குழுவினை அமைக்க அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வெட்டர்னரி கவுன்சில் என்ன முடிவு செய்கிறதோ அந்த முடிவின்படி அரசு முடிவு செய்து அது நல்ல முறையில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த கிராமப்புற பஞ்சாயத்து ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இப்போது நம்முடைய தேவையும் அதிகமாக இருக்கின்றது. நாம் அமைத்த ஒரு குழுவே கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கிராமப்புறங்களிலே பணியாற்றக் கூடியவர்களுக்காக சிபாரிசு செய்திருக்கின்றது. இந்த சூழ்நிலையில் கால்நடைப் பட்டதாரி

களுக்கும் இவர்களுக்கும் வந்திருக்கின்ற சர்ச்சையை சுமூகமாகத் தீர்த்து வைக்கக் கூடிய முறையிலே அரசு அணுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

## திருவில்லிப்புத்தூர் மருத்துவமனையில் விசேஷ வார்டுகள்.

வினா 1—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் மருத்துவமனையில் விசேஷ வார்டுகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது முதல் நடைமுறைக்கு வரும் ?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் மருத்துவமனையில் விசேஷ வார்டுகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## வத்திராயிருப்பு மருத்துவமனையில் விசேஷ வார்டுகள்.

வினா எண் 2—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பிலுள்ள மருத்துவமனையில் விசேஷ வார்டுகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது முதல் நடைமுறைக்கு வரும் ?

விடை.—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பிலுள்ள மருத்துவமனையில் விசேஷ வார்டுகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





## திருவில்லிபுத்தூர் வட்டத்தில் கையாடல் குற்றங்களில் ஈடுபட்ட கிராம அதிகாரிகள்.

வினா எண் 3.—திரு. ரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் எந்த எந்த கிராம அதிகாரிகள் நிலவரி, பஞ்சாயத்து வரி, கடன் முதலியவைகளை வசூல் செய்து 1977-ம் ஆண்டில் இருந்து காலதாமதமாக இருசால் செய்தோ அல்லது கையாடல் செய்தோ உள்ளனர் ?

(ஆ) மேற்படி கிராம அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை.—

(அ) 1. திரு. ராமச்சந்திரன்—விழுப்பனூர், கி.மு.
2. திரு. ராம்கிருஷ்ணன்—மல்லி, கி.மு.
3. சண்முக ராமராஜ்—வத்திராயிருப்பு, கி.மு.
4. திரு. ஜெகந்நாதன்—அயன்கரிசல்குளம், கி.மு.

(ஆ) 1. திரு. ராமச்சந்திரன் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்

2. திரு. ராம்கிருஷ்ணன் இடைக்கால வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். திருவில்லிபுத்தூர் குற்றவியல் உட்கோட்ட நீதிமன்றத்தில் குற்றவழக்கு நிலுவையில் உள்ளது.

3. சண்முகராமராஜ் ஆறுமாத காலத்திற்கு தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

4. சிவகாசி கோட்ட ஆட்சித்தலைவர், திரு. ஜகந்நாதன் மீது துறை நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அன்பு இல்லங்கள்.

வினா எண் 3(—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை அன்பு இல்லங்கள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு அன்பு இல்லத்திலும் எத்தனை பேர்கள் உள்ளனர் ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு அன்பு இல்லங்கள் உள்ளன.

(ஆ) இந்த அன்பு இல்லங்களில் உள்ள மாணவர்/மாணவியரின் எண்ணிக்கை 31-5-1980 முடிய பின்வருமாறு:—

1. அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயம், இராமேஸ்வரம் .. .. .. 26 மாணவியர்
2. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், இருக்கன்குடி சாத்தூர், வட்டம் .. 53 மாணவர்கள்

## வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

வினா எண் 41—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம் வெங்கடேஷ்வரபுரம் கிராமம் ரங்கர் கோயிலுக்கு அருகில் புதிதாக கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) & (ஆ) : திருவில்லிபுத்தூர் வட்டம் வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தின் அருகே ரங்கர் கோவில் ஓடையின் குறுக்கே ரூ. 4·98 லட்சத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஏற்கனவே அனுமதி அளித்தது. மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி பலமுறை கோரப்பட்டும் எவரும் முன்வரவில்லை. இதற்கிடையில் பொருள்களின் விலையும் தொழிலாளர்களின் கூலியும் உயர்ந்துவிட்டதால், இதற்கான திருந்திய மதிப்பீடு நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திருத்திய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டபின் மேற்கண்ட கண்மாய் அமைக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.

## கரிவலம்வந்தநல்லூர் உயர்நிலைப் பள்ளி.

வினா எண் 75—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோயில் வட்டம் கரிவலம்வந்தநல்லூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) மேல்நிலைப் பள்ளியாக ஆக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(இ) நடப்பு கல்வியாண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதா ?

விடை—

(அ) (ஆ) மற்றும் (இ) : நடப்பு ஆண்டில் (1980-81) கரிவலம்வந்தநல்லூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.





## சிவகிரி மருந்தகத்தில் டாக்டர்கள் பதவி.

வினா எண் 7;—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரியில் உள்ள மருந்தகம் பல மாதங்களாக மருத்துவர் இல்லாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) இங்கு மகப்பேறு மருத்துவப்பிரிவுடன் ஒரு மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை :—

(அ) ஆம். ஆனால் இப்போது மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் 14—7—1980 முதல் பணிபுரிந்து வருகிறார்

(ஆ) 1978 ஆம் ஆண்டு வாக்கில் திருநெல்வேலி மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் மூலம் ஆறு படுக்கைகள் கொண்ட ஒரு மகப்பேறு மருத்துவபிரிவு அமைக்க செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு பொருளாதார பற்றாக்குறையின் காரணமாக அதன் மீது மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

## கோட்டைப்பட்டி கிராமத்தில் அரிசன கூட்டுறவு பால் பண்ணை.

வினா எண் 8 :—திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம் கோட்டைப்பட்டிக் கிராமத்தில் புதிதாக அரிசன கூட்டுறவு பால்பண்ணை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :—

(அ) கோட்டைப்பட்டிக் கிராமத்தில் புதிதாக அரிசன கூட்டுறவு பால் சங்கம் அமைத்துக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1980 ஆகஸ்ட் 12

## திருமலைராயன் ஆற்றின் குறுக்கே வண்டிப்பாலம்.

வினா எண் 9 :—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம்—நன்னிலம்— மானந்தகுடி சாலையில் திருமலைராயன் ஆற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பரதராமி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 10 : திரு கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியாத்தம் தொகுதியில் வளத்தூர் பரதராமியிலுள்ள உயர்தரபாடசாலை கட்டிடங்களைக் கட்டுவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை :—

(அ) மற்றும் (ஆ) வளத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவது குறித்து பிரேரணைகள் எதுவும் இல்லை. பரதராமி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கான பிரேரணைகள் வரைபடம் மற்றும் மதிப்பீடுகளுடன் அனுப்பி வைக்கும்படி வட ஆற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

## ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி.

வினா எண் 11 :—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் வேளாண்மைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்கல்லூரி தொடங்குவதற்கான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1980 ஆகஸ்டு 12]

## தண்டாரம்பட்டு தொகுதியில் மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள்.

வினா எண் 12 :—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தண்டராம்பட்டு தொகுதியில் மின் இணைப்பு பெறுவதற்கு 90 நாளைக்குள் மோட்டார் வாங்கி வைக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ள மொத்த நபர்கள் எத்தனை பேர் ?

விடை :—

2,397 பேர்.

## குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வீடுகள்.

வினா எண் 13:—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட (விமுக்த சாதியினர்) ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை :—

(அ) ரூ. 4,300 செலவில் (அரசு மானியம் ரூ. 3,225 பயனடைவோர் பங்கு தொகை ரூ. 1,075) குற்ற மரபினர் பட்டியிலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

(ஆ) அதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி.

வினா எண் 14:—திரு. சி. கேசவ ஆதித்தன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் தொகுதி, ஆத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

விடை :—

ஆத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 1980-81-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

[1980 ஆகஸ்டு 12

பாலசமுத்திரத்தில் மருத்துவமனை.

வினா எண் 15:—திரு. என். பழனிவேல் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம் நகர பேரூராட்சியாகவும் சுமார் 12,000 மக்கள் தொகை உள்ளதாகவும் இருப்பதால் அங்கு மருத்துவமனை கட்ட திட்டம் உள்ளதா ?

விடை :—

இல்லை.

தாமரைக்குளம்—ராஜபுரம் சாலையில் பாலம்.

வினா எண் 16:—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பழனி வட்டம், தாமரைக்குளத்திற்கும் ராஜபுரத்திற்கும் இடையே ஓடும் பெரிய ஆற்றின் குறுக்கே மேல்பாலம் கட்டும், நீண்ட நாட்களாய் ஆய்வில் இருந்து வரும், திட்டம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை :—

இல்லை.

சித்தையன் கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்.

வினா எண் 17:—திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், சித்தையல் கோட்டையின் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் ஏற்பட்ட தீவிபத்தில் சேதமான பள்ளியின் கூரையை மீண்டும் புதுப்பிக்காததால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை :—

சித்தையன் கோட்டையிலுள்ள அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிக் கொட்டகை தீப்பிடித்துக்கொண்டதால் ஏற்பட்ட இட நெருக்கடியைப் போக்க ரூ. 1.78 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 10 வகுப்பறைகள் கொண்ட ஓரளவு நிரந்தர புதுக் கட்டிடம் ( Semi Permanent Building ) ஒன்றைக் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலை இவ்வாண்டு மார்ச் திங்களில் அரசு அளித்துள்ளது.



1980 ஆகஸ்டு 12]

ஆலங்குளம் தொகுதி கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

வினா எண் 18:—திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் நடப்பு ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு பாதுகாப்பு குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

விடை :—

15 சிற்றூர்களுக்கு நடப்பு நிதியாண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சிங்கம்மாள்புரத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலம்.

வினா எண் 19:—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம், சிங்கம்மாள்புரம் (இ) புலன் 587/3ஏ-ல் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி ஏழைகளுக்கு வீட்டு மனை பட்டா செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வீட்டு மனைப்பட்டா கிடைக்கும் ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் வட்டம், சிங்கம்மாள்புரம் கிராமம் புலன் எண் 587/3-ல் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலம் பஞ்சாயத்துக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலமாக இருப்பதால் அதைப் பஞ்சாயத்து ஆளுகையிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது முடிந்தவுடன் அந்நிலத்தை நத்தமாக மாற்றி பின்பு ஏழைகளுக்குப் பட்டா வழங்கப்படும்.

[1980 ஆகஸ்டு 12

## திருவில்லிபுத்தூரில் அரிசன குடியிருப்புகளுக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் ஆக்கிரமிப்பு.

வினா எண் 20:—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிபுத்தூர் தொகுதி அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக ஒப்படைப்பு செய்து பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை காலி செய்வதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணம் யாது?

விடை :—

திருவில்லிபுத்தூர் வட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று கிராமங்களில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ளன.

1. ரைட்டம்பட்டி —

வடக்கு திருவில்லிபுத்தூரிலுள்ள ரைட்டம்பட்டி என்னும் கிராமத்தில் சர்வே எண் 915/3-ல் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டு வீட்டு மனைகளில் 36 பேர்கள் ஆக்கிரமிப்பு செய்ததில் 35 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன. ஆனால் திருமதி. லூர்துமேரி என்பவர் தனக்கு வழங்கப்பட்ட சர்வே எண் 915/3-ல் வீடு கட்டிக்கொள்ளாமல் பொது உபயோகத்திற்கு நிறுத்தப்பட்ட இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்ததை இன்னும் அகற்றவில்லை. அவ்வாக்கிரமிப்பை அகற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2. செம்பட்டி —

சுந்தரபாண்டியம் கிராமத்திலுள்ள செம்பட்டியில் அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக ஒதுக்கப்பட்ட சர்வே எண் 1429/4 மற்றும் 1428/2பி ஆகிய இடங்களில் 6 ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இவைகளை அகற்றுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. மீனாட்சிபுரம் —

பூவானி கிராமம், மீனாட்சிபுரம் அரிசனக்குடியிருப்பில் உள்ள தெருவை திண்ணைகள் மற்றும் தாழ்வாரங்கள் அமைத்து 9 பேர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்கள், மல்லி வருவாய் ஆய்வாளர் முன்பாக தங்கள் ஆக்கிரமிப்புகளை காலி செய்து கொள்வதாக 21-6-80 அன்று வாக்குமூலம் செய்து கொடுத்திருந்த போதிலும் இன்னும் ஆக்கிரமிப்புகளை காலி செய்யவில்லை. எனவே அவ்வாக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1980 ஆகஸ்டு 12]

## அம்பாசமுத்திரம் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

வினா எண் 21:—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அம்பாசமுத்திரத்தில் நடைபெற்று வரும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றுமாறு பெற்றோர்களிடமிருந்தும் மற்றும் பலரிடமிருந்தும் சமீபத்தில் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை :—

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக 1980–81-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

## குருடம்பாளை அணைத்திட்டம்.

வினா எண் 22:—திரு. வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தாலூகா, தேவர்மலை கிராமப்பகுதியில் (மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலூகாவின் எல்லையை ஒட்டிய) குருடம்பாளை அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை :—

குருடம்பாளை அணைக்கட்டுத் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. 1968 ஆம் ஆண்டிற்கு முன் குருடம்பாளை திட்டம் என்ற பெயரில் தேவர்மலை கிராமத்தை சேர்ந்த குடிவேண்டைக்கு அருகில் செல்லும் ஓடையில் ஒரு குளம் அமைக்கும் திட்டம் ஆய்வில் இருந்தது. ஆனால் கீழுள்ள பஞ்சப்பட்டி நீர்த்தேக்க திட்டம் பாதிக்கப்படும் என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

[1980 ஆகஸ்டு 12

## வேடசந்தூர் தாலுகாவில் தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 23:—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தாலுகாவில் தொழிற் பயிற்சி நிலையம் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

விடை :—

இல்லை.

## மதுரை மாவட்டத்தில் வடக்குப்பகுதியில் வேளாண்மை பொறியியல் பிரிவு.

வினா எண் 24:—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மதுரை மாவட்டத்தில் வடபகுதி மக்கள் பயன்பெறும் வண்ணம் வேளாண்மை பொறியியல் பிரிவின் ஓர் பிரிவினை திண்டுக்கல் நகரில் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை :—

திண்டுக்கல்லில் ஓர் உட்கோட்டம் நிறுவுவது சம்பந்தமாக ஒரு பிரேரணை செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்று, வேளாண்மை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

## காரணாம்பட்டு நடுநிலைப்பள்ளி.

வினா எண் 25:—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்பாடி ஒன்றியம் காரணாம்பட்டு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன்மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

விடை :—

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி ஒன்றியம் காரணாம்பட்டு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு நிபந்தனைகளை பூர்த்தி செய்கிற அடிப்படையில் அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண் 1328, கல்வி நாள், 16—7—1980-ல் ஆணை வெளியிடப் பட்டுள்ளது.



1980 ஆகஸ்டு 12]

## கோவை மத்திய சிறைச்சாலைப் பணியாளர்களது வீடுகள்.

வினா எண் 26—திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு: சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

(அ) கோவை மத்திய சிறைச்சாலையில் பணிபுரியும் வார்டர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் ஒரு பகுதி பழைய பழுதடைந்த வீடுகளாக உள்ளது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பழைய வீடுகளை புது வீடு களாக மாற்றுவதற்கு திட்டமுள்ளதா ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) கோவை மத்திய சிறையில் 118 காவலர் குடியிருப்புகள் உள்ளன. இவைகளில் 60 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இவ்வீடுகளை பழுதுபார்க்க ரூ. 13.80 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேலையை நிதிப்பற்றாக்குறை காரணமாக நிறைவேற்ற இயலவில்லை. இச்சிறையில் உள்ள காலி நிலங்களில் ஒரு பகுதியை மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு அரசு அலுவலகங்கள் கட்டிட மாற்றம் செய்திடல் வேண்டி செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்படும் நிலத்திற்காகக் கொடுக்கும் கிரயத்தை சிறைக் காவலர்கள் குடியிருப்பு கட்டும் பணிக்காகப் பயன் படுத்தலாம் என்ற திட்டமும் உள்ளது.

இத்துறையில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட நிதி உதவி கோரி மத்திய அரசு அணுகப்படும். அடுத்த சில ஆண்டு களில் இத்துறையின் பாதுகாப்புப் பணியாளர்களில் 80 சத விகிதத்தினருக்கு வீட்டு வசதி படிப்படியாக அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருவில்லிப்புத்தூர் தொகுதி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 27—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம், வத்திராயிருப்பு கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

[1980 ஆகஸ்டு 12

விடை :—

(அ) உள்ளது.

(ஆ) இத்திட்டம் உலக வங்கியின் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்களில் சேர்க்கப்பட்டு தற்பொழுது ஆய்வில் உள்ளது. உலக வங்கியின் ஒப்புதலைப் பெற்று 1981–82 நிதியாண்டில் தொடங்கப்படும்.

வினா எண் 28—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள கல்யாணபுரம், கொத்தங்குளம், கீழகோட்டையூர், பெருமாள் தேவன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

விடை :—

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள கல்யாணபுரம், கொத்தங்குளம் மற்றும் பெருமாள் தேவன்பட்டி ஆகிய பிரிவு 3-ல் (நல்ல குடிநீர் இருந்தும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து கிடைக்க இயலாத நீர்நிலைகள் கொண்ட சிற்றூர்கள்) அடங்கும் சிற்றூர்களுக்கு குடிநீர் வசதியளிக்கும் திட்டங்கள் நடப்பு நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. பிரிவு 6-ல் (நல்ல குடிநீர் உடைய சிற்றூர்கள்) அடங்கும் கீழ்க்கோட்டையூர் சிற்றூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

## வேலூரில் சட்டக் கல்லூரி.

வினா எண் 29—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் சட்டக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், இந்தக் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப் படுமா ?



1980 ஆகஸ்டு 12]

விடை :—

(அ) மற்றும் (ஆ) : இம்மாநிலத்தில் சட்டக்கல்லூரிகள் சென்னை, மதுரை, திருச்சி கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன. திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் 1979–80 ஆம் ஆண்டில் தான் இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் தொடங்கப்பட்ட சட்டக்கல்லூரிகள் செவ்வனே இயங்கி வருவதைப் பொறுத்தும் சட்டக் கல்லூரிகளில் சேருவதற்கு வரும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை அனுசரித்தும் வேலூரில் புதிதாக சட்டக் கல்லூரி தொடங்குவது பற்றி பரிசீலனை செய்யலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

வேலூரில் சட்டக்கல்லூரி இக்கல்வியாண்டிலிருந்து ஆரம்பிக்கப்படவில்லை.

## வடாற்காடு மாவட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டம்.

வினா எண். 30—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் வனத்துறையினரால் மரம் வைத்து வளர்க்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.?

விடை:—

(அ) ஆம்.

(ஆ) சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஏரி எதிர் வாய்க்கால் கரைகளில் மரங்களை வளர்க்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

வடாற்காடு மாவட்டத்தில் மட்டும் நடப்பு ஆண்டில் (1980–81) 3,400 எக்டேர் பரப்பில் கிராம காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழும், கால்வாய்களின் நெடுக 40 எக்டேரிலும், சாலை நெடுக 100 கிலோ மீட்டர் தூரத்திற்கும் கருவேல் மரம், தைல மரம், புளியன் முதலிய மரக்காடுகள் தோற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

[1980 ஆகஸ்டு 12

மரங்களை வளர்ப்பதற்கு எங்கெல்லாம் ஊராட்சி நிலங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவோ அங்கெல்லாம் அந்த மரங்களிலிருந்து கிட்டும் வருவாயில் 50 சதவீதம் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு வழங்கப்படுகின்றது.

இவ்வாறு வளர்க்கப்படும் மரங்கள் விறகு வெட்டும் மரம், பசுந்தழை உரம், கால்நடை தீவனம் முதலியவற்றைப் பொறுத்த மட்டில் கிராம மக்களின் தேவையை நிறைவு செய்கின்றன. இவை மண்வளத்தையும், மண்ணின் ஈரத்தன்மையையும் பாதுகாத்து உடல் நலத்திற்கு வளங்கூட்டும் சுற்றுப்புற சூழ்நிலைகளைப் பேணி வரவும் உதவி புரிகின்றன.

## சாத்தனூர் அணையில் தீப அலங்காரம்.

வினா எண் 31—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் தீப அலங்காரம் வாரத்தில் எத்தனை நாள் செய்யப்படுகிறது?

(ஆ) ஆண்டுக்கு எவ்வளவு செலவு ஆகிறது.

(இ) வருவாய் எவ்வளவு?

விடை:—

(அ) வடாற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் தீப அலங்காரம் பொதுவாக வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் செய்யப்படுகிறது.

(ஆ) ஆண்டுக்கு சுமார் ரூ. 40,000 செலவு ஆகிறது.

(இ) 1979-80 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 2.67 லட்சங்கள்.

## வெறுமுடி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 32.—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் செங்கம் சாலையில் எலத்தூர் அருகில் வெறுமுடி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1980 ஆகஸ்ட் 12]

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) மதிப்பீடு தொகை எவ்வளவு?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை:

(அ) இல்லை.

(ஆ), (இ), மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

## மேல் சோழங்குப்பத்தில் புதிய ஏரி அமைத்தல்.

வினா எண் 33—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள மேல் சோழங்குப்பம் கிராமத்தில் 1974–75 ல் புதிய ஏரி கட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) பாய்ச்சல் கால்வாய் வெட்டப்பட்டுள்ளதா?

விடை:

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தால் 596 ஏக்கர் நிலங்கள் புதிதாக பாசனம் பெறும். எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 462 டன்களாக இருக்கும். திட்டத்தின் மதிப்பீடு ரூ. 20 லட்சம்.

(இ) ஆம்.

## போளூர் வட்டத்தில் கப்பிச் சாலைகள் அமைத்தல்.

வினா எண் 34— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் முதல் விளர் சாலையிலிருந்து சாலமேடு வழியாக கிடாம்பாளையம் நேரு நகர் வரை செல்லும் சாலையை கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(அ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) மதிப்பீடு தொகை எவ்வளவு?

[1980 அகஸட் 12

விடை:

(அ) மற்றும் (ஆ) : வடாற்காடு மாவட்டம், என். சி. வீளூர் சாலையிலிருந்து கி. மீ. 11·0 ல் வலது பக்கம் பிரிந்து கேட்டவரம் பாளையம், கிடாம் பாளையம், சாலமேடு வழியாக இச்சாலை செல்கிறது. இதன் மொத்த நீளம் 7.0 கி. மீ. இது கலசப்பாக்கம் பஞ்சாயத்து ஒன்றிய சாலையாகும். இதன் நீளம் 4.0 கி. மீ. கிடாம் பாளையத்திற்கும், பிறகு நேரு நகர் வரை வண்டிப்பாதை 3.0 கி. மீ. தூரம் செல்கிறது. கி. மீ. 0/0—4 0 வரையில் உள்ள சாலையை கப்பி சாலையாக மாற்றும் பணியானது தன்னிறைவு திட்டத்தின்கீழ் கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தின் பரிசீலனையில் உள்ளது. கிடாம் பாளையத்திலிருந்து நேரு நகர் வரை சாலை இல்லை. இது எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை.

(இ) ரூ. 73,000

வினா எண் 35—

திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டம் போளூரிலிருந்து சனிக்கவாடி வழியாக பெலாசூர், பாடகம் செல்லும் சாலையை கப்பி, தார் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

ா எ 36

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) போளூர் முதல் சேத்துப்பட்டு சாலையிலிருந்து சோத்துக்கன்னி விளாப்பாக்கம் வழியாக பாடகம் செல்லும் சாலையை கப்பி, தார் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1980 ஆகஸ்ட் 12]

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

(இ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை :

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

## இடைப்பாடி நகராட்சி ஆரம்பப்பள்ளி

வினா எண் 37—திரு. இ. கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகராட்சி ஆரம்பப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மொத்தம் எத்தனை பேர்?

(ஆ) அப்பள்ளிக் குழந்தைகள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பள்ளிக் கட்டிடம் அங்கு உள்ளதா?

(இ) இல்லையெனில் மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஈ) இருப்பின் அதன் விவரம் என்ன?

விடை :

(அ) 3,914

(ஆ) ஆம்.

(இ) மற்றும் (ஈ) கேள்விக்கு இடமில்லை.

## இடைப்பாடி அரசினர் மருத்துவமனை

வினா எண் 38—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடியில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு நாளொன்றுக்கு வரும் நோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) அங்கு நோயாளிகள் அனுமதிக்க படுக்கை வசதி எத்தனை பேருக்கு உள்ளது?

[1980 ஆகஸ்ட் 12

விடை :

(அ) 1979 ஆம் ஆண்டு இடைப்பாடி அரசினர் பொது மருத்துவ மனையில் நாளொன்றுக்கு சராசரியாக 465 பேர் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றனர்.

(ஆ) உள்நோயாளிகளாக அனுமதித்து சிகிச்சை செய்ய 10 படுக்கைகள் உள்ளன.

வினா எண் 39— திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடியிலுள்ள அரசினர் மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்கள், மருத்துவர்கள் உட்பட எத்தனை பேர்?

(ஆ) அம்மருத்துவ மனைக்கு 1977–78, 1978–79, 79–80 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மருந்தின் மதிப்பு எவ்வளவு?

(இ) இங்கு அவ்வாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட மருந்தின் மதிப்பு எவ்வளவு?

விடை :

சேலம் மாவட்டம், இடைப்பாடியிலுள்ள அரசு மருத்துவ மனையில் பணியாற்றும் பணியாளர்கள், மருத்துவர் உட்பட 10 பேர்கள்.

| | | |
|---|---|---|
| (ஆ) | 1977–78 | ரூ. 14,500 |
| | 1978–79 | ரூ. 12,000 |
| | 1979–80 | ரூ. 19,000 |
| (இ) | 1977–78 | ரூ. 16,497 |
| | 1978–79 | ரூ. 28,815 |
| | 1979–80 | ரூ. 20,22[illegible] |



1980 ஆகஸ்ட் 12]

வில்லிவாக்கம் தொகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

வினா எண் 40: திரு ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 32, 33, 76 ஆகிய வட்டங்களில் (வில்லிவாக்கம்) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) தற்போது சில பகுதிகளில் தற்காலிக திட்டமாக தண்ணீர் தொட்டிகள் வைக்கப்படும் திட்டம் எல்லா பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

(இ) இதற்கான செலவுத் தொகை எவ்வளவு?

விடை :

(அ) ஆம். வில்லிவாக்கத்தில் கிணறுகளிலிருந்து பம்பு மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு 94 பொதுக் குழாய்கள் மூலம் பல தொகுதிகளில் தண்ணீர் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கும் குடிநீர் வழங்க திட்டம் ஒன்று ரூ. 206 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. வில்லிவாக்கம் பகுதியும் மேற் குறிப்பிட்ட 12 பஞ்சாயத்துக்களில் ஒன்றாகும். இத்திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடங்க இருக்கிறது.

(ஆ) தற்போது 140 குடிநீர்த் தொட்டிகள் நகரில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இவற்றில் வில்லிவாக்கம் பஞ்சாயத்து எல்லையில் மட்டும் 3 தொட்டிகள் உள்ளன. குடிநீர் தேவைகளுக்கு ஏற்ப குடிநீர் தொட்டிகள் அவ்வப்போது அமைக்கப்படுகின்றன.

(இ) (1) வில்லிவாக்கம் பகுதிக்கு குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 30.60 இலட்சம்.

(2) குடிநீர்த் தொட்டி ஒன்றை அமைத்து குடிநீர் வழங்க பராமரிப்பு செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 900 ஆகிறது.

வினா எண் 41: திரு ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி—செங்குன்றம் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1980 ஆகஸ்ட் 12

(ஆ) தற்காலிக திட்டமாக தண்ணீர் தொட்டிகள் திறக்கும் உத்தேசம் உள்ளதா?

(இ) ஆம் எனில் எந்தெந்த இடங்களில் தொட்டிகள் அமைக்கப்படும்?

விடை :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): தற்போது மூன்று ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து உயர் மட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய்கள் மூலம் செங்குன்றம் பஞ்சாயத்துக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு கிடைக்கும் நீரின் அளவு போதாததால் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மேற்கொண்டு இரு ஆழ் துளைக் கிணறுகள் போட்டு அவை மூலம் கிடைக்கும் அதிகப்படி நீரை ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் செங்குன்றம் பகுதிக்கு விநியோகிக்க உத்தேசித்துள்ளது. எனவே, தற்காலிகமாக தண்ணீர்த் தொட்டிகள் திறக்கும் பிரச்சினைக்கு இடமில்லை.

## ஆண்டியப்பனூரில் புதிய ஏரி அமைத்தல்.

வினா எண். 42; திரு பி. சுந்தரம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் என்னுமிடத்தில் ஒரு புதிய அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும்.?

விடை :

(அ) அத்திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுப் பணிகள் முடிந்த பின்னர் தேவையான மேல நடவடிக்கை எடுக்கப்படும்.



1980 ஆகஸ்ட் 12]

## பெருமாபட்டு கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

வினா எண் 43—திரு பி. சுந்தரம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்காவிலுள்ள பெருமாபட்டு கிராமத்திலுள்ள ஜலக்காம் என்னுமிடத்தில் ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை :

(அ) ஆம். திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மீது வருவாய் வாரியத்தின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது. வாரியத்தின் அறிக்கை கிடைத்த உடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## தறுவாய் நாய்கனேரி

வினா எண் 44—திரு இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலூக்கா (கணியம்பாடி ஒன்றியம்). மோட்டுப் பாளையம் கிராமத்தில் புதியதாக தறுவாய் நாய்கனேரி என்ற ஏரி கட்டப்பட்டதா?

(ஆ) இதன் வேலைகள் முடிவு பெற்றதா?

(இ) இதன் பாசன ஆயக்கட்டு ஏக்கர் எவ்வளவு? எந்த தாலுக்காக்களில்?

விடை :

(அ) ஆம்.

(ஆ) கன்னிவாய்க்கால் வெட்டும் பணியைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

(இ) மொத்த ஆயக்கட்டு 229 ஏக்கர். புதிய ஆயக்கட்டு 137 ஏக்கர். இவை வேலூர் மற்றும் ஆரணி தாலூக்காக்களில் உள்ளன.

[1980 ஆகஸ்ட் 12

## சங்கராபுரம் அரசு மருத்துவ மனை

வினா எண் 45—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதியை விரிவு படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை :

சங்கராபுரத்தில் ஒரு அரசு மருந்தகம் உள்ளது அதை விரிவு படுத்த தற்பொழுது திட்டம் ஒன்றும் இல்லை.

## உத்திரகோசமங்கையில் சார் பதிவாளர் அலுவலகம்

வினா எண் 46—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முகவை மாவட்டம் திருப்புல்லாணி ஒன்றியத்திற்குட்பட்ட திரு உத்திரகோசமங்கையில் சார்பதிவாளர் அலுவலகம் ஒன்று ஏற்படுத்த அரசு பரிசிலனையில் இருந்ததா?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் நிறைவேற்றப்படாததற்கு என்ன காரணம்?

விடை :

(அ) மற்றும் (ஆ) கடலாடியில் 1980-81-ல் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட உள்ளது. ஆகவே திரு உத்தரகோசமங்கையில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் மேலும் ஆராயப்படுகின்றன.

## திருவில்லிபுத்தூர் வட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள்.

வினா எண் 47—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் வட்டத்தில் ''மக்கள் குறை தீர்க்கும் நாள்'' முறையாக ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி நடைபெறுகிறதா ?

(ஆ) மேற்படி ''மக்கள் குறை'' தீர்க்கும் நாளில் வருவாய்த் துறை அதிகாரிகள் தவறாது கலந்து கொள்கிறார்களா?

(இ) 1979-80-ம் வருடத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாளில் எத்தனை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன ?



1980 ஆகஸ்ட் 12]

விடை :

(அ) திருவில்லிபுத்தூர் வட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் முறையாக ஒவ்வொரு மாதமும் 5 ம் தேதி நடைபெற்று வருகிறது. ஜனவரி '80 மற்றும் ஜூன் '80 மாதங்களில் முறையே பாராளுமன்ற சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற்றதால் மக்கள் குறைதீர்க்கும் நாள் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் நடைபெறவில்லை.

(ஆ) ஆம்.

(இ) திருவில்லிபுத்தூர் வட்டத்தில் 1979-ம் ஆண்டில் 415 மனுக்கள் பெறப்பட்டு அனைத்து மனுக்களின் மீதும் தீர்வுகள் காணப்பட்டுவிட்டன.

1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முடிய 116 மனுக்கள் பெறப்பட்டு 94 மனுக்கள் மீது தீர்வுகள் காணப்பட்டன. மீதமுள்ள 22 மனுக்கள் விரைவில் முடிவு செய்யப்பட்டுவிடும்.

## கிராமப்புறங்களில் தெரு விளக்குகள்.

வினா எண் 48—திரு. எஸ். சிவசாமி : திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிராமங்கள் யாவற்றிலும் போடப்பட்டுள்ள தெரு விளக்குகளை சரியாக எரிய விடுவதற்கென சிறப்பு ஏற்பாடுகள் ஏதாவது உண்டா?

விடை :

தெரு மின் விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பு உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்தபோது விளக்குகள் சரிவர எரியவில்லை என புகார்கள் வந்தன. இப்புகார்களை ஒட்டி தெரு மின் விளக்குகளை பாராமரிக்கும் பொறுப்பை மீண்டும் மின் வாரியத்திடம் ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சிறுவாச்சூர் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

வினா எண் 49—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் உள்ள சிறுவாச்சூர் கிராமத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் புதிதாக ஏரி (Irrigation tank) கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது தொடங்கப்படும் .

[1980 ஆகஸ்ட் 12

விடை —

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் உள்ள சிறுவாச்சூர் கிராமத்தில் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் புதிதாக குளம் அமைப்பதற்கான திட்டம் தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருவாய் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

## கலிங்க ஓடைத்திட்டம்.

வினா எண். 50—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் உள்ள பூலாம்பாடி என்ற கிராமத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் "கலிங்க ஓடைத் திட்டம்" என்ற பெயரால் புதிதாக ஏரி (Irrigation Tank) கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கும்?

விடை —

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் உள்ள பூலாம்பாடி கிராமத்தின் எல்லையில் கலிங்க ஓடையின் குறுக்கே, ஒரு குளம் அமைப்பதற்கான திட்டம் தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருவாய் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

## புதுநடுவலூசர் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

வினா எண். 51—திரு ஜே. எஸ். இராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் உள்ள புதுநடுவலூசர் என்ற கிராமத்தில் சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் புதிதாக ஏரி (Irrigation Tank) கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கப்படும்.



1980 ஆகஸ்ட் 12]

விடை—

(அ) அண்டு (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் உள்ள புதுநடுவலூசர் கிராமத்தில் குளம் அமைக்கும் திட்டம் மிகவும் சிக்கனமற்ற திட்டமாகும். எனினும், திட்டத்தினால் பயனடையும் பகுதி மிகவும் பின்தங்கியதாக இருப்பதாலும், பொதுவாக அரிசனங்கள் இத்திட்டத்தினால் பயனடைவார்கள் என்பதாலும் ரூ. 12.00 லட்சம் செலவில் இத்திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றிய செயற்குறிப்பு தலைமை பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

## முதுகுளத்தூர், உசிலம்பட்டி வட்டங்களில் புதிய தொழில்கள்.

*வினா எண். 52—திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுக்காவிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்காவிலும் பெரும் தொழிற்சாலை ஏதும் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) அண்டு (ஆ) பலவகையான இரும்பு கலப்புள்ளதும் இரும்பு கலப்பில்லாததுமான துண்டுகளை உற்பத்தி செய்வதற்காக, கூட்டுத்துறையில் கப்பல் உடைக்கும் நிறுவனம் ஒன்றும், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு வயல்களிலிருந்து கிடைக்கும் 'பிட்டர்ன்ஸ்' ( bitterns )யை அடிப்படையாகக் கொண்ட 600 டன் எடையுள்ள மாங்கனிஷியம் உலோகம் உற்பத்தி செய்ய பொது துறையில் மாங்கனிஷியம் உலோகம் நிறுவனம் ஒன்றும், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகாவில் வல்லிநோக்கம் என்ற இடத்தில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது.

இத்திட்டம் 1981-ஆம் ஆண்டு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மதுரை மாவட்டம், உசிலம்பட்டித் தாலுக்காவில் பெரும்தொழிற்சாலைத் தொடங்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

## திருப்பத்தூர் அரசு மருத்துவமனை

*வினா எண். 53 — திரு. பி. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசாங்க மருத்துவமனையில் புதியதாக இரத்த சேமிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்.

விடை—

(அ) அண்டு (ஆ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆகஸ்ட் 1979-ல் ஒரு இரத்த சேமிப்பு நிலையம் துவங்க அரசு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இந் நிலையத்தில் 27-9-1979 முதல் மருத்துவ அலுவலர் ஒருவர் பணி புரிந்து வருகின்றார்.

## வில்லிவாக்கம் தொகுதியில் தெருவிளக்குகள்.

*வினா எண். 54 — திரு. ஜெ. சி. டி. பிரபாகர்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி முழுவதும் கடந்த மூன்று மாதங்களாக தெரு விளக்குகள் சரிவர பராமரிக்கப்படவில்லையென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்த நிலையை மாற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

விடை—

(அ) அண்டு (ஆ) வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள 3,154 தெரு விளக்குகளில், சுமார் 60 சதவீதம் விளக்குகள் சரியாக எரிகின்றது. மீதமுள்ள விளக்குகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஒக்கநாடு நீரேற்று நிலையம்.

*வினா எண். 55—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உரத்தநாடு வட்டம் ஒக்கநாடு நீரேற்று நிலையத்தின் மூலம் அங்குள்ள முழு பரப்பளவுமான 2,200 ஏக்கர் நிலம் பூராவுக்கும் சாகுபடிக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் ஏதும் உள்ளதா?





விடை—

உரத்தநாடு வட்டம் ஒக்கநாடு கீழையூர் நீரேற்று திட்டத்தின் மூலம் 2,200 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இதில் 1,650 ஏக்கர் நிலம் தற்போது பாசனம் பெற்றுக்கொண்டிருக்கிறது. மீதம் உள்ள நிலங்களும் பாசன வசதி பெற கூடுதலாக கண்ணி வாய்க்கால்கள் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வருவாய்த்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. கண்ணி வாய்க்கால் அமைத்த பிறகு, மீதமுள்ள நிலங்களுக்கும் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படும்.

## அரசம்பட்டு கிராமத்தில் நீரேற்று நிலையம்

*வினா எண். 56—திரு ந. சிவஞானம்: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் அரசம்பட்டு கிராமத்தில் நீரேற்று நிலையம் (River Pumping Scheme) வேலை முடிந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இந்த நிலையம் இயங்கப்பெறும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இது இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் இயக்கப்பெறும்.

## தானியப்பாடி அரசினர் மருத்துவமனை

*வினா எண். 57—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம் தானிப்பாடி அரசினர் மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தானியப்பாடி அரசினர் மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இம் மருத்துவமனையைச் சுற்றி சவுக்கு நடப்பட்டு போடப்பட்ட முள்வேலி விழுந்து விட்டதால் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட மருத்துவ அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1980 ஆகஸ்ட் 12

### சாத்தனூர் அணையில் பிரதான கால்வாய்க்கு சிமெண்ட் லைனிங்

*வினா எண். 58—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையின் மெயின் கால்வாயில் ஏற்கனவே போடப்பட்ட சிமெண்ட் லைனிங் தவிர பாக்கியுள்ள கால் வாய்க்கு லைனிங் போட தற்போது அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சாத்தனூர் அணையின் பிரதான கால்வாயில் ஏற்கனவே போடப்பட்ட சிமெண்ட் லைனிங் தவிர பாக்கியுள்ள கால் வாய்க்கு லைனிங் போடுவது உட்பட பல்வேறு நவீனமாக்கும் பணிகளுக்கான பூர்வாங்க ஆய்வு முடிக்கப்பட்டு விரிவான ஆய்வு கூடிய சீக்கிரம் மேற்கொள்ளப்படவிருக்கிறது என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

### தாண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணையில் வரத்துக் கண்மாய்கள்.

*வினா எண். 59.—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணையில் தண்ணீர் பாயும் கண்மாய்கள் அனைத்தும் நீண்ட நாட்களாக பழுது பார்க்கப்படாமல் (பொதுப்பணித் துறையால்) மேடாக இருக்கும் கண்மாய்கள் எத்தனை ?

விடை—

சாத்தனூர் அணை இடதுபுற கால்வாய் மூலம் 38 ஏரிகள் பாசன வசதி பெறுகின்றன. அணைகள் மற்றும் அணைக்கட்டு களிலிருந்து பாசன வசதி பெறும் ஏரிகளில் தூர் படிவதால் பயிர் செய்யப்படும் ஆயக்கட்டு நிலத்தின் அளவு குறைவது இல்லை. ஏனெனில் இந்த ஏரிகளுக்கு அவ்வப்போது வேண்டு மென்ற அளவு நீர் விடப்படுகிறது. சாத்தனூர் இடதுபுற கால்வாய் மூலம் பாசன வசதி பெறும் 38 ஏரிகளில் தூர் படிந் திருந்தாலும், ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படமாட்டாது அதனால் இந்த ஏரிகளில் தூர்வாரும் வேலக்கு மற்ற ஏரிகளை போல் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.



1980 ஆகஸ்ட் 12]

### திருவண்ணாமலையில் பர்மா அகதிகளுக்கு கட்டப்பட்ட குடியிருப்புகள்.

*வினா எண். 60—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80ம் ஆண்டில் திருவண்ணாமலையில் பர்மா அகதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கட்டிக்கொடுக்கப் பட்ட வீடுகள் எத்தனை ?

(ஆ) இன்னும் எத்தனை பேருக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியுள்ளது ?

விடை—

(அ) இல்லை. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர் களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசு, கடன் மட்டும் வழங்கு கிறதே அன்றி, அரசு வீடுகள் கட்டிக் கொடுப்பதில்லை.

(ஆ) வினா எழாது.

### வட ஆற்காடு மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண். 61—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980 ஜூன் மாதத்தில் உள்ளவாறு வட ஆற்காடு மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் எத்தனை உள்ளன ?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் நாற்பத்தெட்டு ஆடு வளர்ப் போர் கூட்டுறவு சங்கங்கள்ச் உள்ளன.

### வக்பு வாரியத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள்.

*வினா எண். 62—திரு ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாக நியமிக்கப் பட்ட வக்பு வாரியம் செயல்பட ஆரம்பிக்கும் முன் வாரியத்தில் தீர்க்கப்படாமல் இருந்த வழக்குகள் எத்தனை ?

[1980 ஆகஸ்ட் 12

(ஆ) இந்தப் புதிய வக்பு வாரியம் பதிவுபெற்ற பின் புதிதாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) இதுவரை (4–7–80) புதிய வக்பு வாரியம் விசாரணை செய்து தீர்ப்பளித்த வழக்குகள் எத்தனை ?

விடை—

(அ) 127
(ஆ) 75
(இ) 137

விளாத்திக்குளம் தொகுதியில் பாசனக் குளங்கள் அமைத்தல்.

*வினா எண். 63—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் சிறிய நீர் பாசனக் குளங்கள் அமைக்க மதிப்பீடு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தக் கிராமத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(இ) ஒவ்வொன்றின் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) அண்டு (இ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் கீழ்க்கண்ட மதிப்பீடுகளில் 6 புதிய நீர்ப்பாசன குளங்கள் அமைக்கும் திட்டங்கள் திருநெல்வேலி—கன்னியாகுமரி வட்ட மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளன :

| | | மதிப்பீட்டுத் தொகை. (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| 1. | பூதலாபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல். | 4.35 |
| 2. | வேடப்பட்டி அருகே ஒரு புதிய கண்மாய் அமைத்தல். | 11.10 |
| 3. | மாவில்பட்டி அருகே புதிய குளம் அமைத்தல் | 12.40 |
| 4. | காடல்குடி அருகே புதிய குளம் அமைத்தல் | 5.66 |
| 5. | டி. புதுப்பட்டி அருகே புதிய குளம் அமைத்தல் | 11.20 |

2. குமாரசக்களாபுரம் கிராமத்தின் அருகே ஒரு குளம் அமைப்பதற்கு ரூ. 2.84 லட்சத்திற்கு ஒரு பூர்வாங்க அறிக்கை தயாரிக்கப்பட்டு அது மறு பரிசீலனையில் உள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

பனியன் மீதான விற்பனை வரி.

*வினா எண். 64—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பனியனுக்கு விற்பனை வரி விதிப்பு விலக்கு அளிக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

பனியன் மீது விதிக்கப்படும் விற்பனை வரியினை நீக்குமாறு கோரிக்கை வந்துள்ளது. இக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

படை வீடு பஞ்சாயத்தில் கால்நடைப் பண்ணை அமைத்தல்.

*வினா எண். 65—திரு. இல. பலராமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டம் படை வீடு பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் இராமநாதபுரம் கிராமப்பகுதியில் கால்நடைப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

அனந்தாபுரம் பஞ்சாயத்தில் புதிய ஏரி அமைத்தல்.

*வினா எண். 66—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா அனந்தாபுரம் பஞ்சாயத்து எல்லையில் புதிய நீர்ப்பாசன ஏரி நிறுவ அரசு ஆய்வு செய்ததா ?

(ஆ) ஆய்வின் முடிவு யாது ?

விடை—

(அ) அண்டு (ஆ) போளூர் தாலுக்கா அனந்தாபுரம் பஞ்சாயத்தில் ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் பொதுப்பணித்துறையின் ஆய்வில் இல்லை.

## வசூரில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையம்.

*வினா எண். 67—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா வசூரிலுள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் ஆண்டுக்கு எவ்வளவு விதைகள் தயாரிக்கப்படுகின்றன ?
(டன் கணக்கில்)

(ஆ) எந்தெந்த ரக விதைகள் தயாரிக்கப்படுகின்றன ?

விடை—

(அ) வசூரிலுள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் ஆண்டுக்கு சுமார் 1,000 டன் நெல் மற்றும் சிறு தானிய விதைகள் தயாரிக்கப்படுகின்றன. 1979-80-ஆம் ஆண்டில் 1,274.632 டன் விதைகள் சுத்திகரிப்புச் செய்யப்பட்டன.

(ஆ) ஐ.ஆர். 20; பொன்னி; ஏடிடீ. 35; பவானி; ஐ.ஆர். 34; ஏ.எஸ்.டி. 15; ஏடிடீ 31; ஏடிடீ 34; ஐஇடி 4786; ஐஇடி 1722; ஐஇடி 1444; ஆகிய நெல் ரக விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன.

## போளூர் பெரிய ஏரியில் தூர்வாரும் பணி

*வினா எண். 68—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் பொதுப்பணித் துறை பெரிய ஏரி தூர் வாரும் வேலையை எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதா ?

(அ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு யாது ?

(இ) இவ்வேலை எப்போது துவக்கப்படும் ?

(ஈ) இவ்வேரிக்கு வரும் வரத்துக்கால்வாய் (போளூரான் கால்வாய்) சீர்செய்ய பரிசீலிக்கப்பட்டதா ?

(உ) அதன் மதிப்பீடு யாது ?





விடை—

(அ) அண்டு (ஆ) இந்த ஏரியை தூர்வாரி புனர் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 19.00 லட்சத்தில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் இந்த ஏரிக்கு மேம்பாடு செய்யும் திட்டம், குளங்களை நவீனப்படுத்தும் பெரிய திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படுவதால், தனியாக இதனை மேற்கொள்ளவில்லை.

(இ) அண்டு (ஈ) நிதி. நிலையை அனுசரித்து போளூர் ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாய் (போளூரான் கால்வாய்) மராமத்துப்பணிகள் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. 1978-79-ம் வருடம் மேற்படி கால்வாய்க்கு மராமத்து பணி ரூ. 30,000 செலவில் மேற்கொள்ளப்பட்டது.

## மானாமதுரைப் பகுதிக்குத் தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தை விரிவுப்படுத்தல்.

*வினா எண். 69—திரு. க. பாரமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைப் பகுதிக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) அண்டு (ஆ) மானா மதுரைக்கு தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தை விரிவு படுத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

## நிலப்பச்சைபாசி உரம்.

*வினா எண். 70—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

''நிலப்பச்சைப்பாசி'' உரத்தை தமிழகம் எங்கும் விவசாயிகள் பயன்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை —

இம்மாநிலத்தில், நீலகிரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் 1980—81-ம் ஆண்டு ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நிலப் பச்சைப்பாசி பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நீலப் பச்சைப் பாசியை, ஆராய்ச்சி நிலையங்கள், அரசு விதைப்பண்ணைகள், பஞ்சாயத்து ஒன்றியம் போன்ற பொது இடங்கள், மற்றும்

தனியார் பண்ணைகளில், உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. நிலப்பச்சைப்பாசியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நுணுக்கங்களை, விரிவாக்கப் பணியாளர்கள் வேளாண்மைப் பெரு மக்களுக்கு விளக்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. அ. செல்வராசன் பேரவைத் தலைவர் அவர்களே ஒரு முக்கியமானப் பிரச்சனை சென்னை மாநகராட்சி பள்ளிகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற உணவிலே பல்லி இறந்து விழுந்து கிடக்கின்றது. உணவு பரிமாறப்படுகின்ற போது பல்லி இறந்து விழுந்திருக்கிது தெரிய வந்திருக்கின்றது ஆகவே இது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தான் திடீர் என்று இந்த தகவலை சொல்கிறீர்கள். இதைப் பற்றி அவைக்கும் தெரியாது. அரசுக்கும் தெரியாது. இன்றைக்கு நிறைய கவன ஈர்ப்புகள் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எல்லாம் இருக்கின்றன. அதனால் அவைகளை முதலில் முடித்து விடலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர், எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. சிவசாமி அவர்கள் தங்கள் கடமையை சரிவர ஆற்ற முடியாத அளவிற்கு, நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி தங்களுடைய கவனத்திற்குகூட கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவருடைய வீட்டில் 5—8—1980 அன்று 50 பேர்கள் சென்று தாக்கியிருக்கிறார்கள். தங்களுக்கும் அது பற்றி தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் இரண்டு நாட்கள் அங்கே இருக்கும்படி நேர்ந்து விட்டது. அவைக்கு வர முடியவில்லை. அவருக்குப் பாதுகாப்பு கொடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் அவர் நேற்றுக்கு முந்தைய தினம் தான் அது பற்றிய தகவலைத் தந்தார். நாங்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அது பற்றி மீண்டும் கவனப்படுத்தி அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கடைசி நாளன்று அவரவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றில் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல அனுமதிக்கப்படுவார்கள். குறிப் பேட்டில் பதிய வைக்க வேண்டும் என்று அது போன்ற வழக்கம் இருந்து வருகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முன்பு குறிப்பிட்ட பிரச்னை முடிந்து விட்டது. இது பற்றி பின்னால் எடுத்துக் கொள்ளலாம். உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73 வது விதியின் கீழ் 1 மணி நேர விவாதத்திற்கு எழுதிக் கொடுத்து நேற்று தங்களிடம் அனுமதி கேட்டேன். உங்களுடைய கடிதம் 9 மணிக்குத்தான் வந்தது, அதனால் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம், அதாவது இன்றைக்கு என்று சொன்னீர்கள். மிக முக்கியமான பிரச்னை, சென்று கொண்டிருந்த காரை நிறுத்தி பரிசோதனை செய்ததற்காக ஒரு அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். பத்து நிமிடம் அவகாசம் கொடுத்தாலும் போதும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிரச்னைக்குள்ளே போக வேண்டாம். ஒரு மணி நேர விவாதத்திற்கு எழுதிக் கொடுத்தீர்கள். நான் அதை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லவில்லை, பார்த்துத்தான் சொல்லப்படும் என்று சொன்னேன். இன்றைக்கு நிறைய ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புகளும் இருக்கின்றன. ஒரு மணி நேரம் விவாதம் அதில் உங்களுக்கு அளிக்க நேரம் இல்லை. அதற்காக நீங்கள் கேட்டபடி ஒரு மணி நேர விவாதத்தை 10 நிமிடமாக குறைத்துக் கொடுப்பதும் சட்டப்படி தவறு.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஷெட்யூல்ட் காஸ்ட் பற்றி பேச அரை மணி நேர விவாதத்திற்கு தங்களிடம் அனுமதி வேண்டினேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கப்பட்ட போது நடந்த விவாதத்தில் அது பற்றிய நிறைய நீங்கள் பேசியாயிற்று.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் பட்ஜட் கூட்டத்தில் கடைசி நாளன்று, உறுப்பினர்கள் வைத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எல்லாவற்றையும், கடைசி நாள் என்பதற்காக, சொல்ல மட்டும் அனுமதிப்பார்கள். குறிப் பேட்டில் ஏற்றிக் கொண்டு, பின்பு நடவடிக்கை எடுக்கலாம் என்று. அந்த வழக்கம் ஏற்கெனவே இருந்து வருகிறது. அது இன்றும் பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்டு 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எது எது செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் இன்றைக்குச் செய்து விடலாம்.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே வருவாய்த் துறை அலுவலகங்கள் பூராவும் வேலை செய்யவில்லை. அந்த அலுவலர்கள் யாவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் 6–8–80 அன்று ஆரணி யில் மனுநீதி நாள் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் திரு பாபு ஜனார்த்தனன் முன்னாலேயே சொல்லிவிட்டார். அமருங்கள்.

திரு. ஏ. டி. கருப்பையா : ஒரு பிரச்சினை, சங்கத் தலைவ ரான நல்லகண்ணு என்பவரை மாற்றியதன் காரணமாக வேலை நிறுத்தம் நடைபெற்று நூற்றுக்கும் மேற் பட்டவர்கள் ஊழி யர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். என்ன என்று என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றுத்தான் கொடுத் திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 10.40).

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பிரபரணி நீர்ப்பாசனத்தில்' முறை கேடுகள் நடந்திருப்பதாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருந்தேன். இது வரையில் அது வரவில்லை. இந்த சபை முடியப் போகிறது. 50,000 ஏக்கர் பிரச்னை சிக்கலான பிரச்னையாகயிருக்கிறது. அந்தத் தொகுதியில் வன இலாகா ஊழியர்களுக்கும்......

மாண்புமிகு பேரவைந் தலைவர் : இந்தப் பிரச்னை குறித்து தாங்கள் ஏற்கனவே எழுப்பி இங்கே கருத்து சொல்லி யிருக்கிறீர்கள். 50,000 ஏக்கரா அல்லது 500 ஏக்கரா என்று தங்களுக்குத் தெரியாது. ஆகவே ஊருக்குப் போய் அது பற்றிய விவரங்களை தெரிந்து வாருங்கள். பிறகு யோசிப்போம்.

திரு. டி. மணி : நான் ஒரு முக்கியமான பிரச்னை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவில் 150 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அரசின் நேரடிப் பார்வையில் நடைபெறுகிற அந்த நியாய விலைக் கடைகளில் வினியோகிக்கப் படுகிற அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது, தரக்குறைவாக இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மக்கள் அந்த அரிசியைப் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்புகிறார்கள். வெளியே கிலோ மூன்று ரூபாய் என்று விற்கப்படுகிறது.



1980 ஆகஸ்டு 12]

திரு. செ. இராமலிங்கம் : தற்போது ஒரு கடுமையான, பயங்கரமான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிண்டி பொறியியல் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் தனி இன்டர்வ்யூ-வும், முற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தனி இன்டர்வ்-யூம் நடத்துவதால் அதன் மூலம் மார்க்ஸ் போடுகிற போது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் ஜெனரல் பூல்-இல் வர முடியாத அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 54-ன் கீழ் கொடுக்கப் பட்டுள்ளவற்றை கடைசியில் எடுத்துக் கொள்ளலாம் என் றிருக்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : 6–8–80ல் ஆரணியில் வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மனு நீதி நாள் நடத்திய நாள் அன்று மேடையில் கிராம ஊழியர்களையும் மற்ற ஊழியர்களையும் வேலை நீக்கம் செய்து விட்டார்கள். அதைப் பற்றி நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை விதி 54ன் கிழ் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. துரைமுருகன் : நான் ஒரு கவன ஈர்ப்பு கொடுத் திருக்கிறேன். இங்கே சென்னையில், பிண அறைகளில் பிணங்கள் அகற்றப்படாமல் 'கோமா' வில் வருவது போல் பிணங்களை அடுக்கி அடுக்கி வைத்து மாதக் கணக்கில், வருடக் கணக்கில் பிணங்களை வைத்திருக்கிறார்கள். பிணங்களை அகற்ற வழி வகை செய்யப்படுமா? அரசாங்கம் என்ன செய் கிறது?

திரு. என். எஸ். வி. சித்தன் : சில நாட்களுக்கு முன்னால் சிவகாசியில் ஒரு குற்றவாளியை கைது செய்து போலீஸார் அழைத்து வரும் போது, சிவகாசி நகரில் பட்டப் பகலில் ஒரு போலீஸார் கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக 55வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந் தேன். அதை 54வது விதியின் கீழ் மாற்றி இருக்கிறீர்கள். ஒரு மாதத்திற்கு மேலாகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 54 வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளதை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

[1980 ஆகஸ்டு 12

திரு. ரா. கு. பெருமாள் : நானும் திரு பாலகிருஷ்ணன் அவர்களும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளோம். சிவகாசியில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் அது பற்றி ஏற்கனவே சொல்லியாகி விட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே. இன்று சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிகிறது. நான் கொடுத்துள்ள 11 கவன ஈர்ப்புகள் நிலுவையில் உள்ளது. அதிலே முக்கியமாவது, சினிமாவிலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதி மறுத்து விட்டேன். அந்தப் பிரச்னை கவன ஈர்ப்பிலே வராது.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்திலே, ஒரு கிராமத்திலே ஒரு அரிசன் மனைவி கற்பழிக்கப்பட்டிருக்கிறார். அதன்மீது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா கவன ஈர்ப்புகளையும் கடைசியில் படிப்பதாக இருக்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். பத்திரிகையைப் பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நான் அனுமதி மறுத்து விட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம், திரு. உமாநாத் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை இப்போது எடுப்பதாக இல்லை........

## 4. உரிமைப் பிரச்சினை.

ஒரு உறுப்பினர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கத்தக்க வகையில் ஒரு ஜெயிலர் பேச்சு.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இது உயிர்ப் பிரச்னை ; என் உயிருக்கு ஆபத்து வருகிறது என்று சொல்லும்போது, கண்டிப்பாக அதை எடுத்துக்கொள்ள வேண்டும். இது விவாதத்திற்குரிய ஒரு முக்கியமான பிரச்னை. நான்



1980 ஆகஸ்டு 12] [திரு. ரா. உமாநாத்]

இது சம்பந்தப்பட்ட ஒரு ஸ்டேட்மென்டைக் கொடுத்திருக்கிறபோது, நான் சொன்ன பிறகு அதைப்பற்றி விசாரணை செய்து முடிவெடுப்பதாக வேண்டுமானாலும் சொல்லுங்கள். என் உயிருக்கு ஆபத்து, கொலை செய்வேன் என்று ஜெயிலர் சொல்லும்போது, அதற்குத் தாங்கள் அனுமதி மறுக்கக் கூடாது. நான் சொன்ன பிறகு, அதற்கான தீர்ப்பைத் தாங்கள் பின்னாலே கொடுங்கள்.

இது என் சம்பந்தப்பட்ட பிரச்னை மட்டுமல்ல. இங்கே செயல்படுகின்ற மற்ற அங்கத்தினர்களுக்கும் இப்படி ஒரு ஆபத்து வரக்கூடிய ஒரு பிரச்னை ; அதுவும் ஒரு சீரியசான பிரச்னை.

போன மாதம் ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வியை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். அதாவது திருச்சி சிறையிலே 2 கைதிகள் உண்ணாவிரதம் இருப்பதாக கேட்டதற்கு, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு, நான் ஒரு சப்ளிமென்டரி கேட்டேன். அப்படி கேட்டபோது, அங்கே இருக்கக்கூடிய விஜய நாராயணன் என்ற ஜெயிலர் கைதிகளைப் பார்த்து ஜூடிஷியல் கமிஷன் என்னை என்ன செய்யும் ? என்று கேட்பதால், கைதிகளுக்கு எப்படி பாதுகாப்பு கிடைக்கும் ? எனவே, அவரை ஏன் மாற்றக் கூடாது என்று நான் கேட்ட உப கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதைப் பற்றி பத்திரிகை செய்தியும் வந்தது. அந்தப் பத்திரிகைச் செய்தியைப் படித்த பிறகு, அந்த ஜெயிலர் அவர்கள் நான் இப்படி சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வருகின்ற அளவுக்கு பேசியிருக்கிறார்கள். எனக்கு வந்திருக்கின்ற தகவலை நான் அப்படியே படித்து விடுகிறேன். அதற்கான பொறுப்பை நான் எடுத்துக் கொள்ளுகிறேன். பொறுப்பு இல்லாமல் நான் ஒரு தகவலை இங்கே கொண்டு வரமாட்டேன். யார் இந்தத் தகவலைக் கொடுத்தார்கள் என்பதைப் பற்றித் தங்களிடம் தனியாக சொல்கிறேன். இங்கே சொல்லத் தயார். அப்படிச் சொன்னால், அடித்து நொறுக்கி விடுவார்கள். எனக்கு வந்திருக்கின்ற தகவலை மட்டும் நான் அப்படியே இங்கே படித்து விடுகிறேன். அந்தக் கொடேஷன், "சிறைச்சாலை சம்பந்தப்பட்ட பிரச்னை எழுப்பப்பட்டது 14-7-80 என்று நினைக்கிறேன்.

[முற்பகல் 10-50]

இது முதல் கைதிகள் மீது திடீர் பாசம், பரிவு, பற்று அதிகாரிகளுக்குப் பிறந்து விட்டது. அதே நேரத்தில் உமாநாத் மீது கடும் சினம் ஏற்பட்டுள்ளதை அவர் எப்படி வெளிப்படுத்துகிறார் என்றால்..........

அந்த ஜெயிலர் சொல்லுகிறார்—"இந்த உமாநாத் பையனைச் சுட்டுத் தீர்த்தாலும் என் ஆசை தீராது"......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அங்கிருக்கக்கூடிய இரண்டு கைதிகள் தகவல் தந்திருக்கிறார்கள். இன்னும் அதைப் பற்றி விசாரித்த பிறகு தான் தீர்ப்பு வழங்க முடியும். இரண்டு பக்கமும் கேட்டுத் தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : அந்த ஆள் ரவுடிகளை வைத்து என்னைக் கொன்றால் என்ன செய்வது ? சட்ட சபையில் கேள்வி கேட்டதற்காக சாவது பற்றிக் கவலைப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுமக்கள் தலைவர் களுக்கு உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை தமிழ்நாட்டில் இல்லை.

திரு. ரா. உமாநாத் : இந்த அவையில் இதைப் பற்றிக் கொண்டு வரவில்லை என்றால் அதற்கு வேறு வழி இல்லை. என்னுடைய விளக்கத்தைக் கேட்ட பிறகு தாங்கள் விசாரித்து தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொல்லலாம்.

அந்த ஜெயிலர் கூறியிருப்பது—' இந்த உமாநாத் பையனைச் சுட்டுத் தீர்த்தாலும் என் ஆசை தீராது. அவன் என்னை அவமானப்படுத்தி விட்டான். அவனை ஒழித்துவிட்டால் சிறைப் பிரச்னைகளை வேறு எவனும் பிறகு தீவிரமாகக் தெரிவிக்கமாட்டான்.' ' வேறு எவனும் ' என்கிறார். வேறு எவனும் என்றால் யார் ? மற்ற எம். எல். ஏக்கள். மேலும் கூறியிருப்பது—' தப்பித் தவறி என் கையில் அவன் மாட்டினால் அதோடு சரி '

பல சூழ்நிலையில் நான் ஜெயிலுக்குப் போக வேண்டி வரலாம். இந்த நபர் ஜெயிலராக அங்கே இருந்தால் என்னை 'க்ளோஸ்' பண்ணிவிட்டு 'சூயிசைட்' என்று ரெக்கார்டு பண்ணுவார்கள். அந்த ஜெயிலர் சொன்ன ஸ்டேட்மென்டுக்கு நான் ரெஸ்பான்சிபிலிடி எடுத்து நிரூபிக்கிறேன். இப்படி நான் சட்டசபையில் பேசியதற்காக குண்டர்களை வைத்துக் கொல்லவோ, எதிர்காலத்தில் போராட்டத்தில் சிறை செல்லும்போது அந்தச் சிறையில் ஜெயிலராக இருந்தால் அடித்துக் கொல்லவோ நிலை ஏற்படலாம். இது எனக்கு மட்டுமல்ல. மன்ற உறுப்பினர்கள் யாருக்கும் அச்சுறுத்தல் இருக்கக்கூடாது. இந்த அவையில் நான் செய்யக்கூடிய கடமையைச் செய்யாமல் தடுப்பதே அச்சுறுத்தலாகும்.

இந்த விஷயத்தில் அந்த ஜெயிலர் எவ்வளவு தூரம் ஆத்திரப்பட்டிருக்கிறார் என்பதைக் கூறவிரும்புகிறேன். இந்த அவை நடவடிக்கைகள் பற்றி பத்திரிகைகளில் வந்தவை கைதிகளுக்கு





சர்குலேட் பண்ணப்படவில்லை. இந்த அவை நடவடிக்கையில் நான் பேசியதையும் அமைச்சர் அதற்குக் கொடுத்த பதிலையும் பத்திரிகையில் மை அடித்து பாக்கி போர்ஷன் மட்டும் கொடுக்கப் பட்டிருக்கிறது. சுப்ரீம்கோர்ட் டெசிஷன்படி கைதியாக இருந்தாலும்— He does not lose his major citizenship right. நம்முடைய அவையின் ப்ரொசீஜரை மியூடிலேட் பண்ணி வேறு அர்த்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே ' சிம்கோ ' போராட்டத்தின்போது என் வீட்டில் சோடா பாட்டில் அடிக்கப்பட்டது. போன மாதம் என்னைக் கொல்லுவதாகவும், குடும்பத்தை அழிப்பதாகவும் கடிதம் வந்து சீஃப் மினிஸ்டரிடம் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது அந்த ஜெயிலரின் மிரட்டல். ஒட்டுமொத்தமாக சீரியஸ் பிரச்னை. ஒரு சர்க்கார் இருக்கிறது என்று நினைக்காமல் ஜெயில் தன் சொந்த வீடு என்று நினைத்துக் கொண்டு எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். ஜெயில் சர்க்காரின் சொத்தே தவிர அவருடைய சொந்தச் சொத்து அல்ல. அவரிடம் எக்ஸ்பிளனேஷன் கேட்டால் அவர் நான் அப்படி பேசவில்லை என்று மறுப்பார். அதற்கு சாட்சி வேண்டும். அதற்கு இந்தப் பிரச்சினையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட்டால்தான் சாட்சியைக் கொண்டு வர முடியும். அப்போதுதான் அந்தக் கைதிகள் சாட்சிகளாக வருவார்கள். இதை பிரிவிலேஜ் கமிட்டிக்குவிட வேண்டும். வேறு சிறைக்கு மாற்றினால் அங்கே இருக்கக்கூடிய கைதிகள் சொல்வார்கள். ஆகவே பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட்டால்தான் அந்த பொசிஷன் வரும். நமக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு உமாநாத் அவர்கள் விளக்கியதற்குப் பிறகு நான் அதைப் பரிசீலனை பண்ணித்தான் தீர்ப்புச் சொல்லவேண்டும். உடனடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்புவது கடினம். ஏனென்றால் இந்த சைடில் இருக்கிற அமைச்சர்கள் மூலமாக அதை விசாரித்து அதற்குப்பிறகு அடுத்த கூட்டத் தொடரிலே தீர்ப்புச் சொல்வதற்கு முயற்சிக்கிறேன். பாதுகாப்பைப் பொறுத்தவரைக்கும் அரசாங்கம் கொடுக்கும், திரு உமாநாத் அவர்களுக்கு மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களுக்கும் தான்.

## ஒத்திவைப்புத் தீர்மானம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் ஆட்சேபகரமான பேச்சு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்.

"To discuss the reported statement of THRU M. P. Subramaniam, T.N.C.C. (I) President, threatening dismissal of the Tamil Nadu State Government and inciting insubordination among officials''. என்பது குறித்து பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் ரா. உமாநாத், திரு. ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். இப்பிரச்சினையைத் திரு. சுந்தரராஜ் எழுப்பியதிலிருந்து எதுவும் நடவடிக்கை குறிப்பில் ஏறாது. யார் பேசியதையும் எழுதக் கூடாது. அவற்றை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட நான் ஆணையிடுகிறேன். பேரவையின் அலுவல்கள் பகல் 12-00 மணி வரை ஒத்திவைக்கப்பெறுகிறது.

[நண்பகல் 12-00]

நண்பகல் 12-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை மீண்டும் 12-30 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-30 மணிவரை ஒத்தி வைக்கப் பெற்றது.

[பிற்பகல் 12-40]

பிற்பகல் 12-40 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-58-ல் இருந்து 11-46 வரையிலான பகுதிகள் நீக்கப்பெற்றுள்ளன.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்று காலையிலே குறளைச் சொல்லாததனாலேதான ஏதோ விவகாரம் வந்து விட்டது. அதனாலே சொல்கிறேன்.

" ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு "

நல்ல சொல்லால் நல்ல பயனும், தீய, தவறான சொல்லால் தீமையும் வரும். எனவே தம் சொல்லில் தவறு நேராமல் ஒவ்வொருவரும் காத்துக் கொள்ளுதல் நல்லது.

அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லா தலைவர்களும், இப்போது இவ்வளவு நேரம் கூடிக் கலந்தாலோசித்து ஒரு முடிவினை எடுத்திருக்கிறார்கள். அதன்படி சபையினுடைய அலுவல்கள் நடக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் திரு. உமாநாத் அவர்கள் அவருடைய கருத்துக்களைச் சொல்வார்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நேற்று பத்திரிகையில் டி. என். சி. சி. (ஐ.) தலைவர் அவர்கள் நக்சலைட் நடவடிக்கைகள் எல்லாம் அதிகமாகத் தமிழகத்தில் நடப்பதாகவும், வன்முறைகள் நடப்பதனாலும், இந்த அரசாங்கம் அதைக் கட்டுப் படுத்தாவிட்டால், ''டிஸ்மிஸ்'' செய்ய நேரிடும் என்ற முறையில் பேசியதாகப் பார்த்தேன். எந்தக் கட்சியையும் குறிப்பிட்டு என்ற முறையில், எந்தக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் எடுக்கக் கூடாது. ஒரு கவலையோடுதான் இந்தப் பிரச்னையை நான் எழுப்பினேன். 3 மாதங்களுக்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சர்க்காரை மீண்டும் கலைப்பது என்பது ஜனங்கள் மனதிலேபட்டால், ஜனங்களுக்கு ஒரு அச்சம் ஏற்படும், கவலை ஏற்படும். அதைப் படிக்கக்கூடிய அதிகாரிகள் மத்தியிலும் ஒரு அன்சர்ட்டெயின்ட்டி ஏற்படும். அப்படி ஏற்பட்டால் அரசாங்கம் முறைப்படி இயங்க முடியாது என்ற அந்தக் கவலையோடுதான் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று நான் எழுப்பினேன். ஏனென்றால், இங்கே இருக்கக்கூடிய கட்சிகள், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், கலைக்கப்படக் கூடாது. அவையும் கலைக்கப்படக் கூடாது. இந்த ஜனநாயக மரபைக் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புவார்கள் என்ற எண்ணத்திலே, நாம் எல்லோரும் விரும்ப வேண்டும் என்ற எண்ணத்திலே, அதை விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்கள் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திருமிகு எம். பி. சுப்பிரமணியம் ஒரு கட்சித் தலைவர் என்கின்ற முறையில்

குறிப்பிட்ட விவரங்களைப் பேசியிருக்கிறார்கள். அதைப் பற்றி அவருடைய கட்சித் தலைமைதான் எண்ணிப் பார்த்திட வேண்டுமே தவிர, நாம் அதைப்பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியதில்லை. மத்திய சர்க்காரில், பொறுப்பாக இருக்கிறவர்கள் யாரேனும் இப்படி பேசினால் அது கவனிக்கப்பட வேண்டி விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின், பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

இந்த மாதிரி பிரச்னைகள் இதுதான் முதலும் கடைசியும். இனிமேல் இந்த மாதிரி பிரச்னைகள் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. கவன ஈர்ப்புகள்.

### அ. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஐ. டி. ஐ.-யில் தேறியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல்—தொழிலாளரிடம் அமைதியின்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். திரு. ப. பொன்னுரங்கம் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, "தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் ஐ. டி. ஐ.-யில் தேறியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடையே நிலவும் அமைதியின்மை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல்மின் நிலையம் சுமார் 240 கோடி ரூபாய் செலவில், ஒவ்வொன்றும் 210 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று பிரிவுகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. 1979ம் ஆண்டு ஜூலைத் திங்கள், முதல் பிரிவு உற்பத்தியைத் துவங்கியது. இந்த ஆண்டு செப்டம்பர்/அக்டோபரில் இரண்டாவது பிரிவும், 1982-ம் ஆண்டு மூன்றாவது பிரிவும் உற்பத்தியைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





2. இந்த அனல் மின் நிலையத்தை இயக்கவும், பராமரிக்கவும், உதவியாளர்கள் முதல் பொறியாளர்கள் வரை உள்ள பதவிகளுக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள். முதற்பிரிவுக்குத் தேவையான பொறியியல் பட்டம் மற்றும் டிப்ளமா பெற்ற பலர் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி கட்டுமானத் துறையில் பணியாற்றி வந்த மின்சார வாரியத்தின் களப்பணியாளர்களில் சிலர் இப்பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயக்குதல், பேணுதல், துறையில் பயிற்சியளிக்கப்பட்ட பின் மாற்றப்பட இருக்கிறார்கள். இவை போக மீதமுள்ள பிட்டர், வெல்டர் போன்ற பதவிகளுக்குகே ஆட்கள் எடுக்க வேண்டியுள்ளது.

3. முதன் முதலாக நம் மாநிலத்தில் 210 மெகாவாட் திறனுள்ள இயந்திரங்கள் கொண்ட மின் நிலையம் தூத்துக்குடி அனல் மின் நிலையமாகும். இந்த நிலையம், சரிவர இயங்க, இயக்குதல்— பேணுதலுக்குத் தேவையான ஆட்கள் அடிப்படை கல்வியும், தொழில் நுட்பம் தெரிந்தவர்களாகவும் இருப்பது, மிகவும் அவசியம். மேலும் இன்று உதவியாளர்களாக நியமிக்கப் படுபவர்கள் தான் படிப்படியாக முன்னேறி வருங்காலத்தில் பிட்டர், வெல்டர் போர்மென் போன்ற பதவிகளுக்கு அமர்த்தப் படுவார்கள். எனவே, தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்குத் தேவையான உதவியாளர்களின் ஒரு பகுதியினர் ஐ.டி.ஐ. சான்று பெற்றவர்களாக இருத்தல் அவசியம். இதற்கான தகுதி பெற்ற நபர்களின் பட்டியலை தூத்துக்குடி திருநெல்வேலி வேலை தேடித்தரும் அலுவலகத்திலிருந்து அழைக்கப்பட்டது. இவ்வாறு ஆட்கள் நியமனம் செய்வதற்கு நெல்லை மாவட்ட பொது தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு. வுடன் இணைக்கப்பட்டது), எதிர்ப்பு தெரிவித்து, காலி இடங்களை தூத்துக்குடி அனல் நிலைய பணியை எடுத்துள்ள ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரியும் ஆட்களைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று கோரியுள்ளது.

4. மின் வாரியத்தின் காலியாக உள்ள இடங்களை வேலை தேடித்தரும் நிறுவனத்தால் அனுப்பப்பட்ட நபர்களில் தகுதி வாய்ந்தவர்களை அவர்களுடைய பள்ளி மதிப்பெண் மற்ற சான்றிதழ்களின் தன்மை முதலியவற்றின் அடிப்படையில் நிரப்புவது, வாரியம் மற்றும் அரசின் கொள்கையாகும். ஒப்பந்தத் தொழிலாளர்களை நேரிடையாக நியமிப்பது சட்டத்திற்குப் புறம்பானது.

5. வேலை தேடித்தரும் நிறுவனத்தால் அனுப்பப்பட்ட 242 பேர்களை இந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 21, 22, 23, ஆகிய தேதிகளில் அவர்களுடைய சான்றிதழ்களை சரிபார்ப்பதற்காக அழைக்கப்பட்டனர். இதை எதிர்த்து 21—7—1980 முதல் வேலை நிறுத்தம் செய்த ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும்

ஒரு பகுதியினர், அவர்களைப் போன்ற மற்ற பணியாளர்களை வேலைக்கு போகவிடாது தடுத்ததோடு, தேர்வுக்கு வந்தவர்களையும் அதில் கலந்து கொள்ளாதவாறு தடுத்தனர். இருப்பினும், தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களில் 88 பேர் வந்தனர். இவர்களில் ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் நபர்களும் அனுப்பப்பட்டிருந்தனர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமிப்பது பரிசீலனையில் உள்ளது. 21—7—1980 முதல் 24—7—1980 முடிய நான்கு தினங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த அத்தனைபேரும் 25—7—1980 அன்று பணிக்குத் திரும்பினார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, 2,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்., தற்காலிகமாக. ஆனால், இன்றும் கான்ட்டிராக்டு முறையிலே அங்கு பணியாற்றுவதாகத் தகவல். அவர்கள் 5, 6 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அனுபவம் கூட நிரம்ப இருப்பதாகத் தகவல். ஆகவே, அவர்களை விட்டு விட்டு, வெளியிலேயிருந்து எடுப்பதாகத் தகவல். அங்கே பணியாற்றுபவர்களுக்கு 6 ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகத் தகவல். எனவே, அப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்பு அளிக்காமல், வெளியிலேயிருந்து பிட்டர்ஸ், வெல்டர்ஸ் போன்றவர்களை எடுக்க இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதனாலே தான் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பொதுத் தொழிலாளர் சங்கம் கூட, இந்தக் கோரிக்கையை வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், முடிவெடுத்ததாக தங்கள் அறிக்கையிலே தெரிவிக்கவில்லை. முடிவெடுக்கும் போது, அங்கே தற்காலிகமாகப் பணியாற்றுகிற தொழிலாளர்களையும் வேலையில் அமர்த்திக்கொள்ள அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தூத்துக்குடியில் செயல்பட்டு வருகின்ற அந்த நிறுவனத்தில் ஆண்டுதோறும் 210 மெகாவாட் திறனுள்ள இயந்திரங்களைக் கொண்ட மின் நிலையம் இன்றைக்கு செயல்பட்டு வர இந்த அரசு ஆவன செய்து வருகிறது. அதிலே பணியாற்றுவதற்கு பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க அரசு இன்றைக்கு விதித்து இருக்கின்ற விதிமுறைகள் படி, குறிப்பாக மின் வாரியத்தில் காலியாக உள்ள இடத்தை வேலை தேடித் தரும் நிறுவனத்தால் அனுப்பப்படும் நபர்களில் வயது வந்தவர்களையும், அவர்களுடைய மதிப்பெண், மற்ற சான்றிதழ்களின் தன்மையின் அடிப்படையை வைத்து, வாரியம் மற்றும் அப்படிப்பட்ட நிறுவனங்களில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பது நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தான் இது ஒரு பெரிய நிறுவனம், மின் உற்பத்தி செய்யும் நிறுவனம் என்ற



காரணத்தால் தகுதி மிக்கவர்களையும், சான்றிதழ் உள்ளவர்களையும் அரசின் கொள்கைக்கேற்ப வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இன்றையதினம் அந்தப் பணியை அரசு செய்து வருகிறது. 4—5 நாட்களுக்கு முன்பு அந்தப் பிரச்னை விவாதிக்கப்பட்டு, ஓரளவிற்கு அங்கே வேலை நிறுத்தம் கூட நடந்து, பிறகு இன்றைக்கு ஒரு சுமூகமான நிலைமை ஏற்பட்டு, அங்கே எந்த ஒரு பதட்ட நிலையும் நிலவி வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. தனியார் நிறுவனங்களில் கூட ஆரம்பத்தில் கான்ட்ராக்டர்களிடம் வேலை செய்த தொழிலாளர்களை அந்த பாக்டரி ஆரம்பித்து வேலை செய்கிற நேரத்தில் நியமித்துக் கொள்கிறார்கள். நம்முடைய இந்த அனல் மின் நிலையம் 1979-ல் மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது. அதேபோல், உற்பத்தியைத் தொடங்குகிற நேரத்தில் கான்ட்ராக்டர்களிடம் வேலை செய்தவர்களை எடுக்காமல் விட்டு இருக்கிறார்கள். எண்ணூர் பவுண்டரி, அசோக் லேலண்டு போன்ற இடங்களில் கான்ட்டிராக்டர்களிடம் வேலை செய்தவர்களை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கமும், வாரியமும் மட்டும் விதிமுறைகளைக் காட்டி, அனுபவம் பெற்ற அந்தத் தொழிலாளர்களை புறக்கணிப்பது நியாயம் தானா, முறை தானா, பிரைவேட் செக்டரில் கையாளப்படும் முறையைப் பின்பற்றி, நம்முடைய அரசுத் துறையிலும் கையாள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 7—8 ஆண்டுகள் ஏற்கனவே அங்கே பணிபுரிந்து அனுபவம் பெற்றவர்களை அந்தப் பணியில் சேர்த்துக்கொண்டு, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அரசின் கவனத்திற்கு இப்போது கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்த உணர்வுகளை தக்கவர்களிடத்தில் கலந்து, அதற்கு ஏதாவது ஆவன செய்ய முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர்களை நேரடியாக நியமிப்பது சட்டத்திற்குப் புறம்பானது என்பதை விவர அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே கான்ட்ராக்ட் லேபர் முறையை ஒழிப்பதற்கான ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

[திரு. கே. எம். தங்கமணி] [1980 ஆகஸ்ட் 12

இதே மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஒப்பந்தத் தொழிலாளர்களில் தகுதியானவர்களை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களுக்குக் கொடுத்த பதிலிலேயே மாண்புமிகு உறுப்பினர் திண்டிவனம் திரு. தங்கமணி கேட்ட கேள்விக்கும் விடை அடங்கியிருக்கிறது என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 12—50.]

## (ஆ) திருச்சி, திண்டுக்கல் மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, என். ஏ. பூங்காவனம், எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை, ரா. கருப்பையா, செ. ராமலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், என். வரதராஜன், ஆர். கிருஷ்ணன், ப. சுந்தரம், துரைமுருகன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். திரு. இரா. கருப்பையா அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, '' திருச்சி, திண்டுக்கல், மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால், அங்கு பணி புரிந்த தொழிலாளர்கள் வேலை இழந்தது'' குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே,—

திருச்சி, திண்டுக்கல் மற்றும் வட ஆற்காடு தோல் பதனிடும் தொழிலில் மந்த நிலைமை மற்றும் மார்க்கெட் நிலவரத்தில் முன்னேற்றம் இல்லாமை ஆகிய காரணங்களை முன்னிட்டு 30 தோல் பதனிடும் நிறுவனங்கள் மூடப்பட்டதன் விளைவாக, சுமார் 715 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட வாரியான விவரங்கள் வருமாறு :



123098

1980 ஆகஸ்ட் 12] [திரு. எஸ். இராகவானந்தம்

திருச்சி.—

திருச்சி பாரத் பிரைம் டேனர்ஸ் 1—7—80 முதல் மூடப்பட்டு சுமார் 95 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நிர்வாகத்தினர், தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 எப். எப். ஏ-ன்படி மூடுதல் அறிக்கை கொடுக்கவில்லை. மேலும் தொழிலாளர்கள் இப்பிரச்னை பற்றி தொழிற் தகராறு ஏதும் எழுப்பவுமில்லை. எனினும், இரு தரப்பினருக்குமிடையே, தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நஷ்ட ஈடு தொகை பற்றி நேரிடையாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திண்டுக்கல் (மதுரை).—

திண்டுக்கல்லில், 20 தோல் பதனிடும் நிறுவனங்கள் மூடப்பட்டதின் விளைவாக, சுமார் 320 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆர். எஸ். அண்ட் சன்ஸ் நிறுவனத்தில் மூடுதல் பற்றிய பிரச்னை தீர்க்கப்பட்டு, தொழிலாளர்கள் நஷ்ட ஈட்டுத் தொகையைப்பெற்றுக் கொண்டனர். ஏ. ஜே. அன்ட் கன்ஸ் டேனரிஸ் மூடுதல் பற்றி 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம், பிரிவு 18 (1)-ன் கீழ், 14—7—80 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன்படி, தொழிலாளர்கள் டானரி மூடுதலை ஏற்றுக்கொண்டு, தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளைப் பெற்றுக் கொள்வார்கள். எம். எம். பி. எம். சையத் முகமது டேனரி மூடுதல் பற்றி திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ.) எழுப்பிய தொழிற் தகராறு, மதுரை 2-ம் சரக தொழிலாளர் துறை அலுவலர் முன்பு, விசாரணையில் உள்ளது. மீதமுள்ள 17 நிறுவனங்கள் மூடுதல் பிரச்னை பற்றி முறையான தொழிற் தகராறு எதுவும் இதுவரை எழுப்பப்படவில்லை.

வட ஆற்காடு மாவட்டம்.—

வட ஆற்காடு மாவட்டத்தில், 9 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் விளைவாக, சுமார் 300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றில், வி. ஏ. ஹசீப் அன்ட் கோ டானரி, ராணிப்பேட்டை (இ அய். பிரிவு மட்டும்) மற்றும் முஸ்டக் அஹமத் அண்ட் கோ காட்பாடி ஆகிய இரு நிறுவனங்களின் மூடுதல் பற்றி எழுப்பப்பட்ட தொழிற் தகராறுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டன. அதன்படி தொழிலாளர்கட்குச் சேரவேண்டிய இழப்பு ஈடு முதலிய தொகைகளைத் தர நிருவாகங்கள் ஒப்புக் கொண்டுள்ளன. மற்ற நிறுவனங்களின் மூடுதல் பிரச்சினை சம்பந்தமாக முறையாக தொழிற் தகராறுகள் ஏதும் எழுப்பப்படவில்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் தோல் பதனிடும் தொழிலில் ஒரு மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. அதனுடைய விளைவாக திருச்சியில் 3

தொழிற்சாலைகள் மூடியிருக்கின்றன. அதே மாதிரி திண்டுக்கல்லிலும்—அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக்கூடிய விவர அறிக்கையின் படி 20 தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 39 தொழிற்சாலைகளில் 29 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அல்லது பகுதி தான் வேலை செய்வது என்ற நிலைமை இருக்கிறது. வாணியம்பாடியில் இருக்கும் 63 தொழிற்சாலைகளில் 6 தொழிற்சாலைகள் தான் வேலை செய்து கொண்டு இருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் ஒரு பகுதி 50 சதவிகிதம் தொழிற்சாலைகள் தான் வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ராணிப்பேட்டையில் மொத்தம் உள்ள 79 தொழிற்சாலைகளில் 70 தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அதே போல், ஆம்பூரில் 50 தொழிற்சாலைகள் இருப்பதில் 10 தொழிற்சாலைகள் தான் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. தோல் ஏற்றுமதிக் கழகத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்கள் அந்தத் தோல் பதனிடும் தொழிலில் உள்ள நெருக்கடி பற்றி ஒரு விவரமான அறிக்கையைக் கொடுத்து இருக்கிறார்கள்.

இதன் காரணமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய சுமார் 20,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றன. அரசு இது வெறும் ஏதோ பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தருகிறோம் என்ற உணர்வில் இந்தப் பிரச்னையை அணுகாமல், அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியை மனதில் கொண்டு, அவர்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா, என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பல தொழிலாளர்கள் முறைப்படி தொழில் தகாறுகளை எழுப்பவில்லை. எழுப்பியுள்ள இடங்களில் சிலவற்றில் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு விட்டார்கள். எனவே மீதமுள்ள இடங்களில் உள்ள தொழிலாளர்கள் தொழில் தகராறுகளை முறையாக எழுப்புவார்களானால், அப்படி வரும்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பிரச்னைகளையெல்லாம் தீர ஆலோசனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டேன். ஏதோ பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தருவதாக அரசு கருதக்கூடாது என்று. அதற்காக தொழில் தகராறு எழுப்பவில்லை என்று சொல்லிவிடக்கூடாது. அந்தத் தொழிலில் ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலில் ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியைப் பற்றிய விஷயங்களை எல்லாம் விவரமான முறையீடு போன்று கொடுக்கப்படுமானால், அதை வைத்து, அதற்கு மேல் என்னசெய்யலாம் என்பதை ஆலோசனை செய்யலாம்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து சட்டப்படி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்து இருந்தாலும், ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை. தமிழ் நாட்டிற்கு அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் மிகப் பெரிய தொழில் இந்த தோல் பதனிடும் தொழில். 40,000 தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் தொழில் ஏற்பட்டிருக்கும் நிலைமை என்னவென்றால், பாதியளவு பதப்படுத்தப்பட்ட தோல்களை இங்கே இருந்து ஏற்றுமதி செய்யக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்து இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்திற்கு வெளியே போக வேண்டாம். கேள்வியை நேரடியாகக் கேளுங்கள்.

திரு என். வரதராஜன் : முழுமை பெறாத தோல் பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று மத்திய சர்க்கார் தடை விதித்திருக்கிறது. இங்கே தோல் பொருட்களை உற்பத்திசெய்ய வேண்டும் என்பதற்காக தடை விதித்திருக்கிறார்கள். இருந்தாலும் இன்றைக்கு இந்தத் தொழில் பாதிக்கப்படுவதால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வில்லை. நம்முடைய நாட்டில் தோல் பொருட்களை முழுமையாகப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. ஆகவே, சில ஏகபோக முதலாளிகள் தலையிட்டதன் காரணமாக இந்தத் தடை வந்திருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். தொழில் பாதிக்காமல், தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் பாதுகாப்பு கொடுப்பதாக இருந்தால் இந்தத் தடையை அவர்கள் விதிக்கலாம். இல்லைஎன்றால் மத்திய சர்க்கார் 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்' மூலம் இந்த பாதி முடிக்கப்பட்ட தோல் பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும். இல்லை என்றால் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும்.

இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருப்பது தொழிலாளி முதலாளி உறவோடுதான் இருக்கிறது. இந்தத் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையில் அரசு கவனம் செலுத்தவில்லை. கவனம்

செலுத்துவது மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இதில் தொழிலாளி முதலாளி என்ற பிரச்சனைக்குத்தான் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வெளியே போவதற்கு முன்பு சில ஆலோசனைகளை செய்ய வேண்டியிருக்கிறது. இதிலே தொழிலாளர் நலத்துறை மட்டுமல்ல; கிராமக் கூட்டுறவுத் தொழில் துறை, இன்டஸ்ட்டிரீஸ் டிப்பார்ட்மெண்ட் இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இந்தப் பிரச்சினைப்பற்றி பேசி முடிவு எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாக இது இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நீண்ட அறிக்கையை விவரமாகத் தயார் செய்து அனுப்பினால் அந்த அறிக்கையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த உதவியாக இருக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சொன்ன வாக்குறுதியில் உண்மையிலேயே அந்தத் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் என்று கருதுகிறேன். அதோடு, அமைச்சர்களுக்கு இருக்கிற கூட்டுப் பொறுப்பு அடிப்படையில் வருகிற ஒரு மாத காலத்திற்குள்ளாக இப்படிப்பட்ட தொழிலதிபர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை ஒன்றாகக் கூட்டி, இந்த தொழில் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சமரச முயற்சிகளை மேற் கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். அதற்குத் தூண்டுகோலாக இருப்பதற்கு அவர்களிடமிருந்து ஒரு முறையீடு வருமானால் நன்றாக இருக்கும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இத்தகைய நிலைமைக்கு என்ன காரணம் என்று அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்த நிலைமை மற்றும் மார்க்கெட் நிலைமையில் முன்னேற்றம் இல்லாமையால் இப்படிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மூடப்படுவதற்கும் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பதற்கும் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் அப்படி மார்க்கெட்டில் மந்த நிலைமை இருக்கிறது என்பதைப் பற்றி இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். 'ஃபினிஷ்டு லெதர் அன்ட் செமி ஃபினிஷ்டு லெதர்' என்று இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய நாட்டில் தோல் பொருள்கள் ஓரளவு பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததை மத்திய அரசு தடை செய்த காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை உருவாகி இருக்கிறது





என்று சொன்னர்கள். இப்படி முழுவதும் பதப்படுத்தாத தோலை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றும் மத்திய சர்க்கார் அதை அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டு 1974 ஆம் ஆண்டு ஜனவரி 29-ந்தேதி இந்தமாமன்றத்திலே அரசுத் தரப்பிலே ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு. அது ஏகமனதாக நிறைவேறி இருப்பதை இந்த அரசு அறியுமா? மீண்டும் அமைச்சர் இது குறித்து தொடர்ந்து நடவடிக்கை எடுப்பாரா? அந்தத் தீர்மானத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இதுவரையில் எனக்கு கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற பிரச்சனைகள் எல்லாம் பொதுவாக எல்லாத் துறைகளும் சேர்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டியவை. கன்சிலியேஷன்—சமரச பேச்சு நடக்கும்போது இந்தமாதிரி பிரச்சினைகளை எடுத்துக் கொள்வது இல்லை. எனவே ஒரு முறையீடு கொடுத்தால் சுமூகமாக கலந்து பேச வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத்தான் நண்பர் வரதராஜன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இது தொழிலாளர் நல அமைச்சர் மட்டும் முடிவு செய்யக்கூடியது அல்ல. தொழில் துறை அமைச்சரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். அவரும் சேர்ந்து பதில் சொல்லியிருக்கலாம் என்பது அவர்களுடைய கருத்து. அதற்காகத்தான் பழைய தீர்மானத்தை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். 1974 ஆம் ஆண்டு ஜனவரி 29-ந்தேதி இந்த அவையிலே இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதிலே சர்வகட்சித் தலைவர்களும் பேசி, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த சர்க்கார் அதைத் தொடர்ந்து வற்புறுத்தினால், இப்படிப்பட்ட பாதி பதப்படுத்திய தோலை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு ஒப்புக் கொண்டால் இந்த மந்த நிலை இருக்காது. எல்லாம் ஃபினிஷ்டு குட்ஸ்' என்ற முறையில் இருந்தால் அதற்குரிய இயந்திரங்கள் இங்கே இல்லை. அத்தகைய இயந்திரங்களுடன் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்றால் ஒரு கோடி ரூபாய் செலவாகும். அந்த ஒருகோடி ரூபாய் மூலதனம் போட்டு இன்று தொழில் நடத்தக் கூடிய முதலாளிகள் இங்கே இல்லை. இன்றைக்கு நாம் தொழில்கள் வளரவேண்டுமென்று கருதுகிறோம். தொழில்கள் வளருவதற்கு இப்படிப்பட்ட நிலைமைகள் குறுக்கிடுகின்றன. ஆகவே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–00]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்தத் தீர்மானம் பற்றியும், ஆழ்ந்த அனுபவத்தைப் பெற்றவராக அவர் இருப்பதால் விவரமாகவும் எழுதித் தருவார்களேயானால் அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு மெட்டீரியல்ஸ் இந்த அரசுக்குக் கிடைக்கும். அந்த உதவியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## இ. கோவை, சோமசுந்தரா மில் தொழிலாளர்களில் சிலர் வேலை நீக்கம் உள்ளிருப்புப் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. கு. ரமணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஏ. டி. குசேலர் ஆகியோர் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். திரு. கு. ரமணி அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவைர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்

**திரு. கு. ரமணி**: பேரவைத் தலைவரவர்களே, ''கோயம்புத்தூர் சோமசுந்தரா மில் தொழிலாளர்கள், நிர்வாகத்தால் சில தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து உள்ளிருப்பு போராட்டம் செய்து வருவது'' பற்றி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூரில் உள்ள தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் ( National Textile Corporation ) நிர்வாகத்திற்குட்பட்ட சோமசுந்தரா மில் என்ற நூற்பாலையில் பணிபுரியும் தொழிலாளர்களில் (1) திரு சதாசிவம் (டி. என். டி. யு. சி. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்), (2) திரு பெருமாள் (ஐ. என். டி. யு. சி.) தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர், (3) திரு கமலசேகரன் (சி. ஐ. டி. யு. தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்) ஆகிய மூன்று தொழிலாளர்களை 1979 அக்டோபர் மாதத்தில் மேற்படி ஆலையின் தலைமையகத்தின் முன்பாக தீபாவளி போனஸ் கோரிக்கையை முன்வைத்து 'கேரோ' (முற்றுகைப் போராட்டம்) வில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி, திரு. சதாசிவம், திரு பெருமாள் ஆகிய இருவரை 12–7–80–ல் இருந்தும் மற்றும் திரு. கமலசேகரனை 13–7–80-ல் இருந்தும் நிர்வாகம் வேலை நீக்கம் செய்தனர்.





இதை ஆட்சேபித்து, (1) கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் (ஏ. ஐ. டி. யு. சி.), (2) கோவை மாவட்ட மில் லேபர் யூனியன், (சி. ஐ. டி. யு.) ; (3) கோவை ஜில்லா தேசீய பஞ்சாலை எம்ளாயீஸ் யூனியன் (ஐ. என். டி. யு. சி.) , (4) கோவை — பெரியார் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கம் (டி. எம். கே.) மற்றும் (5) தேசீய பஞ்சாலை தொழிலாளர் சங்கம் (டி. என். டி. யு. சி.) ஆகிய தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் (940) 12–7–80 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று தொழிலாளர்களும் உடனடியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தொழிற் சங்கங்கள் வற்புறுத்தின. இதை ஏற்க நிர்வாகம் மறுத்து விட்டனர்.

இந்தத் தொழிற் தகராறு மீது சமரசப் பேச்சு வார்த்தைகள் கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பு பல்வேறு தினங்களில் நடைபெற்றன. எனினும் சுமுகமான முடிவு ஏதும் ஏற்படவில்லை. எனவே, மேலும் பேச்சு வார்த்தைகள் கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையரின் முன்பு நடைபெற உள்ளன.

வேலை நிறுத்தம் நீடிக்கிறது.

**திரு. கு. ரமணி** : தலைவரவர்களே, 12–7–1980-லிருந்து இந்தத் தகராறு நடந்த அந்த மில்லில் வேலை நிறுத்தம் நடைபெறுவதால் அங்கே உற்பத்தி முடங்கிக் கிடக்கிறது. 10 மாதங்களுக்கு முன்பாக அதாவது 1979 ஆம் வருஷம் அக்டோபர் மாதத்திலே நடந்த போனஸ் பிரச்சினையின்போது கோவை மாவட்டம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் ஈடுபட்டு கிளர்ச்சி நடத்தினார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கும் அதிலே ஈடுபட்ட காரணத்தினால்தான் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இது சங்க உரிமையையே தடுக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு சங்க உரிமைக்கு பாதுகாப்பு தரக்கூடிய வகையிலே உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

*__மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்__ : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அவ்வாறு நடந்திருப்பது குற்றம் என்று கூறி 1980-ம் ஆண்டு ஜூலை 12, 13 ஆகிய நாட்களில் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இதுபற்றி கோவையில் சமரச பேச்சு நடந்தும் அது வெற்றி பெறவில்லை. அவர்கள் தொடர்ந்து பேச்சு

வார்த்தை நடத்துகிறேன் என்று சொல்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்காக அவர்களுடைய கோரிக்கைக்கு மதிப்பளித்து அவர்களை சென்னை மட்டத்திலே அழைத்து வைத்து பேச்சு வார்த்தைகளைத் தொடங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு. எம், ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்று நடத்தக்கூடிய சோமசுந்தரா மில் கடந்த 1979 ஆம் ஆண்டில் சோமசுந்தரா ஆலையில் மட்டுமல்ல கோவை மாவட்டத்தில் இருக்கக் கூடிய அனைத்து பஞ்சாலைகளுக்குமே போனசுக்காக— போராட்டம் நடத்தி அந்த போராட்டத்தின் மூலமாக ஒரு பொதுவான ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தத்தின்படி, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் என்.டி.சி. நிர்வாகம் 3 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கின்றது. ஆனால் அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தைக்காக அழைக்கின்ற நேரத்தில் என்.டி.சி. நிர்வாகத்திலே இருக்கக்கூடிய சோமசுந்தரா மில்லிலே வேலை செய்யக்கூடிய உயர் அதிகாரிகளான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சாதாரண டி.சி.எல். அவர்களிடம் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கின்ற தாங்கள் பேச்சு வார்த்தை நடத்துவதா என்று தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவேதான் அங்கே வேலை நிறுத்தமே ஏற்படுகின்றது. ஆகவே அமைச்சரவர்கள் இதிலே உடனடியாகத் தலையிட்டு அதைத் தவிர்க்கக் கூடிய முறையிலேயும் ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்ளாமல் தொழிலாளர் மீது நடவடிக்கை எடுத்தது பற்றியும் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே அவ்வாறு வேலை நிறுத்தத்தை நிறுத்துகின்ற அளவிலே அந்த 3 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான், மாண்புமிகு ரமணி அவர்கள் கேட்டபோது சொன்னேன். சென்னைக்கு அவர்களை அழைத்துப் பேச ஏற்பாடு செய்கிறேன் என்று. நான் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.சி.எல். முன்னால் வரலாமா என்று கேட்பது எல்லாம் தவறு. அது வரவேற்கக் கூடியது அல்ல. கமிஷனர் அவர்களே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் தான். ஆகவே சென்னையிலேயே அவர்களை அழைத்துப் பேச ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி அதற்கு மேலும் தேவை பட்டால் நானே நேரிடையாக அழைத்துப் பேசுகிறேன்.





திரு. ஏ. டி. குலசேகர் : தலைவர் அவர்களே, இந்த சோமசுந்தரம் மில் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக 21–8–80 ஆம் தேதியன்று அனைத்து பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்யவிருக்கிறார்கள். அது பற்றி ஏதேனும் குறிப்பாக அரசுக்குத் தெரியுமா ? தகவல் உண்டா ? அப்படி இருப்பின் அதை தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னையிலே அவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்துகிறேன் என்று நான் கொடுத்த உறுதி மொழியை ஏற்று அவர்கள் போராட்டத்தைக் கைவிடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். வேண்டுகிறேன்.

## ஏ. மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டி. பார்மஸிஸ்ட், பி. பார்மஸிஸ்டுகள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து ஒன்றின திருவாளர்கள் எல். இளையபெருமாள், டாக்டர் கே. சமரசம், ஈஸ்வரமூர்த்தி என்கிறசொர்ணம் ஆகியோர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார்கள் திரு. எல். இளையபெருமாள்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டி. பார்மஸிஸ்ட் பி. பார்மஸிஸ்டுகள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதம் இருப்பது குறித்த".

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே.

மதுரை மருத்துவக் கல்லூரி, டி. பார்மசி, பி. பார்மசி மற்றும் எம். பார்மசி மாணவர்கள் 22–8–77 முதல் தங்களுடைய கோரிக்கைகளுக்காக காலவரையின்றி போராட்டம் நடத்தப் போவதாக அறிக்கை கொடுத்தனர். டி. பார்மசி மற்றும்

பி. பார்மசி மாணவர்கள் அவ்வாறே அந்நாளிலிருந்து போராட்டத்தில் இறங்கினார்கள். ஆயினும் எம். பார்மசி மாணவர்கள் 22–8–77 ஆம் நாளிலிருந்து அவர்கள் அறிவித்த வண்ணம் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

2. 8–9–77-ல் மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் பார்மசி மாணவர்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களை வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தையின் போது, மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்றும் இல்லையெனில் 21–9–77 ஆம் நாளிலிருந்து உண்ணா நோன்பு போராட்டம் தொடங்குவரென்றும் கூறினார்கள். 17–9–77-ல் அப்பொழுதைய மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் அவர்களும் மாணவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசினார்கள். மருத்துவக் கல்வித் துறை இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கையைப் பெற்று கோரிக்கைகள் தகுதியின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுமென்று அப்பொழுது அவர் மாணவர்களின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தார். மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் ஆகியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரும் கூட 26–9–77-லிருந்து சில மாணவர்கள் காலவரையற்ற உண்ணா நோன்பு போராட்டத்தில் இறங்கினார்கள். முதலமைச்சர் அவர்கள் 3–10–77ல் இந்தியப் பார்மசி மாணவர் சங்கப் பிரதிநிதிகளுடன் அவரது இல்லத்தில் கலந்து பேசினார்கள். அப்பொழுது காலப்போக்கில் ஆவன செய்வதாக அவர்களிடம் முதலமைச்சர் உறுதி கூறினார். எனவே 7–10–77 ஆம் நாள் பிற்பகல் 3 மணியிலிருந்து தங்களது போராட்டத்தை பார்மசி மாணவர்கள் நிறுத்தினார்கள்.

3. மாணவர்களின் கோரிக்கைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டுப் உரிய ஆணைகள் மருத்துவக் கல்வித்துறை இயக்குநருக்கு அனுப்பப் பட்ட 6–3–78 ஆம் நாளும் 60716 எம்சிஇ 2/77-7 நல்வாழ்வு எண்ணும் கொண்ட அரசு குறிப்பாணையிலும் 29–1–80 ஆம் நாளும் 60716-எம்சிஇ 2/77-32 நல்வாழ்வு எண்ணும் கொண்ட மடலிலும் பிறப்பிக்கப்பட்டன. அவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் தகுந்த பதில்களை தமிழ்நாட்டு பார்மசி சங்கத்திற்கு அனுப்புமாறும் அவற்றில் மருத்துவக் கல்வித் துறை இயக்குநருக்குச் சொல்லப்பட்டது.





4. சங்கத்தின் பல்வேறு கோரிக்கைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் வருமாறு :

| வரிசை எண்ணும் கோரிக்கையும் (1) | அரசு எடுத்த நடவடிக்கை (2) |
| --- | --- |
| 1 பார்மசி நிர்வாகத்திற்கு (அதாவது பார்மசிக் கல்வியும் மருந்துக்கட்டுப்பாடும் இதில் அடங்கும்) தனியாக ஒரு இயக்கம் ஏற்படுத்துதல். | ஏற்படக்கூடிய செலவு முதலியவைகளை உள்ளடக்கிய விரிவான செயற் குறிப்புகளை அனுப்புமாறு மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவ்வாறே செயற்குறிப்புகள் அவரிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றன. |
| பார்மசி மாணவர்களுக்கு என தனியான கல்லூரி ஒன்றை ஏற்படுத்துதல் (சென்னையில் ஏற்படுத்துவது விரும்பத்தக்கது). | |
| அரசால் ஏற்படுத்தப்படும் தேர்வுக் குழுக்களிலும் மற்றும் பார்மசி சம்பந்தப்பட்டவற்றைக் கவனிப்பதற்காக அரசால் ஏற்படுத்தப்படும் மற்றைய குழுக்களிலும் பார்மசி நபர்களை உறுப்பினராக நியமித்தல். | 1978 ஆம் ஆண்டு அமர்விலும் 1979 ஆம் ஆண்டு அமர்விலும் முதலாம் ஆண்டு பி. பார்மசி வகுப்பில் சேர மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழுக்களில் மதுரை மருத்துவக் கல்லூரி மருந்தியல் பேராசிரியர் திரு பி. என். இராமகிருஷ்ணன் ஓர் உறுப்பினராக அமர்த்தப்பட்டார். |
| 200 படுக்கைகள் கொண்ட ஒவ்வொரு மருத்துவமனையிலும் பார்மசி பணித்துறையை (மருந்தகம், மருத்துவம் மற்றும் அறுவை ஆகியவை இணைந்த பண்டகசாலை) ஏற்படுத்துதல். | சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் மருத்துவமனை பார்மசி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| பார்மசி பட்டதாரிகள் அரசு ஆய்வகங்களில் வேலை பெற வாய்ப்புகள் அளித்தலும் "Bonded Manufacturing Officers" களாக பார்மசி பட்டதாரிகளை அமர்த்தலும். | இந் நிறுவனத்தில் இளநிலை இரசாயன உதவியாளர் மற்றும் பரிசோதனைக்கூட உதவியாளர் பணியிடங்களுக்கு பி. பார்மசி பட்டதாரிகளை நியமனம் செய்யும் வகையில் ஏற்கெனவே சிறப்பு விதியில் வழி செய்யப்பட்டுள்ளது. |

[1980 ஆகஸ்டு 12

| வரிசை எண்ணும் கோரிக்கையும் (1) | அரசு எடுத்த நடவடிக்கை (2) |
|---|---|
| | பி.சி.ஜி. மற்றும் மைய அரசு ஆய்வகங்களில் வேலையில்லாதிருக்கும் பார்மசி பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தும் வாய்ப்பு குறித்து தன் கருத்தைத் தெரிவிக்குமாறு இந்தியாவின் மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு, மைய அரசின் ஆய்வகங்களில் மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு மைய அரசு ஆய்வகங்களில் உள்ள பணி இடங்கள் இந்திய அரசு அலுவலர் தேர்வாணைக்குழுவின் மூலமாகவும் வேலை வாய்ப்பகத்தின் மூலமாகவும் நிரப்பப்படுகின்றனவென்றும் எனவே வேலையில்லாத பார்மசி பட்டதாரிகள் வேலைவாய்ப்பகங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டு இந்திய அரசு அலுவலர் தேர்வாணைக்குழு மைய அரசு ஆய்வகங்களில் உள்ள பணியாளர் இடங்களை நிரப்ப விண்ணப்பங்களைக் கோரி விளம்பரம் செய்யும்பொழுது அவர்கள் அவற்றிற்காக விண்ணப்பிக்கலாமென்றும் அவர் கூறியுள்ளார்.<br><br>பார்மசி மாணவர்களின் கோரிக்கையான பார்மசி பட்டதாரிகளை ''பாண்டட்'' ஆய்வகங்களைத் திறமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன் ''Bonded Manufacturing Officers'' ஆக அமர்த்தவேண்டுமென்ற கோரிக்கையின் மீது தன் கருத்தைத் தெரிவிக்குமாறு வருவாய் வாரியம் கேட்டுக்கொள்ளப் |



1980 ஆகஸ்டு 12]

| வரிசை எண்ணும் கோரிக்கையும் (1) | அரசு எடுத்த நடவடிக்கை (2) |
|---|---|
| | பட்டது. தற்பொழுது தமிழ் நாட்டில் 12 ''பாண்டுகளே'' செயல்படுகின்றன என்றும் ''Bonded Manufacturing Officers'' களாக துணை தாசில்தார்கள் அல்லது தாசில்தார்கள் அமர்த்தப்படுகின்றனரென்றும் மருந்து மற்றும் டாய்லெட் பொருட்களைத் தயாரிக்கும் லைசென்ஸ் தாரர்களிடமிருந்து எக்சைஸ் வரியை வசூலிப்பது மட்டுமே அவர்களுடைய வேலையென்றும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தைப்பற்றி மருந்து ஆய்வாளர்கள் கவனித்துக் கொள்வதாகவும், "Bonded Manufacturing Officers" களுக்கு உற்பத்தித்தொழில் திறமை தேவையில்லையென்றும், எனவே B.M.O. பதவிகளை பார்மசி பட்டதாரிகளுக்கு வழங்கவேண்டுமென்று பார்மசி பட்டதாரிகளின் வேண்டுகோளை ஏற்கவியலாதென்று வருவாய் வாரியம் கூறியுள்ளது. |
| பார்மசி கல்வி கற்பிக்கும் பணியாளர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள சம்பள ஏற்ற முறைகளையும், மாநில அரசின் பார்மசி பணியாளர்களுக்கு மைய அரசு ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள ஏற்ற முறைகளையும் அளித்தல். | மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பார்மசி பணியாளர்கள் உட்பட அனைத்து பணியாளர்களின் சம்பள ஏற்ற முறைகள் 1—4—78 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. |

| வரிசை எண்ணும் கோரிக்கையும் (1) | அரசு எடுத்த நடவடிக்கை (2) |
|---|---|
| 7 மருத்துவம் மற்றும் மன இயல் பணிகளில் உள்ளதைப்போல மருந்தியல் உதவியாளர் பதவியை உதவிப் பேராசிரியர் பதவியாக உயர்த்தல். | முன்னர் இருந்த நிலையையேத் தொடர வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 8 பி. பார்மசி மற்றும் எம். பார்மசி பட்டப்படிப்புகளுக்கு நவீன முன்னேற்றங்களுக்கேற்ப பாடத் திட்டங்களை மாற்றியமைத்தல். | பி. பார்மசிக்கான புதிய பாடத் திட்டத்தை மதுரை மருத்துவக் கல்லூரியில் 1978–79 ஆம் ஆண்டு முதல் அக் கல்லூரியின் முதல்வர் அமுல் படுத்தி வருகிறார். எம். பார்மசி பாடத் திட்டமானது மற்ற பல்கலைக் கழகங்களில் உள்ளவற்றைப் பின்பற்றி அண்மையில் வகுக்கப்பட்டதாகையால், அதை மாற்றியமைக்கத் தேவையில்லையென்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. |
| 9 பார்மசி பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு ஆதார ஊதியத் திட்டத்தை (Fellowship) ஏற்படுத்துதல். | எத்தனை மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் தரவேண்டும். அதனால் அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்ற விளக்கமான விவரங்களை உள்ளடக்கி செயற்குறிப்பை அரசின் பரிசீலனைக்கு அனுப்புமாறு மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார். எம். பார்மசி படிப்பிற்கு 3 இடங்களே உள்ளனவென்றும் அவற்றிற்கு அரசு பணியிலுள்ள வேட்பாளர்களே தேர்ந்தெடுக்கப்படுவதாகவும் அப்படி தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு மாத ஊதியம் பெறும் பணியிடங்கள் தரப்படுகின்றனவென்றும் எனவே பார்மசி |



| வரிசை எண்ணும் கோரிக்கையும் | அரசு எடுத்த நடவடிக்கை (2) |
|---|---|
| | பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ஆதார ஊதிய திட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நிலை ஏற்படவில்லையென்றும் மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் இப்பொழுது கூறியுள்ளார். |

திரு. [illegible] இளையபெருமாள் : தலைவர் அவர்களே, [illegible]70 அன்று ஆரம்பித்தது இந்தப் பிரச்னை. இன்னும் பத்து நாட்கள் ஆகியிருந்தால் 3 வருடங்கள் ஆகியிருக்கும். இப்படி பத்து நாட்கள் குறைவான இந்த 3 வருடங்களில் அரசு என்ன செய்து கொண்டிருந்தது ? ஏன் இந்தக் காலதாமதம் என்று அறிய விரும்புவதோடு, இந்த அறிக்கையின் பிரகாரம் பார்மஸி நிர்வாகத்திற்கு, பார்மஸி கல்வியும் மருத்துவ படிப்பும் இதில் அடங்கும். தனியாக ஒரு இயக்கம் இருத்தல் என்ற முறையிலே செய்யவில்லை. ஆகவே நான் அரசிடம் இதற்கு என்ன பதில் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிப்ளோமா இன் பார்மஸியைப் பொருத்த வரையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் Formation of a Separate Directorate for Pharmacy Administration. என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே பார்மஸி கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் இதை ஒப்புக் கொள்ள வேண்டும். அதுவும் அல்லாமல் சமீபத்தில் நான் டிரக் இன்ஸ்பெக்டரேட் என்ற ஒன்றினை மானியக் கோரிக்கையிலே பதிலிலே அறிவித்திருக்கிறேன். சட்டத் திருத்தத்தைக் கூட கொண்டு வந்திருக்கிறோம். அந்த அறிவிப்பு ஓரளவு அவர்களுக்கு ஆறுதல் தரும் என்று கருதுகிறேன். அந்த அறிவிப்புக்கு பிறகு அவர்கள் எல்லாம் அந்த போராட்டத்தை வாபஸ் கூட வாங்கியிருக்கலாம். ஏனென்றால் அந்த அறிவிப்பு பார்மஸி படித்த டிப்ளோமா ஹோல்டர்களாக இருந்தாலும் சரி, டிக்ரி வாங்கியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அது மன நிறைவு அளிக்கும் என்று கருதுகிறேன். அந்த அறிவிப்பும் ஹாத்தி கமிஷனுடைய ரிப்போர்ட்டின் அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டது. அதுவுமல்லாமல் இந்த அறிக்கை பணம் அறிக்கை முன்பே தயாரிக்கப்பட்டது. ஆனால் இந்த மன்றத்திலே மக்கள் நல் வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கை மீது நான் இவைகளுக்கெல்லாம் பதில் கொடுத்திருக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மருத்துவக் கல்லூரியில் டி. பார்மஸி மற்றும் பி. பார்மஸி மாணவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 80 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பல நேரங்களில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அரசும் பல விதமான பரிசீலனை செய்து 9-க்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளித்திருந்தாலும் கூட தொடர்ந்து இப்படி நடப்பதை தவிர்க்க, அந்தத் துறையைச் சேர்ந்தவர்களையோ, இயக்குநர்களையோ, செயலாளர்களையோ அழைத்து விசாரணை நடத்தி அறிக்கை தருவதற்கு பதிலாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கக் கூடிய வகையில் ரெவின்யூ பியூப்பிளை வைத்து, அல்லது தனி நபர்களை வைத்து விசாரணை நடத்தி இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ரெவின்யூ போர்டு மெம்பருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்க வேண்டிய தேவையில்லை. The matter is very simple. என்னைப் பொருத்த வரையில் அதன் விவரங்கள் என்ன என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். பல மாநிலங்களிலே இது மாதிரியான டிரக் இன்ஸ்பெக்டரேட் என்ற வகையில் திட்டவட்டமாக அறிவிப்பு எதுவும் கிடையாது. நாம் தான் இதை செய்திருக்கிறோம். இப்படி துணிச்சலாக அறிவிப்பு செய்திருக்கிறீர்கள் என்று பல மாநிலங்களிலிருந்து பாராட்டி கடிதங்கள் போட்டிருக்கிறார்கள். இது மாணவர்களுக்கும் திருப்தி அளிக்கத்தான் செய்யும். ஆகவே இதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இப்பொழுது இருக்கக் கூடிய பிரச்சினையே வேறு. இரண்டு ஆண்டுகளோ அல்லது ஒரு ஆண்டா என்பதைப் பற்றி தான் இப்போது பிரச்சனையை கிளப்பியிருக்கிறார்கள். அது கூட ஹையர் செகண்டரி வந்திருக்கக் கூடிய காரணத்தினால் தான் எழுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையில் சுமூகமான பரிகாரத்தைக்காண நாம் யோசனைகள் சொல்லி வருகிறோம். அதற்குப் பிறகு பார்மஸிஸ்டுகளின் கவுன்சிலுக்கும் நாம் எழுதியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்த விவர அறிக்கையில் 1977 ஆம் ஆண்டு நடை பெற்ற நிகழ்ச்சி பற்றி கூறியிருக்கிறார்கள். சமீபத்தில் அவர்களைக் கூப்பிட்டுப் பேசியதாக, அது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடத்தினார்களா என்ற விவரங்கள் இல்லை. கடைசியில் சொல்லும்



போது இரண்டு ஆண்டா ஒரு ஆண்டா என்ற பிரச்னைகள் எல்லாம் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பிரச்னைகளையும் உள்ளிட்டு வைத்து அவர்களுடைய பிரதிநிதிகளை கூப்பிட்டு யாதுகர்ந்த நிலை இது, உங்களுக்கு எப்படி உதவி செய்ய முடியுமோ இன்றைய சூழ்நிலையில் இதுதான் சாத்தியம் என்று குறிப்பிட்டுச் சொல்லி, பேசி ஒரு முடிவுக்கு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முதலில் ஒரு அறிக்கை கூட கொடுத்தேன். சட்ட சபை மூலமாகவும், வெளியிலும் கொடுத்திருக்கிறேன். அரசாங்கம் சுமூகமாகக் கவனிக்கும், ஆகவே இந்த வாக்குறுதியை ஏற்றுக் கொண்டு நீங்கள் உங்கள் உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது ஓரளவு நிலைமை சுமூகமாக இருக்கிறது. ஆனால் எனக்கு திருப்தியாக இல்லை. அவர்களை நிச்சயமாக வரவழைத்து, யோசனைகள் சொல்லி, அவர்களுக்கு ஓரளவுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு நான் முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என்று வாக்குறுதி தருகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : 200 படுக்கைகள் கொண்ட ஒவ்வொரு மருத்துவமனையிலும் பார்மசி பணித் துறையை ஏற்படுத்துதல் என்பதற்கு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று இருக்கிறது. ஆகவே நிச்சயமாக இந்த ஆண்டு செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பரிசீலனையில் இருக்கிறது என்றால் கொஞ்சம் கஷ்டம் என்று தான் அர்த்தம். முழுமையாக ஏற்றுச் செய்ய வேண்டுமென்றால் நிதியமைச்சரிடம் கேட்க வேண்டும், ஜாஸ்தி தொகை ஏற்படும். ஆகவே 'அண்டர் எக்ஸாமினேஷன்' என்று போட்டிருக்கிறோம்.

## 7. அறிவிப்புகள்.

### அ. ஆளுநர் இசைவு, சிவில் நீதி மன்றங்கள், சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள், சென்னை மாநகர சிவில் நிதி மன்றம் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1980) இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

சிவில் நீதி மன்றங்கள், சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்த) சட்ட முன் வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள், சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1980) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே அதன் கீழ் உள்ள நீதி மன்றங்களுக்கு இந்த அதிகாரங்களை அதிகமாக்குவதால் அந்த வழக்குகளை அனுப்ப வேண்டுமென்ற முறையில் இந்த சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, 'ஜஸ்டிஸ் டிலேட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைட்' என்று சொல்வார்கள். தாமதமாகக் கொடுக்கப்படுகிற தீர்ப்பாக இருந்தால், அது கிடைக்காமல் போகக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டால் தீர்ப்பு பெறுகிற உரிமை போய் விடும் என்ற நிலைக்கேற்ப இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இதில் நான் ஒன்றைக் கவனிக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே ஏராளமான வழக்குகள், ஆர்.டி.ஒ-ஸ் ஆண்ட் இ.பி.-ஸ் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்களில் தேங்கிக் கிடக்கின்றன. இந்தச் சட்ட முன் வடிவைக் கொண்டு வருவதன் மூலம் பல வழக்குகள் உயர் நீதி மன்றத்திலிருந்து இங்கு வருவதற்கு ஏதுவாகி விடும். அந்த நிலையைப் பார்த்தால் உயர் நீதி மன்றத்திலிருந்து பல வழக்குகள் கீழ் உள்ள சிட்டி சிவில் கோர்ட்டுக்கும் அதற்குக் கீழ் உள்ள டிஸ்ட்டிரிக் முன்சீப் கோர்ட்டுக்கும் வருவதால் அங்குள்ள வெள்ளத்தைத் தடுக்க வேண்டும் என்ற காரணத்தால் அந்த வெள்ளத்தின் கதவுகளைத் திறந்து இங்கே நாம் அடைத்து விடுவோமானால் தலைவலி போய் திருகுவலி கீழே வந்து விடுவதால் அதற்குண்டான ஒரு ஏற்பாட்டை இந்தச் சட்ட முன் வடிவில் கொண்டு வரும்படி அரசு ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



சென்னை நகரத்திலே மேலும் ஒரு நீதி மன்றத்தை அதாவது வழக்குகள் அதிகரித்துள்ள தன்மையை உத்தேசித்து ஏற்படுத்த இருப்பதாக இந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இங்கே மட்டும் ஒரு நீதி மன்றத்தை உருவாக்கினால் போதாது. இதை ஒட்டுமொத்தமாக பரவலாகப் பார்த்து ஆங்காங்கே, இருக்கக் கூடிய மாவட்டத் தலைநகரம், தாலுகா தலைநகரம், இன்னும் பல இடங்களில் வழக்குகள் தேங்கி இருக்கின்ற தன்மையை ஆராய்ந்து, தேவைக்கேற்ப நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும். அதற்கான வழிவகைகளை, வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நீதி மன்றங்களை மட்டும் உருவாக்கினால் போதாது. இங்கே இருக்கின்ற பிரச்னைகளையும் கவனிக்க வேண்டும். 5,000 ரூபாய் என்றிருப்பதை 15,000 ஆக மாற்ற, அதாவது ஒரு மடங்காக இருப்பதை 3 மடங்காக அதிகாரத்தை அதிகரிக்க இருப்பதாக வந்திருக்கிறது. இது வரவேற்கக்கூடிய திட்டம். பல வழக்கறிஞர்கள் முன்சிப் கோர்ட்டிலே பிராக்டிஸ் செய்கிறார்கள். இன்னும் பல வழக்கறிஞர்கள் தாலுகா கோர்ட்டிலே பிராக்டிஸ் செய்கிறார்கள். அமைச்சர் அவர்களைக்கூட பல வழக்கறிஞர்கள் சந்தித்ததாகக் கேள்விப்பட்டேன். பல வழக்கறிஞர்கள் வழக்குகள் இல்லாத நிலையில் பாதிப்பு ஏற்படும். திண்டுக்கல்லிலே இருந்து வழக்கறிஞர்கள் வந்து அமைச்சரிடம் மனு கொடுத்துவிட்டுச் சென்றதாகக் கேள்விப்பட்டேன். ஓரளவுக்கு 5,000 என்றிருப்பதை, ஒரேயடியாக 15,000 என்று மாற்ற வேண்டுமா என்பதையும், 10,000 என்று வைத்தால் போதாதா என்பதையும் ஆராயும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முன்சீப்புகளுக்குச் சம்பளம் போதாத நிலை இருக்கிறது. இதைப் பலமுறை இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்; வழக்கறிஞராக இருக்கின்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்; வழக்கறிஞராக இல்லாத உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்; எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதையொட்டி இன்னொரு சட்டத்தை இங்கே தாக்கல் செய்ய இருப்பதாக இந்தக் குறிப்பிலேயிருந்து தெரிகிறது. மாஜிஸ்திரேட்டுகளானாலும், முன்சீப்புகளானாலும் அவர்களுக்கு ஒரே பெயரை வைப்பது குறித்து ஒரு சட்டம் தாக்கல் செய்ய இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மாஜிஸ்திரேட்டாக இருப்பவர்கள் [illegible]

[திரு. என். வி. என். சோமு] [1980 ஆகஸ்ட் 12

அழைத்தாலும் சென்று ரிமாண்டு செய்யக்கூடிய நிலை இருக்கிறது; வேறு பல பணிகளைச் செய்யக் கூடிய சூழ்நிலையும் அவர்களுக்கு இருக்கிறது. இதை இன்றையதினம் சட்ட அமைச்சராக உள்ளவர் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, அவர்களுக்குப் பெயரை மாற்றினால் மட்டும் போதாது; சம்பளமும், இன்னும் பல சலுகைகளும் அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதிபதிகளுக்குப் போதுமான வீட்டு வசதி இடையாது. பல நீதிபதிகள் வாடகை வீடுகளிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், ஒரு குற்றவாளியும், அவரை விசாரிக்கின்ற முன்சிப்பும் அல்லது நீதிபதியும், குற்றவாளி ஒரு படாடோபமான வீட்டிலும், அதற்குப் பக்கத்தில் ஒரு சாதாரண ஓட்டுக் குடித்தனத்தில் நீதிபதியும் வாழ்கின்ற நிலைமை இருப்பதை இந்த அரசு கவனத்தில்கொண்டு, சென்னை நகரத்திலே இருக்கின்ற நீதிபதிகளுக்கும், மாஜிஸ்திரேட்டுகளுக்கும் பெரும்பாலும் வெளி ஊர்களிலே வீட்டு வசதி உள்ளதுபோல், செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

இன்னும்கூட ஒரு விசித்திரமான சூழ்நிலை இருக்கிறது. குற்றவாளியும், அந்தக் குற்றவாளியை விசாரிக்கின்ற மாஜிஸ்திரேட்டும் ஒரே அரசாங்க பஸ்ஸில் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. காரணம், அவர்களுக்குப் போதுமான சம்பளம் இல்லை. ஆகவே, அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுத்தால் தான், நீதிபதிகளும், மாஜிஸ்திரேட்டுகளும் ஒரு கன்ஜீனியல் அட்மாஸ்பியரில், ஒரு மன நிறைவு ஏற்பட்டு நல்ல முறையிலே தீர்ப்பு அளிக்க முடியும். அதுவும் இந்தச் சுதந்திரத் திருநாட்டின் நீதிபதி ஸ்தானங்கள் நல்லமுறையிலே இருக்கச் வழி செய்ய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இப்போது சென்னை நகரத்திலே இந்த வீட்டு வசதி என்பது கொஞ்சங்கூட இடையாது என்பதை நான் இங்கே மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிபதிகளுக்கு விசாரணைக் கூடங்கள் இல்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் 3 ஆண்டுக் காலம் நீதிமன்றங்களிலே பணியாற்றி இருக்கிறார்கள். பெரும்பாலும் உயர்நீதி மன்றத்திலே இருந்திருக்கலாம். ஆனாலும், சிடி சிவில் கோர்ட்டு, மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளுக்கு ஒன்றிரண்டு முறைகளாவது வந்திருக்கக்கூடும். நான் பலமுறை பல வழக்குகளுக்கு அங்கே செல்கின்ற காரணத்தினால், அங்கேயிருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பார்த்திருக்கிறேன். அங்கே மாஜிஸ்திரேட்டுகள் டன்ஜன் என்று சொல்லக்கூடிய, அதாவது கோட்டை என்று சொல்லக்கூடிய அளவிலே உள்ள கூடங்களில் வழக்குகளை நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. [illegible] மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு விசாரணை [illegible] போதுமான இட வசதி இல்லாமல் இருக்கிறது.



1980 ஆகஸ்ட் 12] [திரு. என். வி. என். சோமு]

[பிற்பகல் 1–20]

அந்த நீதிமன்றத்தின் நடுவர் சரியானமுறையில் விசாரிப்பதற்குக் கூட இடம் இல்லாமல் வராண்டாவில் நீதிமன்றத்தை வைத்து, நூற்றுக்கு மேற்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள், வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களுக்கு ஆஜராக நூற்றுக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் போலீஸ் அதிகாரிகள் ஆக அனைவரும் சேர்த்து ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வராண்டாவில் குழுமியிருக்க மாஜிஸ்திரேட் வருகிறார் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாமல் இவர்கள் எல்லாம் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எல்லா நீதிமன்றங்களுக்கும் நல்ல முறையில், காற்றோட்டமான, வெளிச்சமான, போதுமான பெரிய மண்டபங்களைச் சென்னை நகரத்தில் உருவாக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டுமென்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவையும் இதனோடு தொடர்பாக வர இருக்கும் சட்ட முன்வடிவுகளையும் வரவேற்கும் நேரத்தில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைப் போக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

*<u>திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிவில் கோர்ட் சட்ட முன்வடிவுகளின் மூலம் எல்லாப் பொதுமக்களுக்கும் பலன் அடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, ஐயாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய்க்கு டிஸ்ட்ரிக்ட் முன்சிப்புகளுக்கு அதிகார வரம்பு உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக பின்தங்கிய பகுதி கிராமாந்திர தாலூகா மட்டத்தில் உள்ள மக்களுக்கு பெருத்த அளவுக்கு உதவி செய்வதாக அமைந்துள்ளது. இதனால் டிஸ்ட்ரிக்ட் முன்சிப்களுக்கு அதிகமான வேலைப் பளு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதைக் குறைக்க கூடுதலான டிஸ்ட்ரிக்ட் முன்சிபுகளை நியமனம் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

மேலும் சபார்டினேட் ஜட்ஜஸ் என்று சொல்லக் கூடிய சார் நிலை நீதிபதிகள் வேலைப் பளு குறைய வாய்ப்பு இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் செஷன்ஸ் ஜட்ஜுக்குள்ள செஷன்ஸ் அதிகாரங்களையும் சபார்டினேட் ஜட்ஜுகள் பெற்று அவர்களே நேரடியாக விசாரிக்கக்கூடிய (Jurisdiction) ஏற்பாட்டையும் இந்த சட்டத்தில் சேர்த்துக் கொண்டால் நல்ல முறையில் சபார்டினேட் ஜட்ஜஸ் அதிகாரங்களை முறையாகப் பயன்படுத்த வாய்ப்பிருக்கும். தற்போதுள்ள நடைமுறையில் டிஸ்ட்ரிக்ட் செஷன்ஸ்

ஜட்ஜ் சபார்டினேட் ஜட்ஜுக்கு கேஸ்களை மாற்றும் சூழ்நிலை இருக்கிறது. நேரடியாக சபார்டினேட் ஜட்ஜுகளுக்கு ஜூரிஸ்டிக்ஷன் கொடுத்து அவர்களுக்கு விசாரிக்கும் அதிகாரத்தை அளிக்க வேண்டும். மேலும் சபார்டினேட் ஜட்ஜுகளுக்கு (Motor Vehicles Claim Tribunal) அதிகாரங்களையும் அளித்தால் ஏழைகளுக்கு உதவியாக இருக்கும் என்று கூறி நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக சென்னை உயர்நீதி மன்றத்தில் நிறையத் தேங்கிக் கிடக்கிற வழக்குகளைக் குறைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடனும் கிராமப் பகுதிகளில் இருக்கிற நீதிமன்றங்களில் வழக்குகளுக்குச் செல்லுகிற பொதுமக்கள் அங்கேயே அதிக வசதிகளைப் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்த நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்கள் டிஸ்ட்ரிக் முன்சிபுகளின் அதிகார வரம்பை 5,000 ரூபாய் என்று லிமிட் இருந்ததை 15,000 ரூபாயாக உயர்த்தியிருப்பது அதிகம் என்று சொன்னார்கள். இதனால் பல வழக்கறிஞர்களுக்கு வேலை வாய்ப்பு குறையும் என்று சொன்னார்கள். பதினைந்தாயிரம் ரூபாயாக உயர்த்தியதின் காரணமாக முன்சிப் கோர்ட்டிலேயே சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்த ஏதுவாக இருக்கும் காரணத்தால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் சட்டமாக இது அமைந்திருக்கிறது. சிறு நகரப் பகுதியில் இருக்கும் வழக்கறிஞர்களுக்கு அதிகமான பலன் கிடைக்க ஏதுவாக இருக்கிறது. முன்சிப் கோர்ட்டுகளில் உள்ள வழக்கறிஞர்களுக்கு போதிய வருமானம் வரும். அப்பீல் ஜூரிஸ்டிக்ஷனை 30,000 ரூபாய் வரை உயர்த்தியிருக்கும் காரணத்தால் அவர்களுக்கு வேலை பாதிக்கும் நிலை இல்லை.

எனவே இந்தத் திட்டம் உண்மையிலேயே வழக்கு மன்றங்களுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்கு நல்ல பலன் அளிக்கும் என்ற காரணத்தால் நீண்ட காலத்திற்கு முன்பே இது கொண்டு வரப்பட்டிருக்க வேண்டிய ஒன்று என்றாலும், இந்தத் திட்டத்தைப் பொதுமக்களின் நலன் கருதி, வழக்கறிஞர்களின் நலன் கருதி கொண்டு வந்த தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இங்கே நடுவர் பற்றிச் சொன்னார்கள். குற்ற இயல் நடுவர்கள் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற காரணத்தாலே அவர்களை முதல் வகுப்பு நீதிபதியாக அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த 15 ஆயிரம் திட்டம் சீரிய திட்டமாக இருப்பதாலும் அது மக்களுக்குப் பயன்தரக்கூடிய திட்டமாக இருப்பதாலும் அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அதைக் கொண்டு வந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டி இதை வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னால் உள்ள இந்தச் சட்டத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சோமு அவர்கள் சொன்னதோடு நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் அதே போல் பிரின்சிபல் ஜட்ஜ் சிடி சிவில் கோர்ட் ஆகிய கோர்ட்டுகளிலே உள்ள அதிகாரங்களைப் பொறுத்தவரை சென்னையைப் பொறுத்த வரையிலும் இப்போது 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலே இருந்தால் நேரடியாக ஒரிஜினல் சூட்டை உயர்நீதி மன்றத்திலேயே பைல் செய்யக்கூடிய விதி இருக்கிறது. ஒரு இலட்சம் வரையிலும் சென்னையிலே சிடி சிவில் கோர்ட்டிற்கு உரிமை அளிக்கின்ற பெக்யூனரி ஜூரிஸ்டிக்ஷனை அதிகப்படுத்துகின்ற இந்தத் திருத்தத்தில் எங்களுடைய கட்சியின் உறுப்பினர் திரு. சோமு அவர்கள் கூறிய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

திரு. சோமு அவர்கள் சொன்னதுபோல் டிஸ்ட்ரிக்ட் முன்சிப்புக்கு இப்போது 5 ஆயிரம் என்று வரையறை இருக்கிறது. உடனடியாக ஒரேடியாக 15 ஆயிரமாக மாற்றலாமா என்பது தான். இந்த மாநிலத்திலே பல்வேறு பார் கவுன்சில்கள் இருக்கின்றன, இதை வழக்கறிஞர்கள் அபிப்ராயத்திற்கு விட்டு அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்களா அவர்கள் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா ? ஏனென்றால் அவர்கள் ஏற்றுக் கொள்கிற பட்சத்தில் நமக்கு இது எளிதாக இருக்கும். பார் கவுன்சில்களுடைய அபிப்ராயம் இந்தவிஷயத்திலே என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் உதவிகரமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே, இருக்கிற இன்னொரு குறைபாடு என்னவென்றால் சென்னையிலே இருக்கக் கூடியவர்கள் ஒரிஜினல் சூட்டுக்கு 1 இலட்சத்திற்கு மேற்பட்டதாக இருந்தாலும் 4,500 ரூபாய்க்கும் குறைவாக ஸ்டாம்ப் ஒட்டினால் போதும். ஆனால் ஒரு இலட்சம் ரூபாய்க்குத் தென் ஆற்காடு மாவட்டத்திலே [illegible]

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 12

வேலூரிலோ ஒரிஜினல் சூட்டு போட வேண்டுமென்றால் அங்கே ஒட்டக் கூடிய ஸ்டாம்பின் தொகை அதிகமாக இருக்கிறது. ஏன் இந்த வேறுபாடு இருக்க வேண்டுமென்று புரியவில்லை. சென்னையிலிருக்கிறவர்களுக்குக் கோர்ட்ஃபீஸ் குறைவாக இருக்கிறது. 25 ஆயிரம் வரையில் ஒரு ஷெட்யூல்ட் இருக்கிறது. அதற்கு மேலே ஒரு அளவு இருக்கிறது. சென்னையிலே இருக்கிறவர் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் சூட்ஃபைல் பண்ணவேண்டுமென்றால் 4,500 ரூபாய்க்கு குறைவாக ஒட்டினால் போதும், ஒரு இலட்சத்திற்கு மேலே இருந்தாலும் அந்த நிலைமைதான். ஆனால் அதே காஸ் ஆஃப் ஆக்ஷன், அதே சூட்டை 10 இலட்சம் ரூபாய்க்கு பண்ணவேண்டுமென்றால் 75 ஆயிரம் ரூபாய் கோர்ட் பீஸ் கட்டவேண்டியிருக்கிறது. அதே பத்து இலட்சம் ரூபாய்க்கும் சென்னையிலே ஒரிஜினல் சூட்டைஃபைல் செய்யவேண்டுமென்றால் மொத்தமாக ஆகக்கூடிய செலவு அதைவிடக் குறைவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருந்த சட்டம் குறித்து என்னுடைய கருத்தைக் காலையிலே சொல்லுகின்ற சமயத்தில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கு அதிகார வரம்பை உயர்த்துவதால், அதில் எங்களுடைய கருத்து 10,000 ரூபாய் மட்டும் உயர்த்தினால் போதாதா என்று கூறினேன். அது சம்பந்தமாகப் பேசுகின்ற சமயத்தில் மற்றும் இரண்டு கருத்துக்களை நான் சொல்லிக் கொண்டிருந்தேன். சென்னையிலே இருக்கக்கூடிய கோர்ட்டுகளில் ஹைகோர்ட் ரூல்சில் ஸ்டாம்ப்-கோர்ட் ஃபீஸ் சம்பந்தமாக உள்ள நிலைமையை விளக்கும் சமயத்தில் சென்னை நகரத்திற்குள்ளே இருக்கக்கூடிய சிட்டி சிவில் கோர்ட்டுகளிலே ஒரு வழக்கை—சிவில் வழக்கைத் தொடர்ந்தால் [illegible] அதே வழக்கினை அதே சம்பந்தமாக மாவட்டங்களில் இருக்கக்கூடிய நீதிமன்றங்களிலே தொடர்ந்தால் அதிக [illegible] வசூலிக்க வேண்டுமென்று நான் கேட்க [illegible]



1980 ஆகஸ்ட் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இங்கே இருக்கக்கூடிய சிட்டி சிவில் கோர்ட்டுகளில் 50,000 ரூபாய் ஜூரிஸ்டிக்ஷன் இருந்ததை ஒரு இலட்சமாக மாற்றி இப்பொழுது அமைச்சரவர்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் அப்படி ஒரு இலட்சமாக மாற்றினால் சென்னை நகரத்திலே இருக்கும் இந்தக் கோர்ட்டிலே வழக்குகளை—சிவில் வழக்குகளைப் போட வேண்டுமென்றால் ஒரு இலட்சம் ரூபாய்க்கு முதல் 10,000 ரூபாய் வரையில் 7½ சதவீதம், அதற்குமேலே இருக்கக்கூடிய 25,000 ரூபாய் வரையில் 6 சதவீதம், 25,000 ரூபாய்க்குமேல் 50,000 ரூபாய் வரையில் இருக்கக்கூடிய தொகைகளுக்கு 5 சதவீதம், 50,000 ரூபாய்க்கு மேல் 75,000 ரூபாய் வரையில் இருக்கக்கூடிய தொகைக்கு 4 சதவீதம், 75,000 ரூபாய்க்கு மேலே ஒரு இலட்சம் ரூபாய் வரை 2½ சதவீதம் என்று ஸ்லாப் சிஸ்டம் இருக்கிறது. அப்படி ஸ்லாப் சிஸ்டம் இருப்பதால், மொத்தமாக ஒரு இலட்சம் ரூபாய்க்கு இங்கே ஒரு சிவில் சூட் ஃபைல் செய்ய வேண்டுமென்றால் 4,525 ரூபாய் கட்டணம் போதும். இதே ஒரு இலட்சம் ரூபாய்க்கு சேலத்திலோ அல்லது கடலூரிலோ அல்லது தஞ்சையிலோ அல்லது திருச்சியிலோ இருக்கக்கூடிய வழக்கு மன்றங்களில் அங்கே இருக்கக் கூடிய குடிமகன் இந்த வழக்கினைத் தொடுக்க வேண்டுமென்றால் 7½ சதவீதம், அட்வலரம் 7,500 ரூபாய்க்கு ஸ்டாம்ப்—கோர்ட் ஃபீஸ் ஒட்ட வேண்டுமென்ற விதி எதற்காக இருக்க வேண்டுமென்றுதான் நான் கேட்க விரும்புகின்றேன்.

நீதி எல்லோருக்கும் பொதுவானதுதான் : சென்னையிலே ஒரு நீதி ; திருச்சியிலே ஒரு நீதி என்று அல்ல. அது பிராமிசரி நோட்டாக இருந்தாலும், வேறு கிளெய்ம்ஸாக—சிவில் சூட்டாக இருந்தாலும், எந்த [illegible] இருந்தாலும் ஒரே நீதி [illegible] நடுவணர் செலுத்த [illegible]. சென்னையிலே 4,525 ரூபாய்க்கு கோர்ட் ஃபீஸ் ஒட்டினால் போதும் ; ஆனால் திருச்சியிலே 7,500 ரூபாய்க்கு ஒட்ட வேண்டுமென்று சொல்வது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே ஏற்கனவே அவர்கள் எந்த முறையை வைத்தார்களோ அதே முறைதான் தொடர்ந்து இருக்க வழி காணும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குறைபாடும் தீர்க்கப்பட வேண்டும்.

வெளி மாவட்டங்களிலே இருப்பதையும் [illegible] யும் கோர்ட் ஃபீஸ் [illegible] வில்லை. சென்னையிலே இருப்பதைப்போல [illegible] களிலேயும், [illegible] ஏற்படுத்த [illegible] முறையிலேதான் [illegible] பார்கள் என்று நான் சொல்லி [illegible] (குறுக்கீடு) [illegible] வரும்[illegible]

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 12

இருக்கிற மாதிரி, மற்ற இடங்களிலிருக்கிற டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு வைத்து விடுங்கள். அல்லது மற்ற இடங்களில் இருப்பது மாதிரி, சென்னைக்கு வைத்து விடுங்கள். கோர்ட் ஃபீஸில், சென்னையிலே இந்தக் குறைபாடு இருக்கிற காரணத்தால், இருக்கக் கூடிய குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன். பெரிய பணக்காரர்கள், அவர்களுடைய காண்ட்ராக்டையே சென்னையிலே வைத்துக் கொண்டு, அக்ரிமெண்ட் செய்யக் கூடிய சமயத்திலே, காண்ட்ராக்ட் போடக்கூடிய சமயத்திலே, இரண்டு பேரும் சேர்ந்துக்கொண்டு for the purpose of civil actions மெட்ராஸ்தான் அதற்குரிய இடம் என்று அவர்கள் அக்ரிமெண்டிலே அல்லது காண்ட்ராக்டிலே போட்டுவிடுவதன் காரணமாக, கடன் வாங்கியவர்களோ, அல்லது எதிர் தரப்பாக இருக்கக்கூடியவர்கள் கன்னியாகுமரியிலே இருந்தாலுங்கூட சென்னையிலே வழக்கு போடக் கூடிய காரணத்தால் இங்கு வழக்கு மன்றத்திற்கு செல்கின்றனர், சென்னையில் குறைவாக கோர்ட் ஃபீஸ் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, ஒரு இலட்சத்திற்கு ரூபாய் 4,5[illegible] கோர்ட் ஃபீஸ் அதற்கு மேல், இலட்சத்திற்கு மேல், எத்தனை இலட்சம் போனாலும், ரூபாய் 1,000 தான் சென்னையிலே. மற்ற மாவட்டங்களில் ஏன் அதே தொகை இரு[illegible]? அதே ஒரு வழக்கு சேலத்திலே இருக்கிறதென்றால், ஒவ்வொரு இலட்சத்திற்கும். ரூ. 7,500 கோர்ட் ஃபீஸ் ஒட்ட வேண்டும். ஆனால், அதே சிவில் சூட் [illegible] சென்னையிலே [illegible] செய்யப்படும் என்றால், ஒவ்வொரு கூடுதல் இலட்சத்திற்கும் ரூ. 1,000 ஒட்டினால் போதும் என்கிற முறை இருக்கிறது. ஆகவே, இதிலே குறைபாடுகள் இருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாரும். ஒன்று சென்னையிலே இருப்பதைப் போல், மற்ற இடங்களிலே வையுங்கள், அல்லது, மற்ற இடங்களிலே இருப்பதைப் போல், சென்னையிலே வையுங்கள்.

ஒரு இலட்சம் வரை சென்னையிலே சிவில் சூட் ஃபைல் செய்ய முடியும். ஆனால், மாவட்டங்களில், 10 இலட்சத்திற்கு, [illegible] ஃபைல் பண்ண முடியும். அவர்கள் [illegible] வரவேண்டியதில்லை. அங்கேயே, இருக்கிற [illegible] டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலேயே ஃபைல் செய்யலாம். ரூ. 1 இலட்சம் வரை சிட்டி சிவில் கோர்ட் [illegible] வழக்கு நடத்தலாம். [illegible] உயர்நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று [illegible]. [illegible] அந்த ரூ. 1 இலட்சம் [illegible] ஃபைல் செய்தால் [illegible] ரூ. 4,[illegible] போதும் [illegible] அதை மாற்றியமைக்க வேண்டும். [illegible]



1980 ஆகஸ்ட் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

சட்டத்தை மாறுதல் செய்கிற சமயத்திலே, அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யவேண்டும். இந்தக் குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

அதேபோல், அப்பெல்லேட் வழக்குகள் எல்லாம் உயர்நீதி மன்றத்திலே தேங்கிக் கிடக்கின்றன. இப்பொழுது இருக்கிற வழக்குகளுக்கு மாரட்டோரியம் வைத்துவிட்டு, மாரட்டோரியத்தை எடுக்கின்ற வரையிலே, அப்பீல் செய்யக் கூடாது என்ற முறையை வைத்தாலுங்கூட, உயர்நீதிமன்றத்திலேயிருக்கிற செக்கண்ட் அப்பீல்கள், அப்பீல்கள் முடிய குறைந்தபட்சம் இன்னும் 10, 12 ஆண்டுகள் ஆகும். காலந்தாழ்த்த, தாழ்த்த நீதி கிடைக்காமல் போகும். Justice delay is justice denied என்று சொல்ல விரும்புகிறேன். ஆகையினாலே நீதி துரிதமாகக் கிடைக்க வேண்டும். அதற்கேற்ற முறையிலே, இந்த அப்பெல்லேட் ஜூரிஸ்டிக்ஷனை அதிகப்படுத்துவதை நாங்கள் வரவேற்கிறோம். அப்படி வரவேற்பதன் காரணமாக, உயர்நீதிமன்றத்திற்கு அதிகமான அப்பீல்கள் செல்லாமல், மாவட்ட நீதிபதிகளுக்கு, அதேபோல், சிட்டி சிவில் கோர்ட்டிலே இருக்கிற நீதிபதிகளுக்கு, அதே அளவை வைத்து, அவர்கள் அப்பீல்களை விசாரிக்கலாம் என்று சொல்வது சாலப் பொருத்தமானது. அது வேகமாகப் பொது மக்களுக்கு நீதி கொடுக்க உதவும் என்று சொல்லவிரும்புகிறேன். ஆகையினால், அவைகளை நான் வரவேற்கிறேன்.

சிட்டி சிவில் கோர்ட் பற்றி, ஏற்கனவே இங்கே சொன்னேன். ரூ. 50,000-க்கு மேலிருந்த வழக்குகளை உயர்நீதிமன்றத்திலே இதுவரையிலே நடத்தினார்கள். ஆனால், எத்தனை சூட்கள் ஃபைலாகி இருக்கின்றன., எத்தனை சூட்கள் பெண்டிங்காக இருக்கின்றன என்று பார்த்தால், இந்த மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே இருக்கக்கூடிய ஒரிஜினல் சைடில் டிலே ஆவதைப்போல் வேறு எங்கும் பார்க்க முடியாது. மாவட்டத்திலே, டிஸ்ட்டிரிக் கோர்ட்டிலே நாம் ஃபைல் செய்தோம் என்றால், நம்பர் ஆவதற்கே அங்கே ஒரு வருஷம் ஆகிறது.

[மாலை 4-10.]

ஏறக்குறைய 6 மாதங்கள் 8 மாதங்கள் இழுத்தடித்து இழுத்தடித்து அதை ஓ.பி. யாக ஒரிஜினல் சூட்டாக, நம்பர் கொடுப்பதற்கே 6 மாதம், 8 மாதம் என்று ஆகக்கூடிய நிலை சென்னையில் இருக்கிறது. வெளிமாவட்டங்களில் இப்போர்ப்பட்ட குறைபாடுகள் இல்லை. இவைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்று விரும்புகிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 12

இன்னும் கூட நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எதற்காக ஹைகோர்ட்டுக்கு ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்? திருச்சியிலே இருக்கக்கூடிய டிஜ்டிரிக்ட் ஜட்ஜ்க்கு அன்லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. ஆனால் அவரே சிட்டி சிவில் கோர்ட்டுக்கு வந்தால் 50,000 என்று லிமிடேஷன் இருக்கிறது. அதை இப்போது ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறீர்கள். எனவே திருச்சியிலே இருக்கும்போது அவருக்கு அன்லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன், அவரே சென்னைக்கு மாறி வந்தால் லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன். எதற்காக ஹைகோர்ட்டுக்கு ஒரிஜனல் ஜூரிஸ்டிக்ஷன் இருக்க வேண்டும் இதிலே யூனிபார்ம் புரொசிஜர் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கோர்ட்டு பீஸ் சென்னையிலே குறைவாக இருக்கக் கூடிய காரணத்தினாலே ஃபைல் ஆகக்கூடிய வழக்குகள், பெரிய வழக்குகள், மிகப்பெரிய வழக்குகள், பெரிய கான்ட்ராக்டர்கள் 50 லட்சம், ஒரு கோடி ரூபாய் புரளக்கூடிய கான்ட்ராக்டர்கள் வழக்குகள் எல்லாம் இந்தக் கோர்ட்டு ஃபீசுக்காகவே, அதைக் குறைப்பதற்காகவே சென்னையில் ரிஜிஸ்டார்டு ஆஃபீஸ் வைத்திருக்கின்றார்கள். அதனால் சென்னை வளருகிறது. சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்கள் தேய்கின்றன. அங்கே இருக்கக் கூடிய வழக்கறிஞர்கள் வளர முடியாமல் போகின்றது. எனவே மற்ற மாவட்டங்களில் இருப்பதைப்போல சிட்டி சிவில் கோர்ட்டுக்கும் அன்லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்க வேண்டும். ஹைகோர்ட்டுக்கு ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : ஹைகோர்ட்டுக்கு ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் நாம் கொடுக்கவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஹைகோர்ட்டுக்கு ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் நாம் கொடுக்க வில்லை. என்று சொல்லுகிறார்கள். ஆனால் இதுவரையில் ஹைகோர்ட் ஒரிஜனல் ஜூரிஸ்டிக்ஷனுக்கு 50,000 இருந்தால் சூட் பைல் பண்ணுகிறார்கள். அவரிடத்திலே இருக்கின்ற உரிமையை எடுத்துவிட்டு இப்போது சிட்டி சிவில் கோர்ட்டுக்கு எந்த முறையில் மாற்றுகிறோம்? ஆகவே அந்த முறையிலேயே சிட்டி சிவில் கோர்ட்டுக்கு எல்லாவிதமான அன்லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷனையும் கொடுக்க வேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. எனவே அரசு இந்தச் சட்டத்தை அமலாக்குகின்ற நேரத்தில், நான் கூறிய இந்த யோசனைகளையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

THIRU G. VISWANATHAN : Mr. Deputy Speaker, Sir, I rise to support the Bill that is being introduced by the Hon. Law Minister



1980 ஆகஸ்ட் 12] [Thiru G. Viswanathan]

The Bill seeks to increase the pecuniary jurisdiction of the Munsif Court from Rs. 5,000 to Rs. 15,000 and that of the District Court from Rs. 10,000 to 30,000. Apart from this, this Bill is seeking to transfer all the pending cases in the District Court to District Munsif Court. And thus, I think, it is going to be a boon to the Advocates practising in District Munsif Courts. I welcome this step, because it is going to enhance the pecuniary jurisdiction of the District Munsif Courts where hundreds of Advocates are starving practically. Sir, we can see our young Advocates in District Munsif Courts and District Courts and in various mofussil courts depend upon his father, if an advocate is not married and upon his father-in-law, if an advocate is married. This is the position of our young advocates in the mofussil bar. I think our Minister is going to take credit for giving them more cases in the Munsif Courts. Of course, the parties of the High Court are going to be the beneficiaries because the burden of the High Court is going to be lessened. I want to ask the Hon. Minister how is he going to reconcile the position. At present itself it is almost taken for granted, the cases filed in District Munsif Courts take 3 to 5 years, or even more than 5 years for disposal. If all these cases are going to be transferred from District Courts to Munsifs Courts, still long years are going to be increased more. I think, Sir, it is high time that our State must set an example for quick disposal of cases. Our young and energetic Hon. Minister will take it as a challenge and see to it that there was no delay in giving justice. It is an age-old problem. It is not the creation of this Ministry. This has been there for a long time and I think we will have to take a serious note of this and see that justice is given to the people as quickly as possible and at least the cases filed in District Munsif Courts should be disposed of within one year and if possible, even before that. For this the Government will be required to spend more money and they have to set up a number of courts and increase number of District Munsifs. Sir, already there is demand from various Centres and from all parts of Tamil Nadu, I remember particularly from our District there is a demand for creating a sub-court in Arni and for a Munsif-Court in Polur. I think it is necessary for the people to have a court. The litigants have to travel long distances. One of the Members pointed out that one has to travel 40 miles to reach a sub-court. I thnik it is not necessary in the modern world. I would like to ask the Hon. Minister whether he is going to concentrate on the facilities of the Courts, parties and Advocates also. I have bitter experience in our District Courts in Vellore where all the courts are jammed in one Court. There is n space for expansion and there was a proposal to shift the court outside ; but the Government have shelved it. There is no place even for Advocates even to sit in some of the Courts. The fact and plight of the clients is left in the hands of the God and they have to stand throughout the day under the shades of trees. There is no place for Members of the Bar Association and

[1980 ஆகஸ்ட் 12

practically all the members of the Bar have to stand under the trees. That is the situation prevailing in the State. I think the Government will have to spend large sums of money to build courts, to provide furniture and also to give facilities to the Members of the Bar also.

Our friend Thiru Krishnamurthy opposed the increase of pecuniary jurisdiction for the District Munsif Court and at the same time, it was peculiar for him to ask for the increase of jurisdiction for the District. I think it is for him to reconcile himself. I do not know how he is going to do it. Mr. Krishnamurthy argued that the original jurisdiction of the High Court to be abolished. Well, if it is possible, I think we can agree with him. But in the present circumstances and under the Constitution it is for the Central Government—Delhi Government—to decide whether the original jurisdiction of the High Court should be abolished. I think, Sir, if all the parties, in the House agree, we can make proposal, that the jurisdiction of the High Court should be taken over by the District Courts and Municipal Civil Courts in the Madras City.

With these words, I welcome this Bill.

Thank you.

[மாலை 4-20]

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் மாமன்றத்தின் முன்பு இன்று வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, வழக்கறிஞர்களுடைய நெடுநாள் கோரிக்கை டிஸ்டிரிக்ட் முன்சீப் நீதிமன்றத்தின் ரொக்க அதிகார வரம்பை 5,000 ரூபாயிலிருந்து உயர்த்த வேண்டும் என்பது. அந்த நெடு நாள் கோரிக்கையை இன்றைய புரட்சித் தலைவர் அரசு நிறைவேற்றுகிறது என்று நினைக்கும்போது நானும் என்னைப் போன்ற இளம் வழக்கறிஞர்களும் பெருமையடைகிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே குற்றவியல் நீதிமன்றங்களும், உரிமையியல் நீதிமன்றங்களும் ஒன்று சேர்ந்து செயல்பட்டுவரும் ஒரு செயல்முறையை சில இடங்களிலும், சில இடங்களில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் மட்டும் தனியாகச் செயல்படும் சூழ்நிலையையும் பார்க்கிறோம். குறிப்பாக டிஸ்டிரிக்ட் முன்சீப் நீதிமன்றங்களில் 1973-ஆம் ஆண்டிலேயிருந்து வழக்கறிஞர்களுக்கு ஒரு இருண்ட காலம் இருந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



1980 ஆகஸ்ட் 12] [திரு. சி. கோபால்]

பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டம் ஒரு இருட்டறை ; அதில் வழக்கறிஞர்களின் வாதம் ஒரு ஒளிவிளக்கு என்று சொன்னார்கள். அந்த வகையிலே பார்த்தால் பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதைப்போல 1973-ம் ஆண்டில் 'டெட் ரிலீஃப் ஆக்ட்' வந்ததும் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் இருந்த வழக்கறிஞர்களுக்கு வேலை குறைந்து விட்டது. அதைத் தொடர்ந்து மேலும் பல சட்டங்கள் 15/76, 16/76, 71/76 போன்ற சட்டங்கள் வந்தன. அவை சமுதாயம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டவை. அது ஒரு சமூக நீதிதான். ஆனால் இப்படிப் பட்ட மசோதாக்களை வரவேற்கிறோம் என்று சொன்னாலும் கூட அப்படிப்பட்ட நீதிமன்றங்களில், குறிப்பாக கிராமங்களில் இருக்கிற மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் அந்த ரொக்க அதிகார வரம்பு குறைவாக இருந்ததன் காரணமாக அங்கே தாக்கல் செய்கிற வழக்குகள் குறைந்து இருந்த காரணத்தால் இத்தனை ஆண்டு காலமாக ஏமாந்து வாழ வழியில்லாமல் இருந்த வழக்கறிஞர்களுக்கு இந்த நேரத்தில் ஒரு ஒளி விளக்காக இப்படிப் பட்ட ஒரு சட்ட முன்வடிவை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை நான் மட்டுமல்ல ; இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைவரும் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். 5,000 ரூபாய் என்றிருந்த ரொக்க அதிகார வரம்பை மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு 15,000 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிற இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களிலும், முன்சீப் நீதிமன்றங்களிலும் ஸ்மால் காஸ் ஒரிஜனல் சூட் என்று இருக்கிறது. ஸ்மால் காஸ் சூட் தாக்கல் செய்வதாக இருந்தால் 5,000 ரூபாய்க்குள்ளே வரம்பு இருந்தால்தான் தாக்கல் செய்ய முடியும். இப்போது அந்த அதிகார வரம்பு 5,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தப்படுவதால் இந்த நேரத்தில் அங்கே ஒரிஜினல் சைடில் இருக்கிற வழக்குகளுக்கு அதிக நேரம் பிடிக்கும்; வேலைப் பளு அதிகமாகும். ஆகையால் இப்படிப்பட்ட வழக்கு மன்றங்களில் அசல் வழக்குகள் பைசல் ஆகாமல் தேங்கிக் கிடக்கும் சூழ்நிலை உருவாகும். ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் வரவேற்கும் அதே நேரத்தில், வழக்கறிஞர்கள் எல்லாம் வரவேற்றாலும் இப்படிப் பட்ட சில திருத்தங்களை, அதாவது வழக்குகள் தேக்கம்பெறச் செய்யாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் தான், அதற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்தால்தான் சிறப்பாக அமையும் என்ற ஒன்றைமட்டும் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

விதே நேரத்தில், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக உயர்த்தும் மசோதாவையும் வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[1980 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இதுகாறும் 1873ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள் சட்டத்தின் கீழ் வழக்குத் தொகை அல்லது சொத்து மதிப்பு 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கின்ற வழக்குகளை மட்டுமே டிஸ்ட்ரிக்ட் வழக்கு முன்சீப் மன்றங்களிலேயும் அதற்கு மேல் இருக்கின்ற அப்பீல்வழக்குகளை அதாவது மேல் முறையீடு வழக்குகளைப் பொறுத்த வரையிலும் மாவட்ட நீதிமன்றங்களில் அதாவது டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் ரூபாய் 10 ஆயிரம் வரை எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்த நிலையினை மாற்றி குறிப்பாக மஃபசில் பகுதிகளில் இருக்கின்ற வட்ட அளவிலே இருக்கின்ற நீதிமன்றங்களினுடைய பண அதிகார வரம்பினை நாம் அதிகப்படுத்தும்போது கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழைகள் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் 15 ஆயிரம் வரை இருக்கின்ற வழக்குக்ளில் மாவட்ட தலைமை நீதிமன்றங்களுக்குச் செல்கின்ற நிலையிலிருந்து காக்கப்படுகிறார்கள். இதனால் வீண் பணச்செலவிலிருந்து அவர்கள் மீட்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. வட்ட அளவில், வழக்குகளுக்காக வாதிடுகின்ற வக்கீல் ஃபீஸ், மாவட்ட மன்றங்களில் வழக்காடுகின்ற வக்கீல் ஃபீஸ், உயர்நீதிமன்றங்களில் வழக்காடுகின்ற வக்கீல் ஃபீஸ் ஆகியவற்றை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ரூபாய் 15 ஆயிரம் வரைக்கும் டிஸ்ட்ரிக்ட் பெக்யூனரி ஜூரிஸ்டிக்ஷன் தருகின்ற வகையில் இந்தச் சட்டம் கொண்டுவருவது ஏழைகளுக்கு அதிகமாகப் பலன் கிட்டும்.

அடுத்து இங்கிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல வட்ட அளவிலே இருக்கின்ற வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நிலை சற்று உயர்வதற்கும் உதவிகரமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் பேசும்போதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போதும் 10 ஆயிரம் ரூபாயாக இதை வைத்தால் போதாதா என்று சொன்னார்கள். இதை நாம் 15 ஆயிரம் ரூபாயாக ஆக்குவதற்குக் காரணமே

The main factor that was taken into consideration is the erosion of monetary value.

பணத்தினுடைய மதிப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகின்ற சூழ்நிலையில் பன்னெடும் ஆண்டுகளுக்கு முன்னால் 5 ஆயிரம் ரூபாய்க்கு இருந்த மதிப்பு இப்போது 15 ஆயிரம் ரூபாய்க்குக் கூட இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே எரோஷன் ஆஃப் மனி வேல்யூவை கணக்கில் எடுத்துக்கொண்டு தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம்.

Erosion of money in other words is called inflationary trend.





அது மட்டுமல்ல, டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகளில் இருக்கின்ற வழக்குகளைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கு வழக்குகள் குறைந்துவிடுமோ என்ற எண்ணத்தின் அடிப்படையிலே ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்தப் பிரச்சினை தற்போது எழாது. காரணம் இதற்கு முன்னால் 5 ஆயிரம் ரூபாய் என்று பண வரம்பு மாவட்ட முன்சீஃப் கோர்ட் நீதிபதிகளுக்கு இருந்தபோது அப்பல்லேட் பெக்யூனரி ஜூரிஸ்டிக்ஷன் 10 ஆயிரம் ரூபாயாக மட்டுமே இருந்தது. அதற்கு மேல் உள்ள அப்பீல் எல்லாம் உயர்நீதிமன்றத்திற்கு வரவேண்டிய நிலையில் இருந்தது. தற்போது அந்த நிலை மாறி 5 ஆயிரம் ரூபாயாக இருக்கின்ற பெக்யூனரி ஜூரிஸ்டிக்ஷன் ஆஃப் டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கோர்ட் இன்றைக்கு 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகின்றபோது மாவட்ட அளவிலே இருக்கின்ற நீதிமன்றங்களிலும் சப் கோர்ட்டுகளிலும் சப் ஜட்ஜஸ் இருக்கின்ற கோர்ட்டுகளிலும் 30 ஆயிரம் ரூபாயாக அப்பல்லேட் ஜூரிஸ்டிக்ஷன் வருகின்ற காரணத்தால் வழக்கறிஞர்களுக்கு ஒன்றும் வேலை குறைந்து விடாது. அதைவிட இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்கள் பேசும்போது சொன்னார்.

அதாவது உயர்நீதிமன்றத்திலிருந்து சில அதிகாரங்களைக் கீழ் நோக்கி எடுத்துச் சென்று இறுதியிலே டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கோர்ட்டுகளிலே Interlocutory applications and execution petitions எல்லாம் அளவு கடந்து இருக்கின்ற சூழ்நிலையில் காலதாமதத்தை இன்னும் அதிகமாக்காதா என்பது பற்றிக்கூடச் சொன்னார். நமது நோக்கம் எல்லாம் அப்பல்லேட் நீதிமன்றங்களைப் பொறுத்தவரைக்கும் Mostly they are deciding on qustion of law, but in original side the question of fact அதிகமாக எடுத்துக்கொள்கின்ற காரணத்தால் நாம் கீழ் மட்டத்திலே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு அதிகாரத்தை சற்று அதிகமாக்கி பரவலாக்குகின்றபோது பலன் ஏழை மக்களுக்கு, கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களுக்கு அதிகமாகக் கிட்டும் என்ற நோக்கத்தோடுதான் செய்யப்படுகின்றது. ஆனால் நீதிமன்றங்களிலே காலதாமதம் ஏற்பட்ட போதிலும் அவற்றைப் போக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையிலே தான் இந்த அணுகு முறையை மேற்கொண்டிருக்கிறோம்.

[மாலை 4-30]

சிட்டி சிவில் கோர்ட்டைப் பொறுத்தவரைக்கும், தற்போது 50,000 ரூபாயாக இருந்த பெக்கியூனியரி ஜூரிஸ்டிக்ஷன் 1 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுகாறும் உயர்நீதி

மன்றத்திலே 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரிஜினல் ஜுரிஸ்டிக்ஷன் ஆக இருந்தது, தற்போது 1 லட்சம் ரூபாய்க்கு மேல் ஒரிஜினல் ஜுரிஸ்டிக்ஷனாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். உயர்நீதி மன்றத்திற்கு ஒரிஜினல் சைட் ஜுரிஸ்டிக்ஷன் தேவையா என்று கேட்டார்கள். அது இப்போது ஏற்பட்டது அல்ல. பன்னெடுங்காலமாக கிட்டத்தட்ட ஸ்மால் காஸ் கோர்ட்டுக்கு 2,000 ரூபாயாக இருந்த காலத்திலே அதன் ஒரிஜினல் ஜுரிஸ்டிக்ஷனாக இருந்தபோது, உயர்நீதிமன்றத்திற்கு 1892-லே 2,500 ரூபாய்க்கு மேலாக இருந்தது. சென்னையைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதி மன்றத்திலே 2,500 ரூபாய்க்கு மேலாக இருந்தது.

1892-லே சிட்டி சிவில் கோர்ட்டுக்கு என்று சட்டம் வந்தபோது ஸ்மால் காஸ் கோர்ட்டுக்கு 2,500-க்கு மேல் என்று இருந்தபோது சிட்டி சிவில் கோர்ட்டுக்கும் 2,500 ஆக இருந்தது. 1935-லே அது 10,000 ஆக உயர்த்தப்பட்டது. 1955-லே 50,000 ஆக உயர்த்தப்பட்டது. 1955-லிருந்து அந்த 50,000 என்ற அளவே சிட்டி சிவில் கோர்ட்டுக்கு இருந்து வருகிறது. உயர்நீதிமன்றத்திற்கு அதற்கு மேல் உள்ள ஜுரிஸ்டிக்ஷன் வந்தபோது, படிப்படியாக சிட்டி சிவில் கோர்ட்டுக்கு பெக்கியூனியரி ஜுரிஸ்டிக்ஷன் கொண்டு வரப்பட்டது. அரசு அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க ஆலோசனை செய்து வருகிறது.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். கோர்ட் பீஸ் சம்பந்தமாக........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹைகோர்ட்டிலே இருக்கிற வழக்குகளை விசாரிப்பதற்கே ஜட்ஜுகள் போதவில்லை என்ற நிலைமையிலே தொடர்ந்து உயர்நீதி மன்றத்திலே நிரப்பப்பட்ட வேண்டிய இடங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் உயர்நீதி மன்றத்தில் இருக்கக்கூடிய ஜட்ஜுகளைக் கலைத்து, அதற்குப் பதிலாக மாவட்டங்களிலே இருப்பதுபோல், அங்கே இருக்கிறசிட்டி சிவில் கோர்ட்டுகளைக் கொண்டே, ஹைகோர்ட் ஜட்ஜுகளின் மொத்த வேலைகளை எடுத்துச் செய்து, அதை அபாலிஷ் செய்யும் வகையில் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அணுகு முறையும், அரசாங்கத்தின் அணுகு முறையும் ஒன்றாகத்தான் இருக்கிறது. 1892-ஆம் ஆண்டிலேயிருந்து



இருந்து வருகிற பிரச்சினையில் நாங்கள் அதை 1 லட்சம் ரூபாய்க்கு மேல் என்று உயர்த்துகிற நடவடிக்கையை முதலில் எடுத்து இருக்கிறோம். அறவே நீக்குவது என்பதிலே சில பிரச்சினைகள் இருக்கும். ஒரிஜினல் சைட் ஜுரிஸ்டிக்ஷனைப் பொறுத்தவரைக்கும், அதுவும் சென்னை நகரைப் பொறுத்தவரைக்கும் This is metropoliton town சில லீகல் இஷ்யூஸ் வருகிற காரணத்தால் ஹைகோர்ட்டில் ஒரிஜினல் சைட் ஜுரிஸ்டிக்ஷன் இருக்குமேயானால், அங்கே வருகிற தீர்ப்புகள் மாவட்ட அளவிலே நடக்கிற தீர்ப்புகளுக்கு முன் உதாரணமாகக் கூட அமையும் என்ற காரணத்தால்தான் அறவே அதை நீக்குவது உகந்ததாகாது என்று கருதுகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். கோர்ட் ஃபீஸ் பற்றி. கோர்ட் ஃபீஸைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதி மன்றத்திலே வழக்குகளைத் தாக்கல் செய்கிறபோது, 1 லட்சம் ரூபாய்க்கு மேல் எவ்வளவு பணமாக இருந்தபோதிலும் 1 சதவீதம்தான் கோர்ட்ஃபீஸ் என்று இருக்கிறபோது சிட்டி சிவில் கோர்ட்டுகளில் மொத்தத்தில் வழக்குகளை தாக்கல் செய்கிறபோது, அதனுடைய அளவிற்கு 7½ சதவீதமாக இருப்பதை சுட்டிக் காட்டினார்கள். இந்த குறைபாடும் களைய வேண்டிய ஒன்றுதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

காரணம் உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் அதற்காக தனியாக ஒரு விதி முறை இருக்கிறது. Rule 1 (a) of the High Court Rules 1956-லே வகுக்கப்பட்ட அந்தச் சட்டத்திற்கு 1958-லே அமெண்ட்மெண்ட் கொண்டு வந்தார்கள். இந்த அளவுக்குக் குறைந்த அளவு கோர்ட்ஃபீஸ் இருப்பது சரியல்ல என்று அரசு அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலே பெண்டிங்காக இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டின் முடிவு வந்தவுடன் இது பற்றிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு, குறிப்பாக உயர்நீதி மன்றத்தில் இருந்து சிட்டி சிவில் கோர்ட்டுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கிறபோது உயர்நீதி மன்றத்தில் வேலைப்பளு குறைவது போலவே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கு அதிக பெக்யூனரி ஜுரிஸ்டிக்ஷன், அதிகாரம் கொடுக்கிறபோது அங்கே இருக்கிற ஏழைகளுக்கு நன்மை கிடைக்கிறது. De-centralisation of powers we are in fact effecting here. இது மக்களுக்குப் பொதுவாக நன்மை பயக்கும் ஒரு சட்ட முன்வடிவாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள், இதை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

[1980 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1980) நிறைவேற்றப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஆ. சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகை முறைகள்) சட்ட முன் வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—
" 1980-ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு)களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1980 ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குப்பு சாமி.

---

* 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டு 6-ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நாங்கள் வேண்டுமானால் போய் விடுகிறோம், நீங்களே நடத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யார் வேண்டு மானாலும் பில்லில் பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் அவர்களது உரிமையில் குறுக்கிடவில்லை. சட்ட முன்வடிவு நிறைவேற்ற வேண்டு மென்று கேட்பவர் ஆளும் கட்சியைச் சார்ந்த அமைச்சர். முதலில் பிரதான எதிர்க்கட்சியில் இருப்பவரைக் கூப்பிட்டு யாரும் இல்லை என்று சொன்னால் அப்போது ஆளும் கட்சியில் இருப்பவரைக் கூப்பிடலாம். திரு. சோமு பேசுவதாக உங்க ளிடம் சொல்லிவிட்டோம். ஆகவே, முறையைத் தாண்டக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சரியான மரபுதான். யார் கைதூக்குகிறார்களோ அவரை அழைக்கலாம், பேசுவதற்கு, முதலில் திரு. குப்புசாமி பேசுவதில் தவறு ஒன்று மில்லை.

திரு. ரா. உமாநாத் : யாருக்குத்தான் என்ன உரிமை இருக் கிறது ? இந்தச் சபையில் உரிமை கொண்டாடுகிறார்கள், காலையில் பார்த்தோமே.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இருக்கிற உரிமைகளை திரு. உமாநாத் இடம் கொடுக்க நாங்கள் தயாராயில்லை. நாங்கள் தான் பிரதான எதிர்க்கட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திராவிட முன் னேற்றக் கழகம்தான் பிரதான எதிர்க்கட்சி, இல்லையென்று சொல்லவில்லை.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, வழக்கமாக இந்த அவையில் பின்பற்றுகிற மரபைத் தாங்கள் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுக் கட்சியைச் சேர்ந்த திரு. உமாநாத் அவர்கள் சொல்லும்போது ஏதோ பிரமாதமாக உரிமை கொண்டாடுகிறார்கள் என்பது போல் சொல்லிவிட்டார் கள். பிரதான எதிர்க்கட்சி என்றால் அதற்குச் சில கடமைகளும் உண்டு, சில உரிமைகளும் உண்டு. இது நீண்ட கால பரம்பரைப் பழக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்சினை முடிந்து போய் விட்டது.

[1980 ஆகஸ்ட் 12

மாலை 4 40

திரு. என். வி. என். சோமு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு முன்சீப்புகளையும், மாஜிஸ்திரேட்டுகளையும் இணைத்து, முன்சீப்—கம்—மாஜிஸ்டிரேட் என்று இணைப்பதற்கு வழிவகை செய்து, நம்முடைய உயர் நீதி மன்றமும், பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் சேர்ந்து சொல்லியிருக்கிற பரிந்துரையை ஏற்று அதன்படி இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே எனக்கிருக்கின்ற அச்சம் எல்லாம், இப்போதே முன்சீப் கோர்ட்டுகளிலேயும் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளிலேயும் ஏற்கனவே நான் காலையிலே சொன்னபடி நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கி இருக்கின்றன. பெயரை இணைத்துக் கூப்பிடுகின்ற காரணத்தினாலேயே கிரிமினல் வழக்குகளை முன்சீப்புகளும், மற்றசிவில் வழக்குகளை மாஜிஸ்டிரேட்டுகளும் விசாரிக்கக் கூடிய ஒரு குழப்பமான சூழ் நிலை உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் முதலிலேயே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், இந்த சட்ட முன்வடிவிலே பெயரை இணைப்பதை மட்டும்தான் குறிப்பிட்டு இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு அதிகாரம் அதாவது 'பவர்ஸ் அண்டு பங்ஷன்ஸ்' தெளிவாக குறிப்பிடாத காரணத்தினால் நான் அவைகளை எல்லாம் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சற்று முன்பு நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, கீழ்மட்ட நீதி மன்றங்களை அதிகப்படுத்தும்போது எல்லாப் பிரச்சினைகளும் குறைக்கப்படும் என்று பேசினார்கள், நான் கேட்க விரும்புவது கீழ்மட்ட நீதி மன்றங்களை அதிகமாக்கும்போது நான் காலையிலேயே குறிப்பிட்டுள்ளதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு அல்லது அவருக்கு நேரம் கிடைக்கும் போது தமிழகத்திலுள்ள எல்லா நீதி மன்றங்களையும், வழக்கு மன்றங்களையும் அவர் சுற்றிப் பார்த்து வருவாரேயானால், முதன் முதலில் நம்முடைய உயர் நீதி மன்றத்தை எடுத்துக் கொண்டால், அந்த உயர் நீதி மன்றக் கட்டிடம் கட்டப்பட்டு ஏறத்தாழ 100 வருஷங்களுக்கு மேலாகிறது. அங்கே 1,000 வழக்கறிஞர்கள், 500 வழக்கறிஞர்கள் பிராக்டிஸ் செய்வதற்குப் போதுமான கட்டிடம் இன்றைய தினம் இல்லை. அங்கே 23 நீதிபதிகள் இன்றைய தினம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே சில நீதிபதிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், 18-வது, 19-வது கோர்ட்டுகள் என்று சொல்லக்கூடிய சில நீதி மன்றங்கள் எல்லாம் முன்னாலே குற்றவாளிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்களே, அந்த லாக்கர் அறைகளிலேதான் இன்றைக்கு நீதிபதிகள் உட்கார்ந்து கொண்டு, வழக்குகளை விசாரித்துக் கொண்டிருப்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள் ; உணரவும் போகிறார்கள். ஆகவே, இப்படிப்





பட்ட சூழ்நிலையிலே நாம் நீதி மன்றக் கட்டிடங்களை, வழக்கு மன்றக் கட்டிடங்களை பல இடங்களில் புதிதாக உருவாக்கும்போது, நல்ல முறையிலே அவைகளை செய்து தரவேண்டுமென்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. நீங்கள் நீதிபதிகளுடைய வசதிகளை உயர்த்த வேண்டுமென்று சொல்லும்போது, இன்று பிற்பகல் என்னிடம் வழக்கறிஞர் நண்பர்கள் கேட்டார்கள். வழக்கறிஞர்களாகிய எங்களுக்கு ஒன்றும் இல்லையா என்று கேட்டார்கள். அவர்கள் வேறு எந்தச் சலுகையையும் எதிர்பார்க்கவில்லை. நாம் சட்ட மன்றத்திலே உட்கார்ந்துக் கொண்டு இந்தச் சட்டத்தைப் பற்றி அலசிக் கொண்டிருக்கிறோம். இங்கே போதுமான காற்று வசதியும், வெளிச்சமும் இருக்கிறது. ஆனால், உயர் நீதி மன்றத்திற்குச் சென்று பார்த்தால் அங்கே இரண்டே இரண்டு பேன்கள் (மின்சார விசிறிகள்) தான் சுற்றிக் கொண்டிருக்கும். ஒன்று நீதிபதியின் தலைக்கு மேலே சுற்றிக் கொண்டிருக்கும்; மற்றொன்று அங்குள்ள பெஞ்ச் கிளார்க் தலையின் மேலே சுற்றிக் கொண்டிருக்கும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சலுகையைத் தான் அவர்கள் கேட்கிறார்கள். அவரே இந்த கறுப்புக் கோட்டையும், கறுப்பு கவுனையும் போட்டுக் கொண்டு, எவ்வளவு கஷ்டங்களை, புழுக்கத்தை அனுபவித்திருப்பார்கள் என்பது அவருக்கே தெரியும். ஆகவே இவைகளை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் போக்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றை நான் காலையிலேயே குறிப்பிட்டேன். சட்ட முன்வடிவில் நம்முடைய தமிழக மாஜிஸ்திரேட்டுகளுக்கு தேவையான அந்தஸ்து என்றைக்கு வருகின்றதோ, கிரிமினல் குற்றங்களிலே இத்தகைய மேஜிஸ்திரேட்டுகளுக்கு இருக்கக்கூடிய அந்தஸ்து எவ்வளவு தூரம் உயருகிறதோ, அவர்கள் அந்தஸ்து உயர உயரத் தான், மாஜிஸ்திரேட்டுகளாக இருக்கக்கூடியவர்களுக்கு கவுரவம் ஏற்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏதோ அவர்களை தெய்வீகப் பிறவிகளாகவும் மேலே அழைத்து உட்கார வைப்பதாகவும் கருதக்கூடாது. சமுதாயத்தில் நீதிபதிகள் நிலை சற்று மேல் மட்டத்தில் இருக்கவேண்டும். சாதாரண சிவில் சூட்களை விசாரிக்கக் கூடிய நீதிபதிகளை விட கிரிமினல் குற்றங்களை விசாரிக்கக்கூடிய நீதிபதிகள் சமூகத்தில் சற்று மேல் தட்டில் இருந்தால்தான் குற்றவாளிகளுக்கு மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பார்க்கும்போது உண்மையிலேயே ஒரு பயம் ஏற்படும். இந்த நிலைமை வெளி மாவட்டங்களில் ஓரளவு இருக்கிறது. அங்கே மாஜிஸ்ட்ரேட் வருகிறபோது கூடவே காவலர் வருகிறார்கள். ஓரளவுக்கு மக்கள் தொகை குறைவாக இருக்கும் காரணத்தால் அந்த நிலைமை இருக்கிறது. ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரை நான் முன் சட்ட முன்வடிவில் பேசும்போது கூறியது போல் ஒரே பஸ்ஸில் மாஜிஸ்ட்ரேட்டும்

[திரு. என். வி. என். சோமு] [1980 ஆகஸ்ட் 12

செல்லுகிறார், குற்றவாளியும் போகிறார். கோர்ட்டிலே குற்றவாளியைக் கொண்டு வந்து நிறுத்துகிறபோது மாஜிஸ்ட்ரேட்டைப் பார்க்கிற குற்றவாளி '' இவர்தானா மாஜிஸ்ட்ரேட், நம்மோடு பஸ்ஸில் வந்தவர்தானே'' என்று ஏளனப் பார்வை பார்ப்பது மட்டுமல்ல, பயமும் போய்விடுகிறது. அதற்காக ஒவ்வொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கும் கார் கொடுக்க வேண்டும், ஜீப் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஓர் குறிப்பிட்ட இடத்தில் அரசாங்கம் ஏற்பாடு செய்து ஒரு காரை அல்லது வேனை நிறுத்தி வைத்து அங்கிருந்து அவர்களை ஏற்றிக்கொண்டு வந்து நீதிமன்றங்களில் விட்டு விடலாம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் விசாரணைக் கூடங்கள் விசாரணைக் கூடங்களாக இல்லை. குறிப்பிட்ட வழக்கில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள், இருபதுக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் எழும்பூரில் இருக்கும் 14-வது பெருநகர் நீதிமன்றத்தில் வந்து நிற்கிறார்கள்—ஆயிரக் கணக்கான பொது மக்கள் வந்தபோதும் உள்ளே விடவில்லை; அது வேறு விஷயம்—மாஜிஸ்ட்ரேட்டுக்கு அறை இல்லாத காரணத்தால் ஒரு சிறு வராண்டாவில் 10-க்கு 3 என்ற அளவு கூட இருக்காது. அங்கே மாஜிஸ்ட்ரேட் வருகிறார் என்று காவலர் சொல்கிறார் — அந்தச் சிறிய இடத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களும், வழக்கறிஞர்களும் நிற்கக்கூட இடம் இல்லாத நிலையில் நின்று கொண்டிருக்கும்போது அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு எப்படி கவுரவம் உண்டாகும். ஆகவே, பெயரை '' டிஸ்டிரிக்ட்-முன்சிப்-கம் மாஜிஸ்ட்ரேட் '' என்று அழைப்பதால் மட்டும் எந்தவிதமான நன்மையும் வந்துவிடப் போவதில்லை. உண்மையாக அவர்களுடைய இன்னல்களை அறிந்து களைய வேண்டும். ஓரளவுக்கு பெயரையாவது இப்படி மாற்ற முன் வந்திருப்பதற்காக இந்த மசோதாவை வரவேற்கிறேன். நான் சொன்ன கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் ஏற்று—அவர்கள் எவ்வளவு நாட்கள் அமைச்சராக இருப்பார்கள் என்பது தெரியாது, அது வேறு விஷயம் — செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு அவர்கள் வழக்கறிஞராக வரும்போது நல்ல முறையில் செப்பனிடப்பட்டு இருக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

*பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்களுடன் நோட்டீஸ் வீசப்பட்டது.*

THIRU K. KUPPUSAMY : Mr. Deputy Speaker Sir, I would like to record my appreciation and support the Bill introduced by the Hon. Law Minister. Sir, the Hon. Law Minister has fulfilled the long cherished demand of the Second Class Magistrates of Tamil Nadu as well as the



1980 ஆகஸ்ட் 12] [Thiru K. Kuppusamy]

litigant public. Now mostly the Bill relates to three types of Judicial Officers (1) Magistrates having jurisdiction to try second-class offences and who are being called Second Class Magistrates, (2) Magistrates who have got jurisdiction to try First Class Criminal offences and who are being called Sub-Divisional Magistrates and (3) Magistrates who are now trying Civil Cases even though they are also being called First Class Magistrates.

[மாலை 4-50]

Now I request the Law Minister that while framing Rules to the Act care should be taken to define the powers and jurisdiction of the Second Class Magistrates now elevated to First Class and the Sub Divisional Judicial Magistrates now trying First Class offences. It is really boon as pointed out by the Hon. Member Thiru. Viswanathan, to the mofussil public as well as the lawyers who have to travel a long distance to go to the Sub-Divisional Magistrate and Divisional Magistrate Courts in connecton with the First Class offences. For example, if the Second Class Magistrate at Palani is conferred with the powers of First Class and he is to be made First Class Magistrate and if he is trying First Class offences also then the litigant public as well as the lawyers need not go to the Sub-Divisional Magistrate's Court at Dindigul which is far away from Palani, which is more or less 36 miles away from Palani. So, it will do immense good mostly to the litigant public and also as pointed out by Thiru N.V.N. Somu, it will increase the prospects of the Second Class Magistrates who have been so far demanding their elevation to the First Class.

Now the only question before us is whether a Magistrate after having been made a First Class Magistrate will be clothed with the powers of trying Civil Cases. In deciding all these things now the Code defines the powers of the High Court to delegate the powers to certain type of persons to try certain type of offences and civil cases. If the High Court is satisfied as it is, the High Court can delegate some of the First Class Criminal offences or Second Class offences to First Class Magistrates who have not been now made as First Class from Second Class. For this type of offences being tried by a First Class Magistrate care should be taken to make them compulsory to undergo a test by the Service Commission making the Second Class Magistrates now made as First Class eligible to try the offences. Because some of the Second Class Magistrates at present will find it very difficult to try First Class offences as well as Civil cases. Because they are purely on the criminal side and theyhave no civil experience. It willnotworks it will only create hardship for the Second Class Magistrates to try first class offences. So,

[Thiru K. Kuppusamy] [1980 ஆகஸ்ட் 12

I suggest that while framing Rules the Second Class Magistrates now being made as First Class should be clothed with powers of trying the First Class offences also avoiding the litigant public to go to the Sub-Divisional Magistrate's Court as it is now existing.

Secondly, if a Magistrate is allowed to try Civil cases at least a limited period must be prescribed, 7 years standing or 7 years experience as Magistrate and it will do a Magistrate to fit in to try civil cases. In the same way if the Second Class Magistrates are given First Class powers and they are allowed to try First Class criminal offences then the cases now pending before the Sub-Divisional Magistrates will be deminished and they can be assigned civil work or according to the experience they may be designated as Additional District Munsif or Principal Divisional Magistrates, as the case may be, to try civil cases. This will enable the Sub-Divisional Magistrates Court to cope with the trying of criminal First Class offences. So, while framing Rules to this Act I request the Law Minister to incorporate all these powers and to enable these three type of judicial officials get benefited and make clear the respective jurisdiction regarding trying of offences. I am sure this bill will do immense good not only to the Magistrates and Advocates but to the litigant public in large. I welcome this Bill. Thank You, Sir.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஏற்கெனவே ஜுடிஷியல் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு என்று பல ஆண்டுகளாக — இதற்கு முன்னால் சப்-மாஜிஸ்ட்ரேட்டு என்று இருந்தார்கள். அவர்களுக்கு பல்லாண்டுக் காலமாக எந்தவிதமான புரமோஷன் —பதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த அளவிற்குச் செய்திருப்பது அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்று கருத முடியும்.

குறிப்பாக, சட்டக் கல்லூரியில் எல்லோரும் பயின்று பட்டம் பெறுகிறோம். இரண்டாண்டுப் பயிற்சி பெற்று சப்-மாஜிஸ்ட்ரேட்டாகப் போக வேண்டும். மூன்றாண்டுக் காலம் கோர்ட்டிலே எக்ஸ்பீரியன்ஸ் பெற்றால் முன்சிப்பாக ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் 17 ஆண்டு, 21 ஆண்டு என்று புரமோஷன் வாய்ப்பு இல்லாமல் இருப்பதை நிவர்த்தி செய்யும் முறையிலே இந்த மசோதா அமைந்திருப்பது வரவேற்கத் தக்கது.

மிக முக்கியமாக நான் இதிலே குறிப்பிட விரும்புவது என்ன வென்றால், தமிழைப் பொறுத்தவரையில் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்; தமிழுக்கு முக்கியத்துவம்



1980 ஆகஸ்ட் 12] [திரு. ரா. கிருஷ்ணன்]

கொடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லுகிறோம். ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கிறது? இப்பொழுது தான் ஒரு சில சட்டங்கள் ஐ.பி.சி., கிரிமினல் புரொசிஜர் கோடு போன்றவைகள் தமிழிலே வந்தாலும் கூட இன்னும் அவைகள் பாபுலராக வில்லை; மிக அதிகமாகப் பரவுகின்ற வாய்ப்பு இல்லை. நீதிமன்றத்தில் இன்றைக்கும் ஆங்கிலத்தில்தான் வாதாடுவதும்; தீர்ப்பு எழுதுவதும் இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பட்ட சூழ்நிலையில் தமிழில் தீர்ப்பு கூறக்கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே எனக்கு முன் பேசிய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். இன்றைக்குக் குறிப்பாக மொஃபசல் கோர்ட்டுகளில், அதாவது மாவட்ட நீதிமன்றங் களிலோ அல்லது தாலுக்கா மட்டங்களில் இருக்கின்ற நீதி மன்றங்களிலோ கட்டிடங்கள் போதாது என்று சொல்கிறார்கள். அது உண்மைதான். இது தொடர்ச்சியாகச் சொல்லுகின்ற வர்த்தமானத்தான் இருக்கிறது. இதற்கு முன்பும் ஆட்சியாளர் கள் இருந்தார்கள். அப்பொழுதும் இந்தக் குறைபாடு சொல் லப்பட்டு, பரிவோடு கவனிக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக் கப்பட்டது. ஆனால் அது கேட்பாரற்ற நிலையில்தான் இடக்கிறது. குறிப்பாகத் தாலுக்கா மட்டங்களில் அல்லது மாவட்ட மட்டங்களிலே நீதிமன்றங்களில் நூலகம் என்பது மிகக் குறைவாக—அதில் அக்கறை இல்லாமல் இருந்து வரு கிறது. அதற்கு ஏதாவது அலாட்மெண்ட் செய்து உதவி செய்யும் முறையில் செய்து நூலகத்தைச் செம்மைப்படுத்தும் முறையிலே திட்டம் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. வழக்கறிஞர்களே சப்ஸ்கிரிப்ஷன் போட்டு, மாதாமாதம் ஏதா வது கொடுத்து, அதன் மூலம் அந்தப் புத்தகங்களை ஜர்னல் களை வாங்க முடிகிறதே தவிர அரசாங்கத்தின் மூலம் இந்த நீதிமன்றங்களில் வாதாடுகின்ற திறமையை அதிகமாகக் கொடுக்கின்ற நிலைமைகளில் அந்தப் புத்தகங்களைப் படிப் பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குவார்ட்டர்ஸ் பற்றிச் சொல்ல வேண்டும். குறிப்பாக மாஜிஸ்ட்ரேட்டுகள் இருக்கிறார்கள் என்றால் சிலயிடங்களில் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ்—வீடு—இருக்கிறது அல்லது இல யிடங்களில் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்குப் போக்கு வரத்து வசதியும் கிடையாது. குறிப்பாக மாவட்டத் தலை நகரங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களிலாவது ஒரு வேனுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு எல்லா ஜுடிஷியல் ஆபீசர் களுக்கும் ஒரு வேன் கொடுத்தால்—கிட்டத்தட்ட [illegible] கோர்ட்டுகளும் ஒரேயிடத்தில்தான் இருக்கிறது—[illegible] கள் [illegible] வர ஒரு மாவட்டத்தில் [illegible]

அவர்களுக்குப் பெருமையாக—உதவியாக இருக்கும். நாமே பல நேரங்களில் பார்க்கிறோம். அக்யூஸ்டும், இவரும் போகும் பொழுது பஸ்ஸில் இவர் புட்போர்டில் தொங்கிக் கொண்டு போகும் நிலைமைகளை அன்றாடம் பார்க்கக்கூடிய நிலைமையிருக்கிறது.

[மாலை 5—00]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கின்ற வகையிலே மாவட்டத்திற்கு ஒரு வேன் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நீதிமன்றங்களில் இருக்கின்ற கட்டடங்களைப் பொறுத்தவரையில் மிகவும் பரிதாபகரமாக இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீதி மன்றக் கட்டடங்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவைகள். அவைகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை. அடிஷனல் முன்சீப் கோர்ட்டு, அடிஷனல் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு இவைகள் எல்லாம் புறாக் கூடுகள் போல காட்சி அளிக்கின்றன. பொதுவாக கிராமப் புறங்களில் இருந்து சாட்சி சொல்ல வருகின்றவர்கள் அந்தப் பெட்டிகளிலே ஏறினால் ஏற்கனவே பதறுவார்கள். வியர்வை வடிகின்றது. அதனால் அவர்கள் பயந்து, உண்மையைச் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள்.

சாதாரணமாக நீதிபதிகள் ஒரே இடத்தில் உட்கார்ந்து பணியாற்றுகின்றவர்கள். அவர்கள் பணியாற்றுகின்ற இடம் காற்றுவாட்டமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கவேண்டும். அவர்களுக்கு 'பைல்ஸ்' போன்ற வியாதிகள் சர்வசாதாரணமாக வருகின்றது. அவர்கள் அக்யூஸ்டை பார்க்கின்ற போதும் அல்லது வேறு யாரைப் பார்க்கும்போதும் அவர்களுக்கு எரிச்சல் அதிகமாக வருகின்றது. அவர்களுக்கு வைத்திய வசதியைத் தரவேண்டும்.

அடுத்து அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அவர்கள் இரண்டு மூன்று பட்டங்கள் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பி.ஏ., எம்.ஏ., பி.எல்., போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு தற்போது கொடுக்கின்ற சம்பளம் போதாது. நீதிபதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்கள் என்றாலும் மற்றவர்களை டிபென்ட் பண்ணவேண்டிய நிலை இருக்கிறது. உதாரணமாக திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூருக்குப் போகவேண்டும்





என்றால் யாராவது ஒரு வக்கீலிடம் ஒசிக் கார் வாங்கிக்கொண்டு செல்லுகின்ற பரிதாபகரமான நிலை இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதேனும் அரசாங்கம் திட்டம் வைத்து இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். தாலுக்காக்களிலும் அதே போன்று கட்டடங்கள் கட்டுவதற்கு திட்டம் போடவேண்டும். நல்ல கட்டடங்கள் இந்தக் கோர்ட்டுகள் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

சம்மன் சர்வ் செய்வதைப் பொறுத்தவரையில், போலீஸ்காரர்களுக்கும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. போலீஸ்காரர்கள் பலவிதமான காரணங்களைக் காட்டி, பல வாய்தாக்களை வாங்கி சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு வருவது இல்லை. அப்படியே அழைத்து வந்தாலும் அவர்களுக்கும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் உள்ள உறவின் காரணமாக மீண்டும் வாய்தா வாங்கிவிடுகிறார்கள். ஆகையால் குற்றவாளிகளுக்கு கன்டஸ்ட் செய்வது தம் வாழ்நாளில் இனிமேல் செய்யக்கூடாது என்ற முடிவுக்கு வரும் சூழ்நிலை இருக்கிறது. காரணம் 10 நாளைக்கு ஒரு முறை வாய்தா போட்டால், ஏழைகள் வழக்குகளைச் சந்திக்க 30 அல்லது 40 மைல் என்று வருகிறபோது அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இரண்டு மூன்று முறை அவர்கள் சாட்சிகளைக் கொண்டு வரவில்லையென்றால், உடனடியாக கேஸ் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி 'ஜஸ்டிஸ் டிலேயிட்' ஈஸ் ஜஸ்டிஸ் டினைட்' என்று ஆகிவிடும். ஆகவே, காலதாமதம் செய்யாத அளவிற்கு துரிதமான அளவில் கேஸ் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அரசாங்கம் செக்கண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளை பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளாக ஆக்கக்கூடிய நிலைமையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஏற்கெனவே முன்சீப்பாக இருந்தால், 20 வருஷங்கள் சர்விசில் இருக்கக்கூடியவர்களுக்கு செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளாக இருக்கக்கூடியவர்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளாக பிரமோஷன் வந்தால் எவ்வாறு செய்யப் போகிறீர்கள். ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டு இருக்கிறவர்கள் சர்விஸ் கமிஷன் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் இன்னும் சிக்கலாக இருக்கும். ஆகவே, வரக்கூடிய காலத்தில் பார் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கக்கூடியவர்கள் தான் அதற்கு வரவேண்டும் என்றும், ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டு இருப்பவர்களுக்கு அந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் நல்ல முறையில் முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

THIRU T. VENKATA REDDY: Sir, while welcoming the elevation of Second Class Magistrates as First Class Magistrates, I would like to point out that the purposes of this elevation in the Statement of Objects and Reasons are not clearly forthcoming. When you elevate a person for a higher post, the reasons for such an elevation have to be given in the Statement of Objects and Reasons. Those things are not forthcoming in the Preamble.

Another aspect is when a post is upgraded, the Government has to see whether judiciary and the litigant public will have benefits, by such an elevation. Such things are also not forthcoming in the Statement of Objects and Reasons.

Another thing, I would like to point out is when you appoint District Munsif with the Judicial Magistrates in the Criminal side, there will be—I will not say improper justice,—you cannot get proper justice, because the same person who himself should adjudicate both Civil and Criminal sides. All of us, as lawyers, we know that the judiciary on the criminal side requires a different temperament and attitude while disposing of criminal cases. So far as Civil side is concerned, it requires patience and efficient handling of law cases. If both the things are combined under the same Magistrate, sometimes we get criminal justice for the civilside and civil justic for the criminal side. This is also the experience I am told, of a senior Advocate of Andhra Pradesh where this combination, Judicial Magistrate-*cum*-District Munsif is working in that State. I am told that this system has not been working properly. So, I request the Hon. Minister for Law to state whether this change will enhance the prestige of the judiciary and the efficiency of the judiciary. I do not know whether this combination of civil side with criminal side in one man will work well.

Another aspect which I would like to submit is this. So far as Criminal side is concerned in most of the Courts, though in the Criminal Procedure Code it is not prescribed, when the accused are called, they will be bound over adjournment. That is also not necessary and that can be avoided by giving directions to the Courts that such things need not be there because in the Criminal Procedure Code or the rules thereunder, it is not provided. In most of the Courts, the practice is the Magistrate himself records that the accused is present. But there is no need again for the Bench Clerk to record that it is binding over them again. It will involve not only delay but also cause harassment for the accused. We know, as practising lawyers, that most of the accused will have to stay back even after adjournment till 5·O' clock to sign the bind over records. Such a procedure can be avoided, it will also save time and also money. We see in the normal courts, poor litigant public



mostly come on the criminal side. They come without money. This delaying of bind over system will also take away good portion of their purse. So in such a case, I request the Hon. Minister for Law atleast to give direction to the Courts that such bind over system need not be there.

(மாலை 5-10)

Another submission I would like to make is about the salary of the Judicial Magistrate and the District Munsif who are gettting very low salary when compared to the cost of living and also other officers in other Departments who enjoy very good and fat salary. These Judicial Officers get much less, but the work turned out by them is greater. Therefore, in this context I would like to request the Government to see that their remuneration is enhanced, so that they can do their work properly and more efficiently.

Though this may not be a place to ask, but yet, as the Law Minister, who has moved this Bill, is in this House, I would like to suggest certain points for consideration with regard to the Court Fees Act. The Court Fees Act has to be amended because in most of the cases which we file under section 22 of the Act, it will be on the money side and most of the people, who pay after the decree, so far as the Court-fees are concerned, are judgment debtors. We have to pay a court of Rs. 7·50 per hundred rupees for the Plaint. That amount will ultimately be put on the head of the Judgment-Debtors who are already sunk in debts. We know the Law Courts are not only the Courts of Justice but they render utility services and such utility services need not be termed as remunerative services. So, we need not think about the remunerative services that we get back from the Court. We should look to the needs and the sufferings of the people. So, I welcome this Bill and thank you, Mr. Speaker, for giving me this opportunity to speak a few words.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு சம்பந்தமாக, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். சில முக்கியமான திருத்தங்கள், ஃபர்ஸ்ட் கிளாஸ், செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களை, ஒன்றாக இணைப்பது; முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்களையும் மாஜிஸ்ட்ரேட்-கம்-முன்சிப் என்ற பொதுவான ஒன்றாக இணைப்பதற்கு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே, முக்கியமான விஷயம், இதற்கு முன்னால் நியமனம் செய்யப்பட்ட நீதிபதிகள் (மாஜிஸ்ட்ரேட்கள்) ஒரு கமிட்டியின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று நினைக்கிறேன். முன்சிப்களை நியமனம் பண்ணுவது [illegible] [illegible] 1978 முதல் [illegible] கமிஷன் மூலமாக, இந்த

முனிசிப்களுக்கான தேர்வு நடைபெறாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தப்பதவியிலே, ஃபர்ஸ்ட்கிளாஸ் செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களாக இருக்கக்கூடியவர்கள் 200 பேர்கள் வரை, 10 ஆண்டுகளாக அந்தப் பொறுப்பிலே இருந்தாலும்கூட, நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே இப்பொழுது இருந்து வருகிறார்கள். இந்த திருத்தத்தின் மூலமாக, அவர்களுடைய நிலை என்ன என்பதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதோடு மட்டும் அல்லாமல், செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களாக இருக்கக் கூடியவர்கள் முனிசீப் பதவி உயர்வு பெற்று, அவர்களும் நிரந்தரமாக்கப்படாமல், டெம்பரரியாக 10, 15 பேர்களுக்கு மேல் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களும் புதிதாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன்னால் ஆஜராக வேண்டுமா? அதன் பிறகு தான் தேர்வு பெறுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதே மாதிரியாக, இன்றைக்கு வக்கீல்கள் சங்கத்திலிருந்து, பாரிலிருந்து, மூன்றில் ஒரு பகுதியினருக்கு இடம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. ஆகவே, அந்தக் கோரிக்கை சம்பந்தமாக இந்தத் திருத்தத்தின் மூலமாக, 10 ஆண்டுகளுக்கோ, அல்லது அதற்கு மேலாகவோ, டெம்பரரியாக இருந்தாலும், அவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லவோ, அல்லது அவர்கள் முன்னாலிருந்த இடங்களுக்கு, கீழ்ப் பதவிகளுக்கு இறக்குவது, அவ்வளவு உசிதமாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது முறையாகவும் இருக்காது.

ஆகவே, இந்த திருத்தத்தின் மூலமாக இப்போது நீதிபதிகளாக இருக்கக் கூடியவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாக 50 பேர்களுக்கு மேலும், செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாக 150 பேர்களும் சுமார் 10 வருஷங்களாக டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். குறிப்பாக நம்முடைய சட்டங்களை எல்லாம் அவர்கள்தான் அமுல் நடத்துகிறார்கள்; நீதி வழங்குகிறார்கள். ஆகவே, ஒரு வருஷம் ஒரு பதவியில் இருந்தால் ஆட்டமெட்டிக்காக நிரந்தரமாக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் சரியாக இருக்கும். இந்த பதவியில் மட்டுமல்ல; எந்த பதவியாக இருந்தாலும் ஒரு வருஷம் பூர்த்தியானவுடனே நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எனக்கு முன்னால் பேசியவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். முன்சிப்போ மாஜிஸ்ட்ரேட்டோ ஒரு வழக்கை முடித்து விட்டு போகும்போது பஸ்ஸுக்கு காத்துக்கொண்டிருந்து, பஸ்ஸிலே போகிறார்கள். அந்த வழக்கிலே குற்றவாளியாக ஆஜரானவரும் இவரும் ஒன்றாகப் போகிறார்கள். அந்த குற்றவாளிக்கு இடம் கிடைத்துவிடுகிறது. [illegible]. இவர் நின்றுகொண்டே போகிறார். இந்த நிலையை மாற்ற வேண்டும். ஒரு நீதிபதி என்றால் அவருக்கு உரிய அந்தஸ்த்தை கொடுத்து, அவர் பஸ்ஸுக்கு காத்திருந்து போகும் நிலையை தவிர்த்து, அவர் நினைத்த போது போகக்கூடிய வாகன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்கிறேன். இனிமேல் வரக்கூடிய பதவிகளுக்கு வேண்டுமானால் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்யலாம். இதுவரையில் அந்த பொறுப்பில் இருந்தவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலம் வரவில்லை என்ற காரணத்தைக் [illegible] அவர்களுக்கு பதவி இழப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாக்களை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

Thiru V. KRISHNAMOORTHY: Mr. Speaker Sir, I welcome the TamilNadu References to Magistrates in Laws (Special Provisions) Bill, 1980introduced by the Hon.Law Minister Thiru Ponnaiyan.My colleague in the Party, Thiru. N.V.N. Somu has offered his views on the need to improve the working of the Judiciary and also the need for provision of sufficient accommodation in Courts in the City of Madras.

Mr. Speaker Sir, the Bill contemplates the elevation of the Second Class Magistrates into First-Class Magistrates and also the linking up of the District Munsif with the First-Class Magistrates calling it a new Cadre of District Munsif-*cum*-Judicial Magistrates. We are really happy to welcome this because by adopting this measure, the Second Class Magistrates who have been finding it very difficult, will get automatic promotion into First-Class Magistrates. By merging the District Munsifs with Judicial First-Class Magistrates and calling it a new Cadre, they will be called on to dispense with criminal justice as well civil justice.

Sir, hitherto, we have been trying to have some District Munsif's Courts in our part, especially in Panruti wherefrom Thiru S. Ramachandran comes, in Ulundurpet and some other areas. We invited so many High Court Judges and pleased them with all our prayers, but so far the District Munsif's Court has not come to our town especially Panruti and other places. But atleast by adopting this law we hope there will be First Class Magistrates with District Munsif's powers so

[Thiru V. Krishnamoorthy] [1980 ஆகஸ்ட் 12

that the Civil clients need not go unnecessarily to Cuddalore and other places. The clients within a particular limit will have the advantage to have both the Civil and Criminal Courts situated within a reasonable reach in the area.

(மாலை 5-20)

While welcoming this I would like to know how are you going to fill up, how are you going to elevate these Second Class Magistrates into First Class Magistrates. I understand there are about 321 Second Class Magistrates at present. I also understand that there are about 208 Magistrates who are not properly qualified. I do not know what makes them unqualified for a First Class Magistrates- post ? When an Advocate who has practised for just 5 years is qualified to get himself directly recruited as District Judge, a Magistrate who has dispensed justice in a Court for more than 3 or 4 years and who had better experience need not be put to the difficulty of facing the Public Service Commission and get himself selected by the Public Service Commission. As pointed out by our learned friend Alagarsamy, I would like to impress upon the Minister that all these people in the Second Class Cadre should automatically be elevated to the Firest Class Cadre. If some of the Magistrates are not having enough experience let them go for training. Let some High Court Judge give them training or (intrerruption) let them undergo a refresher course.

As stated by me already Sir, my suggestion is that all the 321 Second Class Magistrates should automatically be elevated to First Class Cadre and proper training or refresher courses may be given to them. There need not be these 208 persons, some of them are from various Departments, some from High Court and some others from the Secretariat. But they have opted themselves to serve in judiciary. So they should not be deprived of this provision.

So also Sir, I understand that the Bar want that they should be given preference in the appointment, about 11 per cent of the vacancy has to go to the Bar and 9 per cent to the department to cover up the deficiency in the matter of recruitment from the Bar to the Judiciary, as far as these Magistrates are concerned. I do agree and I do not want to deprive the rights of the Bars or Advocates to get these jobs. But I would like to suggest to the Hon. Minister one thing. I hope there are some more vacancies—about 30 to 40 vacancies over and above these 328.

I request the Hon. Minister to fill all the remaining vacancies from the Bar till they exhaust their quota. Till they exhaust their quota there need not be fresh recruitment from the departments or from the High



1980 ஆகஸ்ட் 12] [Thiru V. Krishnamoorthy]

Courts. So by giving these suggestions the persons who are already working should not get themselves dissatisf .d. At the same time sir, I would like to bring to the notice of the Hon. Minister that independence of the judiciary should be safeguarded. I feel little bit embarrassed to say that judiciary's independence is little by little eroded in Ta nil Nadu. We should not permit this, Sir. We should stop it. The people should have confidence with the Judges, the criminals sh ul have confidence with the judicial officials,—hat is the last resort for the citizen; so erosion o: the lack of confidence by the, from the clients to the judiciary should be set right and also the emoluments of the judicial officials and also other perquisites should be enhanced. I need not emphasise the difference between the cost of living and their salaries.

Unless the Judges feel themselves that they are amply paid,—I am talking both for the High Court Judges and the District Judges and the other judicial officers—until their wants are met from Government there will be necessity for them to get them from other sources. It will not be fair for the judiciary in our State. So, with these observations I request the Hon. Minister to consider these—to get all the Second Class Magistrates elevated to First Class and to give the judiciary powers civil powers also, so that some of the places where people are fighting to get District Munsif's Court also can have the facility of getting Civil Courts within their area.

With these observations I support this Bill.

MR. SPEAKER : Hon.'ble Law Minister.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தைக் கலந்து ஆலோசித்து, தமிழ்நாடு அரசின் பணித் தேர்வு ஆணைக்குழுவின் ஒருங்கிணைந்த இசைவுடன் இந்தச் சட்டமுன்வடிவினை நாம் தற்போது கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது இந்தப் பதவி உயர்வுகள் பதவி மாற்றங்கள் எல்லாம் எந்த விதத்தில் முறைபடுத்தப்படுகின்றன என்பது பற்றி தெளிவாக ''ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸ்'' இல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். குறிப்பாக உறுப்பினர் வெங்கிடரெட்டி அவர்கள் அதைச் சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டத்தின் நோக்கமே குறிப்பாக தற்போது இருக்கிற சூழலில் The litigants can go to the same cou: t f r both Fi st and S cond class offerc s. அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது. ஆனால் தற்போது பர்ஸ்ட் கிளாஸ் நீதி மன்றங்கள் எல்லாம் ஒரு புறமும், செகண்ட்

கிளாஸ் நீதிமன்றங்கள் எல்லாம் வேறு பல இடங்களிலும் இருக்கிற காரணத்தால் பொது மக்களுக்கு ஏற்படுகிற இன்னல்களை தவிர்க்க இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் உதவியாக இருக்க வேண்டும் என்பதுதான்.

அது மட்டும் அல்லாமல் வழக்குகளை நடாத்துகிற வழக்கறிஞர்களுக்கும் வழக்குகளோடு தொடர்புக் கொண்டிருக்கிற அல்லது அதைக் கண்காணிக்கிற காவல் துறையினருக்கும் கூட, இப்படி பர்ஸ்ட் கிளாஸ் அபென்சஸ், செகண்ட் கிளாஸ் அபென்ஸஸ் வெவ்வேறு பகுதிகளில் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் கூட கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் காலதாமதம் ஆகாமல் பணியாற்ற அவர்களுக்கு இது உதவியாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், மது விலக்கு வழக்குகளில் கால தாமதம் ஏற்படுவது எண்ணற்ற இடர்பாடுகளை ஏற்படுத்துகிறது என்கிற குறைபாடுகள் இருக்கின்றன. இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம்— மது விலக்கு குற்றங்கள் எல்லாம் பர்ஸ்ட் கிளாஸ் அபென்ஸஸாக இருக்கிற காரணத்தால், இந்த ஒருங்கிணைப்பு முறை அவர்களுக்கு உதவியாக இருந்து அந்தக் குறைபாட்டை நீக்க வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டியது போல செகண்ட் கிளாஸ்மேஜிஸ்டிரேட்டைப் பொருத்தவரைக்கும் பன்னெடு ஆண்டுகளாக அவர்கள் பதவி உயர்வு இல்லாமல், இருக்கிற நிலையிலேயே இருக்கிறார்கள். அப்படி அதிலே ஸ்டேக்னேஷன் இருக்கிற காரணத்தால் இயற்கையாக ஏற்படுகிற சோர்வுதான் தற்போது வழக்குகளிலே— தீர்ப்புகளிலே காலதாமதம் ஆவதற்குக் காரணமாக இருந்து விடுமோ என்கிற அச்சத்தின் காரணமாகத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கூட இந்த ஒருங்கிணைப்பு உதவியாக இருக்கும்.

இதிலே தற்போது சப்-மாஜிஸ்டிரேட்டாக இருப்பவர்கள், அத்தோடு அடிஷனல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாக இருப்பவர்கள், அத்தோடு, சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாக இருக்கிறவர்கள் எல்லாம் டிஸ்டிரிக்ட் முன்சீப்—கம்-ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட்ஸ் என்று அழைக்கப்படுவார்கள். சப்-மாஜிஸ்டிரேட் போய்விடும். அடிஷனல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் என்கிற நிலையும் போய் விடும்.

He will be designated as District Munsiff-cum-Sub-Divisional Magistrate.





தற்போது சப்-மாஜிஸ்டிரேட் அல்லது அடிஷனல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட், சப்டிவிஷனல் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுகள் நடக்கிற இடங்களில் கிரிமினல் வழக்குகள் மட்டும் தான் நடைபெறுகின்றன. ஆனால் ஒருங்கிணைப்பு திட்டத்திற்குப் பிறகு, அவர்கள் சிவில் வழக்குகளையும், கிரிமினல் வழக்குகளையும் நடத்துவார்கள். பர்ஸ்ட் கிளாஸ் அபென்ஸஸ்களும், செகண்ட் கிளாஸ் அபென்ஸஸ்களும் அல்லது எதுவாக இருந்தாலும், இரண்டுமே அந்த நீதி மன்றங்களில் நடத்தப்படும். நான் முன்னர் சொன்ன முறைகளில் அதிக வாய்ப்பாக இருக்கும்.

(மாலை 5–30)

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வருகின்றபோது, பதவியிலே ஏற்கனவே இருக்கின்ற பலருக்கு வாய்ப்பு கிடைக்காமல், பணியை நிரந்தரமாக்குவது சர்வீஸ் கமிஷன் மூலம் செய்யப்படும்போது, அவர்களுக்கு எல்லாம் பதவி உயர்விற்கு உட்படாதவர்களாகப் போவார்களா என்பதைப் பற்றியெல்லாம் கேட்டார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப்போல், இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வருகின்றபோது, நீதி மன்றங்களிலே இத்தகைய பணிக்கான இடங்கள் இன்னும் பல இடங்களில் வேகன்சிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 120 வேகன்சிகள் இருக்கின்றன. ஆனால், அதற்கெல்லாம், Provisions will be made in rules to be made under Art. 309 of Constitution. ஏற்கனவே இதைப்பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்ந்து வருகிறோம். யாருக்கும் பாதிப்பு இல்லாத அளவுக்கு, அதே நேரத்தில் திறமைசாலிகள் இந்த ஒருங்கிணைப்பு திட்டத்தின் மூலம் வரவும் மக்கள் நலம் பெற வேண்டும் என்ற அடிப்படையிலும் திட்டங்கள் வகுக்கப்படும்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, அதிலும் குறிப்பாக திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, தமிழிலே தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள் இது இந்தச் சட்ட முன்வடிவிற்கு நேரடியான தொடர்பு இல்லாமல் இருந்தாலும், நான் இதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன். காரணம், தமிழிலே தீர்ப்பு அளிக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு அக்கறையோடு செயல்பட்டு வருகிறது. என்னுடைய சட்ட மசோதாவில் இதைப்பற்றி வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். தற்போது கிரிமினல் வழக்குகளில தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், சிவில் வழக்குகளிலே சரியான சொற்களை இன்னும் கொண்டுவராத காரணத்தால், அவைகளையும் விரைவிலே செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சிவில் நீதி மன்றங்களிலே உயர்நீதி மன்றத்திற்குக் கீழே உள்ள சிவில் நீதி மன்றங்களிலே இத்தகைய தமிழில் தீர்ப்பு வழங்குகின்ற நடைமுறையைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[திரு. சி. பொன்னையன்] [1980 ஆகஸ்ட் 12

கட்டிடங்களைப் பற்றிப் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும், இன்னும்பலரும் போதுமான கட்டிடங்கள் இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள் உயர்நீதி மன்றக் கட்டிடம் சரியான முறையிலே இல்லை என்று சொல்ல முடியாது. மற்ற பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய தமிழகத்தின் உயர்நீதி மன்றக் கட்டிடம் நல்லமுறையில் இருக்கிறது. ஆனால், மாவட்ட அளவிலேயும், அதற்கும் கீழ் நிலையிலே இருக்கின்ற இடங்களிலேயும் கட்டிடங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகள் இன்னும் பல முன்னேற்றங்கள் செய்யவேண்டிய நிலையிலே இருக்கின்றன. நீதி மன்றத்திற்குப் போதுமான கட்டிட வசதிகள் இல்லாமலும், அங்கே சுகாதார வசதிகள் இல்லாமலும், போதுமான அளவுக்கு வசதியான நூலகம் இல்லாத நிலையும், வழக்கறிஞர்கள் தங்குதவதற்கான இட வசதி இல்லாமலும், பார் அசோஷியேஷன் என்பதிலே சேர், டேபிள்கூட இல்லாத நிலையும் இருக்கின்றது. இந்தக் குறைகள் எல்லாம் களையப் பட வேண்டிய ஒன்றுதான். இதைப்பற்றிய செயற் குறிப்புகளைப் பார்க்கும்போது நிதி நிலை இல்லாத காரணத்தால், மக்களுக்கு நீதி வழங்கக்கூடிய இத்தகைய நீதி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாத நிலை ஒரு தொடர் நிலையாக இருந்து வந்துள்ளதை நான் கண்டேன். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்பதிலே நானும் உறுதியாக இருக்கிறேன். இந்த அரசும் உறுதியாக இருக்கிறது. தற்போது மாற்றுப் பரிகாரமாக, தமிழகத்திலே இருக்கின்ற கிட்டத்தட்ட கீழ் மட்டத்தில் இருக்கின்ற அனைத்து நீதி மன்றங்களிலேயும் இந்தக் குறைகளைக் களைய பல கோடி ரூபாய் செலவாகக்கூடிய நிலை இருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே ஒன்றிரண்டு ஆண்டு காலத்திலே, கிட்டத் தட்ட 30, 40 ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட குறைகளைக் களைய வேண்டுமென்றால், சற்று சிரமமான காரியமாக இருக்கின்ற காரணத்தால், தற்போது இரண்டு கட்டமாக நீதிமன்றங்களுக்கான கட்டிடங்களை அதிகமாக்குவதற்கும், வழக்கறிஞர்களுக்கு வேண்டிய லா சேம்பர்களைக் கட்டித் தருவதிலும், இன்னும் சில வசதிகளைச் செய்து, பின்னர் மற்றக் குறைகளைப் போக்குகின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிபதிகளுக்கு வாகன வசதிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அழகிரிசாமி அவர்களும், திரு. கிருஷ்ணன் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். இது நடைமுறையிலே இருந்து வருகின்ற ஒன்றுதான்; உண்மையிலேயே வேதனைப் படக்கூடிய ஒன்றுதான். நீதிபதி வழக்கு மன்றத்திலே தீர்ப்பளித்து விட்டப் பிறகு, குற்றவாளியும், நீதிபதியும் ஒரே பஸ்ஸில் இடத்திற்கு முந்திக்கொண்டு, இடம் கிடைக்காத காரணத்தினால் தொத்திக்கொண்டு போகின்ற ஒரு சூழ்நிலை நாம் களைய வேண்டிய ஒன்றுதான். இந்தப் பிரச்னையை நாம் அவசியம் களைய வேண்டும்.



1980 ஆகஸ்ட் 12] [திரு. சி. பொன்னையன்]

நீதிபதிகளைப் பொறுத்தவரை அவர் ஒரு தனித் தன்மையோடு இயங்க வேண்டுமென்ற காரணத்தால் இந்தக் குறையைப் போக்க என்ன செய்வது என்று விரைவில் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று கூறி இச்சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளை முன்சீப் கோர்ட்டுகளாக ஆக்கும்போது ப்ப்ளிக் பிராசிக்யூட்டர் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே ஒருங்கிணைப்பு நடைமுறைப்படுத்தும்போது அதுபற்றியும் ஆய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு)களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு)களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### ஆ. பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 12—8—1980 பிற்பகல் சுமார் 4-50 மணிக்கு பேரவைத் தலைவர் மாடத்தில் இருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பிய திரு. முனுசாமி என்பவர் மகன் திரு. வி. எம். குப்புசாமி என்பவரும், திரு. விஸ்வநாதன் என்பவர் மகன் திரு. தண்டபாணி என்பவரும், தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். இவர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள்.

அந்தத் துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியவர்கள் செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு உணவுத் தொழில் அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

## 9. அரசினர் தீர்மானம்.

### (அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்—

" இன்று 12—8—1980 பிற்பகல் சுமார் 4-50 மணிக்கு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-1, பெருமாள் கார்டன் முதல் சந்து, 50 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. முனுசாமி என்பவர் மகன் திரு. வி. எம். குப்புசாமி என்று சொல்லிக் கொள்ளும் நபரும், சென்னை-12, புளியந் தோப்பு, குட்டித் தம்பிரான் தெரு, 42 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. விஸ்வநாதன் என்பவர் மகன் திரு. வி. தண்டபாணி என்று சொல்லிக் கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் 3 (மூன்று) நாட்கள் வெறுங் காவல் (Simple imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

**(சில உறுப்பினர்கள் எழுந்தனர்) கூச்சல்—குழப்பம்.**



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏழு நாட்கள் போட்டு பிறகு மூன்று நாட்கள் என்று குறைக்க வேண்டாம் என்ற காரணத்தால் முதலிலேயே மூன்று நாட்கள் என்று போடப்பட்டிருக்கிறது. அவையை அவமதித்த குற்றத்திற்காக இத்தண்டனை அளிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

[மாலை 5-40]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் சபையிலே வந்திருக்கிறது. இதிலே மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்கக் கூடாது. ஓட்டெடுப்பு நடத்தித்தான் கன்விக்ஷன் கன்வென்ஷன் செய்ய வேண்டுமென்ற புரசீஜர் இல்லை. கோஷங்கள் போடப்பட்டது தவறு. அந்தக் கோஷங்களில் நியாயம் இருக்கிறதா என்பது வேறு. சட்டமன்றத்தின் கூட்டம் இன்றோடு முடிகிறது. நாளைக்குக் கூட்டம் இல்லை. நாளை மறுநாளும் கூட்டம் இல்லை. இந்த முறையிலே இதை ஒரு ப்ரீசிடென்டாக வைக்கக்கூடாது. கூட்டம் தொடர்ந்து இருந்தால் நாளைக்கும் வருவார்கள் அல்லது நாளை மறுநாளும் வருவார்கள் என்று நினைக்கலாம். அப்படியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றக் கூட்டம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல. நடைபெற்ற செயலுக்குத்தான் இந்தத் தண்டனையே தவிர சட்டமன்றக் கூட்டம் பின்னாலே இருக்கிறதா என்பதைப் பொறுத்தது அல்ல. 7 நாட்கள் தண்டனை என்று அமைச்சர் சொல்லி அதை பிறகு மூன்று நாட்களாக குறைக்க வேண்டுமென்பதில்லை. சட்டசபை 7 நாட்கள் இருந்தால் 7 நாட்கள் தண்டனை கொடுக்க வேண்டுமென்ற முறையிலே சொல்வது சரியானதல்ல. 3 நாட்கள் என்று முதலிலேயே குறைத்துத்தான் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : 15 ஆம் தேதி சுதந்திர நாள், ஆகவே அதைக் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுதந்திர நாள் என்றால் அவர் தானாகவே வருவார். மூன்று நாள் என்று குறைவாகத்தான் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அடுத்து வாக்கெடுப்பு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### இ. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1980) 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்".

1. மாண்புமிகு திரு சி. பொன்னையன்—கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர்.
2. திரு. டி. வீராசாமி, எம்.எல்.ஏ.
3. திரு. ஆற்காடு சேதுராமன், எம்.எல்.ஏ.
4. திரு. அ. சின்னதுரை, எம்.எல்.ஏ.
5. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம், எம்.எல.ஏ.
6. திரு. சி. கோபால், எம்.எல்.ஏ.
7. திரு. கே. உச்சி, எம்.எல்.ஏ.
8. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ.
9. திரு. கந்தசாமி, என்ற சென்னிமலை, எம்.எல்.ஏ.
10. திரு. டி. ராமசாமி, எம்.எல்.ஏ.
11. டாக்டர் கே. சமரசம், எம்.எல்.ஏ.
12. திரு. க. பாரமலை, எம்.எல்.ஏ.
13. திரு. சோ. அழகர்சாமி, எம்.எல்.ஏ.
14. திரு. ரா. கிருஷ்ணன், எம்.எல்.ஏ.
15. திரு. அன்பில் தர்மலிங்கம், எம்.எல்.ஏ.
16. திரு. பாபு ஜனார்த்தனன், எம்.எல்.ஏ.
17. திரு. தஞ்சாவூர் எஸ். நடராஜன், எம்.எல்.ஏ.
18. திரு. குமரி அனந்தன், எம்.எல்.ஏ.
19. திரு. கே. கல்லன், எம்.எல்.ஏ.
20. திரு. டி. வெங்கடாரெட்டி, எம்.எல்.ஏ.
21. திரு. இல. பலராமன், எம்.எல்.ஏ.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது செலக்ட் கமிட்டிக்குப் போவதால் விவாதமொன்றும் இருக்காது என்று கருதுகிறேன். இப்போது வாக்கெடுப்பு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

பேரவையின் 131 (1)-வது விதியின் கீழ் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### இ. ஆளுநர் இசைவு—பொதுப்பணிகள் பொறியியல் கழகம் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1980) இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

### ஈ. பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1980).

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1980) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தலைவரவர்களே, இப்பொழுது இங்கே அவையின் முன் ஆய்வுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக அரசின் துறையாக மாற்றப்படவிருக்கின்ற இந்தக் கழகம் நஷ்டங்களைத் தவிர்க்கவும், அதிலே இருக்கக்கூடிய

* 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பணியாளர்களுடைய பணியை முழுக்கப் பொதுப் பணித் துறைக்குப் பயன்படுத்திக் கொள்ளவுமான ஒரு நல்ல நோக்கத்தோடு இதை நாம் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, இதிலே விவாதத்திற்குக்கூட அதிகமான வாய்ப்புகளோ அல்லது சந்தர்ப்பங்களோ இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். காரணம், இந்தக் கழகத்தின் மூலமாக நாம் என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கருதினோமோ அதையே அரசினுடைய இரண்டு மற்ற துறை நிறுவனங்கள் கவனித்து வருகின்ற காரணத்தினாலே தேவையில்லாத போட்டியை வளர்ப்பதன் மூலமாக பொதுத் துறையிலேயே ஒரு பகுதி பலவீனமடைவதைத் தவிர்ப்பதற்கும், மக்களுடைய வரிப்பணம் விரயமாகாமல் அது காப்பாற்றப்படுவதற்குமான நல்ல நோக்கத்தோடும் இது வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன் வடிவை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதைப்போல இது ஒரு சாதாரண திருத்தம் தான் என்றாலுங்கூட தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் என்று சொல்வார்களே, அதைப்போல இந்த மசோதா இருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இதற்காகத் தரப்பட்டுள்ள ''ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்''—இலே சொல்லியிருக்கின்ற கருத்தைப் பார்த்தால், 'The working of the Corporation has been reviewed by the Government. It has been considered that there is no advantage..' 1975—இலே அமைக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அது எங்கெங்கு வேலை செய்தது என்று சொல்லும் பொழுது அதற்கு இரண்டு ஒர்க் ஷாப்புகள் இருக்கின்றன; சென்னையிலேயும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆளியார் நகரிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இது என்ன வேலை செய்கிறது என்றால், அணை கட்டுவதற்குத் தேவையான பொருள்களையும், கருவிகளையும் தயாரிப்பது, பி.டபிள்யூ. டி-க்குத் தேவைப்படும் பல்வேறு பொருட்களை வாங்கி வழங்கும் மையக் கொள்முதல் நிலையமாக இருந்து பணியாற்றுகிறது என்று சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட கார்ப்பரேஷன் ஏன் முதலில் உருவாக்கப்பட்டது? இந்தக் கார்ப்பரேஷனை ஆரம்பிப்பதற்கு முன்னால் தீர ஆலோசித்து இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கார்ப்பரேஷன் தேவைதானா என்பதை யோசித்திருக்க வேண்டும், அதிகாரிகளைக் கலந்து பேசியிருக்க வேண்டும்; நோட்டு எழுதியிருக்க வேண்டும். எந்த ஆட்சியாக இருந்தாலும் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் அனுமதி வழங்கி





யிருக்க வேண்டும்; அதற்குப் பிறகு கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்; அது பணிகளைத் துவக்கியிருக்க வேண்டும். இவ்வளவும் செய்திருக்க வேண்டும். ''எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு'' என்று சொல்லப்படுகிறது. அப்படி எண்ணிப் பார்க்கப்பட்டதா? அப்படிச் செய்யப்பட்டிருந்தால் இப்பொழுது நிலைமை என்ன மாறியிருக்கிறது?

'The Government have decided to take over the Tamil Nadu Public Woiks Engineering Co;poration Limited..' இதை மறுபடியும் பார்த்தீர்களா? என்ன ஆயிற்று?

இப்பொழுது அட்வான்டேஜ் இல்லை என்று சொல்கிறார்கள். சர்க்கார் தரப்பிலே யார் இதை ஆராய்ச்சி செய்தார்கள்? தனி நபர் கமிஷன் போடப்பட்டதா அல்லது தனி அதிகாரி பார்த்தாரா? அவர்கள் என்ன சொன்னார்கள்? அந்த அறிக்கையின் விவரம் என்ன? இதைப்பற்றியெல்லாம் முழு விவரம் வைக்கா விட்டாலும் அதன் சம்மரியையாவது வைத்திருந்தால் நாங்கள் தெரிந்து கொண்டிருக்க முடியும். ஆரம்ப காலத்திலே என்ன எய்ம்-மோடு ஆரம்பிக்கப்பட்டது? அதில் எது ஃபுல்ஃபில் ஆகவில்லை என்று அரசு கருதுகிறது?

இது சாதிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மறுபடியும் இதை பேரண்ட் டிபார்ட்மெண்டில் கொண்டு வந்து சேர்ப்பதால் எப்படி நிலைமைகள் உருவாகின்றன என்பதைப் பற்றிச் சற்று விளக்கமாகக் கொடுத்திருக்க வேண்டும். நாங்கள் என்ன ஜோஸ்யர்களா? 1975-லே ஆரம்பிக்கப்பட்டது; இரண்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன: அணை கட்டுவதற்குத் தேவையான பொருள்களையும், கருவிகளையும் தயாரிக்கிறது; இந்த அரசு ஆராய்ந்து பார்த்ததில் சரியாக இல்லை என்பதால் மீண்டும் பி.டபிள்யூ. டியில் சேர்த்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருப்பது எங்களுக்கு விவரம் தெரியாத நிலையிலே இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். நாங்கள் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? ஆலோசித்துப் பார்க்க வேண்டாமா? அவ்வாறு செய்து அரசுக்கு ஆலோசனை கூற வேண்டாமா? அதற்கு இந்த அறிக்கைகளை விளக்கமாகத் தர வேண்டாமா?

கன்சாலிடேட்ட ஃபண்டில் இருந்து சற்றேறக்குறைய 17 இலட்சம் ரூபாயை எடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். 17 இலட்சம் ரூபாய் செலவுக்கு இந்தக் கார்ப்பரேஷன் என்ன செய்திருக்கிறது ? அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், விரயம் ஏற்படுகிறது என்று. இதற்கு யார் பொறுப்பு? இது ஏப்படி ஏற்பட்டது என்ற விவரங்களை அங்கத்தினர்களுக்குத்

[திரு. துறைமுருகன்] [1980 ஆகஸ்ட் 12

கொடுத்த பிறகு அவர்களைப் பேசச் சொல்ல வேண்டுமே தவிர, எதுவுமே தெரியாமல், திடீரென்று நான்கு வரியில் ஒரு சம்மரியைக் கொடுத்து, இதுதான் ரீசன்ஸ் அன்ட் ஆப்ஜெக்ட்ஸ் என்று சொன்னால், நாங்கள் என்ன முற்றும் உணர்ந்த முனிர்களா அல்லது முழுதும் தெரிந்தவர்களா? * * * *

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே பில்லைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர, சபாநாயகரின் வேலையைப் பற்றிப் பேசக் கூடாது. இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. துரைமுருகன் : ஆகையால் இது போன்று இங்கு வருகின்ற பில்களைப் பொறுத்தவரையில் சபாநாயகரவர்கள் அமைச்சர் பெருமக்களுக்குச் சொல்லி, இப்படிப்பட்ட நிலை இருக்கக் கூடாது, விவரமாகவே இந்த ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் வைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும்.

[மாலை 5–50]

அடுத்து, இப்பொழுதுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சொன்னார். அவர் விளக்கமாகச் சொல்லியிருந்தால், ஏதாவது இரண்டு கருத்து சொல்லியிருந்தால், எக்ஸ்டெம்போராகச் சொல்லியிருந்தால், அதை வைத்து விவாதம் நடத்தியிருக்கலாம். ஆனால், ஒன்றுமே சொல்லாமல், ரொம்ப விரயம். ஆகவே, எடுக்கிறோம் என்று சொன்னார். விரயமாவது தடுக்கப்பட வேண்டுமென்று அரசு உண்மையிலேயே கருதினால், அது உள்ளபடியே ஜெனூவினாக இருக்குமானால், நான் அதை வரவேற்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மேல், ஒரு சில கருத்துக்கள் சொல்வதற்கு விரும்புகிறேன். இந்த பி.டபிள்யூ.சி. வாரியத்தை, அரசே எடுத்துக் கொண்டு, அரசினுடைய பொறுப்பில் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்திலே, இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்வது தவறாக இருக்காது என்று எண்ணுகிறோம்.

சாப்டர் 4-லே, 9-வது பாராவிலே, ஊழியர்களைப்பற்றி ஒரு சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன:
'....shall hold office r service under the Government with the

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1980 ஆகஸ்ட் 12] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

same remuneration and upon the same terms and conditions, with the same rights and privileges as to pension, gratuity and other matters as would have been admissible to him, if there had been no such vesting and shall continue to do so unless and until his employment under the Government is duly terminated or until his remuneration, terms and conditions of service are duly altered by the Government'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி 'ஆல்டர்ட்' என்று சொல்லும் போது அந்த எம்ப்ளாயீயினுடைய கருத்தையும் தெரிந்து கொண்டு, அவருக்குச் சாதகமாகத் தானிருக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறோம். ஒரு எம்ப்ளாயி, ஒன்று அந்த வாரியத்திலே, அதிகமான சம்பளத்தை வாங்கிக் கொண்டிருந்துவிட்டு, இங்கே வரக்கூடிய நேரத்திலே, அரசிலே, அவனுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் கம்மியாக இருந்தால், வாரியத்திலே அவன் வாங்கிய ஊதியத்தை அவனுக்குக் கொடுப்பதற்கும், அல்லது, அந்த எம்ப்ளாயீ, வாரியத்திலிருந்து இங்கே அரசுக்கு வரும்போது, அரசில் அதிக ஊதியம் இருந்தால், இந்த அதிக ஊதியத்தைக் கொடுப்பதற்கும் 'whichever is higher' என்ற முறையிலே, வழிமுறை இருக்க வேண்டுமென்று சொல்கிறோம்.

அதே போன்று, அடுத்த ஷரத்திலே,
'....an amount equivalent to three months' remuneration in the case of permanent employees and one month's remuneration in the case of other employees' என்றிருக்கிறது.
இன்றைக்கு நாட்டிலே தொழிலாளிகள் சம்பந்தமாக இருக்கிற சட்டத்திற்கு விரோதமான கருத்து இது என்றும், அரசே அப்படிப்பட்ட நிலையை எடுத்துக் கொள்வது சரியாக இருக்காது என்றும் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இன்று நாட்டிலே இருக்கக்கூடிய சட்டத்தின்படி, ஒரு வருஷத்திற்கு மேல் பணியாற்றியிருக்கக்கூடிய ஒவ்வொரு தொழிலாளிக்கும் 15 நாள் ஊதியம் காம்பன்சேஷனாகக் கிடைக்கக்கூடிய நேரத்தில், பர்மனென்ட் தொழிலாளிக்கு 3 மாதம்தான் காம்பன்சேஷன் என்று சொல்வது சரியல்ல. இருபது வருஷம் சர்வீஸ் போட்டுள்ள தொழிலாளிக்கு 3 மாதம் ஊதியம்தான் காம்பன்சேஷன் என்று சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வருஷத்திற்கு மேலே பணியாற்றிய தொழிலாளி, டெம்பரரியாக இருந்தாலும், அது அவனுடைய குற்றம் காரணமாக இருப்பது அல்ல. அந்தத் தொழிலாளிக்கும் சட்டப்படி உள்ள ரெமுனரேஷன் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்ததாக, தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், ஒரு சில ஷரத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.
'continuity of service, gratuity, pension',

என்பது அவனுக்கு இருக்க வேண்டும். வாரியத்திலேயிருந்து கவர்ன்மென்ட் சர்வீசுக்கு வருகிற நேரத்தில், அவனுடைய பழைய சர்வீஸ் சேரவில்லையோ என்ற சந்தேகம் இருக்கக் கூடிய முறையிலே ஒரு ஷரத்து இருக்கிறது. வாரியத்தில் இருந்த அவனுடைய சர்வீஸ், புரமோஷன், கிராச்சுவிட்டி, போன்ற பர்ப்பசுக்கெல்லாம், சேர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால் அவனுக்கு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். இங்கு என்ன எழுதப்பட்டிருக்கிறதென்றால்,

'Notwithstanding anything contained in the Industrial Disputes Act, 1947' என்று சொல்லி, 'shall not entitled such officer or other employee to any compensation under this Act.....

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நாட்டிலே இருக்கக்கூடிய சட்டத்திற்கு விரோதமான முடிவு என்று சொல்லிக் கொள்கிறேன். அதில், தகுந்த முறையிலே, மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக,

'The monies which stand transferred, under sub-section (1) to the Government shall be dealt with by the Government in such manner as may be prescribed.'

இதை ஒருதலைபட்சமாக கவர்ண்மென்ட்டு முடிவு செய்வது சரியல்ல. சம்பந்தப்பட்டத் தொழிலாளர்களைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து முடிவெடுக்கவேண்டும். ஏன் என்றால் சமீபத்திலே போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு ஏற்பட்ட அவல நிலை இந்த ஊழியர்களுக்கும் ஏற்படும் அது ஏற்படக்கூடாது. 1972 ஆம் ஆண்டிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போக்குவரத்துத் துறை ஊழியர்களைப்போல் என்று சொல்லுங்கள், பிரச்சினைக்குள்ளே போகவேண்டாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : I am only quoting an example அரசு ஊழியராக இருந்த காலத்திலே அவனுக்கு இருந்து வந்த சலுகைகள், அவனுடைய சர்வீஸைப் பொறுத்த வரையில் இன்று உத்திரவாதம் இல்லாத நிலை இருக்கிறது. Terminal benefit கொடுக்கவில்லை. 55 வயது. 58 வயது ஆனவர்கள் இன்றைக்கு வேலையில் இருந்து வெளியே போனால் அவர்களுக்கு கிராச்சுவிட்டி இல்லை, பிராவிடன்ட் ஃபண்டு இல்லை என்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இதிலும் ஏற்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,





அடுத்து, ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை அரசுத் துறைக்குக் கொண்டு வருகிற நேரத்தில் ஏற்கனவே இருந்த மானுபாக்சரிங் பிராசஸ்—அந்த ஏற்பாடுகள் நீட்டிக்கப்படவேண்டும். அதை அபாலிஷ் பண்ணும் முறை இருக்கக்கூடாது. அதை கான்ட்ராக்ட் முறைக்கு விடக்கூடாது என்று பிரத்தியேகமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பொது மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு, எஃபிசியன்டான முறையில் நேரடியாக டிப்பார்ட்மென்டில் நடத்துவதற்கு தகுந்த முறையை இந்த விஷயத்திலே உருவாக்க வேண்டும்.

அதேபோன்று இங்கே வரக்கூடிய சர்வீசைப் பொறுத்த வரையில் இன்டக்ரேஷன் ஏற்படுத்த வேண்டும். பல துறைகளில் உள்ள ஊழியர்கள் கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர்—கொச்சி ஸ்டேட்டிலே இருந்து பி. டபிள்யு. டி சர்வீசில் இருந்து வந்தவர்கள், 1978-க்கு முன்னால் வந்தவர்களுக்கு சர்வீஸ் இன்டக்ரேஷன் ஏற்படவில்லை என்ற காரணத்தினால், அவர்கள் வேலையை விட்டுச் செல்லக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு கிராச்சுவிட்டி இல்லை, பென்ஷன் இல்லை ரிட்டையர்மென்ட் பெனிஃபிட் இல்லை என்ற நிலை இருக்கின்றது. அந்தவிதமான நிலை இந்தத் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடாது அவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு வேண்டும். சர்வீசில் இருக்கின்றவர்களுக்கு என்ன உரிமைகள் உண்டோ அதை இவர்களுக்கும் தர வேண்டும் . இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் இந்தச் சட்ட முன்வடிவின் மீது பொதுவான சில கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று நான் கூறுவதற்கு முன்பாக அவர்களுடைய கருத்துக்களுக்குச் சுருக்கமாகப் பதில் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அரசுத் துறைக்கு இது மாற்றப்படுகிறது, இதை எண்ணிச் செய்திருக்கலாம்.

'' எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு '' என்றெல்லாம் சொன்னார்கள்

அதை 1975-லே எப்படி எண்ணினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் பிறகு இப்போது ஆய்வு செய்ததற்குப்

பிறகுதான் அது சரியாகச் செயல்படவில்லை என்பதற்கு அடிப்படைக் காரணமே ஒரு குறிப்பிட்ட சில வகையான பணிகளை அது மேற்கொள்ளுகிறபோது, அதோடு துறை சம்பந்தப்பட்ட எதிர்பார்ப்புகள் நிறைவு செய்யப்படுகின்றன. ஆனால் அதற்கு அப்பாற்பட்டு பொது நிறுவனங்கள் தனியாகச் செயல்படுகின்ற நிறுவனங்களோடு கூட, வெளியே ஜாப் ஓர்க் என்று செய்யக்கூடிய வகையில் இந்த நிறுவனங்கள் இயங்கி இருக்குமேயானால் இலாபகரமாக நடந்திருக்கக்கூடும். ஆனால் பொதுப் பணித் துறைக்குத் தேவையான முக்கியமான சில பணிகளை இந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

(மாலை 6—00)

உதாரணமாக, அந்தக் கழகம் அணைக்கட்டுகளுக்குத் தேவைப்படும், மதகுக் கதவுகள், பாரந்தூக்கிகள், அணை மேற்பாலங்கள், வெள்ளக்கால் கதவுகள் முதலிய இயந்திரச் சாதனங்களையும், கம்ப்ரஸர்கள், கலவை இயந்திரங்கள், விசையேற்றங்கள் முதலியவை போன்ற கட்டுமான இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பணியையும் கவனிக்கிறது. மேலும், பொதுப்பணிகள் துறைக்குத் தேவைப்படும் பல்வேறு பொருட்களைத் தயாரித்துக் கொண்டு வந்து இருக்கிறது. அதேபோன்று, டான்சி, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் போன்ற நிறுவனங்களில் இருந்தும் வேலைகளை வாங்கிச் செய்து கொண்டு இருந்து இருக்கிறது. அவைகளும் அரசாங்கத்தின் துறைகளாகத் தான் இருந்து வருகின்றன. எனவேதான், 3 கழகங்கள் ஒரே மாதிரியான பணிகளைச் செய்வதற்கு இருக்கவேண்டாம் என்ற அடிப்படையில் தான், இரண்டு மட்டும் தனிக் கழகங்களாகச் செயல்படட்டும், இது மட்டும் பொதுப் பணித்துறையோடு இணைந்து, அந்தத் துறைக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கும் வகையில் இருக்கட்டும் என்ற அடிப்படையில் இதை அந்தத் துறையோடு சேர்ப்பதற்கான இந்தச் சட்டமுன் வடிவைக் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தப் பணிகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களின் வேலை வாய்ப்பு பற்றி அதிகமாகப் பேசினார்கள். அவர்களுக்குச் சட்டப்படி சேர வேண்டிய அத்தனையும் கொடுக்க வேண்டும் என்று பேசினார்கள். இதிலேகூட நாங்கள் அதைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். அங்கேயுள்ள தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அரசுப் பணிக்கு மாற்றம் செய்யுமுன், அவர்கள் அரசுப் பணிக்கு வர விரும்புகிறார்களா அல்லது பணியில் இருந்து ஓய்வு பெற்று ஈட்டுத் தொகை பெற்றுக் கொள்கிறார்களா என்பது அவர்களின் இஷ்டத்திற்கு விடப்பட்டு இருக்கிறது. அது குறித்து அரசே எந்தவித முடிவையும்





எடுக்கவில்லை. அவர்கள் அரசு ஊழியர்களாகத் தொடர்ந்து இருக்க விரும்புவார்களானால் நிச்சயமாக அந்தப் பணியைத் தொடர்ந்து கொடுப்பதில் தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU J. HEMACHANDRAN : For terminal benefits the employer can alone do it.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அவர்கள் ஏற்கனவே இன்னொரு கருத்தைச் சொல்கிறபோது, terminal benefits as in other Corporations கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அரசு நிறுவனத்தில் இருந்து தனிப்பட்ட முறையில் கார்ப்பரேஷனுக்குப் போகிறபோது, அவர்களுக்குச் சில டெர்மினல் பெனிபிட்ஸ் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. அதையெல்லாம் அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று இன்னொரு கருத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில், எது எது சட்டப்படி கொடுக்க வாய்ப்பு இருக்கிறதோ அதைக் கொடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு தயங்காது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

நான் இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இங்கே வேலை நீக்க ஈட்டுத் தொகை பெற்று வேலையில் இருந்து நீங்குவதற்கு பதிலாக அரசுப் பணியில் சேர விரும்பும் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் தகராறு சட்டத்தின்கீழ் அல்லது அமலில் உள்ள வேறு எந்தச் சட்டத்தின்கீழ், வேலை நீக்க ஈட்டுத் தொகை அல்லது வேறு எந்த ஈட்டுத் தொகை கொடுக்கப்பட மாட்டாது என்ற விதியை உள்ளடக்கியே நாம் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறோம். இது இன்றைக்கு நடைமுறையில் உள்ள விதி. அந்த விதிகள் மீறப்படாது. அப்படி மீறப்பட்டு இருக்கிற அல்லது சட்டபூர்வமாக கொடுக்க வேண்டிய இன்றைக்கு அமலில் உள்ள தொழிலாளர் சட்டங்களின் எந்த விதி மீறப்பட்டு இருந்தாலும் உடனடியாக அரசு திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு உறுதியாக நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாற்றங்கள் எதற்காக, எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை நாம் ஆராய்வதை விட மாற்றங்கள் நல்ல நோக்கங்களுக்காக செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால், அதே நேரத்தில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஒரு சாதாரண இழப்பை உண்டாக்குவதற்குக் கூட நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இதை உறுதியாக நம்பலாம். இதிலே

[திரு. கே. இராஜா முகமது] [1980 ஆகஸ்ட் 12

என்னென்ன குறைபாடுகள் அல்லது காலப் போக்கில் நாம் கொள்ளும் ஒப்பந்தத்தில் இருக்கும் என்று கருதப்படுமானால் நிச்சயமாக அதை அரசு மிக விரைவில் தீர்க்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கான்ட்ராக்ட் முறை பற்றிச் சொன்னார்கள். அந்த நோக்கத்திற்காக இது கொண்டு வரப்பட்டது அல்ல. பொதுப் பணித் துறைக்குத் தேவைப்படுகிற பணிகளை அந்தப் பட்டரைகளில் செய்து கொண்டு இருக்கிறோம். வேறு எந்தப் பணிக்கும் நாம் அதை வைத்திருக்கவில்லை. டான்சி, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் போன்ற நிறுவனங்களோடு போட்டி போட்டிக் கொண்டு செய்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. காரணம், அந்தப் பணியாளர்கள் பொதுப் பணித்துறையின் சம்பந்தப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்குத்தான் தங்கள் கருத்தை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுப்பணித் துறைக்குச் தேவைப்படும் பல்வேறு பொருட்களை வாங்கி வழங்கும் மைய கொள்முதல் முகவரமைப்பாகவும் அது செயல்பட்டு வந்து இருக்கிறது. மற்ற ஸ்தாபனங்களில் உள்ள தேவைகளை நாம் எப்படி நிறைவு செய்கிறோமோ அந்த வகையில் இந்தப் பொதுப்பணித் துறைக்கும் தேவையான பொருள்களை வாங்கி விநியோகம் செய்யலாம் அல்லது இந்தந்தப் பொருள்களை வாங்க வேண்டும் என்று சொல்லி, அவர்களுக்கு அறிவுரை கூறலாம். அப்படிச் செய்வதாலே அதிலே எந்தவிதமான முறைகேடும் வந்து விடாது. தனிப்பட்ட கான்ட்ராக்டர்களுக்குப் போக வேண்டிய பிரச்னை இதிலே எழவில்லை. இங்கே பொதுப்பணித் துறைக்குத் தேவைப்படும் வேறு சில உபகரணங்களையும் செய்வதற்கு அந்தப் பட்டரைகளை உபயோகிக்க முடியாது என்று சொன்னால், அதற்கு டான்சி, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் போன்றவற்றின் மூலமாகத்தான் செய்ய வேண்டுமே தவிர வேறு ஒப்பந்தக்காரர்கள் மூலமாக அதை அழைத்துச் செய்து விட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்கு அரசு இதிலே மிகத் தெளிவாக இருக்கிறது. இதில் எந்தவிதமான குறையும் இல்லை. குறையும் வராது. நான் ஆரம்பத்திலே சொன்னதைப்போல, இதை ஒரு பெரிய சட்ட முன்வடிவு என்று கருதி யாரும் பேச மாட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால் ' கடுகைத் துளைத்து ஏழ் கடலை புகுத்தி ' என்று சொல்வார்களே, அதைப்போல விவாதம் நிறைந்திருந்தது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— ''1980ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 18வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்— '' 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப் பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1980) நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

2. தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1980.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1980) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் '' என்று மொழிகிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இது செய்ய வேண்டிய, வரவேற்கத் தக்க ஒன்று. இது நியாயமாக, நேர்மையாகச் செய்யப்படுமானால், முழுமனதோடு வரவேற்கிறோம். ஆனால் இதிலே கூட ஏதாவது உள் நோக்கம் இருக்குமோ என்று சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

* 1980 ஆண்டு 8-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. துரைமுருகன்] [1980 ஆகஸ்ட் 12

ஒரு தனியார் கல்லூரி, அதற்கு விதிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றத் தவறினால் அதை அரசு ஏற்கும் என்பது இந்த மசோதாவின் மையக் கருத்து. அப்படிச் செய்யத் தவறி விட்டது என்று எப்படி அறிவீர்கள் என்றால், இதிலே சொல்லப் பட்டிருக்கிறது.

"if on receipt of a report from the competent authority" ஒரு அதிகாரி இடத்திலிருந்து ரிப்போர்ட் வந்தாலும்,

"or otherwise, the Government are satisfied that the educational agency of any private college has neglected to discharge any of the duties imposed on it"

என்று சொல்லியிருக்கிறீர்கள். தக்க அதிகாரியிடமிருந்து தாக்கீது வர வேண்டும், இதைச் சரியாக நிறைவேற்றவில்லை, எடுத்துக் கொள்ளுங்கள், என்று. அது இல்லாவிட்டாலும் ஒரு கல்லூரி சரியாக இயங்கவில்லை என்று அரசாங்கமே முடிவு செய்து எடுத்துக் கொள்ளலாம். இந்த இடத்தில் நியாயமான காரியங்களைச் செய்யத் தவறுகின்றது அல்லது கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்யாமல் இருக்கிறது என்ற காரணத்தால் அரசு அந்தக் கல்லூரியை ஏற்கிறது என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. சிக் இன்டஸ்டிரீசை சர்க்கார் எடுத்து நடத்துகிறபோது சமுதாயம் மேம்பட அறிவொளி வீசி, அறிவை வளர்க்கின்ற கல்லூரி தன்னுடைய செயலில் மாறுபட்டால் அதை அரசு ஏற்று. செம்மையடைந்த பிறகு மீண்டும் ஒப்புவிப்பதில் மாறுபட்ட கருத்து இல்லை.

[மாலை 6—10]

ஆனால் உங்களுக்கு வேண்டாத ஒரு கல்லூரி, சில பல காரணங்களால் உங்களுக்குப் பிடிக்காத யாராவது கல்லூரி நடத்தினால், அந்தக் கல்லூரியை எடுத்துக் கொள்வதற்காக ஒரு அதிகாரியை நியமித்து 'கொண்டு வா தாக்கீது' என்று சொல்லலாம். அப்படி அவர் தர மறுத்தால் கவர்ன்மென்ட் சாட்டிஸ்பைடு என்று சொல்லி, அந்தக் கல்லூரியை அரசு ஏற்கிறது என்று சொல்லலாம். ஆகவே இந்த நிலை இல்லாமல் நேர்மையோடு இதை நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இதிலே இன்னொன்று இருக்கின்றது. அவற்றை அப்படி ஏற்கின்றபோது கல்லூரி நிறுவனத்திற்கு முன்னால் இருந்த கடன்களை ஏற்பதிலே சிக்கல் இருப்பதால் இப்போது அரசு ஏற்கின்ற தினத்திலே இருந்துதான் அரசு பொறுப்பேற்கும் என்றும் அதற்கு முன்னால் உள்ள கடன்களுக்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல என்றும் சொல்லி இருக்கிறீர்கள். இது வரவேற்கத்தக்கதுதான். சில கல்லூரிகளில்



1980 ஆகஸ்ட் 12] [திரு. துரைமுருகன்

உதாசீனமாக செலவழிக்கிறார்கள். அவற்றை எல்லாம் நீங்கள் ஏற்க வேண்டும் என்று சொல்லவில்லை. பிரின்சிபாலுக்கு ஒரு கார், அவருக்கு இரண்டு கார். இவருக்கு ஒரு கார் என்றெல்லாம் வைத்துக் கொண்டு பணத்தை எல்லாம் நாசம் அடிக்கின்றார்கள். ஆகவே அதை எல்லாம் அரசு ஏற்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆகவே 30-வது திருத்தத்திலே செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து இதைச் செய்வதற்கு 5 ஆண்டு காலத்திலே முடியுமா என்றால் முடியாது. அதற்குப் பத்தாண்டு காலம் ஏற்படும் என்று சொல்வதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒன்று சொல்கிறேன். தனியார் கல்லூரி ஒன்றின்மீது அது செய்ய வேண்டிய பணி என்று நாம் திணிக்கின்றோம் அல்லது கொடுக்கின்றோம். அந்தப் பணியை அவர்கள் செய்யத் தவறி விட்டார்கள் என்பதிலே என்னென்ன அடங்குகிறது என்று பார்க்க வேண்டும். கல்லூரிகளுக்கு இருக்கின்ற Tamil Nadu Privat Colleges (Regulation) Amendment என்ற அந்தச் சட்டத்திலே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் கம்யூனல் ஜி.ஓ. வை அமல் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சியில் இருந்தபோதும் அதை அமல் செய்யவேண்டும் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே இருந்தபோதும் தனியார் கல்லூரிகளிலே இந்த கம்யூனல் ஜி.ஓ. வை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி இன்றைக்குத் தனியார் கல்லூரிகள் செய்கின்றனவ என்று நான் கேட்கிறேன். ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் 15 இலட்சம் என்று அரசாங்கத்திலிருந்து கிரான்ட்ஸ் வாங்குகிறார்கள். அப்படி பணத்தை மட்டும் வாங்கிக் கொள்கிறார்களே தவிர கம்யூனல் ஜி.ஓ. வை நிறைவேற்றுகிறார்களா என்றால் நிறைவேற்றுவதில்லை. இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கென்று 18 சதவீதம் இடம் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் எந்தத் தனியார் கல்லூரியிலே யாவது18 சதவீதம்இடத்தை ஆசிரியர் பணியைப் பொறுத்தமட்டிலே ஒதுக்கி தாழ்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்களா என்று கேட்டால் இதுவரை கிடையாது. 137 ஆண்டு கால வரலாற்றைக்கொண்ட பச்சையப்பன் கல்லூரியில் இப்போது கிட்டத்தட்ட 166 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களில் ஒரே ஒருவர்தான் என்னுடன் படித்த திரு. குப்புசாமி என்ற அரிசனத் தோழர் ஆசிரியராகப் பணி புரிகிறார். இப்போது வைஷ்ணவா கல்லூரி, சர் தியாகராசர் கல்லூரி, புதுக் கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி, ஜெயின் கல்லூரி, செல்லம்மாள் கல்லூரி இப்படி எத்தனையோ தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. குப்புசாமி என்ற ஒரே ஒரு அரிசனத் தோழரைத் தவிர வேறு எந்த

[திரு. துரைமுருகன்] [1980 ஆகஸ்ட் 12

இடத்திலாவது அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குப் பேராசிரியராகப் பணி புரிகின்ற வாய்ப்பைத் தனியார் கல்லூரிகள் கொடுத்திருக்கிறார்களா? அரசாங்கத்திலிருந்து 10 இலட்சம் 15 இலட்சம் என்று கிரான்ட்ஸ் மட்டும் வாங்கிக்கொள்கிறார்கள். சர்க்கார் சொல்கின்ற கம்யூனல் ஜி.ஓ. வை அமுல்படுத்துவதில்லை. பணத்தைப் பொறுத்தவரையிலே எங்களுக்குக் கொடுத்தே ஆகவேண்டும் என்று கேட்டு வாங்கிக்கொள்கிறார்கள். கம்யூனல் ஜி.ஓ. வை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால் அமுல்படுத்துவதில்லை. ஆகவே தனியார் கல்லூரிகளின் குடுமி அரசின் கையிலே சில நேரங்களில் இருந்தால் தான் குதிரையை லகான் போட்டு பிடித்து இழுத்து ஓட்ட முடியும். ஆகவே இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் வேறு நோக்கத்தோடு நீங்கள் செய்யப் போகிறீர்கள் என்று நம்பக்கூடிய அளவிலே இருந்தால் அதை நிச்சயமாக வரவேற்க முடியாது.

ஆகவே பழி தீர்க்கின்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக இருந்தால் அது ஜனநாயகமாகாது, நல்லதும் ஆகாது, எனவே உங்களை நம்பி, நல்லதைச் செய்வீர்கள் என்பதற்காக நான் இதை வரவேற்கிறேன் என்பதை எடுத்துக் கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் கல்லூரிகளிலே நடைபெறுகிற முறைகேடுகளை பற்றி, சீர் கேடுகளைப்பற்றி இந்த மன்றத்திலே பல தடவை பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்து இந்தத் தனியார் கல்லூரி நிர்வாகங்களை ஒழுங்குப் படுத்தும் செயல் முறையாக இந்தச் சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

தனியார் கல்லூரிகளின் தோற்றம் எப்படி இந்தத் தமிழகத்திலே ஆரம்பித்தது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வளர்ந்து வருகிற கல்வித் துறையிலே அரசே எல்லா இடங்களிலும் பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்தி நடத்த அதற்கு இருக்கக் கூடிய நிதி வசதி இடம் தராது என்ற காரணத்தால், சில தனியார்கள் அதை ஏற்படுத்த முன் வந்தபோது அரசு அதை ஊக்குவிக்க வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்னாலேதான் தமிழகத்திலே தனியார் கல்லூரிகள் தோன்றின.



1980 ஆகஸ்ட் 12] [திரு. ப. நெடுமாறன்]

தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கத்தின் சார்பிலே அவைகள் அமைக்கப்படுவதற்கான நிலங்கள்கூட கொடுக்கப் பட்டிருக்கின்றன. பலவகையான கிராண்டுகளை (Grants) அரசாங்கம் கொடுக்கிறது. டெல்லியிலே யூ.ஜி.ஸி. என்ற யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் இலட்சக்கணக்கான ரூபாய் மானியங்களைத் தருகிறது. மாநில அரசுகள் கிராண்ட்ஸ் கொடுக்கின்றன, மத்திய அரசும் சில நேரங்களில் மானியங்கள் கொடுக்கின்றது. ஆக இந்த தனியார் கல்லூரிகளுக்கு லட்சக்கணக்கிலே மானியங்கள் தனித் தனியாகக் கொடுக்கப்படுகின்றன. இது போக லேபரட்டரி, லைப்ரரிக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கான மானியங்களையும் அரசே கொடுக்கிறது, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனும் கொடுக்கிறது. அது மட்டும் அல்லாமல் ஆசிரியர்களின் ஊதியத்திலே சில சீர்கேடுகள் நடைபெற்றன என்ற காரணத்தினாலே, ஆசிரியர்களின் சம்பளத்தையும் முழுமையாக இப்போது மாநில அரசே கொடுக்கிறது.

ஆகவே, இப்படி எல்லா வகையிலும் தனியார் கல்லூரிகளின் வரவு செலவுகளில் பெரும் பகுதியினை அரசும், யூ.ஜி.சியும் இரண்டுமே சேர்ந்து ஏற்றுக் கொள்ளும்போது, அந்தக் கல்லூரிகள் முறையாக நடத்தப்பட வேண்டும் என்பதிலே அரசுக்கு நிச்சயமாக அக்கறை இருக்கிறது. மக்களுக்கும் அக்கறை இருக்கிறது. மக்களின் வரிப்பணத்திலேயிருந்து அந்தக் கல்லூரிகளின் செலவுகள் முழுமையாக நடைபெறுகின்றன. அதனால் அவர்களுக்கும் இதில் அக்கறை உண்டு.

ஆனால் இவ்வளவு பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அது போதாது என்று, கல்லூரிகளிலே ஆசிரியர்களை நியமிக்கும்போது அவர்களிடமிருந்து பணம் வாங்குகிறார்கள். மாணவர்களை சேர்க்கும்போதும் அவர்களிடம் இருந்து, அந்த நிதி, இந்த நிதி என்றெல்லாம் சொல்லி பல தனியார் கல்லூரிகளிலே பணம் வாங்குகிறார்கள். அவற்றிற்கு முறையான கணக்குகள் எதுவும் இல்லை. இரசீதுகள் எதுவும் கிடையாது. அதைத் தடுப்பதற்கும் சட்ட ரீதியாக எந்த வழியும் இல்லை. பெற்றோர்களும் வந்து புகார்கள் செய்வதில்லை. அவர்கள் புகார் செய்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும் என்று நினைக்கலாம். ஆனால் அவர்கள் புகார் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் அந்தக் கல்லூரிகளில் அவர்களுடைய பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆகவே அவர்கள் புகார் செய்ய மாட்டார்கள்.

இவ்வளவு வருவாயை வைத்துக் கொண்டிருந்தாலும் அந்தத் தனியார் கல்லூரிகளிலே இன்றைக்கு நடைபெறுகிற சீர்கேட்டைப் பார்த்தால் இன்னது என்று சொல்ல முடியாது. அப்படி பல கல்லூரிகளிலே அந்த ஊழல் நிலைமை மலிந்து இருக்கிறது.

அங்கே வேலை பார்க்கிற ஆசிரியர்களைப் பற்றி சொல்ல வருகின்ற நேரத்தில் 'கிரீம் ஆப் தி சொசைட்டி' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போல சமுதாயத்திலே உயர்ந்த பட்டப்படிப்பு படித்தவர்கள், எம்.ஏ. பி.எச்.டி எல்லாம் படித்தவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் பலர் அங்கே வேலை செய்கிறார்கள். அந்த ஆசிரியர்களை அந்தத் தனியார் கல்லூரிகளிலே இருக்கிற நிர்வாகிகள் எப்படி நடத்துகிறார்கள் என்றால், சாதாரண கொத்தடிமைகளைப் போல நடத்துகிறார்கள். எந்த மரியாதையும் கிடையாது அவர்களுக்கு. பல தொழில் அதிபர்கள் பெரிய பணக்காரர்கள் பல தொழிற்சாலைகளை வைத்திருக்கிறார்கள்.

அந்தத் தொழிற்சாலைகளிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை அவர்கள் எதுவும் செய்ய முடியாது. அவர்களைக் காக்க சட்டங்கள் உண்டு, தொழிற்சங்கங்கள் உண்டு, நீதி மன்றங்கள் உண்டு. ஆனால் அதே தொழில் அதிபர்கள் நடத்துகிற கல்லூரிகளிலே இருக்கிற ஆசிரியர்களை எந்தவிதக் காரணமும் இல்லாமலே அல்லது ஏதாவது சிறு காரணங்களுக்காக கூட அவர்கள் பணியை விட்டு விலக்கிவிடுகிறார்கள். எம்.ஏ. படித்த பி.எச்.டி. செய்த, ஆராய்ச்சி செய்து டாக்டரேட் வாங்கிய அந்த அறிஞர்களை ஒரு சிறு காரணத்திற்காக கூட நீக்கிவிடுகிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால் சமீபத்திலே சிவகாசியிலே ஒரு ஆசிரியரை வேலையிலிருந்து நீக்கிய விவரம் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டது அனைவருக்கும் தெரியும். அதன் விளைவாக அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களும் அவர் விலக்கப்பட்டதை எதிர்த்துப் போராடியதும் அனைவரும் அறிந்த ஒன்று.

[மாலை 6–20]

மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்கள் கூட இங்கே பேசுகின்ற போது சொன்னார்கள். பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி எல்லாம் சொன்னார்கள்.

அந்த நிர்வாகத்திலே என்ன நடக்கிறது? 6 நாட்களாகத் தொடர்ந்து ஆசியர்களும், மாணவர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இணைந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்று சொல்கிறோம். அந்த இறைவர்கள் எல்லாம் இன்றைக்குச் சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக இருந்து, போராடுகின்ற ஒரு பரிதாபமான சூழ்நிலை இதனால் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு தவறான





காரியத்தினால், சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஒன்றுபட்டு வேலை நிறுத்தம் செய்து, மிகப் பெரிய ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் எப்படி ஏற்படுகின்றன என்று சொன்னால், ஒரு சாதாரண பி.எஸ்.ஸி,. பட்டதாரி, அதற்குமேல் எந்தத் தகுதியும் இல்லாதவர், சிபாரிசினாலே ஒரு கல்லூரியின் முதல்வராகி விடுகிறார். அதைவிட அதிக தகுதி படைத்தவர், அதைவிட தகுதியுள்ள ஒரு ஆசிரியர் அந்தப் பதவிக்கு வர முடியவில்லை. அப்படி முதல்வராக ஊழல் செய்து வருகின்றவர், பின்னால் அந்தப் பதவியிலிருந்து விலகும்படியான சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால், அவரே அந்த டிரஸ்டின் தலைவராகவும் பின்னாலே வருகிறார். எப்படி இவைகளை எல்லாம் நடத்த முடிகிறது? இவைகளை எல்லாம், இத்தகைய ஊழல்களை எல்லாம் மக்கள் எத்தனை நாட்களுக்குச் சகித்துக் கொண்டிருப்பது? ஆகவே, இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசு இப்போது முன்வந்திருப்பதை நான் உளப்பூர்வமாக வரவேற்கிறேன்.

ஆசிரியர்களாக வேலை செய்கிறார்கள் ; முதல்வர்களாக வேலை செய்கிறார்கள். இவர்களைப் பற்றி பல்கலைக் கழக நிர்வாகம், அது மதுரைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், அதன் துணை வேந்தர்களே தலையிட்டு, தனியார் கல்லூரி நிர்வாகத்தினரிடம் எதையாவது சொன்னால், அதை அவர்கள் லட்சியம் செய்வதில்லை ; அலட்சியம் செய்கிறார்கள். என்ன வேண்டுமானாலும் நீங்கள் சொல்லிக் கொண்டு போங்கள், எங்கள் கல்லூரியிலே வேலைசெய்யும் ஆசிரியர்களை, மற்ற ஊழியர்களை, நாங்கள் அடிமைகளைப் போலத்தான் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். இந்தத் துணிவு அவர்களுக்கு எப்படி வருகிறது? அரசாங்கத்தின் உதவித் தொகையை நீங்கள் நிறுத்துவதாகச் சொல்லலாம். அப்படிச் சொன்னாலும், அரசுத் தரப்பிலே கொடுக்கின்ற பணத்தை, இந்த மானியத்தைப் பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை. ஆக, இப்படி ஒரு வலிமை அவர்களுக்கு வருமேயானால், அரசிடம் ஒரு ஆயுதம் இருந்தால் தான் இத்தகைய கொடுமைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அந்த வகையிலே இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று நான் கருதுகிறேன்.

இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்கள் பேசும்போது இந்தக் கல்லூரிகளிலே பிற்பட்ட வகுப்பினருக்கு உரிய சலுகைகள், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரிய சலுகைகள் ஆசிரியர்கள் நியமனத்திலும், மாணவர்களை சேர்ப்பதிலேயும் கடைபிடிக்கப்

படுவதில்லை என்று சொன்னார்கள். அது உண்மையான பேச்சு. பல கல்லூரிகளிலே இன்றைக்கு அரசாங்கத்தின் இந்த ஜி.ஓ. வைக் கொஞ்சமும் மதிப்பதில்லை. அவர்கள் இஷ்டத்திற்கு எதை வேண்டுமானாலும் செய்கிறார்கள்.

அது மட்டுமல்ல, கல்லூரிகளிலே ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரு துறைக்குத் தலைவராக யார் வரவேண்டுமென்றால், அந்தத் துறையிலே சீனியராக உள்ளவர், உயர்ந்த பட்டப் படிப்பு படித்தவர், பி.எச்.டி., ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற்றிருப்பாரேயானால், அவர் அந்தத் துறைக்குத் தலைவராக வருவதுதான் நியாயமானது ; முறையானது ஆகும். ஆனால், தனியார் கல்லூரிகளிலே என்ன நடக்கிறது? அந்தத் துறையிலே போதுமான தகுதி இல்லாதவர், அந்தக் கல்லூரியை எந்த ஜாதியினர் நிர்வகித்துக் கொண்டு வருகிறார்களோ, அந்த ஜாதியைச் சேர்ந்தவர்தான் அந்தத் துறையின் தலைவராகவோ, முதல்வராகவோ நியமிக்கப்படுகிறார். இதைக் கண்டு பட்டப் படிப்பு படித்தவர்கள், மேலும் தகுதி படைத்தவர்கள் மனம் நொந்து போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டு, ஒழுங்காக பாடம் சொல்லிக் கொடுக்க முடியாத நிலைமைகள் எல்லாம் தனியார் கல்லூரிகளிலே இருக்கிறது. இந்தத் தனியார் கல்லூரி சட்டத் திருத்தத்திலே நான் ஒன்றை அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு ஒரு கல்லூரியை எடுக்க வேண்டிய அவசியம் வந்து, அப்படி எடுத்த பின்னர் முன்னாலே இருந்த நிர்வாகத்தின் கடன் பொறுப்போ அல்லது வேறு விவகாரங்களிலோ அரசாங்கம் எந்தப் பொறுப்பும் ஏற்காது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன்.

ஆனால் அதிலே முக்கியமாக ஒரு திருத்தம் வேண்டும். ஆசிரியர்கள் சம்பள பாக்கியை அந்த நிர்வாகம் வைத்திருந்தாலும் அதற்கும் இந்த அரசு பொறுப்பு ஏற்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அவ்வளவு சரியானது அல்ல. பல கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கு ஏழு எட்டு மாத காலம் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான் அரசே அந்தக் கல்லூரிகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்திற்கு அரசு பொறுப்பேற்க முன்வர வேண்டும். கடன் பொறுப்பை ஏற்க வேண்டிய அவசியமில்லை. நீண்டகாலமாக தமிழகத்திலுள்ள ஆசிரியப் பெருமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தனியார் கல்லூரிகளை எடுத்துக் கொள்ளும் திருத்தச் சட்டம் இன்றைக்கு வந்திருப்பதை நான் உளப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த ஆயுதத்தை அரசாங்கம் தக்க முறையில் பயன்படுத்தி தனியார் கல்லூரிகளில் இருக்கக்கூடிய நிர்வாகச் சீர்கேடுகளை ஒழிக்கவேண்டுமென்று வற்புறுத்தி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன்.





திரு. என் சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளை முறைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிறேன். தனியார் கல்லூரிகள் என்று சொல்லும்போது அவை அவற்றை நிர்வகிக்கக்கூடியவர்களின் பல்வேறு தொழில்களில் ஒரு தொழிலாக இருக்கிறதே தவிர கல்வியைப் பரப்புவதற்காக இல்லை. அரசாங்கம் தனியார் கல்லூரிகளுக்கு ஏராளமான பணத்தை மானியமாகக் கொடுக்கும் நேரத்தில் தனியார் கல்லூரிகளில் அவர்கள் அதிகாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு பலவிதமான கெடுதல்களைக் கல்லூரிக் கல்விக்கும் ஆசிரியர்களுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி எடுக்கப்படுகிற கல்லூரிகளை அரசாங்கம் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஏற்றுக் கொள்ளலாம் என்று இருந்ததை தற்போது பத்தாண்டுக் காலம் வரை ஏற்று நடத்த திருத்தச் சட்டம் வகை செய்கிறது. அதுதான் ஏற்படுத்தப்பட்டுள்ள முக்கியமான மாறுதல். இதையும் நான் ஆதரிக்கிறேன்.

இதிலே பிரச்சினை என்னவென்றால்—தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் கல்லூரியைச் சீரழித்தார்கள். அரசாங்கம் அதன் பொறுப்பை ஏற்றுச் செம்மைப்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து திருப்பியும் கிளியைக் கொண்டு போய் பூனை கையில் கொடுப்பது போல் ஒப்படைக்க வேண்டுமென்றால் இது என்ன சமுதாய நீதி? ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் அதனைச் செம்மைப்படுத்தி பிறகு யார் அதைச் சீரழித்தார்களோ அவர்கள் பொறுப்பில் விடுவது என்றால் அது சமூக நீதிக்குள் அடங்குமா என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். பத்தாண்டுகள் என்பது குறைந்த காலம் அல்ல. அரசாங்கமே நீடித்து தங்களுடைய பொறுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும். அடிப்படைச் சட்டத்திலும் திருத்தம் செய்ய வேண்டும். மைனாரிட்டி சிட்டிசன்ஸ் என்பவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்திலே சில பாதுகாப்புகளை வைத்துக் கொண்டு சில காரியங்களைச் செய்கிறார்கள். மற்றபடி இருக்கும் கல்லூரிகள் அரசாங்கக் குறுக்கீடுகளை அவர்களாக வரவழைத்துக் கொண்டால் அவற்றைச் செம்மைப்படுத்தி மீண்டும் அவர்கள் கையில் கொடுக்க வேண்டியதில்லை. இப்படிச் செய்தால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு செம்மைப்படுத்தி திரும்ப ஒப்படைப்பார்கள் என்ற தைரியத்தில் இஷ்டப்படி செய்வார்கள். கல்லூரிகளைத் தொடர்ந்து அரசாங்கமே வைத்துக் கொள்ளும் முறையில் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1980 ஆகஸ்ட் 12

இங்கே கொண்டு வரப்பட்ட சட்டத்தில் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். அந்தக் கல்லூரிகளின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்போது அந்தக் கல்லூரிகளுக்குச் சொந்தமான என்டௌமென்ட் வருவாயையும் அரசாங்கம் பெறுவதற்கான சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஆதரிக்கிறேன். கல்லூரியின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்போது வேறு சில சாதனங்கள் மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் என்பதையும் வரவேற்கிறேன். அதே சமயத்தில் அந்தக் கல்லூரிகளுக்குக் கடன்கள் இருந்தால் அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்காது என்பதையும் வரவேற்கிறேன். உண்மையிலேயே, கடன் என்று சொல்லும்போது ஃபிக்ஷிஸியஸ் டிரான்ஃஸ்பர்—மோசடி பண்ணவேண்டுமென்று கூடச் செய்யலாம். ஆகவே, அதை ஏற்கவேண்டியதில்லை. அந்தக் கல்லூரி நிர்வாகி கோர்ட்டுக்குப் போனால் போகட்டும்.

ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது—

'Payment to the teachers and other persons employed in the private college' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எவ்வாறு நியாயம்? இந்த அரசாங்கம் நியாயத்தின் அடிப்படையில் இருக்கக்கூடிய ஒரு அரசாங்கம்—அந்த ஆசிரியர்கள் அந்தக் கல்லூரியில் பணியாற்றிவிட்டார்கள், கல்வி போதித்திருக்கிறார்கள். நிர்வாகத்தின் சீர்கேட்டால்தான், கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால்தான் பிரதானமாக அரசாங்கம் அந்தக் கல்லூரிகளை எடுத்துக் கொள்ள முன்வருகிறது.

[மாலை 6–30]

அப்படி எடுத்துக்கொண்ட பிறகு அந்தக் கல்லூரியின் எண்டோமென்டிலே உள்ள பணத்தை அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறபோது ஆசிரியர்களுக்கு ஏற்கனவே சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தால் அதைக் கொடுப்பது ரசாங்கத்தினுடைய தார்மீகக் கடமையாகும். அரசாங்கத்னுடைய பொறுப்பு அது என்று நான் கருதுகிறேன். கொடுக்காமல் விட்டுவிட்டால் அவர்கள் அதிகமாக அவதிப்படுவார்கள். 5 ஆண்டுகளுக்குப்பிறகு இந்தச் சட்டத்திற்குப் பிறகு 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தாங்கள் பெறமுடியாத சம்பளத்திற்காக நிவாரணம் கேட்கவேண்டிய நிலைமை ஏற்படும். 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் கோர்ட்டிற்குப்போய் வழக்காடிப் பெறவேண்டும் என்றால் அவர்களுக்கு எவ்வளவு சிரமம் இருக்கும். அவர்கள் எவ்வளவு துன்பத்திற்கு ஆளாவார்கள் என்பதை அரசாங்கம்சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



1980 ஆகஸ்டு 12] [திரு. என். சங்கரய்யா]

கல்லூரிகளிலே பணியாற்றிய ஆசிரியர்களுக்கு பழைய பாக்கியாக கொடுக்கப்படாத சம்பளம் கொடுக்கப்படவில்லையென்றால் அதற்காக பணம் இல்லையென்றால், தேவைப்பட்டால் அரசாங்கம் அந்த கல்லூரி நிர்வாகத்தினர் சொத்துக்களைக்கூட ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்கலாம். நாம் அவர்களுக்கு கடந்த கால சம்பளத்தைக் கொடுக்கவில்லை என்றால் அதற்கான பொறுப்பு எங்களுக்கும் இல்லை என்று அரசாங்கம் சொன்னால் அதனால் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்படுவார்கள். அதன் காரணத்தினால் அரசாங்கத்தை வரவேற்கக்கூடிய ஆசிரியர்கள்கூட பாதிக்கப்படுவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் நினைக்கக்கூடும், அரசாங்கத்தின் கையிலே நிர்வாகம் இருக்கிறபோதே சம்பள்பாக்கிக்காக எந்தவிதமான வழியும் செய்யப்படவில்லை என்றால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அது சமூதாய நீதியும் அல்ல, ஆகவே அரசாங்கம் இதையெல்லாம் சிந்தனை செய்து பார்த்து ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கப்படாத சம்பள பாக்கிகளை கொடுக்கின்ற பொறுப்பை ஏற்க முன் வரவேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் கல்லூரிகளிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் போதுமான இடம் கொடுக்கப்படுவதில்லை என்றால் நாம் எந்தக் கொள்கையை அமல்நடத்த வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அப்படி வருகிறபோது பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் இல்லை என்று சொன்னால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். மாநில அரசாங்கம் தன்னுடைய சக்தியைப் பயன்படுத்தி தன்னுடைய சக்திக்குட்பட்ட முறையில் உத்திரவைப் போடுகிறபோது அதை அவர்கள் நிறைவேற்றுகிற முறையிலே போதுமான விகிதாச்சாரம் அவர்களுக்கு ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய உரிமைகளை அரசு பாதுகாக்கவேண்டும். ஜனநாயகம் வளரவேண்டுமென்றால் தனியார் கல்லூரிகளிலே உள்ளவர்கள் அந்தந்த ஊர்களிலே கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிற நிலைமையை மாற்றி ஆசிரியர்களை அவர்கள் இஷ்டப்படி நடத்துகின்ற போக்கை தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலே பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் பல பிரச்சினைகளை வைத்து இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற

வர்களுக்கு அரசாங்க நிர்வாகம் முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்ற முறையிலே நம்முடைய பொறுப்பிலே இருக்கின்ற பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந்தத் தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொள்கின்ற இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய சகோதரர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்திலே அரசு நிர்வாகத்தில் இருக்கிற பல்கலைக் கழகத்தில் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல் பட்டம் பெற்றவர்கள் பெற்ற அளவுக்குகூட இல்லாமல் சாதாரணமாக கிளார்க்போஸ்ட், பியூன் போஸ்டு கூட கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் உள்ள கல்லூரியில், பல்கலைக்கழகத்தில்கூட அது நடக்கவில்லை என்பது என்னைவிட நிச்சயமாக அமைச்சர் அவர்களுக்கு தெரியும் என்று நம்புகிறேன். காரணம் அமைச்சர் அவர்கள் நகரத்திலே அதிகமாகப் பழகியிருக்கிறார்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பியூன் போஸ்ட் யாருக்குக் கிடைக்கவில்லை என்பதைச் சொல்லவில்லையே.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்கள் ஞாபகப்படுத்தி இருக்கிறார்கள். சகோதரர் திரு. துரைமுருகன் பேசியபோது அவர் 18 சதவீதம் என்று சொன்னபோது, இளையபெருமாள் நிச்சயமாகப் பேசுவார் என்று தாங்கள் சொன்னீர்கள். அதைப்போன்று நிச்சயம் நான் நசுக்கப்பட்டவர்களுக்காகத்தான் நான் பேசுவேன் என்பது தெரியும், இருந்தாலும் பெயர் சொல்லாமல் பேசினேன், பின்னாலே பேசலாம் என்று நினைத்தேன். 18 சதவீதம் என்பது கிளாஸ் ஒன்றில் தவிர வேறு எந்த நிலையிலேயும் நம்முடைய அரசினுடைய நிர்வாகத்திலே உள்ளவைகளிலேயும்கூட கிடைக்கவில்லை. திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போல அண்ணா பெயரால் நடத்தப்படுகிற பல்கலைக் கழகத்திலேகூட அந்த நிலைமை இல்லை என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வந்து அது கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றிருக்கின்ற கல்லூரிகளிலே பி.எஸ்.ஸி. வரையிலே படிக்கிறார்கள் ; ஆனால் எம்.எஸ், மருத்துவக் கல்லூரியிலே இருக்கின்ற எம்.டி. என்ற இடத்தில் திறமையான மாணவர்கள் இருந்தாலும்கூட ஒதுக்கீடு இல்லை என்ற காரணத்தை



வைத்தும் திறமையுள்ள மாணவர்களும் தள்ளப்படுகிறார்கள். நம்முடைய நிர்வாகத்தில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, ஆர்ட்ஸ் காலேஜாக இருந்தாலும் சரி நாம் பிறப்பித்த சட்டத்தை மதிக்கின்ற வகையில் செய்ய வேண்டும் ; பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மலை வாழ் மக்களுக்கு நடைபெறாமல் இருக்கின்ற அவல நிலையைப் போக்க அமைச்சரவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே, கல்லூரிகளை எடுத்துக் கொண்டால் பேராசிரியர்கள் போன்ற பொறுப்பைக்கூடச் சொல்லவில்லை ; அங்குகூட கிளாஸ் 1 தவிர கிளாஸ் 3, கிளாஸ் 4 போஸ்டுகளுக்குக் கூட சரிவர செய்யாத நிலைமை இருக்கிறது. யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் கொடுத்த நிலைமையிலும்கூட, தனியார் கல்லூரிகளில் ஆசிரியர் பெருமக்களுக்கு மட்டுமல்ல, குமாஸ்தாக்களாக இருப்பவர்களுக்குக் கூட யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் கொடுத்த விகிதாசாரத்திலே உயர்வுகளைச் சரிவரச் செய்யாமல் இருக்கின்ற அவல நிலை இருக்கிறது. இந்த நல்ல நேரத்திலே அரசு எடுத்துக்கொள்வதைப் பாராட்டுவதோடு இந்த அவல நிலையையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கல்லூரிகளை எடுக்கின்ற சமயத்தில் அதில் உண்மையான முறையில் வேலை செய்த ஆசிரியப்பெருமக்கள், மற்ற ஊழியர்கள் வேலை செய்திருந்து, அவர்கள் நிர்வாகத்திலுள்ளவர் கவனக்குறைவினாலோ அல்லது அலட்சியப் போக்கினாலோ கவனிக்கப்படாமல் இருந்தால், அவர்களுடைய சம்பளப் பாக்கி கொடுக்கப்படாமல் இருந்தால், நீங்களும் அவர்களைக் கைவிட்டு விட்டால் அவர்கள் எப்படி வாங்குவது? சகோதரர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போன்று, அந்தத் தவறான காரியத்தைச் செய்தவர்களிடமிருந்து அந்தப் பணி செய்த மக்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தை வாங்கிக் கொடுப்பதற்கு, அந்தக் கல்லூரிகளை நீங்கள் எடுப்பதற்கு முன்னாலே சட்டத்திலே கொண்டு வருவது என்பதை சிறந்ததாக இருக்கும் என்று அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைக் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால் நான் கிட்டத்தட்ட 23 ஆண்டுகாலமாக செனட் உறுப்பினர். சாதாரண ஒரு பிட்டர் போஸ்ட்டுக்கு 17 மாணவர்கள் வந்தார்கள். அதில் 6 மாணவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். அதில் ஒரு மாணவருக்குக்கூட ஒரு பிட்டர் போஸ்டு கிடைக்கவில்லை. தனியார் என்ற நிலைமையில் சொல்கிறேன், எனக்கு வேண்டியவர்கள்தான். ஆனால் எனக்கு வேண்டியவர்கள் என்ற நிலைமை வேறு ; அவர்களுடைய உரிமை

[திரு. எல். இளையபெருமாள்] [1980 ஆகஸ்டு 12

பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நிலைமை வேறு. அந்தப் பல்கலைக் கழகத்திற்கு மத்திய அரசு, மாநில அரசு கொடுக்க வேண்டிய எத்தனையோ மானியங்களைக் கொடுத்திருக்கிறது. நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற அமைச்சர் பெருமக்களாக வந்தவர்களில் கிட்டத்தட்ட 75 சதவீதம் அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்த மாணவர்கள்தான். ஆனாலும் உரிமை என்று வருகிறபொழுது என்ன காரணத்தாலோ அவைகள் கொடுக்கப்படவில்லை இதைப்பற்றி புரோ-சான்சலரிடமும் சொன்னேன்; வைஸ்-சான்சலரிடமும் சொன்னேன்; சான்சலரிடமும் சொன்னேன். ஆனால் இன்று வரையில் கிடைக்கவில்லை. இதை நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேனே தவிர, கொடுமையாகச் சொல்லவில்லை. உரிமைகள் மறுக்கப்படுகிறது. மாநில அரசிலிருந்தும், மத்திய அரசிலிருந்தும் மானியங்களை வாங்கியவர்கள். ஆகவே, நல்ல நேரத்தில் அரசு விழிப்போடு இந்த மசோதாவைக் கொண்டு வந்து எடுத்த தைரியத்தை நான் பாராட்டுகிறேன். வருங்காலத்தில் இப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதைச் சரி செய்து பேராசிரியர்கள் முதல் சாதாரண உத்தியோகஸ்தர்கள் வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாக்கியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பிலே ஒரு ஹைஸ்கூல் கூடக் கிடையாது; 1959 ஆம் ஆண்டிலேயிருந்து இன்று வரையில் ஒரு ஹைஸ்கூல் வைக்க வேண்டுமென்று பலபேர் மனுப் போட்டார்கள்; ஆனால் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு ரூபாய் இருந்தால் எலிமெண்டரி ஸ்கூல், இவ்வளவு கொடுத்தால் ஹைஸ்கூல், இவ்வளவு டெபாசிட் என்றால் கல்லூரி என்று வந்து விட்டது. எனவே அன்றும் கிடைக்கவில்லை; இன்றும் கிடைக்கவில்லை. கிடைக்கவும் வழியும் இல்லை.

என்னைப் பொறுத்தவரையில் இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருந்த மறைந்த பெரியவர் அண்ணல் அம்பேத்காருக்கு அடுத்த வரிசையிலுள்ள சகஜானந்தா போன்றவர் 1910 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பள்ளிக்கூடத்தை வைத்து எல்லாச் சமுதாய மக்களுக்கும், மாணவர்களுக்கும் கல்வி புகட்டினார்.

(மாலை 6-40).

அதைக் கல்லூரியாக ஆக்க வேண்டுமென்று, கிட்டத்தட்ட 80 ஏக்கர் நிலத்தை நான் கொடுக்கிறேன் என்று, அவர் வைத்து விட்டுப் போன செய்தி ..................



1980 ஆகஸ்டு 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது தனியார் கல்லூரிகளை எடுப்பது பற்றிய சட்ட முன்வடிவுதான் விவாதத்தில் இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : ஆகவே, அந்தச் சமுதாயத்து மக்கள்—தனியார்கள்—தந்த பணத்தை வாங்கிக் கொண்டு, அரசினுடைய சௌகரியத்தை அனுபவித்தாலும் எதையும் கொடுக்கவில்லை, அரசுக்குக் கொடுக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொண்டு, வருங்காலத்திலாவது, அந்தத் தனியார் கல்லூரிகளை எடுக்கின்ற நிலைமை வரும்போது, அவர்களுக்கு எதனையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை, உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இனியாவது, உரிமைகள் மறுக்கப்படாமல் இருப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்திலே விழிப்போடு இருந்து. இந்த அரசு கொடுத்த உரிமையை, அவர்களுக்கு இந்த நிலையிலே கொடுக்க வேண்டிய உரிமையைக் கொடுக்க, அந்த உறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகள் பற்றிய இந்த மசோதாவின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாக முறைகேடுகள், நிர்வாகத் திறமையின்மை, ஊழலிலே ஈடுபடுவது, எதேச்சாதிகார போக்கோடு அங்கே உள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் நடத்துவது போன்ற அப்படிப்பட்ட நிர்வாகங்களிலே இருக்கிற தனியார் கல்லூரிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதை நான் வரவேற்கிறேன். ஏறத்தாழ அனைத்துக் கட்சியினரும் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால், மற்ற எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டதைப் போல், 10 ஆண்டுகளுக்கு மேல் அவைகளை எடுத்து நடத்துவதற்கு இன்றைக்கிருக்கிற சட்டத்தின்படி அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்பது வருந்தத்தக்கதாகும். அரசாங்கம் எடுத்தால், விரும்பினால் திருப்பிக் கொடுக்கலாம். இல்லையானால், தாங்களே நடத்தலாம் என்ற அளவுக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தனியார் கல்லூரியினர் சிலர், இந்திய அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கிற மைனாரிட்டிஸ் என்ற பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களால் என்ன, என்ன தவறுகள் செய்ய முடியுமோ, அவ்வளவையும் செய்து வருகிறார்கள், அவர்களுக்கு கோர்ட்டும் பாதுகாப்பாக இருக்கிறது. அரசியல் சட்டம் அதை விட மிகச் சிறந்த பாதுகாப்பாக இருக்கிறது. அவர்கள் மாநில அரசையும் மதிப்பதில்லை,

[திரு. கோ. விஸ்வநாதன்] [1980 ஆகஸ்டு 12

மத்திய அரசாங்கத்தையும் மதிப்பதில்லை. அப்படிப்பட்ட கல்லூரிகளையும் எடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சில கல்லூரிகளின் நிறுவனங்கள் ஆசிரியர்களை வேலையில் அமர்த்துவதற்கு நிறைய பணம் வாங்குகின்றன. அதை எந்த இலஞ்சத்திலே சேர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை. அசிஸ்டென்ட் ப்ரஃபசர் வேலை கொடுக்க வேண்டுமானால், ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 வரை பணம் வாங்கிக் கொண்டு, வேலையிலே அமர்த்துகின்ற தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆசிரியர்களைச் சேர்ப்பதில் மட்டுமல்ல, மாணவர்களைச் சேர்ப்பதில் அதைவிட பெரிய தவறுகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கேள்விப்பட்டிருக்க வேண்டும். பி.காம். வகுப்பிற்கு ஆயிரக் கணக்கான மாணவர்கள் அங்கங்கே விண்ணப்பம் செய்து இருந்தார்கள். என்னுடைய மாவட்டத்திலே மட்டும் ஒரு தனியார் கல்லூரியில் ஏறத்தாழ ரூ. 2,000 வசூல் செய்து இருப்பதாக நான் அறிகிறேன். பி.காம். வகுப்பு என்று சொன்னால், ரூ. 3,000-லிருந்து, ரூ. 4,000 வரை தரவேண்டும். அதுவே கடைசி நேரம் என்றால், ரூ. 5,000 தரவேண்டும். சரி, பி.காம். இல்லை என்று சொல்லிவிட்டால், பி.எஸ்.சி., கெமிஸ்ட்ரி பி.எஸ்.சி., ஃபிசிக்ஸ் வேண்டுமென்று கேட்டால், கொஞ்சம் ரேட்டை பணத்தைக் குறைத்து, ரூ. 2,000 கொடு, ரூ. 3,000 கொடு என்று கேட்கிறார்கள். அதுவும் கிடைக்கவில்லையானால், பி.ஏ., ஹிஸ்டரி, பி.ஏ. எக்கனாமிக்ஸ் என்றால், அதற்கும் ரூ. 1,000, ரூ. 500 கொடுக்க வேண்டுமென்ற மோசமான நிலை சில தனியார் கல்லூரிகளிலே ஏற்பட்டிருக்கின்றன. எல்லா கல்லூரிகளிலும் இவ்வாறு நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில தனியார் கல்லூரிகள் இப்படிப் பட்ட தவறுகளிலே ஈடுபட்டிருக்கின்றன என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆகவே, ஏழை மக்களும், நடுத்தர மக்களும், தங்கள் பிள்ளைகளை இப்படிப்பட்டக் கல்லூரிகளிலே சேர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் மிக, மிக உன்னிப் பாகக் கவனித்து, அதற்குப் பரிகாரம் காண வேண்டும். உடனடி யாகத் தலையிட்டு கடுமையான நடவடிக்கையை அப்படிப் பட்ட நிறுவனங்களின் மீது எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இப்பொழுதுதான் இந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை நேரடியாகக் கொடுக்கிறது. அதற்கு முன்னாலே, தனியார்களே, பணத்தை



1980 ஆகஸ்டு 12] [திரு. கோ. விஸ்வநாதன்]

நேரடியாகப் பட்டுவாடா செய்து வந்தார்கள். முழுப் பணத் திற்கும்-சம்பளத்திற்கும் கையெழுத்து வாங்குவார்கள். ஆனால், ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு மிச்சத்தை ஆசிரியர் களுக்குத் தருவார்கள். அப்படிப்பட்ட சம்பவங்கள் சில கல்லூரிகளிலே நிறைய நடைபெற்றன. அதையும் அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், தனியார்கள் விடுதிகளை நடத்துகிறார்கள். அந்த விடுதிகளை நடத்துவதிலும் பல தவறுகள், ஊழல்கள் நடைபெறுகின்றன. பொய்க் கணக்குகளை எழுதுகிறார்கள். பொய்த் தகவல்களை நம்முடைய அரசாங்கத்திற்கும், பல் கலைக் கழகத்திற்கும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகளைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொல்வோமானால், கல்லூரிகள் நடத்துவதை ஒரு வியாபாரமாகவே ஆக்கிவிட்டார்கள். கல்விச் செல்வம் அளிப்பதை ஒரு சேவையாகக் கருதாமல், அதைச் செல்வம் சேர்ப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்ற அளவுக்கு இப்பொழுது சில கல்லூரி நிர்வாகங்கள் வந்துவிட்டன என் பதை நான் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். அப்ப படிப்பட்ட சூழ்நிலையில் இந்தச் சட்டம் வந்திருப்பது மிகமிக வரவேற்கத்தக்கதாகும். சிறந்த முறையில், சிறந்த கருவியாக அரசாங்கம் அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதனை வரவேற்று, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் கல்லூரியை ஒழுங்குபடுத்துவதற் கான இந்த மசோதவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவற்கிறேன். அப்படி வரவேற்கின்ற அதே நேரத்தில் இங்கே இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று தனியார் கல்லூரிகள்—அவர்கள் தவறான முறைகளைக் கையாண் டால் அரசாங்கம் ஆணைகளைப் பிறப்பித்தும், அவர்கள் கட்டுப் படவில்லை என்றால் அந்தத் தனியார் கல்லூரிகளை அரசே ஏற்றுக்கொள்ளுகிற அதே நேரத்தில், அந்தக் கல்லூரியை 10 ஆண்டு காலம் சிறப்பான முறையில் நிர்வகித்து மீண்டும் திருப்பிக் கொடுப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் அதை வரவேற்கவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அரசுடைமையாக ஆக்கவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. மு. அப்பாதுரை] [1980 ஆகஸ்டு 12

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைகிறது என்றால் அதற்குப் பிரத்தியேகமான காரணம் தனியார் கல்லூரிகள் தான் என்பதை சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் இன்றைக்குப் பல்வேறு தனியார் கல்லூரிகளை நடத்துகிறவர்கள், பல்வேறு அக்கிரமங்களை செய்து, பல்வேறு ஊழல்களை செய்து, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இருக்கிற ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள் எல்லாம் சேர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் இந்த நிலை 3 பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனக்கு முன்னாலே பேசிய அருமை மாண்மிகு உறுப்பினர்கள் பேசியதைப் போன்று அவர்கள் பல்வேறு வழிகளிலே நன்கொடை வசூலித்தாலும், அந்த நன்கொடை வாங்குவதை ஒரு கொள்கையாக நடத்தினாலும் அங்கே வேலை செய்யும் பேராசிரியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுப்பது கிடையாது.

அதுபோன்று அவர்கள் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமல் படுத்தவில்லை என்று சொல்லுகிற அதே நேரத்தில் வேண்டிய அளவுக்கு ஆசிரியர்களை அவர்கள் நிர்ணயம் செய்வது இல்லை என்பதை சுட்டிக்காட்டக் கடைமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் புற்றீசல் போன்ற பல்வேறு கல்லூரிகள், இனத்தின் பேரிலும், ஜாதியின் பேரிலும் ஏற்படுத்தப்பட்டன. அப்படிப்பட்ட கல்லூரிகள் எல்லாம் இன்றைக்கு மூடுவிழா நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடைமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் இன்றைக்குக் கலைக் கல்லூரிகளிலே, இங்கே இருந்து வருகின்ற பட்டதாரிகளுக்கு வேலை இல்லை. அப்படிப்பட்ட கல்லூரி களுக்குத் தமிழகத்திலே மதிப்புக் குறைந்த விட்ட காரணத்தாலே அந்தக் கல்லூரிகளுக்கு லாபம் குறைந்துவிட்ட காரணத்தாலே அவைகளை மீண்டும் நடத்துவதற்கு தனியார்கள் முயற்சிக்கவில்லை. அதனுடைய ஒரு காரணம்தான் தலைநகரத்தில் நடைபெற்ற கந்தசாமி நாயுடு கல்லூரியின் பேராட்டம்.

அதேபோன்று இன்றைக்குப் பல்வேறு கல்லூரிகளில் முதல்வராகப் பணியாற்றியவர்கள் கூட வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் என்னுடைய நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டியில் உள்ள சேவியர் கல்லூரியில் அந்தக் கல்லூரியின் முதல்வர் வரதராஜன் அவர்களை அந்தக் கல்லூரியின் நிர்வாகம் ஓராண்டு காலமாக வேலை நீக்கம் செய்திருக்கிறது. 10 ஆண்டு காலம் முதல்வராக இருந்து பணியாற்றிய ஒரு பேராசிரியர் அவர்களுக்கே இந்தக் கதி என்றால், சாதாரண ஆசிரியர்களைப் பற்றி நாம் குறிப்பிட வேண்டியதில்லை.



1980 ஆகஸ்டு 12] [திரு. மு. அப்பாதுரை]

அதேபோன்று அட்மிஷன்களிலே நடக்கின்ற ஊழல்கள் அதைப்போலவே ஆசிரியர்கள் நியமனத்தில் நடக்கும் ஊழல்கள் இவைகளை கவனிக்கவேண்டும். அவைகளை வைத்துத்தான் இன்றைக்கு அந்தத் தனியார்கள் அந்தக் கட்டடத்தின் மீது கடன் வாங்கும் சூழ்நிலை இருக்கின்றன. அதை மனதில் வைத்துத்தான் நம்முடைய அரசாங்கம் அப்படிப்பட்ட அந்தக் கடன்களுக்கெல்லாம் உத்தரவாதம் ஏற்றுக் கொள்ளாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல பேராசிரியர்களும் ஆசிரியர்கள் போன்றவர்களும் பல ஆண்டுக்காலம் பணி புரிந்து விட்டு, இன்றைக்கு நடக்கக்கூடிய போராட்டமே ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்பது ஒரு காரணமாக இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று பேராசிரியர்கள் சம்பளத்தை அரசாங்கமே கொடுக்கவேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு எங்களைப் பொறுத்த மட்டில் கல்லூரிகளிலே கல்வியை அரசுடைமை ஆக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் குறிப்பிட்டதைப் போன்று பல்வேறு கல்லூரிகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இம்பிளிமென்ட் பண்ணவில்லை என்று சொன்னார்கள். அது இன்று இந்த அரசில் மட்டுமல்ல. இந்த நாடு சுதந்திரம் அடைந்த 33 ஆண்டுகள் ஆகியும் ஏறத்தாழ 15 ஆண்டுக்கும் முன்னதாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காலம் தாழ்த்தியாவது இப்படிப்பட்ட நல்ல முடிவை எடுத்து இன்றைக்கு தமிழக அரசு காலத்திலே மிகப்பெரிய சீர்திருத்ததைக் கொண்டு வருவதற்கு இது அடிகோலும் என்ற வகையில் இந்த மசோதவை வரவேற்று அமர்கிறேன், நன்றி.

[மாலை 6-50]

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அவை 19/1976 சட்டத்தின் அடிப்படை விதிகளில் இருந்து மாறுபட்டு நடக்குமானால், அந்த விதிகளில் குறிப்பிட்டு இருக்கும் கடைமைகளை நிறைவேற்றத் தவறுமானால், அத்தகைய கல்லூரிகளின் நிர்வாகத்தை அரசு மேற்கொள்வது என்ற, விதியின் அடிப்படையில், பல கல்லூரிகள் முறைகேடுகளில் நடந்திட்டும், குறைபாடுகளை நெலியவிட்டும் நடந்து வருமானால், அந்தக் கல்லூரிகளின் நிர்வாகத்தை அரசின் பொறுப்பில் மேற்கொள்வது 5 ஆண்டு காலத்திற்கு என்பது 19/1976 சட்டத்தின் 30-வது பிரிவில் வரையறுக்கப்பட்டு இருக்கிறது.

ஆனால் கடந்த காலத்தில் தனியார் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு முறைகேடுகளையும், குறைபாடுகளையும் அங்கே தவழவிட்ட காரணத்தால் 5 ஆண்டு காலம் போதாது என்ற சூழ்நிலையில், அந்தக் கல்லூரி நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த மேலும் அவகாசம் தேவை என்று சொல்கிற நேரத்தில், மேலும் 5 ஆண்டு காலத்திற்கு அந்தக் கல்லூரியை நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் அந்த 30-வது பிரிவிற்கு திருத்தம் கொடுக்கும் முகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

அதுமட்டுமல்ல, அத்தகைய கல்லூரிகளில் தனியாரின் மேற்பார்வை இருந்தபோது ஏற்பட்ட கடன்கள் எல்லாம், அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நிலைமை வருகிறபோது, பல்வேறு முறைகேடுகளை தனியார் செய்து அந்த நிலைமை ஏற்பட்டு இருப்பதால், அவைகள் அரசுத்துறைக்கு வருகிறபோது ஒரு பெரும்பாரமாக அமைகிற காரணத்தால், வரிப்பணத்தை அவை உண்ணுகிற காரணத்தால், அந்த நிலையில் இருந்து மாறுபடவேண்டும என்ற நோக்கத்தோடு தான், கடந்த காலக் கடன்களை, அந்த நிர்வாகம் இருந்தபோது செய்த கடன்களை அரசு ஏற்றுக்கொள்ளாது என்கிற முறையிலே 30-வது பிரிவிற்குத் திருத்தம் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில், குறிப்பாக ஆசிரியர்கள் பொறுத்தவரைக்கும் அவர்களுக்கு தரவேண்டிய சம்பள பாக்கி இருக்குமானால், அத்தகைய கல்லூரிக்கு வருமானம் இருக்குமானால், அந்த ஆசிரியர்கள் நிலை என்ன என்று கேட்டார்கள். கல்லூரிகளின் நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ளுகிறபோது, அனைத்துக் கல்லூரிகளும் ஏழைக் கல்லூரியாக இருப்பது இல்லை. சில கல்லூரிகளை எடுத்துக் கொண்டால் பண வசதி இருக்கிறது. பல இடங்களில் அவர்கள் அதை முடக்கி வைத்து இருக்கிறார்கள். அதில் இருந்து வரும் வருமானத்தை டிரஸ்ட் சேர்த்து பல பிரிவுகளில் பிரித்து அனுப்பிவிடுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் கல்லூரிகளில் பணிசெய்யும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கவோ அல்லது மாணவர்களுக்கு செய்யவேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கோ அவற்றைப் பயன்படுத்த இயலாத நிலை இருக்கிறது. அத்தகைய கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அநத நிர்வாகத்தை அரசு மேற்கொள்கிறபோது, அரசு வெறும் நிர்வாகத்தை மட்டும் மேற்கொண்டு, அரசுத் துறை மானியத்தை தந்து, அந்தக் கல்லூரிகளை நடத்துவதோடு இருக்காமல், அப்படிப்பட்ட கல்லூரிகளில் அவர்கள் டொனேஷன் வாங்கிய பணமாக இருந்தாலும், மற்ற வழிகளில் அவர்கள் சேமித்துவைத்து இருந்தாலும், கல்லூரிகளின் பெயரில் எங்கெங்கு முடங்கி வைத்து இருக்கிறார்களோ, அதனுடைய வருமானத்தை மறைமுகமாக நுகர்ந்து கொண்டு இருந்தாலும் சரி, அதைக்





கண்டுபிடித்து, அதிலிருந்து வரும் வருமானத்தை ஆசிரியர்களின் நலனுக்காகவும், மாணவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகவும், கண்டிப்பாக பயன்படுத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

அதுமட்டுமல்ல, அத்தகைய கல்லூரிகளை நன்னிலைப் படுத்திய பிறகு தனியார்களிடத்தில் கொடுப்பது கிளியை பூனை கையில் கொடுப்பது போல் இருக்காதா என்று திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். பூனையிடமிருந்து பெற்றதை நாம் மீண்டும் பூனையிடம் கொடுக்கும் நிலை கூடாதுதான். அத்தகைய தவறான நிர்வாகம் நடத்துகிற கல்லூரிகளை 5 ஆண்டு காலத்திற்கு அரசு ஏற்று, அப்படியும் நிர்வாகம் சரியாகவில்லை என்று தெரிந்தால் மீண்டும் 5 ஆண்டு காலத்திற்கு அரசே நிர்வகித்து, மீண்டும் அது பூனையிடம் சென்று சேரவேண்டுமா என்றால் அத்தகைய கல்லூரிகளை அரசு நிரந்தரமாக ஏற்றுக்கொள்ள தனியாக சட்டம் இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் அந்த அணுகுமுறைகளை கையாளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்திரு. துரை முருகன் அவர்கள் பேசும் போது வேண்டாதவர்களைப் பழிவாங்கும் நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவார்களோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். அத்தகைய நிலை கண்டிப்பாக இந்த ஆட்சியில் ஏற்படாது என்ற உறுதிமொழியை நான் தருகிறேன். தவறான நிர்வாகம் நடைபெற்றால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயனளிக்கின்ற வகையில் அத்தகைய கல்லூரிகளை மட்டும்தான் அரசு ஏற்று நடத்தும்; அதற்காகத்தான் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று கூறி, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி '' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 47/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(பேரவைத் தலைவர்) [1980 ஆகஸ்ட் 12

பிரிவு1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே' நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

திர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(ஆ) விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையான மாற்றம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில் இனம் 6 (சட்ட முன்வடிவு எண். 48/1980) என்பதை எடுத்துக்கொள்ளாமல், அடுத்து இருக்கிற இரண்டு இனங்களான 7 (சட்ட முன்வடிவு எண். 49/1980), 8 (சட்ட முன்வடிவு எண். 50/1980 ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஊ. குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1980) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் '' என்று மொழிகிறேன்.

* 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவை முன்னே வைக்கப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை முழுமையாக எங்களால் ஆதரிக்க முடியவில்லை. காரணம் இதுவரை அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரேடு 1 அல்லது கிரேடு 2-ல் இருக்கிறவர் மத்திய அரசு சட்டத்தின் மூலம் பப்ளிக் பிராசிகியூட்டர் அல்லது அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டராக ப்ரமோஷன் ஆகக்கூடிய நிலையில் இருந்தது. 7 ஆண்டு காலம் வக்கீல் வேலை பார்த்தவர் அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் அல்லது பப்ளிக் பிராசிகியூட்டராக நியமிக்கப்படலாம்; இந்த அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கேடரில் இருக்கிறவர்களை அந்தப் பதவிக்கு எடுக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வருகிற காரணத்தால் இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[இரவு 7—00]

பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவோ அல்லது அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவோ வருபவர்கள் நடுநிலையாளராக இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் பார்க்கின்றபோது அரசியல் வாதிகள்தான் அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களாகவும் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். ஒரு ஆட்சி மாறி இன்னொரு ஆட்சி வந்தவுடன் பப்ளிக் ப்ராசிக்யூட்டராக இருப்பவர்கள் வெளியே போகவேண்டிய நிலைமை இருக்கின்றது. அப்படி இல்லாமல் நடுநிலைக் கொள்கையோடு வழக்குகளை நடத்தக்கூடியவர்கள் வரவேண்டும். ஆகவே பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களையும் அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களையும் நேரடியாக ரெக்ரூட் செய்யவேண்டும் என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பார்கவுன்சில்லே அட்வகேட்டாக இருப்பவர்களிலிருந்து பப்ளிக் ப்ராசிக்யூட்டர் வேலைக்கு எடுக்க வேண்டும் என்ற கருத்திலே வேறுபாடு கிடையாது. ஆனால் முழுமையாக அவர்களைத் தான் பப்ளிக் ப்ராசியூட்டராக நியமிக்கவேண்டும் என்பதையும் ஏ. பி. பியாக இருக்கக் கூடியவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கின்ற வாய்ப்பே இல்லாமல் அடைத்துவிடக்கூடிய நிலைமையையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. எ. பி. பியாக இருக்ககூடியவர்களில் திறமைக் குறைவானவர்கள் இல்லாமல் இல்லை. ஏ.பி. பியாக இருக்கக் கூடியவர்களில் சிலர் திறமைக் குறைவானவர்கள் இருக்கலாம். ஆனால் அதற்காக அவர்களுக்கு ப்ரமோஷன் வாய்ப்பே கிடையாது, அதை அவர்கள்

இழந்து விடவேண்டும் என்று சொல்வது தவறு. அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டராகவும், பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும் வருகின்ற வாய்ப்பு நமக்கு வராது என்ற எண்ணத்தை ஏ.பி.பி. யாக இருப்பவர்களுக்கு ஏற்படுத்தக் கூடாது. ஏ. பி. பி. கிரேட் 1-ஆக இருந்தாலும் சரி கிரேட் 2 ஆக இருந்தாலும் சரி அவர்களுக்கு அந்தமாதிரி எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது. அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கு வந்தால் அவர்கள் தவறான ஒரு பாதையிலே செல்வதற்கு அந்த எண்ணம் ஒரு துணையாக இருக்கும் என்பதால் நான் என்னுடைய இந்தக் கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏ.பி. பியாக இருப்பவர்களில் பலபேர் திறமைக் குறைவானவர்கள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக அண்மையிலே உயர்நீதிமன்றத்தில் ஜட்ஜாக இருந்து ரிட்டையர் ஆன திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் முதலில் ஏ.பி. பியாகத்தான் இருந்தார் செங்கல்பட்டிலே. அப்படி இருந்து பப்ளிக் ப்ராசிக்யூட்டராக ஆகி அதற்குப் பிறகு மாகாணத்திலே பப்ளிக் ப்ராசிக்யூட்டராக ஆகி அதற்குப் பிறகு பெருமை வாய்ந்த உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகி தற்போது ரிட்டையர் ஆகி இருக்கிறார்கள். அப்பேர்பட்ட திறமை வாய்ந்த அறிஞர்கள் எல்லாம் ஏ.பி.பி. கிரேட்-1 ஏ.பி.பி. கிரேட் 2-லே இல்லாமல் போய்விடுவார்கள் என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

ஏழு ஆண்டுகள் பார் கவுன்சிலிலே இருந்துவிட்டால் அவர்களை அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும், பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும் ரெக்ரூட் செய்யலாம் என்பது பொலிட்டிக்கல். வேண்டுமென்றே உங்கள் கட்சிக்காரர்களையும், உங்களுக்கு வேண்டியவர்களையும் ரெக்ரூட் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் திருத்தப்படுகிறதே தவிர வேறல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், வேண்டுமானால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இந்தப் பேனலை அப்ரூவ் செய்யட்டும். ஒரு நூறு வக்கீல்கள் மனுப் போடுகின்றார்கள் என்றால் அவர்களைப் பேட்டி கண்டு அந்தப் பேனலை செலக்ட் செய்யக்கூடிய பொறுப்பை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் ஒப்படையுங்கள். அப்படி ஒப்படைத்தால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அரசாங்கமே நேரடியாக கலெக்டருடைய ரிப்போர்டையும், எஸ். பி. யினுடைய ரிப்போர்டையும் கேட்டு ஹோம் டிப்பார்ட்மெண்ட் மூலமாக ரெக்ரூட் செய்து உத்தரவு போடுவதன் காரணமாக அரசியல் இந்தநிலையிலே புகுத்தப்படுகின்றது. ஆகவே நான் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். மேலும் ஏ.பி.பிக்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்ற காரணத்தால் இதை நான் சொல்கிறேன்.





வேண்டுமானால் பார்கவுன்சிலிலே இருந்து இரண்டு பேரையும் இந்த ஏ.பி.பி.க்களிலே இருந்து ஒருவரையும் ரெக்ரூட் செய்யுங்கள். அதாவது 2 : 1 என்றவிகிதத்திலேயாவது ரெக்ரூட் செய்து ஏ.பி.பி.யாக இருப்பவர்களுக்கு அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும், பப்ளிக் பிராசிக்யூட்டராகவும் வருவதற்கு வழி வைத்திருப்பீர்களேயானால் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செயலாற்ற உதவியாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் 'நாம் ஏ.பி.பி.யாக நல்லபடியாக நடந்து கொண்டால்தான் அதாவது, லஞ்சம் வாங்காமல் நேர்மையாக நடந்து கொண்டால் தான் நமக்கு அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டராக வருவதற்கும், பப்ளிக் பிராசிக்யூட்டராக வருவதற்கும் வாய்ப்பு கிடைக்கும்' என்று எண்ணி செயல்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அவர்களுக்கு அந்த கான்பிடன்ஸை ஏற்படுத்த வேண்டும். அப்படி இல்லை என்றால் 'நமக்கு இதை விட வேறு வழி கிடையாது, இத்தோடு கெட்டு ஒழிய வேண்டியதுதான், ஏ.பி.பி. கிரேட் 1 தான் நமக்கு இருக்கக்கூடிய கடைசி நிலை' என்ற எண்ணம் ஏற்பட்டு அதன் மூலம் வழக்குகள் சரியாக நடைபெறாது. லஞ்சம் அங்கே தாண்டவம் ஆடத்தான் செய்யும். ஆகவே அந்த முறையை நான் எதிர்க்கிறேன். இரண்டு பேர்களை பார் கவுன்சிலிலே இருந்தும் ஒருவரை ஏ.பி.பி.யிலே இருந்தும் ரெக்ரூட் செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கும் அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். ஆகவே இந்த மசோதாவை நான் முழுமையாக வரவேற்க முடியவில்லை. இருந்தாலும் இப்போது சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதை நான் மறைக்க வில்லை. டிஸ்ட்ரிக்ட் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களாக இருக்கக்கூடியவர்கள் அதாவது ஏ.பி.பிக்களாக இருந்து சென்ட்ரல் அக்ட் பிரகாரம் பிரமோஷனிலே வந்தவர்களுக்கு போதுமான திறமை இல்லாமல் இருப்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆனால் எல்லோருக்கும் இல்லை என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. வருங்காலத்தில் வரக்கூடியவர்களுக்கு இல்லாமல் போய் விடும் என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. ஆகவே 2 : 1 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். அந்தப் பானலை செலக்ட் செய்யும் அதிகாரம் சர்வீஸ் கமிஷனுக்கு இருக்க வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களை சொல்வதில் தவறு இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஏ.பி.பி. யாக நியமனம் செய்யும்போது நல்ல திறமையான, அனுபவம் உள்ள ஆட்களைத்தான் ஏ.பி.பி. யாக நியமனம் செய்யவேண்டும். அப்படி ஏ.பி.பி.யாக நியமனம் செய்யப்படுவார்கள், ஏ.பி.பி. எக்ஸ்பீரியன்ஸ் கிடைத்தபிறகு அவர்களுக்கு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 12

பிரமோஷனல் ஆப்பர்சூனிட்டி கொடுப்பதில் தவறு கிடையாது. அப்படி ப்ரமோஷனல் ஆப்பர்சூனிட்டி கொடுப்பது என்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய வழக்கமும் கூட, ஆகவே ஏ.பி.பி.யாக நியமனம் செய்யும்போது சரி அல்லது பி.பி. யாக நியமனம் செய்யும்போதும் சரி பொதுவாக நியமனம் செய்யும் போது எடுத்துக் கொள்ளவேண்டிய முறைகள்பற்றி என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று பாரில் பிராக்டீஸ் செய்யக்கூடியவர்களை ஏ.பி.பி. அல்லது பி.பி. என்று சொல்லி கால அளவு வைத்து நியமனம் செய்வதால் அவர்கள் பிராஷக்யூஷன் செய்யும் கேஸ்களைப் பொறுத்தவரையில் அவற்றை நல்லமுறையில் நடத்தி மக்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய வகையில் செய்ய வேண்டும். ஆனால் பிரத்தியேகமாக ஏழை மக்களுக்கு நியாயம் ஏற்படுத்திக் கொடுப்பதில் அக்கறை இல்லாத முறையில் இருப்பதை ஒரு சில எடுத்துக் காட்டுக்களோடு சொல்ல விரும்புகிறேன்.

நம் நாட்டிலுள்ள பல பாக்டரிகளில் லேபர் லாஸ், லேபர் சட்டங்கள் ஒழுங்காக நடத்தப்படவில்லை என்பதற்காக மானேஜ்மென்ட்கள் மீது ப்ராஸிக்யூஷன் நடத்தப்படுகின்றன. ஒரு க்ரிமினல் கேஸில் ஏ.பி.பி. எந்தளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டு நடத்துகிறாறோ அந்த முறையில் லேபர் கேஸ்களை, மானேஜ்மென்ட் ப்ராஸிக்யூட் செய்யப்படுகிற நேரத்தில் அந்த மானேஜ்மெட்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கேஸ்களை படிப்பதில்லை, கேஸ்களை ஒழுங்காக நடத்துவதில்லை. எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காந்திமதி போன்ற பல தோட்ட முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தை சரியாக அமல்படுத்தவில்லை என்பதற்காக லேபர் டிப்டார்மென்ட் ப்ராஸிக்யூட் செய்யும் போது ஏ.பி.பி. கேஸை ஒழுங்காக நடத் தாததால் மானேஜ்மென்ட் தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படுகிற ஒருநிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் லேபர் டிப்பார்ட்மென்ட்டுக்கே மானேஜ்மென்ட்கள் மேல் பிராஸிக்யூட் செய்யப்படுகிறபோது, ஒரு ஐயமும், அச்சமும் ஏற்படுகிறது. ஆகவே லேபர் சட்டங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கக்கூடிய முறையில் ஏ.பி.பி.-க்கள் கேஸ்களைப் படிப்பதில்லை, ஹாண்டில் செய்வதில்லை.

அதோடுகூட ஏழை மக்கள் சம்பந்தப்பட்ட கேஸ்களை வித்ட்ரா செய்யவேண்டுமென்று மனு கொடுக்கும்போது அந்த மனுக்கள் சரியாக பரிசீலனை செய்யப்பட்டு ரெக்கமென்ட் செய்யப்படாததால் அந்த ஏழை மக்கள் சம்பந்தப்பட்ட சில கேஸ்கள் வாபஸ் பெறமுடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. ஐந்தாறு ஆண்டுகள் ஏ.பி.பி.யாக இருந்து விட்டு மறுபடியும் ப்ராக்டீஸ்-க்கு போகும்போது அந்த முதலாளிகளுக்காக வாதாடவேண்டிவரும்



1980 ஆகஸ்ட் 12] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

என்ற எண்ணத்தோடு அவர்கள் ஏ.பி.பி. பதவியை ஒழுங்கான முறையில், அரசாங்கத்திற்கு விசுவாசமாக, நாணயமாக வகிக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அதனால் ஏழை மக்களுக்கு நியாயம் கிடைக்காத ஒரு நிலைமயும் ஏற்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவகிரி தோட்டத்தில் தொழிலாளர்மேல் ஐம்பதுக்குமேல் போலீஸ் போட்டிருக்கக்கூடிய கேஸ்களில் ஒன்றுகூட தண்டிக்கப்படவில்லை. ஆனால் ஏ.பி.பி. அந்த ஏழை தொழிலாளர்கள்மீது கேஸ் போட்டு போலீஸ் டிப்பார்ட்மென்ட் கொடுக்கக்கூடிய சார்ஜ் ஷீட்டினை ஓ.கே. செய்துவிடுவதால் ஏழை மக்கள் தொந்தரவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

[இரவு 7-10]

ஆகவே இப்படிப்பட்ட குறைபாடுகள் நடைமுறையில் ஏற்படுகிறது. ஏனென்றால் அவர்களைப் பொருத்தவரையில், அதாவது, ஏ.பி.பி.க்களைப் பொருத்தவரையில் அவர்கள் பதவிக் காலத்திற்குள், அது இரண்டு வருஷமோ நான்கு வருஷமோ, அதற்குள் பணம் சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். முடிந்தால் மேலும் வெளியிலே சென்றால் எப்படி பணம் சேர்ப்பது என்பதையும் யோசித்து ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். ஆகவே, ஏ.பி.பி.க்களைப் பிரமோட் செய்வதில் நியாயம் இருக்காதா, நன்மைகள் ஏதாவது இருக்காதா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கோ. விஸ்வநாதன்:</u> அவைத் தலைவர் அவர்களே, பப்ளிக் பிராசிக்யூடர், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூடர் அப்பாயின்ட்மென்டிற்காக கொண்டு வரப்பட்ட இந்த சட்ட மசோதாவின் விவாதத்திலே கலந்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே நம்முடைய தமிழகத்திலே பப்ளிக் பிராசிக்யூட்டர்ஸ், அடிஷனல் பப்ளிக் பிராசிக்கியூட்டர்கள், முதலிலே வழக்கறிஞர்கள் மத்தியிலே இருந்து நியமிக்கப் பட்டவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் இடையிலே வந்த இரண்டு மாத ஜனாதிபதி ஆட்சியிலே அவர்கள் எல்லாம் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக ஏ.பி.பி.க்களிலிருந்து சில பேர்களை நியமனம் செய்திருக்கிறார்கள்.

நான் முதலிலே இதை அருமை நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆதரிப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர் இதை எதிர்த்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தீவிரமாக ஆதரிப்பார்கள்

என்று எதிர் பார்த்தேன். காரணம் 1967-லேயிருந்து 76 ஜனவரி வரை அந்தக் கொள்கை தமிழகத்திலே இருந்தது. அதை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எதிர்த்ததிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்து நிர்வாகத்தினை எதிர்க்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்?

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :</u> தலைவர் அவர்களே, நான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்தது தவறு என்று சொல்லவில்லை. அந்த ஆட்சி இருந்த சமயத்திலே கூட இப்படி சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தால், நான் இதையே சொல்லியிருக்கக்கூடும். சொல்வதிலே இருக்கிற நியாயத்தைப் பார்க்க வேண்டுமே தவிர ஏதோ நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதாக சொல்ல வேண்டாம் என்று கூற விரும்புகிறேன்.

<u>திரு. கோ. விஸ்வநாதன் :</u> தலைவர் அவர்களே, அவர் விளக்கம் அளித்ததற்கு நன்றி, அவர் விளக்கத்திலிருந்து அவர் மீண்டும் தன்னுடைய கட்சியின் கருத்திலிருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது பொலிட்டிக்கலாகவும் அப்பாய்ன்ட்மென்ட் செய்திருக்கிறார்கள். தகுதி பெற்றவர்களையும் நியமனம் செய்திருக்கிறார்கள்...................

<u>திரு. துரைமுருகன் :</u> தலைவர் அவர்களே, எனக்கு அவர் ஒரு கருத்தை விளக்க வேண்டும். நியாயமான முறையில் நியமனம் செய்திருப்பதாகவும் சொல்கிறார். பொலிடிகலாக அப்பாயின்ட்மென்ட் செய்திருப்பதாகவும் சொல்கிறார். இரண்டும் எப்படி சரியாக இருக்கும்.

<u>திரு. கோ. விஸ்வநாதன் :</u> இரண்டும் ஒன்றுக்கொன்று சரியாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. வெவ்வேறு காலக் கட்டத்தில் வெவ்வேறு நபர்களை அப்படி நியமனம் செய்திருந்தால், இரண்டும் சரியாகத்தான் இருக்கும். நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒருவரை முதலில் பொலிட்டிகலாக அப்பாயிண்ட்மெண்ட் செய்தார்கள். அவர் தகுதி குறைவு என்றும், எக்ஸ்பீரியன்ஸ் இல்லை என்றும் வழக்குப் போட்டு, வழக்கில் அவரை அந்தப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டு, வேறு ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் பதவி ஏற்றுக்கொண்டார். இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடந்திருக்கின்றன.





ஆகவே, அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறா வண்ணம் இந்த அரசு கவனித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, நல்ல வழக்கறிஞர்களை நம்முடைய துணைத் தலைவர் பாண்டியனைப் போன்று திறமை மிக்க வழக்கறிஞர்களாக நியமிக்க வேண்டும் என்று சொல்லி, வரவேற்று அமர்கிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொருத்தவரைக்கும் 1978 ஆம் ஆண்டு மத்திய சட்டம் 45-ன் 24-வது பிரிவுக்கு திருத்தம் கொண்டு வரப்படுகிற காலம் வரைக்கும், கடந்த காலத்தில் இருந்த நடைமுறையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்கிற நோக்கத்தோடு தான் இந்தத் தீர்மானம் இப்பொழுது அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே இரண்டு முக்கியமான காரியங்கள் அடங்கியிருக்கின்றன.

(1) குற்ற வழக்குகளைப் பொறுத்த வரைக்கும் நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில், திறமை மிக்கவர்களாக, அரசுச் சார்பாக குற்ற வழக்குகளை நடத்துபவர்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அனுபவம் மிக்கவர்களை இந்தப் பதவியில் நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஏ.பி.பி. (2) ஆக இருந்து ஏ.பி.பி. (1) ஆக ஆக்கி அவர்களை பி.பி. யாகக் கொண்டுவருகிறபோது ஏற்படுகிற குறைபாடுகள், நேரடியாக பாரில் இருந்து அனுபவ மிக்கவர்களை இந்தப் பதவிக்கு நாம் அமர்த்துகிறபோது அந்தப் பிரச்னைகள் தீர்ந்துவிடும், வழக்குகள் திறமையாக நடத்தப்படும், மக்களுக்கு நன்மை கிட்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். ஏ.பி.பி.யைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அவர்கள் முதலாளிகளுடன் இணைந்து உடந்தையாக மாறி ஏழைத் தொழிலாளர்களுக்கு நீதி கிட்டாத முறையில் செயல்படுகிறார்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு அதுபற்றிய குறிப்புகளை எனக்கு தருவார்களானால் கண்டிப்பாக கடுமையான நடவடிக்கையை நான் எடுப்பேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். இந்தத் திருத்தம்

[திரு. சி. பொன்னையன்] [1980 ஆகஸ்ட் 12

குறிப்பாக குற்ற வழக்குகள் திறம்பட நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு வழக்கறிஞர்களுக்குள் திறமை மிக்கவர்களை இதில் அமர்த்திச் செல்கிறபோது நல்ல முறையில் ஏழைகளுக்கு தீர்ப்பு கிட்டும் என்று நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டுள்ளதால் இதை பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' 1980-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1980) நிறைவேற்றப்பெற வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

'' 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1980) ஆய்வுக்கு * எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''

*1980-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 12]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

ஏற்கனவே சிறையில் ஆயுள் தண்டனை பெற்று கைதிகளாக இருப்பவர்கள் பத்தாண்டுக் காலத்தில் ஒரு போர்ட் வைக்கப்பட்டு அந்தப் போர்டால் அவர்கள் செலக்ட் செய்யப்பட்டால் அவர்களுக்கு விடுதலை கிடைக்கும். அடுத்து, மருத்துவர் சர்ட்டிபிகேட்டை வைத்து விடுதலை அளிக்கப்பட்டும் வந்தது. அதை மத்திய அரசு மாற்றியமைத்து ஒரு குற்றவாளி கொலைக் குற்றம் செய்தவன் என்று ஆயுள் தண்டனை பெற்றால், தூக்குத் தண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டால் 14 ஆண்டுகள் தீர்ந்த பிறகுதான் விடுவது என்று பிரச்னையே வர வேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்தத் திருத்தம் தேவை இல்லை என்று சிறை புணர்வாழ்வு பற்றி போட்ட குழு கருத்து தெரிவித்திருக்கிறது. அதன் அடிப்படையில் இப்போது இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

குற்றத்திற்கு தண்டனை தருவது என்பது குற்றவாளி தண்டிக்கப்படவேண்டும் என்பது, சமுதாயத்திற்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பது அடுத்தபடியாக வருகிறது.

[இரவு 7—20]

குற்றவாளி திருந்த வேண்டுமென்ற அடிப்படையிலே, அவர்கள் மேல் உள்ள ஒரு கருணை உள்ளத்தாலே இதைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் உள்ளபடியே அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், நான் தெரிவித்துக் கொள்ள விழைவதெல்லாம், ஏற்கனவே இந்த சட்டத்திலே 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு போர்டு வந்தது. இப்போது அது 14 ஆண்டுகளுக்குப் போயிருக்கிறது. நீங்கள் மறுபடியும் அதை எந்த நிலைக்குக் கொண்டுவரப்போகிறீர்கள்? 14 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனையை அனுபவிப்பதற்கு முன்னாலே விடுவிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்று அரசு கருதுகிறது. ஆகவே, 14 ஆண்டு காலத்திற்கு முன்னாலே விடுவிக்க வேண்டுமானால், எத்தனை ஆண்டு காலத்திற்கு நீங்கள் அந்த போர்டை வைக்கிறீர்கள். பழையபடி 10-க்குப் போகிறீர்களா? அல்லது ஆந்திரா, கர்நாடகா, கேரளாவிலே இருப்பதைப்போல் 8 ஆண்டு காலத்திலே போர்டை வைக்கப் போகிறீர்களா? இதைக் கொஞ்சம் அறுதியிட்டுச் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும், ஆனால், நீங்கள் சொல்லாவிட்டாலும், என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன்.

அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு 8 ஆண்டு காலத்திலே போர்டை வைத்து, அது 10 ஆண்டு காலத்திற்குள்ளாகவே, அந்த போர்டு இரண்டாவது முறை, ஒரே முறையிலே வந்து விடுவதில்லை, 2 முறை, 3 முறை கூட ஆகும். அப்படி 3 முறையிலே 10 ஆண்டு காலத்திற்குள்ளாக அந்தக் குற்றவாளி வெளியே வந்துவிடுகிற அளவுக்கு இந்த போர்டு துணை புரிகின்ற அளவுக்கு அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளபடியே வருத்தப்படுகிறோம். ஒருபுறத்திலே, கொலை செய்துவிட்டவர்கள் உள்ளே வந்திருக்கிறார்களே, அவர்களை விடுவிப்பதா என்று பேசுகிறோம். ஆனால் தலைவர் அவர்களே, ஓராண்டு காலம் நான் மிசாக் கைதியாக இருந்த காலத்தில், நான் அவர்களோடு பழகியிருக்கிறேன். சென்னைச் சிறைச்சாலையிலும் பழகியிருக்கிறேன். கொலை கோபத்தின் அடிப்படையிலே தான், கோபம் எல்லாவற்றிற்கும் தாய் தந்தை என்பார்கள், அந்த கோபத்தின் அடிப்படையிலே நடந்துவிட்ட அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி இது. ஆனால், நான் சிறைச்சாலையிலே அவர்களைப் பார்க்கிறபோது, இந்த மனிதனா அதைச் செய்தான் என்று சொல்வார்கள். கிளியினிடத்திலே பாசம்; அங்கிருக்கிற பூனையினிடத்திலே பாசம்; மற்றும் அங்கே வளர்க்கின்ற பிராணிகளிடத்திலே பாசம்; கைதிகளிடத்திலே பாசம்; பக்தி; அன்பு, இவ்வளவையும் பெற்றிருக்கிற அந்த மனிதன் ஏதோ விரகதாபத்தாலே, அவனுக்கு ஏற்பட்ட திடீரென்று வந்த அந்த கோபத்தின் அடிப்படையிலே ஒரு கொலையை நிகழ்த்தி இருக்கிறானா என்று நாமே ஆச்சரியப்படத்தக்க வகையிலே இருக்கிறது. ஆகவே, அவன் திருந்துவதற்காகத்தான் தண்டனையைத் தருகிறோம். திருந்திவிட்ட அவனை வெளியே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற காரணத்தின் அடிப்படையிலே விரைவாக வெளியே கொண்டுவர வேண்டுமென்பதற்காக நீங்கள் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடைப்பட்டவன் அடைப்பட்டவனாகவே இருக்கிறான். தென் ஆற்காடு அல்லது அதற்குப் பக்கத்திலே உள்ள வட ஆற்காடு மாவட்டத்திலே கொலை குற்றம் செய்த ஒருவனை ஆயுள் தண்டனையாக வேலூர் சிறையிலே வைக்கலாம். செங்கற்பட்டுக்காரரை சென்னையிலே வைக்கலாம். ஆனால் செங்கற்பட்டுக்காரரைக் கொண்டுபோய் திருநெல்வேலியிலும், திருநெல்வேலிக்காரரைக் கொண்டுபோய் வேலூரிலும் வைப்பது என்பது தர்மத்திற்கும், கருணைக்கும் அப்பாற்பட்டது. காரணம், அவரைப் பார்ப்பதற்கு அல்லது அவருடைய





வீட்டுக்காரர்கள் வருவதற்கு 2. 3 நாட்கள் ஆகிறது. எனவே கூடுமான வரையில் அந்த மாவட்டத்தைத் சுற்றியிருக்கிற சிறைச்சாலைகளிலே தான் அந்தக் கைதிகள் வைக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இரக்கத்தின்பாற் கொண்டு இந்தத் திருத்தத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அடுத்து, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். திடீரென்று அவருடைய தாய் செத்து விடுகிறார்; அல்லது தகப்பன் மாண்டு விடுகிறார் என்றால் இவர்கள் பரோலில் போவதற்கு படாதபாடு படுகிறார்கள். நான் நேரிலே இதைக் கண்டவன். முற்றும் துறந்த முனிவர் பட்டினத்தார்கூட தாய் செத்தவுடனே ஓடிப்போய்ப் பார்த்தார். ஆனால், இந்த கைதி தாய் மறைந்து விட்டபிறகு, ஓடிப்போய்ப் பார்த்து ஈமக்கடன்களைச் செய்ய முடிவதில்லை. அப்படிப்பட்ட அவசரமான, அதிமுக்கியத்துவம் வாய்ந்த நேரங்களில் எல்லாம் அவர்கள் பரோலில் போவதற்கு ஒரு 15 நாட்களுக்கு அதாவது மணியக்காரர், கணக்குப்பிள்ளை, ஊரில் இருக்கின்ற பிரசிடென்ட், மற்றும் யாரிடத்திலே இருந்தாவது சர்டிபிகேட் வாங்கிவந்து, அப்பா, அம்மா செத்துப்போய் விட்டார்கள் என்று சொன்னால், இந்தக் கைதிகளை வெளியே விடலாம் என்று அங்கே இருக்கிற சிறை சூபரின்டென்டென்டுக்கு, அவரே ஒரு 15 நாட்கள் பரோல் கொடுப்பதற்கு வேண்டிய வாய்ப்பையும், வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 10 ஆண்டுக் காலம் தாய் தந்தையரைப் பிரிந்து, இந்த உலகத்தைப் பிரிந்து, ஒரு நான்கு சுவர்களுக்குள்ளே முடங்கி முடங்கி இருக்கும்போது அவர்கள் கூனிக் குறுகிப் போய் விடுகிறார்கள். எனவே, ஆண்டு ஒன்றிற்கு ஒரு மாத காலம் அவர்களுக்கு பரோல் தருவதற்கு வாய்ப்பும், வசதியும் தர வேண்டும். அதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10 ஆண்டுகள், 8 ஆண்டுகள் என்று அவர்கள் உழைத்து விட்டு வெளியே வருகிறபோது, மீண்டும் அவர்களுக்கு அவர்கள் என்றைக்குப் போட்டுக் கொண்டு வந்தார்களோ, அந்தத் துணியைக் கையிலே கொடுத்து, போய் வா என்று அனுப்பி விடுகிறார்கள். 10 ஆண்டுக் காலம் உழைக்கிறான்; நெய்கிறான் மற்ற எல்லா வேலைகளும் செய்கிறான். எனவே, அவனுக்கு சம்பளம் கொடுத்தாக வேண்டும். அவன் வெளியே வருகிறபோது, அவன் பிடிப்பிலே இருந்தாக வேண்டும்.

தவிர, நீங்கள் போடுகின்ற அந்த ஜெயில் சோற்றையே தின்று தின்று 10 ஆண்டுக் காலம் சலித்துப் போய்விடுகிறார்கள். அப்போர்ப் பட்டவர்களுக்கு பி. சி. அக்கவுன்ட் என்று சொல்வார்களே, அந்த அக்கவுண்டிலே இருந்து அவ்னாக்ச் சாப்பிடுவதற்கு ஒரு கான்டீன் தேவைப்படுகிறது. அந்தக் கேன்டீனை நீங்கள் அமைத்துத் தரவேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலையிலே நீங்கள் அவர்களைப் போடுகிறீர்கள். சிறைக்குள்ளேயே இருக்கிறார்கள். 5 மணியானால் பூட்டுகிறார்கள். பணக்காரன்கூட பணத்தை எண்ணமாட்டான். ஆனால், இங்கே 5, 5 பேர்களாக உட்கார வைத்து, 1, 2, 3 என்று எண்ணி உள்ளே அனுப்புவார்கள். அப்படி எண்ணும் போது, ஒருவன் இப்படி வந்துவிட்டால், ஒருவன் குறைந்துவிடுகிறான் என்ற மீண்டும் எண்ணி, அவ்வளவு கணக்காக எண்ணி விடுகிறார்கள்.

ஆனால் தலைவர் அவர்களே, தாங்கள் சிறைச்சாலையில் இருந்திருக்கிறீர்களோ இல்லையோ எனக்குத் தெரியாது.—தாங்கள் இருந்திருக்கிறீர்கள்; பெருமைப்படுகிறேன். அரசியல்வாதிகள் சிறைச்சாலைக்குப் போகாவிட்டால் சரியான அந்தஸ்து ஏற்படாது. ஆகையால் சொன்னேன். இங்கே உள்ள பெரிய கதவு மாதிரி ஜன்னலுடன் அமைக்கப்பட்ட கதவு. வெயில் அடித்தாலும், புயல் அடித்தாலும், பனி அடித்தாலும் உள்ளேதான் வரும். கொடுக்கப்பட்டிருப்பது ஒரே ஒரு துணி, கீழே ஒரு டிராயர். குளிரிலும் வெயிலிலும் செத்துக் கொண்டிருப்பான். அவர்கள் குற்றவாளிகளாக இருந்தாலும் கருணை காட்ட வேண்டும். சமுதாயத்திற்கு ஏற்றவனாக கைதியை மாற்ற வேண்டும். குற்றவாளி என்பதால் ஒரேயடியாகத் தீர்த்துவிட முடியாது. இந்த நாட்டில் தூக்குத் தண்டனை கூடாது என்ற முற்போக்கு எண்ணம் வளர்ந்து கொண்டிருக்கிறது. வெயிலில் அவன் கருவாடு மாதிரி காயவேண்டுமா?

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். சிறைச்சாலைபற்றி ஆராய, அறிய குழு வைத்தால் மட்டும் போதாது. எல்லா எம். எல். ஏ. -க்களும் திடீர் திடீரென்று சென்று பார்த்து இன்ஸ்பெக்ஷன் செய்ய அதிகாரம் இருக்கவேண்டும். அந்த அனுமதி இருந்தால் எம். எல். ஏ.க்கள் கைதிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள், எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து அதைப் பற்றி ஒரு புத்தகம் வைக்கப்பட்டு எழுதி வைக்கவோ அல்லது சர்க்காருக்கு எழுதி அனுப்பவோ முடியும். கருணையின்பாற்பட்டதாகும் இது. அவர்களுக்கு எட்டாண்டுக் காலத்தில் போர்டு வைக்கவேண்டும். பத்தாண்டுக் காலத்தில் குற்றவாளிகள் வெளியே வந்துவிடவேண்டும். இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் , லைவர்—தலைமை.





திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது அருமை நண்பர் துரை முருகன் அவர்கள் நீண்ட உரையாற்றியிருக்கிறார். அவர்கள் சிறைச்சாலையில் உள்ளே இருக்கிற நிலைமைகளைப் பற்றி யெல்லாம் நெஞ்சுருகப் பேசினார்கள். தீமையிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் 'மிசா' வில் உள்ளே இருக்கும்போது நாங்களெல்லாம் வருத்தப்பட்டோம். ஆனால் அப்படி இருந்த காரணத்தால்தான் அவர்கள் இவ்வளவு நியாயங்களைத் துல்லியமாகத் தெரிந்து கொண்டு இப்போது இந்த அவையில் பேசியிருக்கிறார்கள் என்று பெருமைப்படுகிறேன்.

ஆயுள் தண்டனை பெற்றவர்கள் 14 ஆண்டு காலம் சிறையிலே இருந்து தீரவேண்டுமென்பதை மாற்றியமைத்து அவர்களை முன்னதாக விடுதலை செய்ய வழிவகை செய்கிற இந்த மசோதாவை வரவேற்கிறேன். எல்லாக் கட்சியினரும் இதனை வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆயுள் கைதிகளாக உள்ளே செல்லுபவர்கள் அவர்கள் உள்ளே நடந்து கொள்ளுகிற முறையை ஒட்டி அவர்கள் முன்னதாகவே விடுதலை செய்யப்படுகிறார்கள். சிறைச்சாலையில் நல்லவர்களாக நடந்து கொண்டு தாங்கள் திருந்திவிட்டோம் என்று மற்றவர்கள், அதிகாரிகள் நினைக்கிற வகையில் நடப்பார்களானால் அப்படிப்பட்டவர்களைச் சில ஆண்டுகளுக்கு முன்னால் விடுதலை செய்வதில் தவறு இல்லை. சிறைச்சாலை என்பது ஒழித்துக் கட்டப்பட வேண்டுமென்பதற்காக அல்ல. உள்ளே வந்து அவர்கள் திருத்தப்பட வேண்டுமென்பதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேலூரில் ஒரு இன்ஸ்டிடியூஷன் கூட இருக்கிறது. தென் மாநிலங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதற்காக பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, சிறைச்சாலைக்குள்ளே இருப்பவர்கள் நல்லவர்களாக மாறியிருந்தால், நன்னடத்தை உள்ளவர்களாக இருந்தால் அவர்களை உள்ளே வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு முன்னதாகவே அவர்களை வெளியே அனுப்ப வழி செய்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப்பட்ட இந்த மசோதாவை வரவேற்கிறேன். நன்றி.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் மனதார வரவேற்கிறேன். இந்த நேரத்தில் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்—கொண்டுவந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசாங்கத்தையும் மனமாரப் பாராட்டுகிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு மசோதா வந்த

செய்தி சிறைக்குள்ளே போனால் அங்கிருக்கக்கூடிய ஜன்ம தண்டனைக் கைதிகளுக்கு மழை பெய்து நிம்மதி வருகிற மாதிரி நிம்மதி ஏற்படும். இப்போது வெளியே மழை பெய்கிறது. இங்கே '' கூலாக '' இருக்கிறது. அவர்கள் மனத்தில் இருந்த சுமை தணிந்துவிடும். அந்த முறையில் 14 ஆண்டுகளுக்கு முன்னாலேயே வெளியே விடுவதற்கான இப்படிப்பட்ட சட்டத்தை கொண்டுவந்திருப்பதற்காக மீண்டும் ஒரு முறை இந்த அரசாங்கத்தை மனமாரப் பாராட்டுகிறேன்.

[இரவு 7–30]

பிரிட்டிஷார் காலத்திலே அந்த முறை இருந்தது, இடையிலே மாற்றப்பட்டு இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலேயே அந்த முறை இருந்தது. ஒரு போர்டு வைத்து அவர்களை முன்னாலே விடுதலை செய்வது என்பது இருந்தது. 1940 ஆம் ஆண்டுக் காலத்திலேயே, பல முறைகள், நாங்கள் சிறைக்குப் போய் வந்தவர்கள். அப்போது போர்டு, போர்டு என்பார்கள் முதலிலே எங்களுக்குத் தெரியவில்லை. என்ன போர்டு என்று சொல்கிறார்களே, கார்டு போர்டா என்று நினைத்தோம். பிறகு தான் போர்டு என்று வைத்து அவர்களுடைய நடத்தையை தெரிந்துகொண்டு பிரிமெச்சூர் ரிலிஸுக்கு ரெக்கமன்ட் செய்வார்கள் என்பது தெரிந்தது. ஆனால், 14 வருஷத்திற்கு முன்னாலே பரிசீலனை செய்வதுகூட கூடாது, 14 ஆண்டுக்குப் பிறகு தான் பரிசீலனை செய்யவேண்டுமென்ற கொடுமையான முடிவை மத்திய சர்க்கார் எடுத்தார்கள். அதன் காரணத்தினால்தான் ஜன்மத் தண்டனைக் கைதிகளிடம் இந்தியா பூராவும் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது, பத்திரிகையிலே எல்லாம் கூட வந்தது. புனா ஜெயலில் ஏற்பட்ட லத்தி சார்ஜ் அதனால்தான். லைபர்ஸ் மத்தியிலே அந்த நிலைமை ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே பல்வேறு சிறைகளிலே உண்ணாவிரதம் நடந்தது, அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அப்படி மத்திய சர்க்கார் முடிவு எடுத்ததற்குப் பிறகு சிறைக்குள்ளே தற்கொலைகள் அதிகரித்து இருக்கின்றன என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அது இயற்கைதான். 14 வருடங்களுக்கு முன்னாலே விடுதலை இல்லை என்ற மனோபாவம், அந்த சைகாலஜி அவர்களிடம் ஏற்பட்டு இனி மேல் நாம் உயிரோடு போக முடியாது, நைட்டில் லாக்அப் பகலிலே வருவது இப்படிப்பட்ட வாழ்க்கையே வேண்டாம் என்ற முறையிலே தற்கொலை செய்கிறார்கள். ஒரு லைபருக்கு 73 வயதாகிறது, இன்னும் 10 ஆண்டுகள் அவருக்குத் தண்டனை இருக்கிறது என்றால் அவர் என்ன செய்வார், தற்கொலைக்குத் தான் முடிவு செய்வார். லைபர்ஸ் மத்தியிலே சிறை அதிகாரிகள் நடத்தக்கூடிய கொடுமைகளும் அதற்கு வழிவகுக்கிறது. நம்முடைய அமைச்சர் திரு. பொன்னையன் இந்த இலாகாவை எடுத்திருப்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். அவர் இந்த



இலாகாவோடு குஸ்திபோட்டு He has come o grasp the problem of the prisoners and the administration in Jails அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிற அவர் பல்வேறு பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. கொடுமைகள் என்கிறபோது திருச்சியிலே 2 தற்கொலைகள் நடந்தபோது—நம்முடைய சர்க்கார் கலைக்கப்படுவதற்கு முன்னாலே முதலமைச்சர் தலையிட்டு ஜுடிஷீயல் கமிஷன் அமைத்தார்கள். தற்கொலை நடந்தபோது பயரிங் நடந்தது ஜெயிலிலே. எண்பது பேர்கள் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார்கள். அவர்களில் சிலர் சாட்சியம் சொல்வதற்காக கொண்டுவரப்பட்டார்கள். ஜட்ஜ் முன்னாலே சாட்சியம் சொன்னார்கள். அவர்கள் திரும்பவும் வேலூருக்குக் கொண்டுபோகப்பட்டு பல விதமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அந்த நிலைமை இருக்கிறது. கேம்ப் ஜெயிலர் தியாகராஜன் இருக்கிறார். அவர்களை நிர்வாணமாக நிறுத்தி வைத்து அடிப்பது. தண்ணீரை ஊற்றி, ஊற்றி அடிப்பது. எதற்காக அப்படி அடிக்கிறார்களோ தெரியவில்லை. தலையை விகாரமாக ஆக்குவது, கிராப் பண்ணுவதில்லை, பாதி மொட்டையடிப்பது மீசையை பாதி எடுப்பது, இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் செய்யப்பட்டது. பிறகு அவர்கள் ஹங்கர் ஸ்ட்ரைக் செய்தார்கள், பிறகு நிறுத்தப்பட்டது. இதெல்லாம் நமக்கு வெளியே தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலையில் 14 வருஷங்கள் என்றால் தற்கொலைக்குப் போகத்தான் செய்வார்கள். லெனின் என்கிற ரெங்கசாமி திருச்சியிலே பயரிங்கில் அடிபட்டவர், இப்போது கால் அடிக்கடி வீங்கிக் கொண்டு இருக்கிறது. தொண்டை வலித்துக் கொண்டிருக்கிறது. அங்கே டி. எம். ஓ. தான் இன்-சார்ஜ் ஆக இருந்தார். அவர்தான் இன்-சார்ஜ் ஆக இருக்கிறபோது அவர் முன்னாலே வந்து சொன்னாரே என்று சொல்லி ஸ்பெஷலிஸ்ட் கன்சல்டேஷன் மறுக்கப்பட்டிருக்கிறது அவருக்கு. லெனின் என்கிற ரெங்கசாமி வீக் எலிமென்ட், அந்த தற்கொலை முயற்சிக்குத்தான் வருவார். அவருக்கு ஸ்பெஷலிஸ்ட் டிரீட்மென்ட்டும் இல்லை, 14 வருஷங்களும் இருக்க வேண்டுமென்றால் அந்த முடிவுக்குத்தான் வருவார். ஆனால் அவர் ஸ்டராங் மைன்டோடு இருக்கிறார். நின்று கொண்டிருக்கிறார்.

அடுத்து பரோல் விஷயத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால் போலீஸ் வெரிஃபிகேஷன் இல்லாமல் ஜென்ம தண்டனைக் கைதிகளை அடிக்கடி பரோலில் விடுவது என்று சொன்னால், அவர்களுக்கு ஃபேமிலியோடு அதிகத் தொடர்பு வரும். ஃபேமிலியோடு தொடர்பு வந்தாகிவிட்டது என்றால், They get naturalised.

அவர்களுக்கு அந்தக் குரோத மனப்பான்மை ஏதாவது இருக்கிறது என்று சொன்னால் அதைக் கொஞ்சம் நார்மலைஸ் பண்ணுவதற்கு உதவியாகிறது; கரெக்ட் பண்ணுவதற்கும் அவர்களுக்கு உதவியாகிறது. எனவே, அடிக்கடி பரோலும், பரோல் கொடுப்பதிலே டிலே இல்லாமல் இருப்பதும் ஒரு முக்கியமான விஷயமாக அரசாங்கம் செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை கனம் அமைச்சரவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். மரண தண்டனைக் கைதிகளை ஸாலிடரி கன்பைன்மென்ட்-லே வைப்பது என்பது சட்ட விரோதம் என்று சமீபத்தில் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் இருக்கிறது. அந்த ஜட்ஜ்மென்ட் இன்னும் நம்முடைய சிறைகளில் அமுல்படுத்தப்படவில்லை என்று நான் அறிகிறேன். திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் உள்பட இருக்கின்ற பெஞ்ச்-அவர்கள் கிளியர் ஜட்ஜ்மென்ட்டிலே ஸாலிடரி கன்பைன்மென்ட் என்பது அதுவே ஒரு தண்டனை ஜெயிலுக்குள்ளே. மரண தண்டனை என்பது ஒரு தண்டனை. A death sentenced prisoner being subject to another punishment or solitary confinement. டபிள் பனிஷ்மெண்ட் ஆகிறது என்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி வைக்கக்கூடாது என்றால் அதற்கும் வரையறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, under trial period—302 இருந்தாலும் வைக்கக் கூடாது;

சுப்ரீம் கோர்ட்டிற்கு அவர் கேஸ் போய் அவர் கன்ஃபர்ம் ஆனாலும் வைக்கக்கூடாது; பிரசிடென்ட் வரைக்கும் அந்த மனு இருக்கிறதே—கருணை மனு போட்டு அந்தக் கடைசி ரிலீஃப் முடிந்து விட்டது என்று சொன்னால், அப்புறம் ஸாலிடரி கன்பைன்மென்ட்டிலே வைத்துத் தூக்கிலே போடலாம். அதுவரைக்கும் ஸாலிடரி கன்பைன்மென்ட்-இலே வைத்தால் அது டபிள் பனிஷ்மென்ட் ஆகிவிடும் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் ஞாபகப்படுத்தி, அதற்கு security measures-ஐ அதிகமாக நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; எனக்கு ஆட்சேபணை இல்லை.

லைஃப் சென்டன்சில் இருப்பவர்களை "கான்விக்ட் வார்டர்" முறையில் வைப்பதைத் தயவு செய்து விட்டு விடுங்கள். எல்லோரும் குண்டடிப்பவர்கள் அல்ல; பல சமுதாயத்திலிருந்து வரக்கூடிய விஷயங்களிலிருந்து வரக்கூடிய ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். கான்விக்ட் வார்டர் முறையைத் தயவுசெய்து தாம் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு லைஃப் சென்டன்ஸ் ஆன ஒரு கைதியை



வார்டராக வைத்து, ஜெயிலுக்குள்ளே சிச்சுவேஷன் வருகிறபொழுது அவரை வைத்து அடுத்த கைதியை அடிப்பதற்கு—பொய் கேஸ் சார்ஜ் பண்ணுவதற்கு அவரை ஏவி விடுவது தப்பு பிரிசனர்களுக்குள்ளேயே ஒரு பிரிசனரை வைத்து இன்னொரு பிரிசனரை அடிக்க வைப்பது என்பது mostly inhuman அந்த அப்ரோச் சரி அல்ல. அது இப்பொழுது அல்ல; ரொம்பக் காலமாக இருக்கிறது. நம்முடைய சர்க்கார் இப்பொழுது பல புது சட்டங்களைக் கொண்டு வருவதால்தான் இதிலே ஒரு புதுமையான முறையை நீங்கள் கொண்டு வர வேண்டும். எனவே இந்த கான்விக்ட் வார்டரை-இந்த மாதிரி செய்யும் முறை வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போர்டுக்கு எப்பொழுது வருகிறது என்றால் எட்டு வருஷங்களுக்குப் பிறகு. நான் சொல்வது எட்டு வருஷம் அல்ல: அவருடைய-உள்ளே இருக்கக்கூடிய நடத்தையைப் பார்த்துக் கொண்டு அவர் நல்ல மனிதராக மாறி விட்டார் என்று திருப்திப்பட்டால் ஏழு வருஷங்கள் ஆனாலும்கூட The Government must have the power என்று இந்த போர்ட்டுக்கு அந்த பவர் இருக்க வேண்டும். அதாவது அந்த முறையிலே எட்டு வருஷம் என்று பேக் பண்ணாமல், அதற்கு எர்லியராகவே கூட அவர், Totally normal human being ஆக மாறிவிட்டால் இனிமேல் ஒரு புதுவாழ்க்கை நடத்துவார் என்ற ஒரு நம்பிக்கை போர்ட்டுக்கு ஏற்பட்டால், after all the examinations ரெவியூ எல்லாம் நடத்திய பிறகு என்று சொன்னால் அதற்கும் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே, சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதைச் சீக்கிரமாக அமல் நடத்த வேண்டும். இடைக்காலத்தில் அந்த போர்டு இல்லாததினாலே விடுதலையாக வேண்டியவர்கள் ஏராளமானவர்கள் அரீயர்ஸ் இருக்கிறார்கள். அப்படி அரீயர்ஸ் இருப்பதற்கு, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டவுடனே சீக்கிரமாக நார்மல் கோர்ஸிலே போர்டுக்கு விடுவது மாதிரி இல்லாமல் அரீயர்ஸ்ஸை தீர்ப்பதற்கு இந்த போர்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் பாஸ் ஆனவுடன் ஜெயிலுக்குள்ளே உள்ள கைதிகளுக்கு இப்படிப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று தெரியக்கூடிய முறையிலே எல்லா ஜெயில்களிலேயும் உள்ள கைதிகளுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் அந்த டென்ஷன் இப்பொழுது இருக்கிறது. இந்தச் சட்டம் வந்தாகிவிட்டது என்றால் (குறுக்கீடு) ஜெயிலே இந்தச் செய்தியை அடித்துவிட்டுக் கொடுக்கிறார்கள். என்னென்ன நடக்கிறது உள்ளே போனால்தான் தெரியும். நான் 40-வது ஆண்டின்று உள்ளே

டிலேயிருந்து ஜெயிலுக்கு போய் வந்து கொண்டு, போய் வந்து கொண்டிருக்கிறேன். அரசியலிலே அந்தத் துறையிலே என்னைக் கறுப்புக் குல்லாய் என்று கூப்பிடலாம். கறுப்புக் குல்லாய் என்று தான் பெயர் இந்த மாதிரி அடிக்கடி போய்விட்டு வருபவர்களுக்கு இந்த மாதிரி பொசிஷன் இருக்கிறது. அவர்களுக்குத் தெரியாது; மையால் அடித்துக்கொடுக்கிறார்கள். ஆகவே, அந்த மாதிரி இல்லாமல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; 14 வருஷம் என்று டோய்விட்டது; போர்டு பார்த்து முடிவு செய்வார்கள் என்ற சட்டத்தினுடைய செய்தியைச் சிறை பூராவும் பரப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மீண்டும் அரசாங்கத்தை இதற்காகப் பாராட்டி ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

]இரவு 7-40]

<u>திரு இரா. கருப்பையா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைக் கோர்வையை, தமிழ்நாடு மாநிலத்திற்கு உகந்தவாறு திருத்துவது என்கிற அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிற சட்ட அமைச்சரவர்களையும், இந்த அரசையும் நான் முழுமையாகப் பாரட்டுகின்றேன். ஒரு துணிச்சலான முறையிலேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பதினான்கு ஆண்டுகள் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே அந்தச் சிறைக் கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டும், கைதிகளைச் சீர்திருத்த வேண்டுமென்கிற நோக்கத்தோடு, தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழு அறிவித்திருக்கக்கூடிய அவர்களுடைய அறிவிப்பை, அவர்களுடைய சிபாரிசை ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இது, ஏதோ சிறையிலை இருக்கக்கூடிய கைதிகள் நிரந்தரமாக, சிறையிலே இருந்து விட வேண்டுமென்கிற எண்ணத்திலே அல்லாமல், அவர்கள் புனர்வாழ்வு பெற வேண்டுமென்கிற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட நேரத்திலே, திடீரென்று உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதன் காரணமாக, அதற்குரிய தண்டனையைப் பெறுகிறார்கள். சிலர் ஆயுள் தண்டனை பெறுகிறார்கள். சிலருக்கு மரண தண்டனையும் விதிக்கப்படுகிறது. நம்முடைய சுதந்திர இந்திய நாட்டில் மரண தண்டனை விதிக்கப்படுவது அவசியமா



என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, மரண தண்டனைக் கூட நீக்கப்பட வேண்டுமென்ற முறையிலே, அதற்கான முறையிலே, சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று வந்தால்கூட அது மிகவும் நல்லதாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சிறையிலே இருக்கிற கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற முறையிலே கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் அவர்கள் சிறையிலே நல்லமுறையிலே நடந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் அளிக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், அது வெள்ளையன் காலத்திலே யிருந்த போர்டு— 5 ஆண்டுகள் முடிந்தவுடனே போர்டு வைப்பார்கள்; அதற்கு பிறகு 7 ஆண்டுகளுக்குப் பிறகு வைப்பார்கள்; அதற்குப் பிறகு 10 ஆண்டுகளுக்குப் பிறகு வைப்பார்கள். அம்மாதிரியிருந்த முறைகளையெல்லாம் மாற்றி, 14 ஆண்டுகள் இருந்தால்தான் அவர்கள் விடுதலை பெறமுடியும் என்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்ததே, நல்ல நடைமுறையாக இல்லை என்கிற நோக்கத்தோடு அதை மாற்ற வேண்டுமென்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. வெள்ளையன் காலத்திலே, இந்தச் சிறைச் சாலைகள் அடக்குமுறை கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதும், சிறைக்குள்ளே செல்லக்கூடியவர்கள் முதலிலே பார்க்கக்கூடிய ஒரு ஞாபகச்சின்னமாக இருப்பது சிங்கம். சிங்கம் அப்படியே வாயைப் பிளந்துகொண்டு, வரக்கூடியவர்களைச் சாப்பிடக்கூடிய முறையிலேதான் இருக்கிறது. எந்தச் சிறைச்சாலைக்குச் சென்றாலும் சரி, திருச்சி சிறைக்குச் சென்றாலும்சரி, சென்னை சிறைக்குச் சென்றாலும் சரி, ஆகவே, வெள்ளையன் ஆட்சி போனதற்குப் பிறகு, இந்தச் சிறை என்பது ஒரு கொடுமையான கருவி என்பதை மாற்றக்கூடிய முறையிலே, அந்தச் சிங்கத்தை அகற்றுவது கூட பொருத்தம் உள்ள ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிறையிலே நடக்கக்கூடிய சில கொடுமைகளைப் பற்றி நான் சில வார்த்தைகளை இந்தச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன். சிறையிலே கைதிகள் நடத்தப்படக்கூடிய முறை, அவர்களைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக, அவர்கள் கொடுமையாக நடத்தப்பட்டு, மீண்டும் மீண்டும், அவர்கள் சிறைக்கு வருவதன் மூலமாக அதுவேதான் தங்களுக்கு இருக்கிற உலகம் என்ற முறையிலே, இன்றையதினம் நடைமுறை நிகழ்ச்சிகளாக, பலர் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடிய நிலைமையும் இருக்கிறது.

ஆகவே, அம்மாதிரி நிலைமைகள் மாற்றப்படவேண்டும். சிறையிலே நடக்கக்கூடிய கொடுமைகள், சாதாரண விஷயங்களுக்குக்கூட, இன்றையதினம் சிறை அதிகாரிகள் எவ்வளவு கொடுமையாக நடக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்லவிரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணி, பெருவாரியான வெற்றியைப் பெற்றதற்குப் பிறகு, அந்த வெற்றியைப் பாராட்டி, சென்னையிலே, 'பேன்டன்' சிறையிலே இருந்த ஒரு கைதி, தன்னுடைய மகிழ்ச்சியை பத்திரிகையிலே தெரிவித்திருக்கிறார். மணி என்பது அவருடைய பெயர். எப்படியோ ஒரு முறையிலே பத்திரிகைக்குச் செய்தி போயிருக்கிறது. அந்த மகிழ்ச்சியைத் தெரிவித்தார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் சென்னை சிறைச்சாலையிலேயிருந்து திருச்சி சிறைக்கு மாற்றப்பட்டு, இன்றையதினம் தனிக் கொட்டடியிலே அடைக்கப்பட்டிருக்கிறார் என்கிற வேதனைக்குரிய நிகழ்ச்சியும், கொடூரமான நிகழ்ச்சியும் தற்போது நடைபெற்றிருக்கிறது. அதே மாதிரி பல்வேறுவித நிகழ்ச்சிகள் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக சிறைக் கைதிகள் நடத்தப்படக்கூடிய முறை, சிறைக்குள்ளே இருப்பதன் மூலமாக அவர்கள் வெளி உலகத்தில் உள்ள சுதந்திரத்தை மட்டும் இழக்கிறார்கள் என்பதைத் தவிர, அவர்களுக்குச் சகல உரிமைகளும், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும் என்பது தான் கோட்பாடும், நியாயமும் ஆகும். ஆகவே, அந்த முறையிலே, அவர்களை மனிதர்களாக நடத்த வேண்டுமென்ற முறையிலே, இன்றையதினம் சிறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் நடத்துகிற கொடுமைகளை நிறுத்த அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பரோல் சம்பந்தமாக இன்றையதினம் கடைபிடிக்கின்ற நடைமுறைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கைதிகள் வெளி உலகத்தோடு அதிகம் தொடர்பு வைத்துக்கொள்வதன் மூலமாகத்தான் அவர்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டு அவர்கள் சீர்திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆகவே அம்மாதிரியான வாய்ப்பை ஏற்படுத்துகின்ற முறையிலே பரோலை தாராளமான முறையிலே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் கடைபிடிக்கக்கூடிய நடைமுறைகளிலே ஒரு மாற்றம் தேவை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்தப் பரோலைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்திலே, சென்னை சிறையிலே ஜெயவேலு என்கிற ஜெயராஜ் அவருடைய கைதி எண் 8152—அவருடைய தயார் இறந்துவிட்டார், இறந்ததற்குக்கூட அவர் செல்ல முடியவில்லை.





அவருடைய தாயாரின் இறுதிச்சடங்கு—கருமாதி என்று சொல்லக்கூடிய அந்த சடங்கு செய்வதற்காக அவர் பரோல் வேண்டுமென்று மனு கொடுத்து இருக்கிறார். ஆனால் கடைசி வரையில் அவருக்குப் பரோல் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்களிடத்தில்கூட மனு கொடுத்து இருக்கிறார்கள் என்று கேள்விபட்டேன். அதுவும் கவனிக்கப்படவில்லை. எனவே, பரோல் என்பது கைதிகளுக்குத் தாராளமாகக் கிடைக்கக்கூடிய முறையிலே, அவர்களின் குடுபங்களிலே இருக்கக்கூடிய சகல நன்மை தீமைகளும் கலந்து கொள்ளக்கூடிய முறையிலே அந்தப் பரோல் அவர்களுக்கு தாராளமாகக் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் போலீஸ் வெரிபிகேஷன் இல்லாமல் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மீண்டும் ஒரு முறை முழுமையாக வரவேற்று, இந்தச் சட்டத் திருத்தத்தைக்கொண்டு வந்த அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு மு. ப. முனுசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நானும் ஆதரித்துத்தான் பேசுகிறேன். ஒன்றே ஒன்றை மட்டும் இந்த அரசு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதாவது சிறையில் கைதிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்பதை இதிலே சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவைப் பொறுத்தவரையில், இது பற்றி நாங்கள் மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதி இருக்கிறோம். மைய அரசு எடுக்கவேண்டிய முடிவு இது. எனவே மைய அரசிடமிருந்து நல்ல முடிவாக வரும் என்று நம்பி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்ட கோர்வையைப் பொறுத்த வரைக்கும், 433-ஏ என்று ஒரு புதிய பிரிவினை மத்திய அரசின் சட்டம் 1978 ஆம் ஆண்டு 45 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின் 32 ஆவது பிரிவின்படி மரண தண்டனை பெறக்கூடிய அளவிற்கு உள்ள ஒரு குற்றம் செய்து ஒரு கைதி அவர் ஆயுள் தண்டனை கைதியாக மாற்றப்பட்டு, ஆயுள் தண்டனைக் கைதியாக அவர் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறபோது அந்த 14 ஆண்டுகள் அவர் தொடர்ந்து சிறையில் இருந்து,

அதன் பிறகு அவர் விடுதலை செய்யவேண்டும் என்ற ஒரு நிலை வருமானால், அதை போர்டு ஆய்வு செய்யவேண்டும் என்ற ஒரு சட்டத் திருத்தத்தை மைய அரசு கொண்டு வந்ததன் விளைவாகத்தான் அந்தச் சட்டத்தை மாற்றியாக வேண்டும் என்றும், குறிப்பாக சிறையில் இருக்கும் கைதிகளைப் பொறுத்த வரையில் ஏற்கனவே இருந்த பிரிவின் அடிப்படையில் கிரிமினல் ப்ரொசீஜர் கோட் செக்ஷன் 432 பிரகாரம் 14 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தக் கைதி சிறையில் நல்ல நடத்தைகளை உடையவராக இருப்பாரேயானால்—விடுதலை செய்யப்பட்டால் வெளியே சென்று நன்னடத்தையோடு—நல்ல வழிகளை அவர் மேற்கொள்வார் என்று நம்பிக்கை ஏற்பட்டால்—போர்டு ஆய்வு செய்து அவரை விடுதலை செய்யலாம் என்று இருந்த சட்டத்தை மைய அரசு மாற்றிய காரணத்தால், அதை மீண்டும் அந்த விதிமுறைகளைக்கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தச் சட்டத்தைக்கொண்டு வருகிறோம்.

[இரவு 7–50]

1973-கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 432 பிரிவின்படி 14 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தக் கைதியை நாம் விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்னால், அந்த அதிகாரம் மாநில அரசிடம் முன்பு இருந்தது.

The statutory power was given to the State Government.

ஆனால் தற்போது மைய அரசின் 45 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் பிரகாரம்-மாநில அரசுக்கு இருந்த அந்த அதிகாரம் மைய அரசு பறித்துக்கொண்டதும், அதன் காரணமாக கைதிகளில் நன்னடத்தை உள்ள கைதிகளை, 14 ஆண்டு காலத்திற்கு முன்னால் விடுதலை செய்ய வேண்டும் என்று மாநில அரசுக்கு ஏற்கெனவே இருந்த அதிகாரம், பறிக்கப்பட்ட அந்த அதிகாரம் மீண்டும் மாநில அரசுக்கு வரவேண்டும், மாநில அரசு நன்னடத்தை உள்ளவர்களை விடுதலை செய்ய அதிகாரம் கொண்டு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து இருக்கிறோம்.

The Tamilnadu Prisons Reform Commission

அது பற்றி ஆய்வு செய்து தெளிவாகக் கூறியிருக்கிறது. அந்த அணுகுமுறையைப் பொறுத்த வரையில்

This is definitely a retrograde measure from the p int of view of rehabilitation of an off.nder.

என்று சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல.



Keeping the p.isoners whose conduct in p.ison is exemplary in the prison for 14 continuous years will not be justified according to mode.n trend in Cimonolegy.

என்றுகூட சுட்டிக்காட்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இது ஒரு பிற்போக்கான சட்டத் திருத்தம் என்று மைய அரசின் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசு முடிவுக்கு வந்து, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறது.

ஆகவே, நன்னடத்தை என்று இருந்தால் மட்டுமல்ல, நோய்வாய்ப்பட்டு இருந்தாலும்கூட, அவர் நோய்வாய்ப்பட்டு இருக்கும் நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டால், வெளியில் சென்று சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்புக்களையும் தரவேண்டும் என்ற அடிப்படையில் மாநில அரசு உதவிகளை வழங்க வேண்டும் என்றுகூட, அதற்கான அதிகாரத்தை மைய அரசு முன்பு பறித்துக் கொண்டதால், அதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நன்னடத்தை உள்ள ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள், அல்லது உடல்நலம் குன்றிய கைதிகள் வெளியே சென்றாலும் நன்னடத்தையாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிற வகையில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் துரைமுருகன் அவர்களும், உமாநாத் அவர்களும், மற்றவர்களும் பேசும்பொழுது சொன்னார்கள். சிறைகளில் பல வசதிகளைச் செய்து தர வேண்டும். சீர்திருத்தங்களைச் செய்து தர வேண்டும். புனர்வாழ்வு அணுகுமுறைகளை கைதிகளின் நலன் கருதி செய்து தர வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்கள். (குறுக்கீடு) பரோல் குறித்தும் சொன்னார்கள். இவற்றை நாம் பரிசீலித்து, கண்டிப்பாக பரோலைப் பொறுத்த வரைக்கும்

I am really at it. That is what I am telling.

மற்ற எந்த விஷயமாக இருந்தாலும் அதைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

சிறையைப் பொறுத்தவரைக்கும், ஒரு கைதி நன்னடத்தை உடைய கைதியாக இருந்து, சிறைகளில் தரப்படுகிற பல பணிகளில் ஈடுபட்டால்—அங்கே பல்வேறு தொழில்கள் கூட செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது—அதைச் செய்கிற கைதிகளுக்கு ஊதியம் தரப்படுகிறது. அது மட்டுமல்ல, நான் என்னுடைய சட்ட முன்வடிவில் கூடச் சொன்னேன். அப்படி பணி செய்கிற

கைதிகள் எந்த ஒரு குறிப்பிட்ட தொழிலில் பயிற்சி பெறுகிறார்களோ அவர்களுக்கு விடுதலையான பிறகு அந்தத் தொழிலைத் துவக்க, அவர்களுக்கு ஒரு புனர்வாழ்வு ஏற்படுத்திக்கொள்ள உதவி செய்வதற்காக ஒரு திட்டத்தை அரசு கொண்டு வர இருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி-" பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the following amendment :

In new Section 433-B proposed in Clause 2 after the words "the State Government may" Insert the words and figures in exercise of their powers of remission under section 432 or of commutation under section 433.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டது

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : "1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1980), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றப்படி, நிறைவேற்றப்பெற்றது.





## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### ஈ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன :—

1. 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1980).

2. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980).

3. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980).

4. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980).

5. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1980).

மேலும் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் சட்டமன்ற மேலவையில் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றுள்ளன என்றும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன :—

1. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரிவிதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1980).

2. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி, கூடுதல் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1980).

3. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 29/1980).

4. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1980).

## உ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள், அவையில் எடுத்துக்கொள்ளாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 54 ஆவது விதியின்கீழ் அனுமதிக்கப்பட்டு, பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெறாத அறிவிப்புக்களை இப்போது நான் பேரவைக்குப் படித்து விடுகிறேன். இவற்றிற்கான பதில் அறிக்கையை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு, அதன் நகல் ஒன்றைப் பேரவைத் துறைக்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

| உறுப்பினர் பெயர். (1) | பொருள். (2) |
|---|---|
| 1 திரு. ப. பொன்னுரங்கம் | சென்னை மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கும் உணவு தரம் குறைந்தும் காலதாமதமாக வழங்கப்படுவதும் குறித்து. |
| 2 திரு. சு. பாலன் .. — | சென்னையில் தாசில்தார் அலுவலகத்திலிருந்து, சாதிச் சான்றிதழ், உணவுப் பங்கீட்டு அட்டை, சிமெண்ட் பர்மிட் பெறுவதற்கு கால தாமதம் ஏற்படுவது குறித்து. |
| 3 திரு. செ. இராமலிங்கம் — திரு. ஏ. இராமலிங்கம். | தஞ்சை இந்து சமய அறநிலையத்துறையைச் சார்ந்த பிள்ளையார் கோவில் அர்ச்சகர் திரு. கல்யாண சுந்தர குருக்கள் தற்கொலை செய்து கொண்டதை குறித்து. |





| உறுப்பினர் பெயர் (2) | பொருள் (1) |
|---|---|
| (இரவு 8-00.) | |
| 4. திரு. அ. சாகுல் ஹமீது .. | தொழில் கல்வி பிரிவில் (கணக்குப் பதிவியல், தணிக்கையியல்) படிக்கும் மாணவர்களுக்கு பட்டப் படிப்பில் சேர திருநெல்வேலி கல்லூரிகள் மறுப்பது குறித்து. |
| 5. திரு. கு. ப. பழனியப்பன். | விழுப்புரம் வட்டம், மாம்பழப்பட்டு கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி கட்டிடம், மோசமான நிலையும்—பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்பாததும் குறித்து. |
| திருவாளர்கள்— இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, என். ஏ. பூங்காவனம், எம். அப்பாதுரை, எம். ஆறுமுகம், டி. கே. நல்லப்பன். | பரமக்குடியிலும், எமனேஷ்வரத்திலும் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து. |
| 7. திரு. இரெ. இராசமாணிக்கம். | தமிழகத்தில் மின்வெட்டு நீக்கப்பட்டிருந்தும், மாயவரம், வேதாரணியம் பகுதிகளில் மோட்டார்களுக்கு மின்சாரம் சரிவர வழங்கப்படாதது குறித்து. |
| 8. டாக்டர் கே. சமரசம் .. | தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தொகுதி சின்னாறு அணையிலிருந்து அமோதலால் ஏரிக்கு அணைக்கட்டுவதற்கு முன்பாக வந்த தண்ணீர், அணைக் கட்டியதால் தடைப்பட்டிருப்பதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதும் குறித்து. |

| உறுப்பினர் பெயர் (1) | பொருள் (2) |
|---|---|
| 9. திரு. இரா. தாமரைக்கனி. | முகவை மாவட்டம், திருவல்லிபுத்தூர் தொகுதி, மம்சபுரம் கீழூர் கிராமத்தை சேர்ந்த அரிஜனங்களுக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தியேட்டர் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவது குறித்து. |
| 10. திரு. என்.எஸ்.வி. சித்தன். | அலங்காநல்லூர் யூனியன் ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் நோக்கத்தோடு உண்ணாவிரதம் இருப்பது குறித்து. |
| 11. திரு. சோ. அழகர்சாமி .. திரு. செ. சிவசாமி, திரு. எம். அப்பாதுரை. | எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பிளஸ் 2 அக்டோபர் தேர்வுக்கான 31-7-80 ஆம் தேதியை காலம் நீட்டி தருவதன் அவசியம் குறித்து. |
| 12. திரு. கே. எம். தங்கமணி. | 24-7-80 அன்று காரில் கள்ள நோட்டுக் கடத்துபவர்களை கைது செய்தது குறித்து. |
| 13. திரு. கே. உச்சி | நீலகிரி மாவட்டம் மஞ்ஞுரியிலுள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளி நுழைவாயிலில் உள்ள தனியார் கட்டிடத்தை பள்ளிக்கு ஆர்ஜிதம் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தும் அது செயல்படாதது குறித்து. |
| 14. டாக்டர் கே. சமரசம் .. | தர்மபுரி மாவட்ட ஊராட்சி ஒன்றிய அடிப்படை ஊழியர்கள் தங்களது 7 அம்ச கோரிக்கையை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதம் இருப்பது குறித்து. |



| உறுப்பினர் பெயர். (1) | பொருள். (2) |
|---|---|
| 15. திருவாளர்கள்— பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி: ரா. உமாநாத். | தாமிரபரணி பாசனத்தில் தண்ணீர் வினியோகித்த முறையில் முறைகேடுகளினால் ஏற்பட்ட விவசாய பாதிப்பு குறித்து. |
| 16. திரு. என். வரதராஜன் .. | திண்டுக்கல் காமராஜர் நீர்த்தேக்கத்திற்கு வரும் தண்ணீரை சிலர் சட்ட விரோதமாக தடுத்து நிறுத்துவதினால் திண்டுக்கல் நகரில் குடிநீர் பாதிக்கப்படுவது குறித்து. |
| 17. திரு. இரா. தாமரைக்கனி. | திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்ட தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் காதி கமிஷனிடமிருந்து வர வேண்டிய மூலப்பொருட்களும் 50 இலட்சம் ரூபாயும் கிடைக்காததினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து. |
| 18. திரு. சேலம் மு. ஆறுமுகம். | சென்னை தரமணியில் பேசிக் மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்ட்டிட்யூட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளை மாற்ற வேண்டியதின் அவசியம் குறித்து. |
| 19. திரு. வி. பாலகிருஷ்ணன். திரு. ஆர். கே. பெருமாள். | சிவகாசி நகரத்தில் 5-7-80 அன்று தலைமைக் காவலர் கொலை செய்யப்பட்டது குறித்து. |
| 20. திரு. என். பழனிவேல். | பழனிவட்டம், பாலசமுத்திரம், அய்யம்புள்ளி ஆகிய ரெவின்யூ கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் காய்ந்துவிடும் நிலை குறித்து. |

| உறுப்பினர் பெயர். (1) | பொருள். (2) |
| --- | --- |
| 21. டாக்டர் கே. சமரசம் .. | 17—7—80 அன்று சமூக விரோதிகளால் கலப்பம்பாடி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கொலை செய்யப்பட்டது குறித்து. |
| 22. திரு. ஆர். பெரியசாமி .. | திருச்சி மாவட்டம் தொட்டியம் தொகுதி மேட்டுப் பாளையத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டிடம் கட்டி முடிவடையாதது குறித்து. |
| 23. திரு. எஸ். டி. உகம்சந்த். | செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் விவசாயிகள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பிறகு பாலார் படுகைச் சான்றிதழ் கொடுக்க மறுத்தது குறித்து. |
| 24. திரு. இரா. தாமரைக்கனி. திரு. பி. வெங்கட சுப்ரமணியம். | சென்னை அண்ணாநகர் கந்தசாமிநாயுடு கல்லூரி நிர்வாகம் பல்கலைக்கழக விதிகளுக்கு முரண்பாடாக இயங்குவதால் கல்லூரி ஆசிரியர் போராட்டம் குறித்து. |
| 25. திரு. ப. நெடுமாறன் .. | என்ஜினியரிங் கல்லூரி அட்மிஷனில் புதிய முறையை கையாள்வதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. |
| 26. திரு. சு. பாலன் .. | தமிழ்நாட்டில் பரவலாக சிறுவர் சிறுமிகளை கொலை, கடத்தல் குறித்து போலிசாரின் அறிவிப்பு குறித்து. |
| 27. திருவாளர்கள்— மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா, இரா. தாமரைக்கனி. | சென்னை காசிமேடுக்கும் எண்ணூருக்கும் இடையே பல இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது குறித்து. |



| உறுப்பினர் பெயர். (1) | பொருள். (2) |
| --- | --- |
| 28. திரு. எம். ஆறுமுகம், திரு. எம். அப்பாதுரை. | கோவையில் ஆனந்தகுமார் மில்களின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து. |
| 29. திரு. பாபு ஜனார்த்தனம். | வடாற்காடு மாவட்டம் நெமிலியில் வாரச் சந்தையில் எருமைகள் பசுக்கள் லாரிகளில் கடத்தப்பட்டு கேரளத்திற்கு கொண்டு போவது குறித்து. |
| 30. திரு. பி. எம். தங்கவேல் ராஜ், திரு. நா. சுந்தரராஜ்: திரு.எஸ்.இராசாராமன். | உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் ஆகிய ஏ. பி. இரண்டு வகுப்புகளின் இணைப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. |
| 31. திருவாளர்கள் — சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். அப்பாதுரை, டி. கே. நல்லப்பன், மு. அம்பிகாபதி. | ஓட்டல்களில் உணவு பண்டங்கள் விலைகள் திடீரென உயர்த்தப்பட்டுள்ளது குறித்து. |
| 32. திரு. சு. பாலன் திரு. கு. பா. பழனியப்பன். | விழுப்புரம் பகுதியில் அரிசனங்களுக்கும் மற்ற பிரிவினருக்கும் ஏற்பட்ட பகைமை குறித்து. |
| 33. திரு. சோ. அழகர்சாமி, திரு. எம். அப்பாதுரை. | திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டது குறித்து. |

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, நான் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்தேன். அதிலே ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, இன்னொன்றை விட்டு விட்டார்கள், அந்த மற்றொன்று என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அட்மிட் ஆகவில்லை என்றால், அட்மிட் செய்யவில்லை என்று எனக்கு லெட்டராவது வரவேண்டாமா? அட்மிட் செய்யப்பட்டு பதில்

வராத கவன ஈர்ப்புகளைத் தான் இப்போது குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக சொல்கிறீர்கள். அதனால் இதையும் சொல்லிவிடுகிறேனே. அதில் என்ன? பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்று இருந்து விட்டுப் போகட்டுமே.............

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் கூட இரண்டு கொடுத்தேன் ............

திரு. என். பெருமாள் : தலைவர் அவர்களே, சிவகாசி, கோயில்பட்டி, சாத்தூர் போன்ற இடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் கிடைக்காத காரணத்தால் 50,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதை குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை கொடுத்திருக்கிறேன். அதற்கான பதிலை அறியவிரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நீங்கள் உட்கார சொன்னதினால் நான் உட்கார்ந்து விட்டேன். இப்போது எனக்கும் பேச அனுமதிக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் உள்ள பிணவறையில் பிணங்கள் அதிகமாக சேர்ந்து விட்டன என்றும் அவைகளை வெளியே எடுக்காத காரணத்தால், மேற்கொண்டு வரும் பிணங்களை போட்டு வைக்க இடம் இல்லாத நிலை ஆஸ்பத்திரிகளில் இருப்பதைப் பற்றியும், ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இது மிக முக்கியமானப் பிரச்னை. அந்தப் பிணங்களுக்காக நாம் பேசாவிட்டால் வேறு யார் பேச முடியும். அந்தப் பிணங்களாக வந்து பேச முடியாதே. ஆகையினால் அமைச்சர் அவர்கள், இதில் தலையிட்டு உடனடியாக அந்தப் பிணங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்ல அனுமதித்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டவைகளையெல்லாம் நான் அனுமதித்து இதில் எடுத்துக் கொண்டேன். இருந்தாலும் உறுப்பினர்கள் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டதினால், அவைகள் குறிப்பேட்டில் இடம் பெற்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பப்பெற்று விடும். அதனால் இதில் சேர்க்கவில்லை என்ற பிரச்சினை தீர்ந்து விட்டது.



(இரவு 8-10.)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் கைது, ஜாமீனில் வந்தது பற்றி தவறான அறிக்கை.

திரு. வெ. இராஜசேகரன் : கடந்த 8 ஆம் தேதி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சபையில் நான் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வந்தேன் என்ற உண்மைக்குப் புறம்பான தகவலை அந்த அறிக்கையில் வைத்திருக்கிறார்கள். அது என்னுடைய உரிமையையும் இந்த அவையின் உரிமையையும் மீறுகிறது. ஆகவே, அது அவை உரிமை மீறல் என்பதால் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பியிருக்கிறேன். அதைப் பற்றிய முடிவைக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உரிமை மீறலில் வராது. தவறான தகவலில் வேண்டுமானால் வரலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் வைத்த அறிக்கையில்—1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 ஆம் நாள் அன்று காலை 11-50-க்கு கைது செய்து அவர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பிறகு 12-15-க்கு ஜாமீனில் விடுதலை செய்தார்கள். இ. பி. கோ. 143, 353 செக்ஷன்ஸ் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. க்ரைம் நம்பர் 690/80. எச். 3 போலீஸ் ஸ்டேஷன். இந்தத் தகவல் குடிசைமாற்று வாரியத்திற்கு வந்திருக்கிறது. ஒரு வி.ஐ.பி. என்ற காரணத்தால் பாண்டில் கையெழுத்து வாங்காமல் இன்ஸ்பெக்டர் போகச் சொல்லியிருக்கிறார். அதற்கு ஜாமீனில் அனுப்புவது என்றுதான் அர்த்தம் என்று எங்களுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வெ. இராஜசேகரன் : ஜாமீனில் செல்கிறீர்களா என்று கேட்டார்கள். நான், ஜாமீனில் வெளியே போக முடியாது என்று கூறியிருக்கிறேன். சொந்த ஜாமீனில் போகிறீர்களா என்று கேட்டார்கள், போக முடியாது என்று கூறியிருக்கிறேன். அப்படியிருக்கும்போது ஜாமீன் என்ற வார்த்தை எப்படிப் பொருந்தும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பாண்டைக் கொடுத்து கையெழுத்து கேட்டு அவர்கள் சொன்னதுபோல்போட முடியாது என்று சொல்லிவிட்டார். ஒரு எம். எல். ஏ. அவரை வற்புறுத்தியிருந்தால் தகராறு வரும் என்று போகச் சொல்லி விட்டேன். "ஒன் பெயிலில்" போயிருப்பதாகத்தான் அர்த்தம் என்று போலீஸ் ஸ்டேஷனில் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

[1980 ஆகஸ்ட் 12

திரு. வெ. இராஜசேகரன் : "ஒன் பாண்ட்" கொடுக்கப்படவில்லை. என்னிடம் ஜாமீனில் போகவேண்டுமா என்று கேட்டார்கள், போக முடியாது என்று மறுத்திருக்கிறேன். சொந்த ஜாமீனில் போகிறீர்களா என்று கேட்டார்கள். போக முடியாது என்று மறுத்திருக்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயிலா, பெயில் இல்லையா என்று சொல்லலாம். மற்ற சட்டப் பிரச்சினைகளை நீங்களும் அரசாங்கமும்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். இதில் நான் தலையிட இங்கே இடமில்லை. "திஸ் ஈஸ் நாட் எ கோர்ட்." நீங்கள் விளக்கம் கேட்டீர்கள், அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். இது ஒரு க்ரிமினல் வழக்கு.

திரு. நா. சுந்தரராஜ் : இங்கிருக்கக்கூடிய விதியின்பிரகாரம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டால் அந்தத் தகவல் சட்டப் பேரவைத் தலைவராக இருக்கும் தங்களுக்கு வந்து சேரும். தங்களுக்கு வந்திருக்கிற தகவலில் என்ன செய்தி வந்திருக்கிறது, என்ன வழக்கு தொடரப்பட்டிருக்கிறது? ஜாமீனில் வந்திருக்கிறார்களா? அல்லது செக்ஷனில் போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூரா விஷயத்தையும் என் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் என்று வந்திருக்கிறது.

திரு. வெ. இராஜசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஜாமீனிலோ அல்லது சொந்த ஜாமீனிலோ கையெழுத்து இட்டுவிட்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு தரப்பிலேயும் சொன்னதை நான் அவைக் குறிப்பிலே வைக்க முடியும். இதிலே என் முடிவைச் சொல்ல முடியாது. உட்காருங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : சிதம்பரம் தாலுக்கா ஸ்ரீமுஷ்ணம் சம்பந்தமாக எந்தத் தகவலும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 8 ஆம் தேதிக்கு மேல் கொடுத்தது எதுவும் எடுக்கவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: மதுரை நகர் ட்ரெஷரி ஊழியர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒன்றும் சொல்லவில்லை.



1980 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஒத்திவைப்புத் தீர்மானமாக கொடுத்திருக்கிறார்கள. 54-ன் கீழ் அல்ல.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நானகூட ஒரு கவன ஈர்ப்பை 5 ஆம் தேதியன்று கொடுத்திருக்கிறேன். கோவில்பட்டியைப் பற்றிய சம்பவம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனியும், தாங்களும் அதுபற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். தாமரைக்கனிக்குச் சொல்லும்போது அதிலேயே தங்கள் பெயரையும் சொல்லிவிட்டேன். திருவேங்கடம்......

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் கடந்த 2, 3 தினங்களாக 30-க்கும் மேற்பட்டவர்களுக்கு காலரா கண்டு, அதிலே 5, 6 பேர்கள் இறந்திருக்கிறார்கள்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை முடியும் தருவாயில் இருக்கிறது. இப்போது இப்படிப்பட்ட பொதுப் பிரச்சினைகளை அனுமதிக்க முடியாது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பாலிடெக்னிக் மாணவர்கள் வேலை நிறுத்தம் பற்றி, போன ஆண்டு முதல்வர் செய்த தவறினால், 50 மாணவர்கள் உண்ணாவிரதம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலிடெக்னிக் பற்றி ஏற்கெனவே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இது தீர்ந்துபோன பிரச்சினை ; இப்போது கிளப்பாதீர்கள்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### ஊ. பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1980 ஆகஸ்ட் 12

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் அன்று துவங்கியது: 234 உறுப்பினர்களும், 3 மணி 42 நிமிடத்தில் அன்றைய தினம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள்.

பேரவைத் தலைவரும், பேரவைத் துணைத் தலைவரும் ஒருமனதாக இக்கூட்டத் தொடரில் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—**

| | |
|---|---|
| விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 3 |
| மொழியப்பெற்ற திருத்தங்கள் .. | 7 |
| விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் | 56 |
| மொத்தம் எடுத்துக்கொண்ட நேரம் .. | 13 மணி 44 நிமிடங்கள் |
| பேரவையில் வரப்பெற்ற இரங்கல் குறிப்புகள் .. | 4 |
| இரங்கல் தீர்மானங்கள் .. .. | 2 |

**இக்கூட்டத் தொடரில்—**

| | |
|---|---|
| விடையளிக்கப்பெற்ற குறுகிய கால வினாக்கள் | 69 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 182 |
| உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 70 |
| கேட்கப்பெற்ற வினாக்கள் .. .. | 1,040 |

**கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்—**

| | |
|---|---|
| அனுமதிக்கப்பெற்றவை (91 பொருள் குறித்து). | 186 |
| அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை .. (62 பொருள் குறித்து). | 152 |

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**

| | |
|---|---|
| மொத்தம் வரப்பெற்றவை .. .. | 320 |
| அனுமதி மறுக்கப்பெற்றவை .. .. | 145 |
| கவன ஈர்ப்புத் தீர்மானங்களாக மாற்றப் பெற்றவை. | 57 |
| வினாவாக மாற்றப் பெற்றவை .. .. | 8 |
| அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்று, இசைவு மறுக்கப்பெற்றவை. | 110 |



[பேரவைத் தலைவர்] [1980 ஆகஸ்ட் 12

**சட்ட முன்வடிவுகள்—**

| | |
|---|---|
| வரப்பெற்றவை .. .. .. | 34 |
| நிறைவேற்றப்பெற்றவை .. .. | 30 |
| ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை .. | 3 |
| சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற பேரவை கூடிய நாட்கள். | 6 |

**தனியார் அலுவல்களின் கீழ்—**

| | |
|---|---|
| வரப்பெற்ற தனித் தீர்மானங்கள் .. | 7 |
| அனுமதிக்கப்பெற்றவை .. .. .. | 7 |
| ஒரு தீர்மானம் 2 நாட்கள் விவாதிக்கப்பெற்றுள்ளது இதில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் | 7 |

[இரவு 8-20]

1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டம் பேரவையில் 2—7—1980 அன்று அளிக்கப் பெற்றது.

**வரவு—செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—**

| | |
|---|---|
| நடைபெற்ற நாட்கள் .. .. .. | 5 |
| பொது விவதாத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் .. .. .. .. .. | 71 |
| பொது விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட நேரம் .. .. .. .. .. | 1,105 நிமிடங்கள். அதாவது 18 மணி 25 நிமிடம். |

**மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—**

| | |
|---|---|
| நடைபெற்ற நாட்கள் .. .. .. | 17 |
| விவாதிக்கப்பெற்று கோரிய தொகை வழங்கப் பெற்ற மானியக் கோரிக்கைகள் .. .. | 54 |

விவாதிக்கப் பெறமால் 4 மானியக் கோரிக்கைகள்தான் 'கில்லட்டின்' ஆயிற்று.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

91 ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் 22—12—1976 ஆம் தேதியன்று வெளியாகி 26—1—1977 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (அ)-ல் 25—27 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியான SRO A/18/77 ஆம் எண் அறிவிப்பில் வெளியான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 35 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309 ஆவது பிரிவின் விலக்கின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

92. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தினை தர்மபுரி மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் செயல்படுத்துவது குறித்தும், மேற்கண்ட சட்டத்தைச் செயல் படுத்தும் காரியத்திற்காக, அந்த கிராமங்களை அறிக்கையிடப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்தும் வேளாண்மைத் துறையின் (ASC) 6—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2211 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 44 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

93. வணிக வரி அலுவலர்கள் மற்றும் துணை வணிகவரி அலுவலர்கள் வரிவிதிப்பு அதிகாரத்தைக் கொண்டு செயல் படுவதற்கு அதிகாரம் அளிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 144 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10-1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

94. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 145 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10-1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*137. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1980).

*138. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்ட முன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1980).

*139. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1980).

*140. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1980).

*141. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பணிகள், பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவின் நகல். (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/1980).

142. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 31—3—1980 ஆம் தேதியன்றுள்ளவாறு அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை 27—8—1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது.)

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

2. திரு. கே. ரமணி.

3. திரு. செ. இராமலிங்கம்.

143. கீழ்க்காணப்பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் மேலவை 28—8—1978 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது):—

---

*11—8—1980 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

91. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் 22—12—1976 ஆம் தேதியன்று வெளியாகி 26—1—1977 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (அ)-ல் 25—27 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியான SRO A/18/77 ஆம் எண் அறிவிப்பில் வெளியான விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 35 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309 ஆவது பிரிவின் விலக்கின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

92. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தினை தர்மபுரி மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் செயல்படுத்துவது குறித்தும், மேற்கண்ட சட்டத்தைச் செயல் படுத்தும் காரியத்திற்காக, அந்த கிராமங்களை அறிக்கையிடப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்தும் வேளாண்மைத் துறையின் (ASC) 6—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2211 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 44 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

93. வணிக வரி அலுவலர்கள் மற்றும் துணை வணிகவரி அலுவலர்கள் வரிவிதிப்பு அதிகாரத்தைக் கொண்டு செயல் படுவதற்கு அதிகாரம் அளிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 144 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10-1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

94. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 145 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10-1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*137. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1980).

*138. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்ட முன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1980).

*139. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1980).

*140. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1980).

*141. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பணிகள், பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவின் நகல். (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/1980).

142. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப் பினர்கள் 31—3—1980 ஆம் தேதியன்றுள்ளவாறு அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை 27—8—1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது.)

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
2. திரு. கே. ரமணி.
3. திரு. செ. இராமலிங்கம்.

143. கீழ்க்காணப்பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் மேலவை 28—8—1978 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது):—

---

*11—8—1980 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப் பப்பெற்றன.

1980 ஆகஸ்ட் 12]

31—3—1979 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்.

1. திரு. ஜி. வசந்த யாய்.

31—3—1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்

2. திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி

3. திரு. ப. மாணிக்கம்

4. திரு. ம. சங்கரலிங்கம்

5. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழில்துறை அமைச்சர்)

144. உடுக்குறியிடாத வினா விடைகளின் பட்டியல் (1 முதல் 70 வரை).

123058

D 1

V211,31 N80

N80-8.291

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasanthan Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.